மணிவாசகர் பதிப்பகம்



# அன்னை தெரேசா

பூவை எஸ். ஆறுமுகம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode


**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.


மணிவாசகர்

# அன்னை தெரேசா

பூவை எஸ். ஆறுமுகம்

மணிவாசகர் பதிப்
சிதம்பரம்

~~முதற் பதிப்பு : அக்டோபர், 1984~~

உரிமை செறிவு
(c) திருமதி [illegible]
c/o திரு [illegible]
[illegible], சென்னை-[illegible]

~~பதிப்பாசிரியர் :~~ ச. மெய்யப்பன், எம். ஏ.

கிடைக்குமிடம்

[illegible] சன்னதி, சிதம்பரம்-608 001.
[illegible] தெரு, சென்னை-600 001.
[illegible] செட்டித் தெரு, சென்னை-600 001.
[illegible] மேலவீதி, மதுரை-625 001.
[illegible] வீதி, கோவை-641 001.

கற்பகம் அச்சகம், சென்னை

# அன்னை தெரேசாவின் அருள் மொழிக

ஏசு அடைகின்ற ஆனந்தத்தை நாங்க ஙகளது அன்புப் பணிகள் மூலம் வெளி படுத்துவோம்.

* * *

ஏழைகளின் சிரிப்பிலே இறைவன் ஏசுவைத் தரிசிக்க முடியும்.

* * *

நாமெல்லோரும் மற்றவர்களை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அயலவர்களிடம் அன்பு பாராட்டத் தெரிந்து கொள்வது நல்லது. அடுத்தவர்களிடம் பாசம் சொரியப் பழகிக் ள்வதும் அவசியம். அப்பால், அந்த அன்பை, நசத்தை, பாசத்தை ஏற்றுக்கொள்வதற்கும் ாம் பழகி விடுவோம்.

* * *

நாம் நல்லமைதியின் கால்வாயாக—வாய்க் லாக விளங்க வேண்டும். நமது அன்பு நம்மைத் ால்லைப்படுத்தும் வரை, நாம், அன்பை ங்கிக் கொண்டே இருக்கவேண்டும்.

* * *

ஆண்டவரே! உலகினின்றும் பசியும், பட்டினி வறுமையும், வெறுமையும் வெகுவிரைவில் லை பெற ஆசி புரியுங்கள்.

* * *

அன்பின் பலன்தான் சேவை. சேவையில்தான் மதி கனியும். நேசத்திலும், தொண்டிலும், தானத்திலுமே ஆண்டவன் சிரிப்பான்!

* * *

## உள்ளடக்கம்


1. அன்பின் வெற்றிக்கு நோபல் பரிசில் ...
2. ஆண்டவனுக்கு நிறைவான ஒன்று ...
3. ஒளித்தேவனின் பேரொளி ...
4. தருமம் வெல்கிறது! ...
5. இருபதாம் நூற்றாண்டின் அன்பு ...
6. ''அம்மா!— அம்மா!'' ...
7. அன்பின் பணியாளர் உலகம் ...
8. இயேசு வாழ்கின்ற ஏழைகளின் சிரிப்பு ...
9. உலகத்தின் அரங்கிலே அன்பின் தூதர்கள்

# அன்னை தெரேசா

## அன்பின் வெற்றிக்கு நோபல் பரிசில்

அலகிலா விளையாட்டுடைய — அன்பே வடிவமைந்த ண்டவன் படைத்தளித்த உலகத்தின் வரலாற்றிலே, களால் நாளும் பொழுதும் பெருமையோடு பேசப்பட்டு கின்ற அன்பின் தெய்விகச் சக்தியை மேலும் உணரவும், உணர்ந்து பாராட்டவும், பாராட்டி மகிழவும் வாய்த் திட்ட பொன்னான நல்வாய்ப்பாக, அன்பின் வெற்றிக்கு உலக அரங்கத்திலே மகத்தானதொரு மரியாதை வழங்கப் பட்டது!

அந்த நாள்: 17—10—1979.

தொ9ஆம் ஆண்டிற்குரிய உலக அமைதி மற்றும் வபு ணத்திற்கான நோபல் பரிசுக்கு (Nobel Peace rize) 'அன்னை'யென்று உலக மக்களால் அன்போடும் ரசத்தோடும் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் போற்றப்பட்டு வருகின்ற அன்னை தெரேசா அவர்கள் (...her Teresa) உரியவராக அறிவிக்கப்பட்ட புனிதமான ...ளுள் அல்லவா அது!

உலகத்தின் அன்புக்கும் புகழ்ச்சிக்கும் உரித்தானதாக மைந்த தூய நினைவு நாளாகவும் அது அமைகிறது!

அன்பின் அற்புதச் சக்திக்கு உலகத்தின் ஆடுகளத்தில் ...ர் சாட்சியாக விளங்கி, பக்திக்கும் நம்பிக்கைக்கும்

வழி சொல்லி வருகின்ற அன்னை அதோ, பிரார்த்தனை செய்கிறார்கள் :

"புனிதம் நிரம்பிய கடவுட் தந்தையே!... விரிந்த உலகிலே பரந்து கிடக்கின்ற ஏழை எளியவர்களிலே, எத்தனை எத்தனையோ பேர் பசியாலும் பட்டினியாலும் அவதிப்பட்டு, வாழ முயன்று, கடைசியிலே, வாழ்க்கையோடு போராட முடியாமல், வாழ்வின் கடைசி அடைக்கலமாகச் சாவின் சந்நிதியைத் தஞ்சமடையவும் செய்கிறார்கள்!— மனித குலத்தின் மக்களாகிய எங்களது சோதரர்களுக்கெல்லாம் அவர்கட்குரிய அன்றாடப் படியை எங்கள் வாயிலாகவே அளந்திட அருள் புரிவீர் ஆகுக!

அன்பிற்கு இனிமையான தந்தை ஏசுவே!... பரிசுத்தமான எங்களது நேசிப்பின் மூலம், அவர்களுக்கெல்லாம் அமைதியையும் ஆனந்தத்தையும் வழங்கிடவும், கருணை செய்வீராக, கர்த்தர் பிரானே!"

அறநெறி சார்ந்த அன்னை தெரேசாவின் அன்புப் பணி இயக்கத்தின் அன்றாடப் பிரார்த்தனைக்காக அன்புத் தாய் உருவாக்கிய மேற்கண்ட பிரார்த்தனைப் பாடலில், பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உகந்த அன்னையின் மனிதப் பண்பு பளிச்சிடுகிறது; மனிதாபிமானம் ஒலிகூட்டுகிறது; மனிதநேயம் ஒளிகாட்டுகிறது!

கன்னித் துறவியாகவும் கன்னித் தாயாகவும் வாழ்கின்ற—வாழ்ந்து காட்டுகின்ற புனித தெரேசா பாரதத் தாய் மண்ணிலே, கல்கத்தா பெருநகரின் மோதிஜில் சேரிப் பகுதியில் அன்று 1948-ம் ஆண்டு டிசம்பர் 21-ம் நாளன்று, தம்மை ஓர் இந்தியக் குடிமகளாகப் பிரகடனப் படுத்திக் கொண்டு, பெருமையும் பெருமிதமும் கொண்ட நிலையில், தொடங்கிய அன்புப் பணி, இன்று உலகெங்கும் ஆல்போல் தழைத்து, சாதி சமயம் கடந்த உயர்வு மிக்கதோர் அன்புப் பணி இயக்கமாகவே விளங்கிவருகிறது!

எம்மதமும் சம்மதம் என்கிற உயர் தனிக் குறிக்கோள் கொண்டு, ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் கண்டு, பொதுநல அமைதியில் தேறுதலும் ஆனந்தமும் கண்டு வருகின்ற அகில உலக அன்னையாம் தெரேசாவின் கடையரினும் கடையருக்கான அன்புத் தொண்டுகளை உலகமும் உலகத்தின் மக்களும் அங்கீகாரம் செய்ததற்கு அன்பின் அடையாளமாகவே, உலகச் சமாதானத்திற்கான நோபல் அமைதிப் பரிசு அன்னை தெரேசாவிற்கு அளிக்கப் பட்டது!

அன்னை தெரேசா!...

1910, ஆகஸ்ட் 27-ல், அல்பேனியா—பல்கேரியா நாடுகளுக்கு இடைப்பட்ட தென் யூகோஸ்லாவியாவில் ஸ்கோப்ஜி என்னும் மலைப்புறக் கிராமமொன்றில் நிக்கோலாஸ்—பெஜாக்ஸ்ஹி தம்பதியர்க்குத் திருமகளாகப் பிறந்த அக்னெஸ் (Agnes Goinxha Bejaxhiu) தனது பன்னிரண்டாவது வயதிலிருந்தே ஆன்மீகந் பற்றில் ஆர்வம் மிக்கவராகவும், கடவுட் பக்தியில் ஈடுபாடு நிறைந்தவராகவும், பொதுநலத் தொண்டுள்ளம் கொண்டவராகவும் ஆகி, பின்னர், குமரி ஆகி, பதினெட்டு வயதை அடைந்தபோது, வாழ்க்கையைத் துறக்க முடிவு செய்து, பெற்றோரின் அனுமதியையும் பெற்று, அயர்லாந்து நாட்டில் ரத்ஃபார்ன்ஹாம் நகரில் இயங்கிய லொரேட்டா கன்னித் துறவிமார் திருச்சபை மடத்திலே (Congregation of Loreto Nuns) சேர்ந்து, பிறகு ஓராண்டு கழித்து, 1929ஆம் ஆண்டிலே மாரிக்காலத்தில், பிறந்த மண்ணையும் துறந்து, இந்திய நாட்டின் புனிதமண்ணை மிதித்து கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். கல்கத்தாவில் இயங்கிய வங்காள மதக் குழுமத்தில் இணைந்து, லொரேட்டா கன்னிமார்கள் நடத்திய புனித மேரி பள்ளியில் ஆசிரியை ஆனார். 1931ஆம் ஆண்டில்தான், குமாரி அக்னெஸ், 'தெரேசா' ஆனார். பின்னர், 1946-ல், 'ஏழைகளிலும் ஏழைகளுக்குப் பணி

புரிவதே உனது எதிர்காலக் கடன் ஆகும்!' என்ற ஆண்டவன் கட்டளையை அகத்தூண்டுதலாக உணரலானார்; கர்த்தர் பிரானின் அன்பான அழைப்பை அன்பின் ஆணையாக மேற்கொண்டு செயற்படவும் ஆயத்தமானார். 1948 ஆம் ஆண்டில் தெரேசா சுதந்தரமான ஓர் இந்தியப் பிரஜை ஆனார்! — மோத்திஜில் சேரியில் அன்புச் சேவைகளைத் தொடர்ந்து செய்யலானார்.

கிறிஸ்தவ மதப் பெரியவர்களின் இணக்கத்தோடு துறவுக் கன்னி தெரேசா, கல்கத்தா பெருநகரில் ஏழைகளுக்குச் செய்து கொண்டிருந்த அன்புத் தொண்டுகளை மக்கள் உணரவும் அறியவும் தலைப்பட்டனர். 1949 மார்ச் 9-ல் நடைபெற்ற புனித சூசையப்பர் நினைவு விழா நாளில் மக்கள் எல்லோருமே தெரேசாவை 'அன்னை' யென்று ஏகோபித்த குரல்களில் அழைத்தனர்.

அன்னை தெரேசா தமது பணிகளை வடிவமைத்து ஓர் இயக்கமாக மாற்றத் தீர்மானித்தார், கனவை நனவாக்க முற்பட்டார். போப்பாண்டவர் ஆசியும் அனுமதியும் வழங்கிட, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதாரத்துடன் தமது அன்பின் அமைப்பிற்கு 1950 அக்டோபர் 7 ஆம் நாளில், கிறிஸ்தவ சமய வாய்முறை வழிபாட்டு நாளில், 'அன்பின் தூதுவர்கள்' (Missionaries of Charity) என்று பெயர் சூட்டி, மதப் பெருந் தலைவரின் ஒப்புதலோடு, அன்பு இயக்கத்தைச் சட்டமுறையில் கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் பதிவு செய்தார்.

'அன்பின் தூதுவர்கள்' அமைப்பின் உயிர் நாடி இவ்வாறு பேசியது: "நாம் அனைவருமே அன்பின் தூதர்கள். அன்பே கடவுள்!—கடவுளே அன்பு!—தருமத்தின் ஊழியர்கள் அன்பின் தூதர்கள்தாம். அன்பான புனிதச் சகோதரிமார்கள் ஆன்ம நிறைவோடு இரக்கம் மிக்கவர்களாகத் திகழ்ந்து, ஆன்மபூர்வமான கருணையைக் கிறிஸ்தவ மக்களிடையேயும் கிறிஸ்தவர் அல்லாத ஏனைய

மக்களிடையிலும் சரிநிகர் சமானமாகப் பரப்பவும் வேண்டும்!''

''இந்நேரத்தில், பாரதநாட்டின் அதிகாரபூர்வமாக அரசியல் அமைப்பின் தேசிய ஒருமைப்பாட்டு விதியும் நாட்டிலே அன்பின் கட்டுமானப் பொறுப்பில் அமைந்திட வேண்டிய அமைதியின் அவசியத்தை வற்புறுத்துவ தாகவே அமைந்துள்ளது!— ''நாட்டின் உரிமை வாழ் வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப் படுத்தச் செயலாற்றுவேன்; செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்; ஒருபோதும், வன் முறையை நாடேன் எனவும், மதம்—மொழி—வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல் களுக்கும் ஏனைய அரசியல்—பொருளாதாரக் குறைபாடு களுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழி யிலும் நின்று தீர்வுகாண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கின்றேன்!''

ஆமாம்:

அன்பையும் கருணையையும் ஒருமையுடன் வளர்த்து அமைதியை வணங்கி வாழ்த்திடப் பாரதத்திற்கு ஓர் அன்னை கிடைத்தார்!

சிந்தனையாளரான பத்திரிகையாளர் மால்கம் மக்க ரிட்ஜ் (Malcom Muggeridge) முன்னம், 1969 காலக் கட்டத்தில், அன்னை தெரேசாவைச் சந்தித்தபோது, அறநெறிப் பணி அமைப்பின் தொண்டு முறையின் உயிராதாரமான கொள்கைப் பிடிப்பைப் பற்றி அவரிடம் மிகவும் சுருக்கமாக இவ்வாறு அன்னை விளக்கினார்: ''...நாங்கள் ஏழைகளின் உடல்களிலே எங்கள் இயேசு கிறிஸ்துவின் உடலையே ஸ்பரிசிக்கிறோம்; பசி கொண்ட நமது கர்த்தருக்கே நாங்கள் உணவிடுகின்றோம்; நிர்வாண மான எங்கள் பிரானுக்கே நாங்கள் உடைகளை உடுத்து கிறோம்; அவ்வாறே, நிழல் இழந்த எங்கள் ஆண்ட

வனுக்கே நாங்கள் நிழலையும் தருகிறோம்!—எங்களுக்கெல்லாம் ஏழைகள்தாம் ஏசு!...''

செய்தியாளரும் பணியாளருமாக அவர்கள் இருவரும் வினாக்களையும் விடைகளையும் பரிமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்னை சிந்தனை வசப்பட்டார்: ''எங்கள் பணிமுறையில் மன்னித்தல் பண்பு தலையாயது! — 19 0-ல் கௌஹாதியில் எங்கள் கிளை நிறுவனம் ஏற்பட்டபோது, உள்ளூர்ப் போக்கிரிகள் சிலர், சகோதரிகள் சிலர்மீது கல்லெறிந்து தொல்லை தந்தனர். சாலைவழியில் பட்டப் பகலில் நடந்த அநியாயத்தை அறிந்து, அவர்களை வரவழைத்துக் கண்டித்தேன்; மன்னித்தேன். பிறகு, அதே காலிகள், மன்னிப்பின் விளைவால் மனம் திருந்தி, என்னிடம் வந்து, இல்லங்களின் கூடங்களைக் கழுவிச் சுத்தப்படுத்துவதில் புனிதச் சகோதரிகளுக்கு உதவுவதாக மன்றாடிக் கெஞ்சினார்கள். அவர்கள் இப்போதும் நல்லவர்களாகவே எங்கள் அமைப்பில் அலுவல் செய்து வருகிறார்கள்!''

கண்கள் தளும்புகின்றன.

மெய்யன்பு அமைதியாக முறுவல் பூக்கிறது: ''கடவுளின் இஷ்டப் பிரகாரம் காரியங்களைப் புன்னகையோடு செய்வதில்தான் உண்மையான புனிதம் உண்மையாகவே காக்கப்பட முடியும்!''

அன்னை தெரேசா!...

உண்மையான அன்பிற்கு ரத்தமும் தசையுமான ஆதரிச வடிவம்!

''தாய்போல் எளியவரைத் தாங்கு!'' —வேத நாயகர்

ஏழைநலப் பணிக்குக் கண் காணும் கன்னி மாதா!

பரிசுத்தமான தெய்வ நம்பிக்கையின் கலங்கரை!

புண்ணிய பாரதத் திருநாட்டுக்கு விதி வசமான விட்டகுறை—தொட்ட குறையால் கிடைத்த புண்ணிய விதி!

பாவேந்தர்: "தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்!"

செந்தமிழ்க் கன்னித் துறவியாகிப் பசிப் பிணி போக்கி வாழ் நாளெல்லாம் அமுத சுரபியாகப் பொலிந்த மணிமேகலையின் மறு அவதாரம்!

தெரேசா அன்னை!...

தியாகப் பேரொளி!

தெய்வப் பிறவி!

பாவிகளை ரட்சிக்கச் சிலுவையைச் சுமந்த கருணை வள்ளல் ஏசுவின் உயிர் உருவம்!

அறவினைத் தாயார்!

'அன்பின் தூதுவர்கள்' என்னும் தருமப் பணி இயக்கத்தை—அமைப்பை உலகம் முழுவதும் முழுமையாகவே உணரும்; அறியும்!

வாழும் புனிதையான அன்பின் தலைவி தெரேசா, வாழும் அன்புக்கு ஓர் அன்னை!—அவர்தாம் அன்னை தெரேசா!

தியாகத்தின் பேரொளிப் பிழம்பான தேவமைந்தன், அன்பின் துருவ நட்சத்திரமாக சீர்மிகு மூவுலகிற்கும் அன்று வழிகாட்டினார்.

கன்னித்துறவி அன்னை இன்று வழிகாட்டுகிறார்!

தர்மம் வெல்லும்.

அன்பு வெல்லும்.

சத்தியம் வெல்லும்.

அன்னை தெரேசா வென்றார்!

நோபல் பரிசும் வென்றது!

உலகத்தின் உயர்ந்த புகழைக் கொண்ட நோபல் பரிசு (The Noble Prize), உலகத்து மக்களின் அன்புப் புகழைக் கண்ட அன்னை தெரேசாவைத் தேடி வந்தது.

வங்கக்கவி மன்னர் தாகூர், தமிழ்ப்பெரு விஞ்ஞானி சர். சி. வி. ராமன் ஆகியோரைத் தொடர்ந்து வந்த பரிசு இது!—யூகோஸ்லேவியா நாட்டில் பிறந்து, இந்திய நாட்டின் குடிமகளாக ஆன அன்புத் தாய் தெரேசா, பழம் பெரும் நாடான பாரதத்தின் உலகளாவிய சமாதானக் கொள்கையை உலக அரங்கத்திலே மென்மேலும் தார்மிக நெறியுடன் ஒளிபெறச் செய்திட ஊக்கமும் ஆக்கமும் பெறும்வகையிலே, மாண்புமிக்க நோபல்பரிசிலை வென்ருர்!

சுழலும் உலகத்தின் நாடுகளிலே, சூழ்நிலைச் சுழலில் சிக்கி உருகியும் உருக்குலைந்தும் சின்ன பின்னமாகிக் கிடக்கின்ற ஏழை எளியவர்கள், சமூகத்திஞல் புறக்கணிக்கப் பட்டவர்கள், விதியின் தப்புக் கணக்குக் காரணமாக, பிறக்க வழி தெரிந்தும், வாழவழி புரியாமல் கைவிடப் பட்ட அவமானக் குழந்தைகள், உடல் நலிந்து உள்ளம் நலிந்த நோயாளிகள், வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்த நாதியற்ற அஞதைகள் போன்ற பாவப்பட்ட ஜன்மங்களுக்கெல்லாம் மெய்யான அன்பைத் தரிசிக்கவும், உணரவும், நம்பவும், அனுபவிக்கவும், ஆறுதலடையவும், அகமகிழவும் கூடிய பொன்ஞன தொரு நல்வாய்ப்பை ஏற்படுத்தி, நடமாடுகின்ற ஓர் அன்புத் தெய்வமாகவே இயங்கி, அன்பையே தெய்வமாக மெய்பித்துக் காட்டி, ஏழைகளுக்காகவே தாமும் ஏழையாகவே வாழ்ந்து, அன்புத் தொண்டாற்றி வருகின்ற அன்னையின் மனிதாபிமானம் சிறக்கும் பொதுநலப் பணிகளை இந்த மகத்தான நோபல் பரிசில் உலகிற்கு என்றென்றும் சொல்லிக் கொண்டேயிருக்கும்! சாதி, மதம், இனம், மொழி, நாடு நிறம், கடந்த உலகளாவிய வழிகளில் ஏழைச் சமுதாயநலப் பொதுப்பணிகளை அல்லும் பகலும் ஒரு தவயோகம் போலவே செய்து வருகின்ற

அன்னையின் அன்பின் தூதுவர்களே அதே உலகம் என்றென்றைக்கும் வாழ்த்திக் கொண்டும் இருக்கும்!

நோபல் பரிசு கிடைத்த செய்தி கிடைத்ததும், ஏழைகளில் ஏழையாகி, ஏழைகளிலே ஏழைகட்கு அன்புப்பணி புரிந்து வரும் அன்னை தெரேசா வழக்கமான அமைதியோடும் அன்போடும் இப்படிச் சொன்னார்கள்: "ஓ!... உலகத்திலே ஏழைகள் இருப்பதை உலகம் இப்போது உணர ஆரம்பித்து விட்டது."

1979, டிசம்பர் 10 ஆம் நாளில், உலகத்தின் அன்புத் தாயான தெரேசாவிற்குத் தங்கப் பதக்கத்தோடு வழங்கப்பட்ட ரூ 15,20,000 மதிப்புமிக்க நோபல் பரிசு அன்றைக்கே உலகத்து ஏழை மக்களின் அன்புச் சொத்தாக ஆயிற்று!

"அம்மா!... அம்மா!" உலகம் ஆனந்தக்கூத்து ஆடுகிறது!

அன்பு உடையவர்கள் எல்லாம் உடையவர்கள் தாம்!

"அன்னையே!" — ஐக்கிய நாடுகள் சபை அகமகிழ்வு அடைகிறது!

உலகத்தின் நற்பணி மன்றங்கள் களிபேருவகை அடைகின்றன!

அன்னையின் அன்பிலே— அன்பின் அமைதியில்— அமைதியின் நம்பிக்கையிலே:

பிறந்த மண்ணும் பெருமையடைந்தது.

புகுந்த மண்ணும் பெருமையடைகிறது.

அன்பே தெய்வம்!...

## 2. ஆண்டவனுக்கு நிறைவான ஒன்று!

பத்திரிகையாளர் மால்கம் மக்கரிட்ஜ் (Malcolm Muggeridge), தொலைக்காட்சி மற்றும் வானொலியில் செய்திப்பரப்பாளராக உலகிடைப் புகழ் மிகப் பெற்றவர். 'கார்டியன்', 'கல்கத்தா ஸ்டேட்ஸ்மன்' மற்றும் பல செய்தித் தாள்களில் பணி புரிந்தவர்; கல்கத்தாவில் அன்னை தெரேசாவைப் பற்றி, மெய்விளக்கத் திரைப் படத்தை எடுத்தார். தமக்கென்று வாழாமல், பிறர்க் கென்றே வாழ்ந்து, சிலுவையில் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசுநாதரின் அன்புப் பண்பு நலத்தைச் செயல் முறையிலே நடைமுறைப் படுத்தி, உலக மக்களுக்கு நித்த நித்தம் புத்தம் புதிதான செய்தி களைத் தமது அன்புப் பணிக் கழகத்தின் வாயிலாகப் புத் துணர்வுடன் அஞ்சல் செய்துவரும் அன்பான உலகத்தாய் பற்றிய அப்படத்திற்கு, 'ஆண்டவனுக்கு இஷ்டமான ஒன்று!' (Something Beautiful for God') என்னும் மகுட மிட்டார். இது கறுப்பு—வெள்ளைப்படம்!— மானிடர்தம் கறுப்பான மனங்களிலே வெள்ளையான அன்பை இனம் கண்டு, இனம் காட்டியவர் அல்லவா அன்னை?—ஏழைகளின் நம்பிக்கையிழந்த இருண்ட வாழ்விலே, நன்னம்பிக்கை எனும் ஒளித்தீபத்தை ஏற்றி வைத்த அன்னை புண்ணியவதி ஆயிற்றே! இதே திரைச் சித்திரத்தை நிலைக்களனாக அமைத்து, இதே பெயரில் இதே ஆசிரியர் அன்னையின் அன்புப் பணிகள் பற்றின சித்திர நூல் ஒன்றையும் வெளிப் படுத்தினர்.

*அன்னையுடன் உரையாடுகிறார் மால்கம்.*

**பேட்டியாளர்:** அன்னையே, ஏழை மக்களிடம் உங்களை அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டுமென்ற அந்த ஓர் உன்னத உணர்வு உங்கள் மனத்திலே எப்போது தோன்றிற்று?

**அன்னை:** உலகத்திலே, மனிதகுலத்தின் சமுதாய வீதிகளிலே, பொழுது விடிந்து பொழுது கழிந்தால், வாழ்வின் சமதருமமற்ற விதியோடு போர் நடத்தி, போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிற ஏழைகளிலே மிக மிக ஏழைகளாக வெந்தும் நொந்தும் திரிகின்ற ஆண்டவனின் குழந்தைகளான மக்களுக்கெல்லாம் பணிபுரிய வேண்டுமென்ற மனிதாபிமானத் துடிப்பு எனக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அதாவது, நான் பன்னிரண்டு வயதுச் சிறுமியாக எனது பெற்றோருடன் வாழ்ந்த அந்த 1922 காலக் கட்டத்திலேயே என்னுள்ளே உருவாகி வளரவும் தொடங்கி விட்டது!— மக்களின் க்ஷேமலாபப் பணிக்கு என்னைக் காணிக்கை வைக்கவேண்டுமென்பதாக என் உள்ளத்தின் உள்ளே கிளர்ந்தெழுந்த அந்த அன்பின் துடிப்பையும் ஆர்வத் தூண்டுதலையும் என்னை ஆண்டு ஆட்கொண்ட அன்பிற்கு இனிய என் ஏக நாதர் எனக்கு இட்ட அழைப்பாகவும் ஆணையாகவும் கருதி மதிக்கத் தலைப்பட்டேன். என் இலட்சியக்கனவு பலித்து விட்டதாகவே நான் மதிக்கிறேன்; பலித்து வருவதாகவே நான் அந்தரங்க சுத்தியோடு உணரவும் செய்கிறேன்!

**பேட்டியாளர்:** உங்களுடைய அன்பான நிழலில் நான் தங்கிய சில நாட்களிலேயே, அருட் தேவனின் அன்புமிக்க புதியதோர் உலகத்தையே கண்டேன்! — வெளியாரோ, அல்லது தனியாரோ யாருமே செய்ய முடியாத, செய்யத் துணியாத பொதுநலச் சேவைகளை உங்களது இயக்கத்தின் புனிதச் சகோதரிகள் ஒப்புதலுடனும் ஒப்புரவுடனும் சமூக அளவிலும் செய்வதென்பது உண்மையிலேயே ஆச்சரியமான காரியம்தான்! அதை

## 2. ஆண்டவனுக்கு நிறைவான ஒன்று!

பத்திரிகையாளர் மால்கம் மக்கரிட்ஜ் (Malcolm Muggeridge), தொலைக்காட்சி மற்றும் வானொலியில் செய்திப்பரப்பாளராக உலகிடைப் புகழ் மிகப் பெற்றவர். 'கார்டியன்', 'கல்கத்தா ஸ்டேட்ஸ்மன்' மற்றும் பல செய்தித் தாள்களில் பணி புரிந்தவர்; கல்கத்தாவில் அன்னை தெரேசாவைப் பற்றி, மெய்விளக்கத் திரைப் படத்தை எடுத்தார். தமக்கென்று வாழாமல், பிறர்க் கென்றே வாழ்ந்து, சிலுவையில் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசுநாதரின் அன்புப் பண்பு நலத்தைச் செயல் முறையிலே நடைமுறைப் படுத்தி, உலக மக்களுக்கு நித்த நித்தம் புத்தம் புதிதான செய்தி களைத் தமது அன்புப் பணிக் கழகத்தின் வாயிலாகப் புத் துணர்வுடன் அஞ்சல் செய்துவரும் அன்பான உலகத்தாய் பற்றிய அப்படத்திற்கு, 'ஆண்டவனுக்கு இஷ்டமான ஒன்று!' (Something Beautiful for God') என்னும் மகுட மிட்டார். இது கறுப்பு—வெள்ளைப்படம்! — மானிடர் தம் கறுப்பான மனங்களிலே வெள்ளையான அன்பை இனம் கண்டு, இனம் காட்டியவர் அல்லவா அன்னை?—ஏழைகளின் நம்பிக்கையிழந்த இருண்ட வாழ்விலே, நன்னம்பிக்கை எனும் ஒளித்தீபத்தை ஏற்றி வைத்த அன்னை புண்ணியவதி ஆயிற்றே! இதே திரைச் சித்திரத்தை நிலைக்களனாக அமைத்து, இதே பெயரில் இதே ஆசிரியர் அன்னையின் அன்புப் பணிகள் பற்றின சித்திர நூல் ஒன்றையும் வெளிப் படுத்தினார்.

அன்பின் அற்புதம் என்றுதான் சொல்லவேண்டும்! மெய் தானே?

அன்னை: மெய்தான்; அன்பின் அந்த அற்புதமான உணர்வுதான் எங்களுடைடய பொதுநலம் சார்ந்த அன்புப்பணி இயக்கத்திற்கு உயிர் மூச்சாக விளங்கி வருகிறது. மக்கள் தொண்டில் சரணடைதல், அன்பு பாராட்டுதல், நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுதல், மகிழ்வோடு பணிபுரிதல் போன்ற மனநிலைச் சிறப்புக்கள்தாம் எங்கள் சமுதாயத்தின் ஜீவாதாரமான நோக்கங்களாக இருந்து வருகின்றன. உள்ளன்போடு நாம் செய்கிற சேவைகள் ஏழை எளியவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதாக அமையவேண்டும். அவர்களும் பிறரால் நேசிக்கப்படுகிறார்கள் என்கிற மன நிறைவை ஏழைகள் பால் ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பம். அப்போதுதானே, வெந்து நொந்த ஏழைகளுக்கு வாழ்க்கையிலே ஒரு நம்பிக்கையும், அதையும்விட ஆண்டவரிடம் நம்பிக்கையோடு கூடிய ஒரு பற்றுதலும் ஏற்பட முடியும்?

பேட்டியாளர்: உலகத்திலே அங்கங்கே நலிந்தும் மெலிந்தும் வாடியும் வதங்கியும் கிடக்கின்ற ஏழை எளிய மக்களுக்காக நீங்கள் உங்கள் அமைப்பின் வழியில் செய்து வருகின்ற பொதுநலக் காரியங்களெல்லாம் அங்கங்கே அரசு சார்ந்த அமைப்புக்கள் வாயிலாகவே செய்யப் படுவதே நல்லதென்று ஒரு கருத்து பரவலாக நிலவி வருகிறது! — அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

அன்னை: நாங்கள் செய்து வருகிற இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் நாங்களா செய்து வருகிறோம்? - ஊஹூம்! ‘அவன் அன்றி ஓரணுவும் அசையாதே?’— ஆண்டவனின் கருணை மட்டும் இல்லாமற்போனால், எங்களால் இத்தகைய அன்பு நலப் பணிகளைச் செய்ய முடியுமா’ —என்ன? ஒருக் காலும் முடியாது! ஏழை

மக்களின் நிமித்தம் நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு சேவையிலும் எங்களுடன் கூடவே ஆண்டவனும் துணைநிற்கிறார் என்பதாகவே நாங்கள் அனைவரும் உணர்கிறோம்; உண்மையும் அதுவேதானே?

ஏழைகளிலும் ஏழைகளுக்காகத் தம்மையே அர்ப்பணம் செய்து வருகின்ற அன்னை தெரேசாவின் 'அன்பின் தூதுவர்கள்' என்னும் உலகளாவிய அறநெறிப்பணி அமைப்பின் பயனுள்ளதும் பயனளிப்பது மான நடைமுறைச் செயற்பணிகளைப் பற்றிப் பத்திரிகையாளர் மால்கம் மக்கரிட்ஜ் 'ஆண்டவனுக்கு இஷ்டமான ஒன்று' ('Something Beautiful for God') என்கின்ற தமது நூலில் விளக்கமாகவே எழுதியுள்ளார்.

அன்புத் தாயார் சொல்வார்கள் : "பரிபூரணமான உங்களுடைய இருதயத்தோடும் ஆத்மாவோடும் மனத்தோடும் நீங்கள் உங்களது ஆண்டவனை நேசிப்பீர்களாக!" — இதுவே ஆண்டவனின் கட்டளை அல்லவா? — நடக்க முடியாததைக் கட்டளை இடமாட்டான் ஆண்டவன்! — அன்பு என்பது ஒரு கனி! — அன்புக் கனிக்குப் பருவம் இல்லை; எக்காலத்திலும் கிடைக்கக் கூடியது; எல்லோருக்கும் கிடைக்கக் கூடியது. அன்பின் கனியை யார் வேண்டுமானாலும் சேகரம் செய்யலாம்; அதற்கு அளவே கிடையாது. தீவிரமான உள்ஒளி மிகுந்த வாழ்க்கையின் மூலம், தியானம், பிரார்த்தனை, தியாகம் போன்ற மனப் பக்குவத்தின் விளைவாக, இப்படிப்பட்ட தெய்வீக அன்பை யார் வேண்டுமானாலும் பெறமுடியும்!"

தெய்வத்தின் மீதான இந்தத் தெய்வீக அன்பிற்கு ஓர் உயிர்ச் சாட்சியமாகத் திகழ்கிறார்கள் அன்னை.

**வ**ரலாற்றுப் புகழ் சேர்த்த இந்திய நாட்டின் கல்கத்தாப் பெருநகரின் வரலாற்றின் புண்ணிய நாள் அது!

1950 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் நாளிலே, கிரீக் தெருவில் 14 ஆம் எண் கொண்ட கோம்ஸ் இல்லத்தின் மாடியிலே, கிறிஸ்தவத் திருச்சபையின் மேலாளர்களின் ஒப்புதலோடு புனித அன்னை மேரி தெரேசா தமது அன்புப் பணி அமைப்பிற்கு 'அன்பின் தூதுவர்கள்' என்று பெயர் சூட்டி, சட்ட முறைப்படி ஆரம்பித்து வைத்த அன்புப் பணி இயக்கம் இன்று பாரதம் கடந்து உலகமெங்கிலும் தழைத்து வருகிறது.

உலகத்தின் மனிதர்களுக்கு அன்னை விடுத்துள்ள அன்புச் சேதி இதுதான்: "...துன்புறுத்தும் வரையிலும் அன்பு செய்யுங்கள்!"

உலகத்தின் அன்புக்குப் பாத்திரமான அன்னையுடன் அன்போடும், பாசத்தோடும், பக்தியோடும் நெருங்கிப் பழகும் பாக்கியத்தைப் பெற்ற திருமதி டாஃப்னே ரே (Daphne Rae) அன்னையின் மேற்கண்ட அன்புச் செய்தியையே மகுடமாக்கி எழுதியுள்ள 'துன்புறுத்தும் வரையிலும், அன்பு செய்யுங்கள்!' (Love until it hurts) என்னும் புத்தகத்தில் சொல்லுவதாவது: "...வாழ்க்கை எனப்படும் புதிர் விளையாட்டில், அன்பு எனும் மகா சக்தியின் மகிமையையும் பங்குப் பணியையும் நான் தெரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் பொன்னானதொரு வாய்ப்பு வசதியை எனக்கும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமைக்கும், புண்ணியத்திற்கும் உரியவர் அம்மா தெரேசா—தெரேசா அம்மாவே ஆவார்!... அன்பு, நம்மைத் துன்பப்படுத்தும் பரியந்தம் நாம் அன்பு செய்து கொண்டேயிருக்க வேண்டும் அவ்வாறு செய்யும் பட்சத்தில், பின்னர் நமக்குத் துன்பமே ஏற்படாது; அந்த அன்பு வளரவும் பெருகவுமே செய்யும்! அதுவே அன்பின் உன்னதம்; அற்புதம்! ..."

அம்மையார் சொல்வது மெத்தச் சரிதான்!—போரும், போராட்டமும், போட்டியும், பொறுமையும், ஆசையும், பேராசையும் நிறைந்த நடப்பு உலகத்திலே,

சமூக அநீதிகளின் விளைவாக அன்றாடம் சாவுக்கும் வாழ்வுக்கும் இடையிலே செத்துச் செத்துப் பிழைக்கிற— பிழைத்துப் பிழைத்து மடிகிற எண்ணிலடங்காத ஏழைகளைப்பற்றி—ஆண்டவனின் குழந்தைகளான அந்த ஏழைகளைப் பற்றி எண்ணிப் பார்க்கக் கூடிய பொன்மனம் அன்றைக்கு அன்னைக்கு இருந்த காரணத்தினாலேதான், இன்று அன்னையின் அன்புப் பணி இயக்கம், வளர்ந்து கொண்டிருக்கும் மூன்றாவது உலகத்திலும் அடி முடி தொட்டுக் கற்பக விருட்சமாக வளர்ந்திருக்கிறதென்றும் சொல்லலாம்!

"நம்பிக்கை எனும் மேலான, மேன்மையான சக்தி ஆண்டவனின் அருட்பிரசாதம்! நம்பிக்கை இல்லாவிடில், அப்பால், வாழ்க்கையே கிடையாது! மனிதப் பிறவி பயன் பெற்றுப் பயன் தர வேண்டுமெனில், நாம் ஆண்டவனின் மெய்யன்புப் பணியாளர்களாக ஆக வேண்டும்; அப்போதுதான், நம்பிக்கையின் பலம் பெற்ற மனித வாழ்க்கையில், மற்றவர்களையும் நேசிக்கக் கூடிய மனப்பக்குவம் பலன் பெற இயலும்!" உணர்ந்ததைக் கண்டு, கண்டதை உணர்த்துகின்ற அன்னையின் முதுரைக்கு அன்னையே சாட்சி ஆகிறார்.

அன்று, நம்பிக்கை இழந்து, ஆதரவு இற்றுப் போன ஏழை எளிய மக்களின் இருண்ட வாழ்க்கையில் அன்னை கருணையுடன் ஏற்றி வைத்த அன்பு விளக்கு இன்று மேலும் மேலும் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறது!—அது என்றென்றும் அமர ஒளியாகவே விளங்கும்!

**1971 :**

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்ததொரு மாநிலமாக அப்போது விளங்கிய கிழக்கு வங்காளம் சார்ந்த மக்கள், பாகிஸ்தான் அரசுக்கு எதிராக விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

வங்கப் போர் மூண்டது.

'பங்களாதேஷ்' உருவாவதற்கும் உருவாக்கப் படுவதற்கும் முன்னே நடந்த போரிலே சிக்கித் தவித்த எண்ணிலடங்காத மக்கள் கதியற்ற நிலையில் இந்திய மண்ணைத் தஞ்சமடைந்து, கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்த போது, அவர்களுக்கெல்லாம் தயையோடும் தாட்சண்யத் தோடும் புகலிடம் தந்து, தமது அறப்பணி அமைப்பை அந்த அகதிகளின் அன்புச் சரணாலயமாக ஆக்கித் தந்தவர் அன்னை தெரேசாவே அல்லவா?

அன்றைக்கு இந்து—முஸ்லிம் ஒருமைப்பாட்டுக்காகத் தேசத் தந்தை கொண்டு செலுத்திய நவகாளி யாத்திரையையும் அப்போது அன்னை உலகிற்கு நினைவூட்டி யிருக்கவேண்டும்.

கல்கத்தாவில் கீழ் வளைவுச் சாலையில் நிறுவப்பட்ட 'சிசுபவனம்' என்னும் குழந்தைகள் காப்பகம், பதினாறு ஆண்டுகளைத் தாண்டியபின் புதியதொரு குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தப்படவும் ஏதுவாக அமைந்தது.

அப்போதுதான், கிழக்கு வங்கப்போர் அகதிகளின் மறுவாழ்வுக்கான தருமப் பணிகளில் முழுமூச்சோடு அன்னை முனைந்திருந்தார். அச்சமயத்தில், பாரத நாட்டுக்கு வருகை தந்த செனட்டர் எட்வர்ட் கென்னடி—(Senator Edward Kennedy)—ஆமாம், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் அமரர் ஜான் கென்னடியின் அன்புச் சகோதரர்—அன்னையின் அகதி முகாம்களை நேரில் சென்று பார்வை யிடவும் நேர்ந்தது. மனிதாபிமானம் நிரம்பிய அன்னையின் மனித குலச் சேவைகளை மெச்சி மகிழ்ந்த எட்வர்ட் கென்னடி, தாய்க் குலத் திலகமான அன்னையின் அன்புப் பணிகள் மேலும் சிறக்கவும் நிறக்கவும் ஊக்கமளிக்கும் வகையிலே, தமது தந்தையின் பெயரில் அமைக்கப் பட்டிருந்த 'ஜோசஃப் கென்னடி அறக் கொடை' யின் மூலம் ஐயாயிரம் டாலர் வெகுமதியை அளித்துப் பெருமை தேடிக் கொண்டார். அந்நேரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த

புதிய குழந்தைகள் காப்பகம், 'நிர்மல் கென்னடி சிசுபவனம்' என்னும் புதிய சிறப்புப் பெயரையும் ஏந்தித் திகழத் தொடங்கிற்று. "நாட்டுக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்கின்ற என்றென்றும் நிரந்தரம் பெற்ற அமரர் கென்னடியின் வினவுக்கு நிரந்தரமான விடையளிக்க பாரதத்தின் குடிமகளாக ஆன அன்னை தெரேசா தோற்றுவித்த அறப்பணி இயக்கத்தின் ஒவ்வோர் அமைப்பும் உலகத்தின் பொது மேடையினின்றும் அன்பு ஒளி சிந்திக்கொண்டிருக்கிறதே?

அவனி முழுவதையும் அன்பின் சக்தி கொண்டு, அரசாண்ட ஆண்டவன் ஏசுவின் சொற்களைச் செயலாக்கிய அன்னையின் அன்பு நடவடிக்கைகளில் டார்ஜிலிங் நகரம் மற்றுமொரு திருப்பத்தை ஏற்படுத்தியது. அங்கே நிகழ்ந்த நிலச்சரிவில் தொல்லைப்பட்ட மக்கள்தம் துயர் துடைத்திடப் பறந்தார் அன்னை. வழியிலே ஏற்பட்ட விபத்தில், மயிரிழையில் உயிர் தப்பினர் நெற்றியிலே பட்ட அடி சற்றே கீழே இறங்கியிருந்தால், அன்னை, கண்ணொன்றை இழந்திருப்பார்! — பத்தொன்பது தையல்கள் போடப்பட்ட நிலையில், மருத்துவமனையில் அன்னை அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அன்னையைப் போய்ப் பார்த்தார், திருமதி காந்தி.

அன்னை பெரிதும் ஆறுதலடைந்தார். 1946 செப்டம்பர் 10 ஆம் நாளன்று டார்ஜிலிங் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது, தம்முள் ஒளிர்ந்த உள்ஒளியில் எதிரொலித்த வேத நாயகனின் அருட்குரல் தமது வாழ்க்கைப் பயணத்தில் மகத்தான முதல் திருப்பத்தை உண்டு பண்ணிய நிகழ்ச்சியும் அப்போது அன்னையின் தாய் மனத்தில் புனையா ஓவியமென நிழலாடியிருக்கலாம்!— "ஒடுக்கப்படுபவனும் யார் துணையும் இல்லாமல் நடுத் தெருவில் இறந்து கிடப்பவனும் தொழுநோயால் உடலும் உள்ளமும் சிதைந்து நைந்து கிடப்பவனும் நானே!"— ஏசுவின் இதய ஒலி திரும்பவும் ஒலித்தது.

1982, ஆகஸ்ட், 18 :
இடம் : பெய்ருத் :

உலகத்தின் அமைதியைச் சோதனை செய்த மற்று மொரு துன்பநாள்.

இஸ்ரேலின் பயங்கரக் குண்டு வீச்சுக்கு இலக்கான பெய்ருத் நகரில் அல்லற்பட்டு அவதிப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை அவசரமாகச் செய்திட, அன்னை பெய்ருத் நகருக்கு வந்து சேர்ந்தார்; முற்றுகை இடப் பட்டுக் குண்டு வீச்சுக்கு ஆட்படுத்தப்பட்ட மேற்கு பெய்ருத் நகரிலிருந்த ஒரு மனநோய் மருத்துவ மனையினின்றும் ஆதரவற்றுத் தவித்த முஸ்லிம் குழந்தை களைக் காப்பாற்றி, லெபனன் தலைநகரில், பெய்ருத்தில் இயங்கிவரும் அன்புப் பணி அமைப்புப் பள்ளியில் அக்குழந்தைகளுக்குச் சிகிச்சை அளித்தார்!— மேற்கண்ட பயங்கரப் போரில் பலியாகவிருந்த பச்சிளங் குழந்தைகளைப் புனிதமான மனிதாபிமானத்தோடும், அன்பான தொண்டுள்ளத்தோடும் காப்பாற்றியதற்கு அரசியல் பின்னணி எதுவும் இல்லையெனவும் அப்போது அன்னை தெரேசா அறிவித்தார்!— இஸ்ரேல் துப்பாக்கிகள் கொடுமை சூழத் தீ நாக்குகளைப் பயங்கரமாக நீட்டிப் பயமுறுத்திக் கொண்டிருந்த அச்சோதனைப் பொழுதிலே, மேற்குப் பெய்ருத் நகரின் வீதிகளிலிருந்து அன்னை தம் உயிரை ஒரு பொருட்டென மதிக்காமல், குழந்தைகளின் உயிர்களைப் பெரிதென மதித்து அவர்களைக் காப்பாற்றிய அந்த அருமை பெருமையை உலக வரலாறு என்றென்றும் நன்றியுடன் சொல்லிக்கொண்டிருக்கும். "உம்" தெரேசாவை—அதாவது, அம்மா தெரேசாவை அரபு மொழி மறவாது!

பின்னர், இஸ்ரேல் மற்றும் அரபுத் தலைநகர்கட்கு விஜயம் செய்தபோது, போர் மேகங்கள் சூழ்ந்த கா்ஸா பகுதியின் கேந்திரத்திலும் கூட, அன்புப் பணிக்கு அடிகோலினார் அன்னை!

கத்தியின்றி, ரத்தமின்றி அடிமை விலங்குகளை அறுத்தெறிந்து சுதந்தரம் பெற்ற பாரதத் தாய்நாட்டின் புனிதமயமான வரலாற்றில், 1983 பிப்ரவரி ரத்தக்கறை படிந்த ஏடுகளின் காலக்கட்டமாக அமைந்தது. அக்காலக் கட்டத்திலே தான், அஸ்ஸாம் மாநிலத்தில் பயங்கரமான படுகொலைகள் நடந்தன!

அஸ்ஸாம் படுகொலைகளில் முக்கியம் பெற்ற நெட்லே, ஷில்லாங் போன்ற இடங்களுக்கு அன்னையுடன் பின் தொடர்ந்த 'இந்தியா டுடே' (India Today) பத்திரிகையின் படப்பிரிவு மற்றும் செய்தித்துறை சார்ந்த ரகுராய், சுமிட் மித்ரா ஆகியோர், அன்னையோடு தொடர்ந்து கலந்துரையாடிய சமயங்கள் முக்கியம் பெற்றன.

அன்னை பேசுகிறார்கள் : "...அஸ்ஸாம் படுகொலைகளைப் பற்றி நான் அறிந்ததும், என்னுடைய முதல் எண்ணம் அந்தப் பகுதிகளின் அனாதைகளைப் பற்றித்தான் எழுந்தது. பாவம், அவர்களுக்கெல்லாம் இப்படிப்பட்ட கலவரங்கள் மற்றும் கலகங்கள் பற்றின காரண காரியங்கள் கூட சரிவரத் தெரியாதே? தங்களைப் பற்றி கவலையும் அக்கறையும் கொள்ள உலகத்திலே இன்னமும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்னும் நம்பிக்கையை அவர்களது உள்ளங்களில் ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் அவசியமானதும் அவசரமானதுமான முதற் பணியென்றும் நான் எண்ணினேன்! பிறகு, அஸ்ஸாம் முகமதியர் சங்கத்திலிருந்தும் எனக்குக் கடிதம் வந்தது!"

பிரச்சனைக்குரிய வினா எழும்புகிறது.

"ஊஹூம்; அஸ்ஸாம் படுகொலையில், பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்பதற்காக மட்டும் எங்களது அன்புப் பணி தொடரவில்லை. பெய்ரூத் ஆகட்டும், அஸ்ஸாம் ஆகட்டும்! அங்கங்கே வாழ்கின்ற மக்கள் அனைவருமே ஆண்டவனின் குழந்தைகள் அல்லவா? தேசம், இனம், மதம், மொழி போன்ற கட்டுப்பாடுகள் அல்லது

தடைகளைக் கடந்த அளவிலும் பொது அன்பின் பேரிலுமே எங்களது அன்புப் பணி இயக்கம் அன்றிலிருந்து இன்று வரையிலும் செயலாற்றி வருகிறது! அஸ்ஸாம் மாநிலத்தில் அமைதி நிலவுமென்றும் இப்போது நான் நம்புகிறேன். மறப்பதற்கும் மன்னிப்பதற்கும் அருமையானதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வுண்மை நிலையை அஸ்ஸாமியர்கள் உணரவேண்டும். மன்னிக்கக் கூடிய மனநிலை சித்திக்கப் பெறுமல் போனுல், பிறகு, நாம் ஒருவரையொருவர் எங்ஙனம் நேசிக்கக் கூடும்?" என்றார் அன்னை. ஆமாம்; நேசிப்பதற்கும் நேசிக்கப்படுவதற்குமே நாம் ஆண்டவனுல் படைக்கப்பட்டிருக்கிறோம். பிரார்த்தனையின் பலன்தான் அன்பு—நேசம்; நேசத்தின் விளைவாகவே, தொண்டு சிறக்கும்! அறநெறி தழுவிய எங்களுடைய ஏழை நல அன்புப் பணிமுறையின் பொதுவான விதிமுறையும் இதுவேதானே?'' என்று மேலும் தொடர்ந்தார்கள்.

**1983:** சங்கம் வளர்த்த தேமதுரத் தமிழ் அன்னையின் அன்பு மக்களான தமிழர்கள் சிங்களத் தீவினிலே அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட நேரத்தில், அன்னையின் அன்புப் பணிகள் தமிழ் ஈழத்தின் காப்புக்கும் அடிகோல வேண்டுமென்று ஒலித்தது தமிழ்க் குரல்!

கேள்விகள் மறுபடி புறப்படுகின்றன: "ஏழைகளிலும் ஏழைகளுக்குப் பணி செய்ய வேண்டுமென்று தாங்கள் உலகிற்கு முன்னேடியாக முன்வந்ததற்குப் பிரத்தியேகமாகக் காரணம் ஏதாவது இருக்கிறதா?''

"ஏழைகளால் தங்களுக்காகப் போராட முடியும்; ஆனுல், ஏழைகளில் ஏழைகளால் அவ்வாறு போராட முடியாது. இவர்களுக்கென்று உலகத்திலே யாரும் இல்லை; எதுவும் இல்லையே! தவிரவும், இவ்வுலகத்திலே தங்களுக்கென்று யாருமே இல்லாத, எதுவுமே இல்லாத துர்ப்பாக்கியசாலிகள் தாம் கடையரினும் கடையராகக் கருதப்படுகிறுர்கள்! அப்படிப்பட்டவர்களுக்குத்தானே

அன்பு மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது? உண்மை தான்! அவர்களுக்கு உணவைவிடவும் அன்புதான் மிகமிக அதிகப்பட்ச அளவில் அவசியம் ஆகிறது. ஆகவேதான் ஏழைகளில் மிகமிக ஏழைகளுக்காகவே நாங்கள் பொதுமையில் அன்புச் சேவைகளைச் செய்து வருகிறோம்!''

''அன்னையே, உங்களது அன்புத் தூதுவர்கள் இயக்கம் உண்மையிலேயே ஏழைகளுக்கு ஓர் அமுதசுரபியாகவும், ஒரு காமதேனுவாகவும் ஒரு கற்பகத் தருவாகவுமே விளங்கி வருகிறது!—ஆனால், பிச்சைக்காரர்களுக்கு உண்டி கொடுத்து, உடை கொடுத்து, நிழலும் கொடுத்துத் தாங்கள் ரட்சிப்பதன் விளைவாக, தாங்கள் எந்தவொரு பிரச்சனையையும் தீர்க்கவில்லையென்றும், அதற்குப் பதிலாக, தாங்கள் ஏழைகளைச் செல்லம் கொடுத்துக் கெடுத்து வருவதாகவும் ஒரு சிலர் பேசி வருகிறார்களே?''

''அட கடவுளே! இன்றைய உலகத்திலே, அப்படிப் பேசுகிற ஏதோவொரு கூட்டம் ஏழை எளிய மக்களைப் பதனழியச் செய்து கொண்டிருக்கலாம்! மற்றவர்களில் ஒவ்வொருவரும் பணக்காரர்களைத் தானே கெடுத்து வருகின்றனர்!'' அன்னை நயமாகவும் விநயமாகவும் புன்னகை செய்கிறார்கள்: ''நாங்கள் ஏசுவின் பணியாளர்கள். எங்கள் கடன் அன்புப்பணி செய்வதே!''

''சரி, இந்தியாவின் ஏழ்மை நிலைக்குக் காரணம் என்னவாம்?''

''சமத்துவமின்மை! — இன்றைய உலகத்தில் எங்கே பார்த்தாலும் நிலவி வருகின்ற உயர்நிலை — தாழ்நிலை என்கிற ஒப்பின்மைப் போக்குத்தான் வறுமைப் பசிக்கு உரித்தான காரணமாக அமைந்திருக்கிறதென்றும் சொல்லலாம்! — நமது இந்திய நாட்டிலே, நாமெல்லோரும் ஏழைகளாகவே இருக்கிறோம். ஏனென்றால், நீங்களும் நானும் பொருட்களை இங்கே பங்கிட்டுக் கொள்வதில்லை! — ஆதலாலேதான், 'நான் மேல்; நீ கீழ்!' என்ற பாரபட்ச நிலை. பசி, வறுமை காரணமாக இங்கே அதிகமாகவே

காணப்படுகிறது! யோசித்துப் பாருங்கள். எவ்வகையிலும் முன்னணியிலே விளங்கிக் கொண்டிருக்கிற ஜப்பான் நாட்டிலோ, அல்லது முன்னேற்றம் அடைந்த ஒரு சில மேற்கத்திய நாடுகளிலோ, 'எல்லோரும் ஓர் நிறை' என்னும் சரி சமானப் போக்குச் சற்றே குறைவாகக் காணப்படலாம்; ஆகவே, அங்கே வறுமை நிலையும், பசிச் சிக்கல் நிலையும் குறைந்திருப்பதாகத் தோன்றலாம்! ஆனால், ஒன்று: மேற்கே நிலவுகிற ஏழைமையின் நிலை வித்தியாசமானது. ரோம் ஆகட்டும், லண்டன் ஆகட்டும், ஏன், அமெரிக்காதான் ஆகட்டும்! — அங்கெல்லாம் ஆத்மாவின் வறுமையும் வெறுமையும் மிஞ்சிக் கிடக்கும்! .. இரவு நேரங்களில், லண்டனிலுள்ள எந்தப் பூங்காவிற்குப் போனாலும் சரி, அங்கே மனிதர்கள், தன்னந்தனியாக, சமூகத்திலிருந்து தூக்கி வீசப்பட்டவர்களாகப் பெஞ்சுகளில் தூங்கிக் கொண்டிருப்பதை எப்போதும் பார்க்கமுடியும். மேலும், ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாக் கண்டங்களிலே போதைப் பைத்தியம் வேறு பேயாய் ஆட்டிப் படைக்கிறது. இங்கே, இந்தியாவிலும் ஏதோ வொரு காரணத்தின் பேரில் பொதுவான மக்கள் "அடிக்கடி நியாயமின்றி கொல்லப்படுகிறார்கள்!"

பொதுவுடைமை வாதிகள் மக்களிடை நிலவும் சரிநிகர் சமானம் இழந்த போக்கைச் சீராக்கி விட்டதாகச் சொல்லிக் கொள்வது பற்றிய கேள்வி இப்போது கேட்கப் பட்டது.

அன்னை: "அது உண்மையல்ல. கம்யூனிஸ்ட் தேசங்களில் பெருமளவில் சமத்துவமின்மை தலைவிரித்தாடுகிறது. ஆனால், அங்குள்ள மக்கள் அதைப்பற்றி வெளியில் எதுவுமே பேச அனுமதிக்கப்படுவதில்லை! அவ்வளவே தான்!—ஆனாலும், பொதுஉடைமைக் கட்சிக்காரர்களிலே 'லர் மிகவும் அன்போடும் பரிவோடும் மக்களிடம் பழகி வருகிறார்கள்; அவர்களைப் பொறுத்தமட்டில், இதுவரையிலும் எனக்கு எவ்விதமான சிக்கலும் ஏற்பட்டது கிடையாது. நான் யூகோஸ்லாவியாவில் பிறந்தவள்;

அல்பேனியப் பெண். நான் இங்கே கல்கத்தாவில் பணிபுரிகிறேன்!— இவ்விரு நாடுகளிலும் தற்போது 'பொதுவுடைமைக் கொள்கை'தான் அரசாள்கிறது! ஏன், நான் இன்று ஒரு வங்காளிப் பெண்ணுதானே?... (சிரிப்பு) மேற்குவங்காளம் தான் எனது தாய்வீடு. இங்கேயும்கூட கம்யூனிஸ்டுகள்தான் ஆளுகின்றனர். கல்கத்தாவில் நக்ஸலைட்டுகள் தொல்லைப்படுத்திய மோசமான அந்த நாட்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் எனக்கு உதவிதான் செய்தார்கள். கலவரங்களில் அடிபட்டவர்களையும் நோய் வசப்பட்டவர்களையும் என்னிடம் கொண்டு வந்தார்கள். சரி; இப்போதைய நமது முதல்வரான ஜோதி பாசு அவர்கள் மகத்தான பண்பாளர் ஆயிற்றே!— அவருடைய பெருவாழ்வுக்காகவும் நான் அனுதினமும் என் ஏசுநாதரைப் பிரார்த்தனை செய்து வருகிறேன்!''

''நமது பாரதப் பிரதமர் திருமதி காந்தி அவர்களைத் தாங்கள் அடிக்கடி சந்தித்திருப்பீர்களே?''

''ஆமாம்; நிறையத் தடவைகளில் சந்தித்திருக்கிறேன்!''

''திருமதி காந்தியைப் பற்றி...?''

''நாங்கள் இருவரும் நல்ல சிநேகிதிகள். நாட்டிலே நிலவும் வறுமை நிலைமை குறித்து ரொம்பவும் கவலைப்படுகிறார்கள்; என்னிடம் எப்போதுமே அன்பு பாராட்டுபவர்கள்! ஆனால், திருமதி காந்தியோடு அரசியல் சம்பந்தமாக ஒன்றுமே பேசமாட்டேன். நமது அன்பான பிரதமர் மக்களை வெகுவாகவே நேசிக்கிறார்கள்!''

''அன்னையே, இங்கே இந்தியாவில் நீங்கள் உங்களுடைய வாழ்நாளில் பெரும்பகுதியை வாழ்ந்து விட்டீர்கள்!—ஆகவே, இந்திய நாட்டைப்பற்றி உங்களது கருத்தைத் தெரிந்து கொள்ளலாமா?''

அன்னை சொல்கிறார்கள்: ''அருமை இந்தியா என்னுடைய அன்பான தேசம்; நான் ஓர் இந்திய நாட்டுக்

குடிமகள். ஆனாலுங்கூட, இங்கே ஒருவரையொருவர் அன்பு பாராட்டுவதோ, அல்லது, ஒருவருக்காக மற்றவர் கவலைப்படுவதோ கிடையாதென்கிற துர்ப்பாக்கிய நிலையை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் ஒன்று மனிதாபிமானத்தின் பண்பும் மனிதத்தன்மையின் பண்பாடும் குறைந்த வருந்தத்தக்க இத்தகைய போக்குக்கு இந்துமதம் ஒருவகையிலும் காரணம் ஆகாது! — மனிதர்களை நேசிக்கக் கூடாதென்று எந்த ஒரு மதமும் சொல்லாது; சொல்லவும் முடியாது; சொல்லவும் கூடாது! வாழ்க்கை நிலையில் கொடுமையையோ, ஏற்றத்தாழ்வையோ, வறுமையையோ, இரக்கமற்ற தன்மையையோ இல்லை, நாத்திகப் போக்கையோ எம்மதமும் அனுமதிப்பது கிடையாது! ஆனால், இந்திய நாட்டில் நிலவி வரும் ஜாதிமுறை காரணமாகவும், நாட்டிலே அன்பு வளரவும் முடியாமல் வாழவும் இயலாமல் தவிக்கிறதென்னும் உண்மையை நாம் எப்படி மறுத்துவிடக் கூடும்?''

**கேள்வி:** ''இந்தியாவில் மட்டு மல்லாமல், உலகில் வேறெங்குமே காணமுடியாத அளவுக்கு அன்புள்ளதாகவும் ஆன்மபலம் மிக்கதாகவும் தங்களது மதிப்பில் உயர்ந்து நிற்கும் கல்கத்தா பெருநகரில் சிறு மோத்திஜில் சேரியில் 1948 டிசம்பர் இறுதி வாக்கில் பள்ளியொன்றைத் திறந்து தங்களுடைய அன்புப் பணியை ஆரம்பித்து, இது நாள்வரை அல்லும் பகலும் ஆண்டவன் ஏசுவுக்காக மிக மிக ஏழைகளுக்குத் தொண்டு செய்து வருகிறீர்கள். ஆனால், தாங்கள் மேற்கொண்டிருக்கும் உலகரீதியிலான அன்பின் பணி, உலகத்தை ஆட்டிப் படைக்கும் வறுமைப் பிரச்சனையோடு ஒப்பிடுகையில், மிகவும் சிறியது என்னும் உணர்வு தங்கட்கு எப்போதாகிலும் எழுந்தது உண்டா?''

**அன்னை:** ''அன்பு என்னும் மகா சமுத்திரத்திலே என் தொண்டு ஒரேயொரு துளிதான்; ஆனாலும், அந்த

ஒரு துளிப்பணி சமுத்திரத்தில் சேர்ந்திராமல் இருந்திருந்தால், அந்த ஒருதுளி அளவிற்குச் சமுத்திரம் குறைந்திருக்கும்! அன்றைக்கு, அதாவது அநேக ஆண்டுகளுக்கு முந்திய அன்றைக்கு, நடுவீதியில் இறந்து கொண்டிருந்த ஒரு நடுத்தெரு நாராயணனை நான் என் பணி மனைக்கு எடுத்துச் செல்லாமல் இருந்திருந்தால், இந்நேரத்தில் அப்படிப்பட்ட 43,000 அனாதைகளுக்கு நான் அன்பு செய்திருக்க வாய்த்திருக்குமா, என்ன? ஏழைமை, பசி, வறுமை போன்ற உலகப் பிரச்னைகளைப் பற்றி ஆழமாக ஆராய்ந்து, அவற்றிற்கான காரண காரியங்களைப் பரிசீலிக்க எனக்கு நேரம் இல்லை. ஏழைகள் மற்றும் நோயாளிகளுக்கும் நேரம் கிடையாது. நாங்கள் ஆய்வாளர்கள் அல்லவே! — நாங்கள் பணியாளர்கள் தாமே?''

நாட்டில் தொன்றுதொட்டு மக்களுக்குச் சேவை செய்வதில் பல அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. காவல் நிலையத்தினின்றும் கைவிடப்பட்ட அனாதைக் குழந்தைகளை ஏற்றுப் பராமரித்து மத அடிப்படையில் இயங்கும் அன்னைமேரி தொண்டு மனை, மற்றும் வயதான ஏழைகளின் சின்னஞ்சிறு சகோதரிகள் பணி இல்லம் போன்றவை கல்கத்தாவில் பிரசித்தமானவை; இராம கிருஷ்ணமடம் சார்ந்த பாரத் சேவாசிரம சங்கம் போன்ற நிலையங்களும் தேசிய அளவிலே செஞ்சிலுவைச் சங்கங்களின் பாணியிலான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன், ஏழை வீட்டுச் செல்வங்கட்கு இலவசமான உணவுக்கும் படிப்புக்கும் வழி செய்தும் வருகின்றன.

இருந்தும் கூட—

ஏழைகளில் ஏழைகளுக்கு இலவசமாக அன்புப் பணிகளைச் செய்து வருவருவதில்தான், தெரேசா அன்னையின் 'அன்பின் தூதர்கள்' இயக்கப் பணி அமைப்பின் ஈடு எடுப்பில்லாத் தனிச்சிறப்பு, ஆழிசூழ் உலகின் அரங்கத்தில் தனித்தன்மை பெற்றுப் பட்டொளி வீசிக் கொண்டிருக்கிறது!

# 3. ஒளித்தேவனின் பேரொளி!

அன்பின் வழியது உயிர்நிலை!

உலகச் சிறப்புப் பெற்ற வள்ளுவத்தின் அருள்மொழி வாக்கில், அர்த்தமுள்ள இந்துமதம், அர்த்தத்தோடு அமைதி காண்கிறது.

உயிர்நிலைப்பட்ட அன்பின் வழித் தத்துவத்திலே' அன்பிற்காகவே அன்பு செய்து காட்டிப் புனிதச் சிலுவையில் வாழ்ந்து காட்டும் ஏசுபிரான் அன்போடு முறுவல் பூக்கிறார்; பிறை ஒளியாம் நபிகள் நாயகம் பீடுயர் பெருமை பெறுகிறார்; போதிப் புத்தர் ஆன்ம நிறைவு அடைகிறார்; சுதந்தரதேவியின் புண்ணிய சீலரான அண்ணல் காந்தி அடிகளின் தவம் பலிக்கிறது!

'எங்கும் ஓர்பொருள் ஆனது தெய்வம்!'

பாரதித் தத்துவம் இது.

அத்தெய்வம்தான் அன்பு.

'அன்புடையோர் என்பும் உரியர் பிறர்க்கு!'

முப்பால் தலைவனின் அன்பு உடைமையின் விதி இது!

அன்பை வாழ்வாகவும், வாழ்வைத் தொண்டாகவும், வாழ்வின் தொண்டினை வாழ்வின் தொழிலாகவும், அத் தொழிலைத் தவமாகவும், தவத்தையே நன்னம்பிக்கையாகவும், அந்த நன்னம்பிக்கையையே இறை பக்தியாகவும் பற்றியும், பின்பற்றியும் மனித இனப் பொதுச் சமய அமைதி காண உயிர் வாழ்ந்து, பொதுமக்களின் நலம்

தழுவிய பொதுப்படையான பணிகள் புரிந்து, வரலாற்றிலே இடம் கண்ட— இடம் காணும் உலகத்தின் உத்தமர்கள் தம் உன்னதமான வரிசையில் வைத்துப் போற்றத்தக்க அளவிற்கு மாண்பும் மரியாதையும் பெற்று, இன்றைய அனுபவ நிலை உலகிலே தெய்விகமான அன்பிற்கு நிதர்சனமான ஒளிகாட்டி, வழிகாட்டி வருகின்ற புனித அன்னை.

உலகப் புகழ் படைத்து, அப்புகழில் இந்திய வரலாற்றின் ஏற்றத்தையும் படைத்த சுவாமி விவேகானந்தர் 'தொண்டு' குறித்து இவ்வாறு குறிப்பிடுவார்:

"உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கம்!...

"எனது சகோதர மக்கட்கு யான் உதவுவேனாக!...

"உலக வாழ்வைப் பற்றிய ஒரே விதி அன்பே; ஆதலால், அன்பிற்காகவே அன்பு செய்யுங்கள்; ஏனெனில், வாழ்வைப் பற்றிய ஒரே விதி அன்புதான்!...

"உங்களது சகோதர மக்களின் மீது உங்களுக்கு அன்பு உள்ளதா? அப்படியானால், கடவுளைத் தேடி நீங்கள் எங்கேயும் போகவேண்டாம்!—சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டோரும், பின்தங்கியோரும், நலிந்தோரும், மெலிந்தோரும், பசியில் வாடும் எளியோரும் ஆதரவற்ற நோயாளிகளும், நாதியிழந்த அனாதைகளும், தெய்வங்களே அல்லவா? ஆகவே, இவர்களைத் தேடுங்கள்; தேடிச் செல்லுங்கள்! — நீங்கள் தெய்வத்தைத் தரிசிக்கலாமே!...

"எவனது நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் ஆழ்கிறதோ, அவனையே யான் 'மஹாத்மா' என்பேன்!..."

உலக மக்களால் 'அன்னை' யென இன்றைக்கு அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்படுகின்ற தெரேசா அன்னையின் இலட்சியத்திற்குப் பொழிப்புரை சொல்லு

வதைப் போலே, அன்றைக்கே சுவாமிகள் மனிதாபிமானம் நிரம்பிய தீர்க்கதரிசனத்தோடுதான் ஏழைத் தொண்டின் மகிமை பற்றி இவ்வாறு அழகாகச் சொல்லியிருக்க வேண்டும்!

வாழ்க்கைதான் வரலாறு ஆகிறது.

இவ்விதிக்குச் சான்று ஆனுள் சிறுமி ஒருத்தி!

அந்தச் சிறுமிதான் : தெரேசா.

தெரேசாவின் பிறந்தநாள் : **27-10-1910.**

தெரேசாவின் பிள்ளைப் பிராயத்துப் பெயர் அக்னெஸ்.

யூகோஸ்லாவியா நாட்டில் ஸ்கோப்ஜி எனப்பட்ட குன்றுகள் தழுவிய நாட்டுப்புறத்தில் விவசாயக் குடும்பமொன்றில் பிறந்த அக்னெஸ், பன்னிரண்டு வயதுச் சிறுமியாக இருந்த காலத்திலேயே, உள்ளூர் அரசாங்கப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே, கிறித்துவச் சமயச் சார்புடைய தோழமைக் கூட்டுறவுச் சபையில் அங்கம் வகித்தார். அந்நாளில், திருச்சபைச் சமயக்குரு, மக்கட்பணிக்கான இயேசு பிரானின் 'தேவ அழைப்பு'ப் பற்றிச் செய்த பிரசங்கங்கள் சிறுமி அக்னெஸின், பிஞ்சு நெஞ்சில் புத்துணர்ச்சியை ஊட்டின. பல்வேறு உலக நாடுகளில் சேவை செய்து வந்த சமயப் பணியாளர்களைப் போலவே, தானும் அன்பு நலத் தொண்டில் ஈடுபட வேண்டுமென்ற விழிப்பும் பெற்றார்.

மனிதப் பிறவி, தெய்வத்தின் அருட்பிரசாதம்.

வாழ்க்கை, அதற்குக் கூத்து மேடை.

வாழ்க்கை சாசுவதம் அல்ல.

ஆனால், வாழ்க்கையில், மனிதனின் ஜீவன் நிலைபேறுடையது அல்லவா? ஜீவனின் ஆன்மா சிரஞ்சீவித் தன்மை பெற்றதாயிற்றே?

'பிறக்கிறான்; இறக்கிறான்!' என்கிற இருதுருவ விதி முறையோடு, மனிதனின் கதை முடிந்துவிடலாமா, என்ன? --கூடாது; கூடவே கூடாது!

மனிதனின் கதை மகத்தானது; மாண்பு மிக்கது; மகிமை மிகுந்தது.

பிறவிக்குப் பயன் வேண்டும்; பயன் பெற வேண்டும்; பயன் தர வேண்டும்.

இறந்த பிறகுங்கூட, மனிதன் வாழ வேண்டாமா?

அப்போதுதானே, மனிதன், 'மனிதன்' ஆக நிறைவு பெற இயலும்!...

இதுவும் மனிதனின் கதைதானே?

உண்மை :

ஆமாம்; தெரேசாவின் கதையும் இவ்வாறே அமைய நேர்ந்தது; அமையவும் செய்தது.

தெரேசா, பதினேழு வயதுக் கன்னி அக்னெஸாக இருந்த அந்த நாளிலேயே, தன்னை ஏசுநாதருக்கே அர்ப்பணித்துக் கொள்ள முடிவெடுத்தாள்; தன்னுடைய குறிக்கோளைத் தாய் தந்தையரிடம் வெளிப்படுத்தினாள்!

"மகளே, நிச்சயமாகவேதான் நீ இவ்வாறு முடிவெடுத்திருக்கிறாயா?"

"ஆமாம், அம்மா; வாழ்க்கையிலே பாவப்பட்ட கடைநிலை மக்களுக்குப் பரிவுடன் பணிவிடைகள் செய்து, அவர்களுக்கு மகிழ்ச்சியையும், அமைதியையும் உண்டாக்குவதிலேயே நான் என்னுடைய எதிர்காலத்திலே அமைதியும், மகிழ்ச்சியும் அடையப் போகிறேன். என்னுடைய இம்முடிவை ஆண்டவனின் கட்டளையாகவே நான் மதிக்கிறேன், தாயே!"

"ஓ! அப்படியா?"

"ஊம்!"

"அப்படியானால், உன் விருப்பப்படி நட! குறுக்கே நிற்க நாங்கள் யார்?"

தாய்க்கு அளவிலா மகிழ்ச்சி. மகளுக்கும் களிப்பு நிலைகொள்ளவில்லை; பெற்றவர்கள் என்னை எவ்வளவு பாங்குறப் புரிந்து கொண்டுவிட்டனர்!—கன்னி அக்னெஸுக்கு அன்றிரவு உறக்கம் இல்லை. 'நான் பாக்கியவதி தான்; ஐயமில்லை; ஆனந்தக் கடல் ஆடிய அக்னெஸ், இலட்சியக் கனவின் அலைகளிலே ஆனந்தமாக மிதக்கத் தலைப்பட்டாள். "கருணைத் தந்தையே, இவ்வுலக வாழ்விற்குரிய மகிழ்ச்சியை எல்லாம் துறந்து, அன்பிற்குகந்த என் குடும்பத்தைப் பிரிந்து செல்லக்கூடிய பரியக்குவத்தையும், வல்லமையையும் எனக்கும், என் மனத்திற்கும் வழங்குவீர்களாக!" என்று பிரார்த்தித்தாள்; பிரார்த்தித்துக் கொண்டேயிருந்தாள்.

நாட்கள் ஊர்கின்றன; உருளுகின்றன.

இப்பொழுது அக்னெஸ் புதிதான மனத்திண்மையைப் பெற்று விட்டாள். 'இன்று புதிதாகப் பிறந்தேன் நான்!' என்னும் மெய்ப்பாட்டின் உணர்வில், அவள் உள்ளம் தனிப்பட்ட குதூகலத்தை அடைந்தது. தன்னைப் பற்றிய ஆசாபாசங்களை ஒழித்தும் அழித்தும் உலகிற்கு ஒளி காட்ட வேண்டுமே யென்ற பொதுநலப் பண்பாட்டின் உணர்வுடன், நாளும் பொழுதும் தோத்திரம் செய்து வந்ததற்குப் பலன் கிடைத்து விட்டது!

அக்னெஸ் கன்னி—தன்னுடைய மேன்மை மிக்க தியாக வாழ்வைத் தூய நல்வாழ்வாகத் தொடங்கவும் தயாரானாள்!

ஆமாம்; நல்லபடியாகவே, 1929 ஆம் ஆண்டு பிறந்தது.

கன்னி அக்னெஸுக்கு இவ்வாண்டு நல்லபடியாகவும் அமைந்தது!—தன்னுடைய இந்த மண் வாழ்க்கை தனக்குத் தானே மகிழ்ச்சி அடைவதற்காக அமைந்ததல்ல

வென்றும், தன்னுடைய உலக வாழ்க்கை தனித்த முறையில் ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கப்பட வேண்டிய தென்றும் அவள் முடிந்த முடிவாகத் தீர்மானம் செய்தாள். இப்படிப்பட்ட மனப் புரட்சியின் விளைவாக, அவள் அன்பிற்குத் தூது செல்லவல்ல மக்கள் நலச் சேவகியாக ஆகவும் விரும்பினுள். பிறந்த மண்ணையும், வாழ்ந்த மனையையும் துறந்து, கிறித்தவக் கன்னிகை ஆகி, தன் வாழ்வை உலக மக்களுக்குப் பயனுடைய காணிக்கையாக ஆக்கும், பொதுநலத் தொண்டு செய்ய வேண்டுமென்றும் அக்னெஸ் முடிவெடுத்தாள்.

முடிவு வெற்றி பெற்றது.

பெற்ரேர்களிடம் விடை பெற்ருள் கன்னி அக்னெஸ்.

அக்னெஸ் இப்போது மதிப்பிற்குரிய புனிதக் கன்னி ஆனுர்!...

ஆமாம். மரியாதைக்குகந்த கன்னித் துறவி ஆனுர் அக்னெஸ்.

ஆண்டு 1928.

அயர்லாந்து நாட்டிலே டப்ளின் நகரில் செயலாற்றி வந்த லொரேட்டோ கன்னிமார் மடத்துக் குழுவில் (Congregation of Loreto nuns) இணைந்து செயற்பட முன்வந்தார் அக்னெஸ்; அங்கே சுமார் ஓராண்டுப் பயிற்சிப் பெற்ருர்; ஆங்கிலமும் கற்றுக் கொண்டார்.

பின்னர்—

1929 பிறந்தது.

இந்த ஆண்டு, உலக வரலாற்றுப் புத்தகத்தின் தாள்களிலே தனிச் சிறப்பு வாய்ந்ததோர் ஆண்டாகவே மதிக்கப்பட வேண்டும்.

காரணம்:

உலக மக்களுச்கு அன்பின் தத்துவத்தை எடுத்துக் காட்டிய இயேசுவைப்பக்தியோடு நேசித்த கன்னி ஒருத்தி, கன்னித் துறவியாகி—தான் பிறந்த யூகோஸ்லாவியா

நாட்டைத் துறந்து, சமூகத்தால் தட்டிக் கழிக்கப்பட்ட அனாதைகளுக்கெல்லாம் அன்பைக்கூட்டி, தன்னலத்தைக் கழித்து பாசத்தைப் பெருக்கி, மனிதத் தன்மையை வகுத்துப் பணிபுரிய வேண்டுமென்ற சீரிய நோக்கம் சிந்திக்கப் பெற்றவராகி, பாருக்கெல்லாம் ஈடான பழம்பெரும் நாடான பாரதத் திருநாட்டின் புனித மண்ணை மிதிக்கும் அருள்மிகு அதிசயத்தைச் சந்தித்த அந்த ஆண்டு 1929, மெய்யாகவே அதிசயம் மிகுந்த ஆண்டாகவே அமைந்திருக்க வேண்டும்!

அந்தக் கன்னித்துறவிதான், பின்னர் தெரேசா எனப் பேர் பெற்ற அக்னெஸ்!...

"சாதி, மதம், மற்றும், இனத்திற்கு அப்பாற்பட்ட அன்பு என்பது ஒருபோதும் கேட்பதில்லை; எப்போதும் கொடுக்கவேசெய்யும்!" என்னும் அன்பின் தீபாராதனையை உலகிடை வாழ வைத்து வாழ்த்தவும், விடுதலை தவறிக் கெட்டுக் கிடந்த அன்னை சுதந்தர தேவியின் கை விலங்குகளை அறவழி நின்று அறுத்தெறியவும், பாரதத்தாயின் மக்கள் அனைவரையும் ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமே இல்லாத மனித ஜாதியின் மன்னர்களாக ஆக்கி, சமதருமச் சன்மார்க்க நெறிமுறையில் அன்பின் முறை நெறி சார்ந்த ராம ராஜ்யத்தை உருவாக்கவும், தமது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே தாய் மண்ணுக்குத் தத்தம் செய்து அல்லும் பகலும் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் பொதுநல மனிதப் பண்பாளராகப் பாடு பட்டு உழைத்துப் பணி செய்து கொண்டிருந்த அண்ணல் காந்தி அடிகளின் தாய்த் திருநாட்டிலே பெருமையோடும் பெருமிதத்தோடும் கன்னி அக்னெஸ் காலடி எடுத்து வைக்க வாய்த்த அந்த நல்வாய்ப்பு, வாழ்க! வாழ்க!

அக்னெஸ் பெறற்கரியதாகப் பெற்றிட்ட பொன்னான அந்நல்வாய்ப்பு, அவரது மக்கள் நலப்பணி நடவடிக்கைகளுக்குக் கிடைத்திட்ட முதற்படியான நல்வாழ்த்தாகவும் அமைந்தது!

அன்னை ஹூக்ளி மதலையாகத் தவழ, பேசாத பொற் சித்திரத்தைப் பேச வைத்துக் கொண்டிருந்த கல்கத்தா நகரம், ''வா, மகளே! வா, வா!'' என்று நேசக் கரம் நீட்டி அன்புடனும் பரிவுடனும் பாசத்துடனும் கன்னித்துறவி அக்னெஸை வரவேற்றது.

அந்த நாள்!...

அக்னெஸைப் பொறுத்த அளவில், அளவிட முடியாத அமைதியையும் ஆனந்தத்தையும் அவருக்கு அளித்த ஒரு புதுநாள் அது; பூம்புனல் வெள்ளமாகப் பக்தி பெருக்கெடுத்து ஓடிய அவளுடைய கன்னி உள்ளத்தில் கொலு வீற்றிருந்த தெய்வத் தந்தையின் முதல் அழைப்பை ஏற்று, தியாகத்தையே தன்னுடைய வாழ்க்கைத் தொழிலாகவும் ஏற்று, மக்கள் நன்மைப் பொதுத் தொண்டில் தான் விரும்பிய வண்ணம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவும் மகத்தான அப்பணி முறைகளுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளவும் மனப் பக்குவமும் மனத்தின்மையும் பெற்றவராக, இதோ, கல்கத்தாப் பெருநகரை மிதித்து விட்டார் அக்னெஸ்!

அன்னை துர்க்கையும் ஆனந்தம் பொங்க, அருள் பொங்க வாழ்த்தினாள்!

தொடங்கியது புது வாழ்வு!

அது, தியாகத்தின் வாழ்வு!

அன்பின் வாழ்வும் அதுவே! ஆண்டவன் கட்டளை பிறப்பித்துக் காட்டிய தேவவழியில்—கீதை வழியில், மனுதர்ம வழியில் மலர்ந்த அருமைத் தியாகத்தின் அற்புதமான வாழ்வு ஆயிற்றே அது!— இந்தியநாட்டில் கல்கத்தா நகரத்தில் பொதுநலச்சேவை செய்துவந்த லொரெட்டோ மடத்துக் கிறிஸ்தவப் பெண் துறவியர் குழுவில் சேர விரும்புவதாக ஓர் இளங்காலைப் பொழுதில் அக்னெஸ் தன் தாய் தந்தையிடம் விருப்பம் தெரிவித்த நேரத்தில் தன்னுடைய அழகான வதனத்திலும் அன்பு ஊறிய கண்

களிலும் புத்தம் புதிதான தெய்விக ஒளி மேலோங்கிக் கிடந்தது அல்லவா?— அந்த தூய ஒளிக்கு அப்போது கிடைத்த தெய்விகத் தன்மைக்கு இப்போது பொருள் கிடைத்து விட்டதில், அக்னெஸ் அடைந்த பெருமை அளவிடற்கரிது.

அக்னெஸ் சுயப்பிரக்ஞை கொண்டார்.

'இன்று புதிதாய்ப் பிறந்தேன் நான்!' என்கிற பரிசுத்த மான நல்லுணர்வு அவரது கன்னி மனத்தில் மேலும் வல்லமை பெற்றது. "உன்னைப் போலவே, உன்னுடைய அயலவனையும் நேசிப்பாயாக!" என்னும் 'பைபிள்' பொன் மொழி எதிரொலிக்கிறது!

"மக்கட்கு உதவி செய்ய வேண்டுமென்று மனப்பூர்வ மாக விரும்புவோர், தமது சொந்தச் சுக துக்கங்களையும், புகழையும், எல்லாவகை இச்சைகளையும், ஆசாபாசங் களையும் முதலில் களைந்துவிட்டு இறைவனிடம் வர வேண்டும். இறைவன் ஏழைகளிடம்தான் இருக்கிறான்! மேலும், அவர்கள் பூமிதேவியைப் போன்று அனைத்தையும் பொறுப்பவராதலும் வேண்டும்; பின், அவர்களின் காலடியில் உலகம் சரண் அடையும்!

முன்னுணர்வுடன் கூடிய விவேகானந்தரின் ஞானஒளி மிகுந்த வீரமுரசின் ஞான ஒலியில், வழிநடந்த அக்னெஸ், ஒரு பால சந்நியாசினியாகிக் கல்கத்தாவை வந்தடைந்த அன்றும் சரி, அக்னெஸ், தெரேசாவாக மாறி, அன்பிற்கு ஓர் அன்னையாக உலகிடை விளங்கும் இன்றும் சரி, அவருக்கு நாடு நகரத்தின் ஏழைகளில் ஏழைகள்தாம் ஊர் உலகமாக இருந்தது; இருக்கின்றது!

அக்னெஸ், தன்னைப்போலவே ஓர் அன்னையாக எதிர் காலத்தில் விளங்கப் போகிறார் என்னும் உண்மையை அறிந்திருந்த அன்னை ஹூக்ளி நதியும் புதுப்புனலின் கம்பீரத்துடனும், புதுவெள்ளத்தின் ஆரவாரத்தோடும் அன்பும் ஆனந்தமும் முழங்க அப்பொழுது தியாகசீலி அக்னெஸை வரவேற்றிருக்க வேண்டும்!

அந்த நாள்...!

உலகச் சரித்திரத்தின் ஏடுகளிலே பெருமைகளை சித்திர விசித்திரமாகக் கூட்டிக் குவித்திருந்த பழம் பெரும் நாடான பாரத நாட்டைச் சேர்ந்த மேற்கு வங்காளத்தின் தலைநகரான கல்கத்தா நகரத்தின் பாரம்பர்யச் சீர்மை பெற்றிருந்த புனிதமான மண்ணை மிதித்த நேரத்தில், இனம் புரியாததோர் அமைதி தன்னுடைய இளம் பருவத்து நெஞ்சத்தில் படரத் தொடங்கிய புனிதமானதோர் அதிசயத்தையும் கன்னிகை அக்னெஸ் உணரத் தவறவில்லை தான்!

டார்ஜிலிங் மலை நகரத்தில் நடைபெற்று வந்த லொரேட்டோ கன்னியர் மடத்துப் பயிற்சிகளையும் முடித்துக் கொண்டபின், கல்கத்தாவில் இயங்கி வந்த லொரேட்டோ கன்னிமார் திருச்சபையில் இணையலானுர் கன்னித் துறவி அக்னெஸ்.

ஆன்ம நலம் சாந்தி அடையத் தொடங்கிய நிலையிலே, அக்னெஸ் வங்க மொழியையும் பயிலத் தொடங்கி யிருந்தார்!— 'அமி' என்றால் 'நான்', 'டுமி' எனில் 'நீ' என்பது போன்ற பதங்களெல்லாம் அவரது கன்னிப் பூ மனத்தில் பதச்சோறுகளாகவே சுவைத்தன.

கல்கத்தா நகரில், லொரெட்டோ பள்ளிகள் செல்வாக்குப் பெற்றவை. அங்கேதானே, கீதாஞ்சலிக் குருதேவரின் அருமை மகள்கூடப் படித்தார்!

இப்போது:

புனிதமேரி உயர்நிலைப்பள்ளியில் அக்னெஸ் ஆசிரியை ஆனுர்!—வயிற்றுப் பிழைப்பிற்காக மேற்கொள்ளப்படும் தொழில்கள் எல்லாவற்றிலும், படிப்புப் போதிக்கும் பணியையே அவர் பெரிதும் விரும்பினுர். லொரெட்டோ என்டலியின் (Loretto Endaly) அமைதிச் சூழில் வங்காளிப் பிரிவில் அவர் ஏற்றிருந்த போதனைத் தொழிலில் நாட்கள் ஓடின!

ஆனாலும்—

அவருடைய இதயத்தின் இதயம், ஏழைகளிலே மிக மிக ஏழைகளுக்கு உதவ வேண்டுமென்று ஆண்டவன் தனக்கு முன்னர் விடுத்த முதல் அழைப்பைச் சுற்றிச் சுற்றி அலைந்து கொண்டிருந்தது; அலைபாய்ந்து கொண்டிருந்தது!-கல்கத்தா நகரின் வரலாறுதழுவிய சிறப்பையும், மரபு சார்ந்த பெருமையையும் அலைக்கழிக்கும் வகையில், நகரின் பெரும்பான்மையான பகுதிகளிலே வகுப்புவாத வெறிக்கு ஊடாக, ஊடும் பாவுமாகத் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த வறுமையும், பசியும் அவரை வெகுவாகச் சங்கடப்படுத்திக் கொண்டிருந்தன. நாள் ஆக ஆக, "என் கடன் பணி செய்து கிடப்பதுதான்! கடைத்தேற வழி இன்றியும் வசதியாக இல்லாமலும் நித்த நித்தம் செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிற—அல்லும் பகலும் பிழைத்துப் பிழைத்துச் செத்துக் கொண்டிருக்கிற ஏழைகளுக்குச் சேவை செய்து உதவக் கூடிய நல்வாய்ப்பு ஏற்பட்டால்தான்—கர்த்தர் பெருமானின் முதலாவது ஆணையை—அன்பின் முதல் கட்டளையை நான் அன்பு பிறழாமல் நிறைவேற்றியவளாகவும் ஆக முடியும் அல்லவா?"—இவ்வாறாக, உள்ளுணர்வுகள் ஓயாமல் அரித்தன; ஒழியாமல் நச்சரித்தன!—அக்னெஸ் தவித்தார்.

நெஞ்சின் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன:

பள்ளிக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த அந்தச் சின்னஞ்சிறு பிராயத்திலேயே நான் கன்னிகாஸ்திரியாய் ஆக ஆசைப்பட்டேன். காலம் வளர வளர, நானும் வளர்ந்தேன்; அன்பும், இரக்கமும், பரிவும், பாசமும் கடவுளின் கடாட்சத்தினால் இயல்பிலேயே நிரம்பி நிரம்பி வழிந்த என்னுடைய உள்ளத்தின் அடித்தளத்தில் 'நீ உன் அயலவர்களை நேசி; உன்னை இயேசு நேசிப்பார்!' என்னும் வேதமொழி, அடிக்கடி ஒலித்தது; எதிரொலித்தது. என் மனம் பக்குவப்படத் தொடங்கின நிலையில், ஓர் இனிய பொழுதில், என்னுடைய உள் மனத்தில்,

ஆண்டவரின் குரலாகப் புதிய ஆணையொன்று பிறந்தது!— நடப்பு உலகிலே, சமூகத்தின் கீழ்த் தட்டிலே தேங்கிக் கிடந்து, வாழ்க்கையோடு ஜீவமரணப் போராட்டம் நடத்திக் களைத்து, அன்பிற்காக ஏங்கித் தடுமாறித் தவித்துக் கொண்டிருக்கிற அனாதை மக்களுக்கு அன்பை வாரிவாரி வழங்குவதில் நானும் என் பங்குப் பணியைச் செய்தாக வேண்டுமென்று என்னுள்ளே பீறிட்டுக்கிளர்ந்தெழுந்த அந்த இலட்சியத்தின் கனவை என்னை ஆளுகின்ற ஆண்டவனின் கட்டளையாகவே மதித்தேன். என்னுடைய பரிசுத்தமான, தன்னலமற்ற குறிக்கோளை ஈடேற்ற அருள் புரியுமாறு பரம பிதாவை இறைஞ்சினேன்; என் பிரார்த்தனையைக் கர்த்தர் ஆசீர்வதித்ததாகவும் என்னுடைய உள்ளுணர்வு சொல்லிற்று. அன்பிற்குத் தூது செல்லும் மக்களின் க்ஷேமப் பணியில் ஒரு தியாகக் கன்னிகையாகமாறி, என்னை நானே முற்றிலும் ஈடுபடுத்திக் கொள்ளவும் முடிவு எடுத்தேன். பெற்றவர்களை மறந்து, பெற்ற பூமியையும் துறந்தேன். நான் விரும்பின மாதிரி, இங்கே கல்கத்தாவில் சேவை செய்து வந்த லொரெட்டா மடத்துக் கன்னிமார்களின் குழுவில் நானும் ஒருத்தியாக இணைந்தேன்; ஆனால்... ஆனல்...?—'

அக்னெஸ் விம்மி வெடிக்கிறார்:

' மக்களுக்காகவும் மக்களின் அன்புக்காகவும் தம்மையே அர்ப்பணம் செய்து, ஓங்கி உயர்ந்து, உலகை அளந்த உத்தமர்களின் அணியில் நானும் ஒருத்தியாக அங்கம் வகிக்க வேண்டுமென்று விருப்பப்பட்ட என் இலட்சியத்தைப் பரிவுடன் அங்கீகரிப்பவர் போன்று, "அப்படியே செய்வாய், மகளே!" என்று அன்புடன் ஆணையிட்ட அன்பே வடிவான என்னுடைய தந்தைத் தெய்வத்தின்— தெய்வத் தந்தையின் அந்த முதற் கட்டளையை நான் என்றைக்குத்தான் நிறைவேற்றி வைக்கக்கூடிய பாக்கியத்தைப் பெறப் போகிறேனோ?—தெரியவில்லையே?...

நான் அன்று கண்ட கனவு என்ன? இன்று நான் காணும் நனவு என்ன?—எனது இலட்சியக் கனவு நனவாகாமல், வெறும் ஆசிரியை ஆகி இந்த நான்கு சுவர்களுக்குள்ளேயே நானும் என் கனவைப்போலவே சிதைந்து அழிந்து போய் விட வேண்டியதுதானே? — ஐயையோ!—இப்படிப்பட்ட அவல முடிவை என்னால் நினைத்துப் பார்க்கக்கூட முடிய வில்லையே?'

நினைவுகள் புலம்பின!

அக்னெஸ் உருகினார், உருகினார்; உருகிக் கொண்டே யிருந்தார்!

"பரம பிதாவே! எனக்கென்று ஒரு மனத்தைக் கொடுத்தீர்கள்; அந்த மனத்திற்கெனவும் என்னுடைய விருப்பத்திற் கெனவும், முதல் ஆணையையும் இட்டீர்கள்!—தந்தையின் கட்டளையைச் செய்து முடிக்க வேண்டியது மகளின் கடமை ஆயிற்றே? — இந்தப் பாவியையும் ரட்சியுங்கள், தந்தையே! எண்ணி முடியாத, எண்ணவும் முடியாத ஏழைகளோடு ஏழையாக வாழவும், வாழ்ந்து காட்டவும் எனக்கு ஒரு விடியல் வேளையினைக் காட்டுங்கள், ஏசு பிரானே!..."

கன்னிப்பூவாம் அக்னெஸ் பக்திச்சுவை சொட்டச் சொட்டத் தொடுத்து, மெழுகுவர்த்தியின் ஒளிக்கு நடுவில் பேரொளியாகப் பொலிந்த சிலுவைத் தெய்வத்துக்குச் சூடிய—சூட்டிய கண்ணீர் மாலையின் தூய நறுமணம் இப்போது நாளும் பொழுதும் வளர்ந்தது; வளர்ந்து கொண்டேயிருந்தது!...

இயேசுநாதர், இதோ அழைக்கின்றார் :

" பசியாய் இருந்தேன்;

எனக்கு உண்ணக்கொடுத்தீர்கள்;

தாகமாக இருந்தேன்;

எனக்கு அருந்தத் தந்தீர்கள்;
ஆடை இன்றி இருந்தேன்;
எனக்கு ஆடை வழங்கினீர்கள்;
அன்னியனாய் இருந்தேன்;
என்னை நேசத்தோடு வரவேற்றீர்கள்;
நோயுற்று இருந்தேன்;
எனக்குப் பணிவிடை செய்தீர்கள்.

கடைப்பட்ட என் சகோதரனுக்கு நீங்கள் இவற்றைச் செய்யும் போதெல்லாம், அவற்றை நீங்கள்

எனக்கே செய்தவர் ஆவீர்!''

''உன் கடன் கடையரிலும் கடையருக்கு அன்பின் பணி செய்து கிடப்பதே அல்லவா?'' என்னும் ஆண்டவனின் அந்த முதற்கட்டளை, விதியின் விளைவென முழங்கித் தன்னுடைய இளையமனத்தைக் குறுகுறுக்கச் செய்து உறுத்திக் கொண்டேயிருந்த உண்மை நிலையை அக்னெஸ் உணராத நேரம் ஏது?

'அவன்' இன்றி ஓர் அணுவும் அசைவது இல்லைதான்!

1929-ல் இந்தியாவுக்கு வந்து சேர்ந்த அக்னெஸ், கல்கத்தா நகரில் புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் புவிஇயல் ஆசிரியை ஆகிப் பணிகள் தொடர்ந்தன; சில ஆண்டுக்காலம் பள்ளியின் தலைமைப் பொறுப்பையும் ஏற்றது உண்டு; தவிரவும், லொரெட்டோ சபைச் சகோதரிகளின் அமைப்புடன் தொடர்பு பூண்டிருந்த இந்துமதம் அடிப்படையில் இயங்கிய 'புனித ஆன் புதல்விகள்' (Daughters of St Anne) என்கிற அமைப்பும் அவரது பார்வையில் செயற்பட்டது.

மனிதத்தன்மையும் மனிதாபிமானமும் புது வெள்ளமென நுங்கும் நுரையுமாகப் பொங்கிப் புரண்ட தெரேசாவின் இளம் உள்ளத்தில் இறைமைச் சக்தியின்

தூண்டுதலால் உருப் பெற்று, வளர்ச்சியடைந்து கொண்டிருந்த மக்கள் நலப் பொதுப் பணிக்கான நற்கனவை வாழ்த்துகிற மாதிரி, அவளுடைய உள்ளுணர்வில் ஒலித்த கர்த்தரின் முதல் ஆணையை ஏற்று அதற்கேற்பச் செயற்படும் புனிதமான குறிக்கோள் பூண்டு, அயர்லாந்தில் தனது தவப்பணிக்கான பயிற்சியை முடித்துக்கொண்டு 1929 ஆம் ஆண்டில் மாரிக் காலத்திலே 'பி.அண்ட் ஓ' எனும் கப்பலில் ஏறி இந்திய நாட்டில் கல்கத்தாத் துறைமுக நகரை வந்தடைந்த தெரேசா லொரெட்டோ மடத்தின் ஆனந்தமான இனிய சூழலில் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளைக் கழிக்க நேர்ந்தது.

இருபது ஆண்டுகளின் (1929-1948) கால நடையில், முதலில் அக்னெஸ் ஆகவும், பிறகு தெரேசா ஆகவும் வங்காளச் சமயப் பரப்புக் குழுமத்தின் மைய நிலையமான லொரெட்டோ கன்னியர் மடத்தில், மாடக்கன்னிகையாக, அதாவது, கிறிஸ்தவத் துறவிப் பெண்ணாக வாழ்ந்து பணி புரிந்த அந்த ஒவ்வொரு நாளிலும், திருச்சபை விடுதியின் சாரளங்களின் வழியாகக் காட்சியளித்துச் சுற்றுமதிற் சுவர்களினின்றும் பிரிந்து, ஸீல்டா ரயில்புறம் வரையிலும் அவலட்சணமாகவும், அலங்கோலமாகவும், கேட்பாரற்றும் கவனிப்பார் இல்லாமலும், சிதறிக்கிடந்த மோத்திஜில் சேரிக் குடிசைகளையெல்லாம் ஆயிரம்தரம் பார்த்துப் பார்த்து, அந்த ஏழைகளுக்காக அனாதைகளுக்காக வருந்திக் கண்கலங்கியதெல்லாம் வெறும் கதை அல்லவே?

சோகச் சிதறல் இன்னொன்று:

அக்னெஸ் தலைமை ஆசிரியையாக அப்பள்ளியை நிர்வாகம் செய்து கொண்டிருந்த சமயத்திலேதான், இரண்டாவது உலகயுத்தம் அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. ஜப்பான் விமானங்கள் கல்கத்தா நகரை நிர்த்துளியாக்கியதால், ஏற்கனவே பஞ்சத்தால் அடிபட்டுக்கிடந்த அடித்தள மக்கள், யுத்தத்தின் எதிர் விளைவாலும் மோசமடைய நேர்ந்தது. ஆங்கில

ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடந்தாலும், ரம்மியமான நகரங்களில்.ஒன்றாகப் பொலிந்த கல்கத்தா அந்நேரத்தில் பிணவாடை வீச, சின்னபின்னம் அடையவும் வேண்டிய தாயிற்று. ஏழை எளியவர்களென்றால், சாவுக்குக்கூட இளக்காரம்தான் போலும்!

இடையிலே நின்ற காலவெளியில், 1931-ல் முதலாவது சுயகட்டுப்பாட்டுச் சங்கற்பத்தை ஏற்ற சகோதரி அக்னெஸ், 'தெரேசா' என்னும் புதிய பெயரையும் ஏற்றுப் பிறகு, 1937-ல் இரண்டாவது நோன்பு உறுதிப் பிரதிக்கினையையும் மேற்கொண்டு, கிறித்தவ நெறி முறைகளுக்கு ஏற்ப, முழுமை வாய்ந்த துறவறக் கன்னிகை தெரேசாவாக (Sister Teresa) உருக்கொண்டார்!

நாட்கள் தொடர்ந்தன.

இந்நிலையிலே...

தெரேசாவின் ஏக்கமும் தவிப்பும் உச்சம் அடையலாயின! அன்பின் துளிகளைப் பருகிடத் தணியாத தாகத்துடன் அலையும் சக்கரவாகப் புட்களாக அங்கும் இங்கும் அலைந்து திரிந்துத் தத்தளித்துக்கிடந்த மக்களுக்கு-வாழ்க்கையின் பலகோணச் சோதனைகளை எதிர்கொள்ள முடியாமல் நரகவேதனையை அனுபவித்து ஊசலாடிக் கிடந்த மக்களுக்கு அன்பு செய்யவும் அன்புப் பணி செய்யவும் வாய்க்கக் கூடிய அந்த ஒரு புண்ணியதினமே தன்னுடைய வாழ்வில் அமைதியை ஏற்படுத்தவல்ல ஆனந்தத் தவநாளாக அமைய முடியுமென்ற கவலையிலும் உறுத்தலிலும், அவருக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகமாகவே மாறத் தொடங்கியது! — "லொரெட்டோ கன்னி மாடத்தின் நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுப் புழுங்கிக் கிடக்கின்ற எனக்கு உரிய விடுதலை கிடைக்கவும் என்னுடைய மக்கட் தொண்டுக் கனவு பலிதமடையவும் உரித்தான நல்ல பாதை ஒன்றை விரைவிலேயே காட்ட மாட்டீர்களா, பிதாவே? ஏழைமைத் தொண்டுதான்

எனது எதிர்காலம் என்பதாக நான் கொண்டிருந்த என்னுடைய ஆசைத் துடிப்பை வளர்ப்பதே போன்று, எனக்கு முதல் கட்டளையைத் தாங்கள் பிறப்பித்தீர்கள்: ஆனால், அதற்கான நல்ல வழியை உங்கள் அபலைக்கு எப்போதுதான் காண்பிக்கப் போகிறீர்களோ? — தெரியவில்லையே, தெய்வத் தந்தையே!... தாங்கள் அன்று எனக்கு இட்ட அந்த ஆணையை நிறைவேற்றத் தொடங்குவதற்கு உரிய தகுதியையும் வாய்ப்பையும் விரைவிலேயே எனக்கு அனுக்கிரகம் செய்ய வேண்டும், கர்த்தர் பிரானே!'' தளராத நம்பிக்கையோடும், தளர்ச்சியடையாத தன்னம்பிக்கை யோடும், சிலுவைக் குறியிட்டு, தியான மாலை உருட்டி, அல்லும் பகலும் இடையறாமல் சிலுவை நாதரைப் பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தார் தெரேசா.

மேலும் சில நாட்கள் நகரலாயின.

உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் அன்பு சிதறி, கனவு கலைந்து, வாழ்வு இழந்து, ஆர்வம் குலைந்து ஏங்கியும் உருகியும் தவித்துக் கொண்டிருந்த எண்ணிலடங்காத ஏழைகளைப் பற்றியே அல்லும் பகலும் நினைந்து நெகிழ்ந்து துடிதுடித்துக் கொண்டேயிருந்த அக்னெஸ், பாவப்பட்ட ஜன்மங்களின் துன்ப வாழ்க்கையில் இன்ப விடியலை ஏற்படுத்த அங்கங்கே பாடுபட்டுக் கொண்டிருக்கும் மக்கட்பணியாளர்களுக்கு மத்தியிலே தானும் ஒருத்தியாகப் பாடுபடுவதற்குப் பொன்னான நல்வாய்ப்பினை ஏற்படுத்தக் கூடிய அந்த ஓர் இனிய விடிபொழுதுக்காகவே காத்துத் தவம் இருந்தாள்.

தவம் பலித்தது.

பிரார்த்தனை ஈடேறியது.

ஆசை வென்றது.

கனவு நிறைவேறியது.

அக்னெஸ் கன்னிமைத் துள்ளலுடன் ஆனந்தக் கூத்து ஆடினாள்: 'அன்பிற்கினிய கர்த்தர் மிக மிக மேலானவர்!'

அதோ, அந்த இனிய, நல்லபொழுது விடிகிறது! விடிந்து கொண்டிருக்கிறது!

விடிந்து கொண்டிருந்த நல்லபொழுதிற்கு உகந்த நாள்: 1946, செப்டம்பர், 10.

தூய சகோதரியாம் தெரேசா அப்போது டார்ஜிலிங் மலைநகருக்கு ரயிலில் பயணம் செய்தார்!

கீதாஞ்சலியின் இதயநாதம், ஆண்டவன் வழிபாட்டில் ஒன்றியிருந்த தெரேசாவின் இளகிய இளம் மனத்தில் தேன் வண்டென ரீங்காரம் செய்தது.

"ஆண்டவனே! எனது வாழ்வின் இம்சையும் அபசுரங்களும் உருகி ஓடி, ஓர் இன்னிசையாக ஒலிக்கையில், ஆனந்தமான பறவை ஒன்று சுதந்திரமாகக் கடலைத் தாண்டிப் பறந்து செல்ல, அச் சமயத்தில், என் அருட்சிந்தனையும் சிறகடித்துப் பறக்கத் தொடங்குகிறது!—நான் பாடும்பொழுது, உனது உள்ளம் மகிழ்வதை நான் உணருவேன்; ஆகவே, உன்னுடைய அறக் கருணையைப் பெற்றுப் புண்ணியமும், புனிதமும் பெற்றிலங்க, நான் உன் சந்நிதியிலே எப்போதுமே ஒரு பாடகனாகவே இருக்க ஆசைப்படுகிறேன்!"

செபமாலை உருள்கிறது.
சிலுவை குலுங்குகிறது.
ஆன்மா துடிக்கிறது.
அன்பு சிரிக்கிறது!
தோத்திரம் தொடர்கிறது.
தியானம் நீள்கிறது.
அன்பு மறுபடி சிரிக்கிறது!...
மறுகணம்:
ஏழைமை ஓலமிடுகிறது!
அன்பு அலறுகிறது!

இயற்கைத் தாயின் அன்பான தாலாட்டில் அகமும், புறமும் திளைத்து விரைந்து கொண்டிருந்தது டார்ஜிலிங் ரயில் வண்டி.

மகளே!...

வழிபாட்டுத் தியானத்தில் மனம் லயித்து ஈடுபட்டிருந்த பரிசுத்தக் கன்னிச் சோதரி தெரேசாவின் ஈரமான கண்கள் திடீரென்று திறந்தன! உள்ளத்தின் உள்ளத்தில் கொடி மின்னலாக மின்னிப் பளிச்சிட்ட அந்த ஒளியின் சிதறல்களில் உள்ளமும் உடலும் சிலிர்க்கக் கண்கள் இன்னமும் கூசின!—இதயத்தின் இதயத்தில் ஒலித்து எதிரொலித்த அந்தக் குரலின் அன்பான நாத அலைகளில் மெய்சிலிர்க்கிறது!

அந்த ஒளி, ஆண்டவனின் பேரொளி அல்லவா?

அந்த ஒலி, பரமபிதாவின் பெருங் குரல் ஆயிற்றே!

இளைய துறவி தெரேசா மெய்ம் மறந்தார்.

மெய்ம் மறந்த சுடுநீர் மணிகளில் தேவாலயத்தின் மணி ஒலியும் மெழுகுவர்த்தி ஒலியும் ஒலி சேர்த்தன; ஒளி சேர்த்தன.

"அன்பிற்கினிய எனது இனிய ஆண்டவரே! அருமை மிகு ஏசு பிரானே!"

தெரேசா உயிரும், உள்ளமும் ஒடுங்க, விம்மிக் கொண்டேயிருந்தார். மீண்டும் சிலிர்த்தது மேனி; மீளவும் கண்கள்!— "ஆ!... அதோ, என் ஏசு!"

அந்த ஒளி, கர்த்தர் பெருமானின் பேரொளியே தான்!... ஆஹா!...

இதோ, விவிலியத் திருமறைநாயகன் அன்புக்குரல் மறுபடி எதிரொலிக்கிறதே?

"கடைப்பட்ட என் இனிய சகோதரனுக்கு நீங்கள் அன்பு செய்யும்போதெல்லாம் அந்த அன்புக் காரியங்களை நீங்கள் எனக்கே செய்தவர்கள் ஆவீர்கள்!"

* * *

"அடக்கி ஒடுக்கப் படுபவனும்,
வீதியிலே யாருடைய உதவியுமின்றி
அனுதையாக இறந்து கிடப்பவனும்,
விதிவசமான தொழுநோயால்
உடல் சிதைந்து உள்ளம் சிதைந்துகிடப்பவனும்
நான்தான்! நானேதான்!"

* * *

அந்தத் தேவ ஒளியிலும் தெய்வ ஒலியிலும் துறவிக் கன்னிகை தெரேசாவின் உள்ளுணர்வுகள் மீண்டும் மீண்டும் சிலிர்ப்படைந்தன.

"மகளே"
விளித்தது தேவ தந்தை அல்லவா?
மேனி பொடிக்கிறது!

"அன்புமகளே! என் முதல் அழைப்புக்கு இணங்க, நீ ஏழைகளுள் ஏழைகளுக்கு அன்புப்பணி செய்யத் துடித்துக் கொண்டிருக்கிறாய்!—அதற்கான வேளை வந்து விட்டது!—நீ உன்னைத் தயார் செய்து கொள்வாயாக!"

தெரேசா தன்னையும் மறந்து அலறினார்: "எம் பெருமானே!"

மெய்விதிர்த்து நின்றார் சகோதரி தெரேசா. என்னுடைய புனித லட்சியத்திற்கான இரண்டாவது கட்டளையையும் ஆண்டவர் எனக்கு விதித்து விட்டார்!

அந்த விடியல் வேளையும் பிறந்தது.

'அன்பிற்கினிய கர்த்தர் பிரான் மேலானவர்—குறிக்கோள் மிக்க என்னுடைய புனிதமான கனவு பலனும் பலமும் அடைந்திட, என் மனத்தைப் பக்குவப்படுத்தி, நல்ல பாதையைக் காட்டிவிட்டார்!—கடையரினும் கடையருக்குரிய அன்புப் பணியைத் தொடங்குவதற்கான புதிய வாழ்க்கைத் தொழிலின் புதிய பயணத்தை மேற்கொள்ளுவதற்கு நேரமும் காலமும் கூடிவிட்டன.

தெரேசா, தமது. உள்ளத்தில் 'உள் ஒளி' ஏற்பட ஏதுவாக அமைந்த அந்த 1946 செப்டம்பர் 10ஆம் நாளான 'அகத்தூண்டுதல்' நன்னாளை (Inspiration Day) ஒரு போதும் மறவார்!

கன்னிகை தெரேசாவின் அழகான அன்பு வதனத்தில் மெய்யான களை தென்பட்டது. தெரேசா, புதிதான ஊக்கத்துடன் தென்பட்டார்; அன்புப் பணிக்கான இலட்சியத்தை நடைமுறைப் படுத்துவதில், அவரது சிந்தனைகள் தூண்டுதல் பெற்று இயங்கவும் தலைப்பட்டன;

**10, செப்டம்பர், 1946:**

தன்னுள்ளே ஓர் உள்ளொளியைக் காட்டி, பிறந்த மண்ணில் முன்னர் விடுத்த முதல் ஆணையையடுத்து, இப்போது இங்கே இரண்டாவது ஆணையையும் பிறப்பித்துள்ள பரமபிதாவின் நல் இரக்கத்தை மேலும் உணர்ந்தறிய ஏதுவான சுபதினமாகவே அந்நாளை மதிப்பிட்டார்!— அன்புக்கு அடைக்கும் தாழ் போடப்படுவதை ஏற்க மறுக்கவும், கன்னியர் மடங்களினின்றும் விடுதலை அடைந்து பிரிந்து வெளியேறவும் தேவைப்பட்ட தன்னம்பிக்கைத் துணிச்சலைத் தன்னுள்ளே உண்டாக்கிய புரட்சி நாளாகவும் அந்நாளைக் கருதினார். நகரின் எட்டுத் திசைகளிலும் சிதறியும் பதறியும் சின்ன பின்னமடைந்து கிடந்த சேரிப்புறங்களிலே காலடி எடுத்து வைத்து, தன் அன்புத் தவத்திற்குச் செயல்வடிவு கொடுத்து, தான் ஒருத்தியாக அன்பிற்குத் தூது செல்லக்கூடிய புத்தம்

புதிய உள் ஒளியை பெறக் கொடுத்துவைத்த புண்ணிய தினமாகவும் அந்நாளை சகோதரி தெரேசா மதித்தார்! அந்த நன்னாளைத் தன்னுடைய பணிவாழ்வின் நெடுகிலும் கொண்டாடித் தொழுது போற்றவும் துறவுக்கன்னி தெரேசா திட்டமிட்டதும் இயல்பு!

"1946 செப்டம்பர் 10-ல் நான் டார்ஜிலிங் ரயில் பயணத்தைத் தொடர்ந்த அந்நேரத்தில், என்னுடைய தெய்வத் தலைவனின் தெய்விகமான அழைப்பை, அழைப்பில் ஓர் அழைப்பாகவும், அழைப்பிற்குள் ஓர் அழைப்பாகவும் மிகத் துலாம்பரமாகவே நான் கேட்டேன்! —ஆண்டவன் என்னிடம் தெரியப்படுத்தின இரண்டாம் கட்டளைச் செய்தி அது! —உடனடியாகவே நான் லொரெட்டோ கன்னிமாடத்திலிருந்து விலகி, ஏழைகளின் ஏழைகளுக்கு நடுவில் வாழ்ந்து, ஏழைநல அன்புப்பணி செய்ய வேண்டுமென்பதுதான் அச்செய்தி! —செய்தி அல்ல! — அது ஆண்டவன் எனக்கு இட்ட புதிய கட்டளை!"

முன்னம் கல்கத்தாவில் தூய இருதய மாதாகோயிலின் மதக்குருவாக விளங்கிய 'லெ ஜலி' (Le Jely)யிடம் தெரேசா மனந்திறந்து இவ்வாறு கூறியதும் மெய்!...

தெரேசா உடல், பொருள், ஆவி அனைத்தையுமே காணிக்கை வைத்துப் பின்பற்ற வேண்டிய புனிதமான— பயண வாழ்க்கைக்கு — புத்துலக வாழ்க்கைப் பயணத் திற்கு உரியதான—நல்வழி இப்போது அவருக்குத் தெரிந்துவிட்டது; தெளிந்து விட்டது!

புனிததெரேசா ஊன் உருக, உள்ளம் உருக, கண்கள் உருகி திரம்பிக் கண்ணீர் பெருக, அப்படியே மெய்ம் மறந்து வீற்றிருந்தார். "அன்பே தெய்வமான கர்த்தர் பிரானே! உலகத்தின் ஏதோவொரு மூடுக்கிலே உழன்று தங்களது பேரன்பிற்காகத் தவங்கிடந்து தவித்து உருகிக் கொண்டிருந்த எளியவளான என்னைக் கடைத்தேறச் செய்திட, தாங்கள் நாளும் பொழுதும் பரிசுத்த நற்கருணை

யால் போதித்த அன்பிற்குத் தூது செல்லும் மேலானதொரு நற்பணிக்கு என்னைத் தேர்ந்தெடுத்து, ஆணையிட்டுச் சரியான பாதையையும் காட்டி விட்டீர்கள்! — என் முயற்சிகளுக்குத் துணைநின்று, என் புனித முயற்சிகள் எல்லா வகையிலும் வெல்லவும் அருள்புரிய வேண்டும், அன்புத் தந்தையே!'' ஜபம் தொடர, கண்ணீரின் மாலை தொடர்ந்தது! — ''பணிவிடைகளைப் பெற வரவில்லை; பணிவிடைகளைச் செய்யவே வந்தேன்!'' என்று கூறி, ஆனந்தமான பரவசத்தில் ஆறுதல் கனிய விம்மினார் சகோதரி.

டார்ஜிலிங் பயணத்தை விரைவாகவும் சுருக்கமாகவும் முடித்துக் கொண்டு, தெரேசா லொரேட்டோசபைக் கன்னிகையாகக் கல்கத்தாவை வந்தடைந்ததுதான் தாமதம்; உடனடியாகவே, தனது ஆன்ம குருவாகத் துணை நின்ற தவத்திருத்தந்தை வான் எக்ஸெம் (Father Van Exem) அவர்களைக் கண்டு, ஆண்டவன் காட்டிய புதிய பாதையில் மலர்ந்த ஏழை நல அன்புப் பணி குறித்த தனது புதிய திட்டத்தை விவரக் குறிப்புக்களை விளக்கினார். எண்ணங்கள் செயல் வடிவம் பெறுவதில் குறுக்கே மறித்த அனுபவரீதியிலான தடங்கல்களை ஆன்ம குரு எடுத்துச் சொல்லச் சொல்ல, தெரேசாவின் வைராக்கியம் தீவிரம் அடையவே செய்தது. 'எல்லாம் ஆண்டவன் செயல்!' என்று ஏசுவின் பேரில் பாரத்தைப் போட்டுவிட்டு, ஆகவேண்டிய காரியங்களைச் செய்யவும், எடுத்த காரியத்தில் வெற்றியைத் தொடுக்கவும் முனைந்தார். கிறிஸ்தவத் திருச்சபையின் மேலிடங்களின் முறையான அனுமதியோடும்ஆசியோடும்லொரெட்டோ கன்னிமாடத்திலிருந்து விடைபெற்று, சமயக் கோட்பாடுகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் இணக்கமாகவே நகரின் சேரிப்பகுதிகளில் ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து, அம்மக்களுக்குரிய நற்பணிகளையெல்லாம் செய்திட வேண்டுமென்ற தன் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தவும் முனைந்தார்.

நாட்கள் நகர்ந்தன.

கிறிஸ்தவத் திருச்சபைகட்கெல்லாம் மூலவராக விளங்கும் மேதகு போப் ஆண்டவருக்கும் அயர்லாந்தில் இயங்கிய லொரெட்டோ தேவாலயத் தலைமைத் தலைவிக்கும் கல்கத்தாவில் செயற்பட்ட லொரெட்டோ கன்னி மாடங்களின் தலைவிக்கும் முறையான அனுமதி கேட்டு, விண்ணப்பங்கள் முறைப்படி பறந்தன.

கல்கத்தாவில் செயலாற்றிய பெரிய மதகுருவான ஃபெர்டினன்ட் பேரியர்ஸின் (Archbishop Ferdinand Periers) சோதனைகளும் தொடர்ந்தன.

தெரேசா சகோதரி, அஸான்ஸாலில் நடந்த கன்னி மடத்துப் பள்ளிக்கு மாற்றப்பட்டார்.

'எனது மனிதப் பிறவிக்கு ஒரு அன்பான பயன் ஏற்பட அருள்புரிய மாட்டீர்களா, பரமபிதாவே!'' விம்மிப் புடைத்தார் சகோதரி கன்னி.

தியானங்கள் வலுப்பெற்றன.

பிரார்த்தனை நோன்புத் தவம் பலித்து விட்டது.

அமைதியான அழகோடு அன்புப் பொழுது விடிந்தது!

சகோதரி தெரேசாவின் ஏழைநல அன்புப்பொதுத் திருப்பணிக்காக மேதகு போப் ஆண்டவரின் உயர் அனுமதியும் ஆசியும் ரோம் நகரிலிருந்து பறந்தோடி வந்து விட்டன!

பரமபிதாவின் அன்புத் திருமகள் தலை நிமிர்ந்து நின்றார்!

வங்காளத்தில் இயக்கப்பட்ட லொரெட்டோ பள்ளிகளிலெல்லாம் பரவிய சுற்றறிக்கை இதுதான்.

''சகோதரி அக்னெஸ் தெரேசா லொரெட்டோ கன்னி மடத்திலிருந்து விலகிக் கொள்கிறார்; அதைப் பற்றி இனி யாரும் பேசாதீர்கள்!—தூற்றவும் வேண்டாம், போற்றவும் வேண்டாம்! சகோதரிக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்!''

# 4. தருமம் வெல்கிறது

**1948,** ஆகஸ்ட், 8 ஆம் நாளில், புனித சகோதரி தெரேசா சுதந்தரப் பறவை ஆனார்! —

கட்டுத்திட்டங்கள், சோதனைகளை நடத்திய லொரெட்டோ கன்னியர் மடத்தை விட்டுப்பிரிந்தாலும், கிறித்தவத்தின் உள்ளார்ந்த நெறிமுறைக் கோட்பாடுகளினின்றும் சிறிதும் பிரியாத புனிதக் கன்னிச் சகோதரியாகவே, உலகிடை அன்பிற்குத் தூது செல்லத் தயாராகி விட்டார்!

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்!''

என்றுமுள தென்றமிழின் முதுபெரும் புலவர் பூங்குன்றனாரின் திருவாய் மொழிக்கு மெய்யான காட்சியாகச் சகோதரி தெரேசா இன்று விளங்கி வரும் உண்மை நிலைமையை ஊர் உலகம் உய்த்துணரும்!—ஆனால், அன்று சகோதரி தெரேசாவாக நடமாடித் தனி ஒருத்தியாகவே அன்புப்பணி செய்யத் தொடங்கிய காலத்திலேயே அவரது துறவறக்கன்னி மனம் உலகப் பொதுமையான ஏழை நல அன்பமைதித் தொண்டிலேயே பெரிதும் ஈர்க்கப்பட்டிருந்த அந்தரங்க சுத்தமான உண்மை நிலையை உணர்ந்தறிந்தவர் ஒரேயொருவர்தான்!

கர்த்தர்பிரானே!

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பிரிந்து, பொது நன்மைத் தொண்டுகளில் மனம் லயித்துத் தன் வாழ்க்கை

யின் நாட்கள் முழுவதையும் முற்றும் துறந்த இளந்துறவி யாகவே கழித்தவள் கோவலன் — மாதவி பெற்ற அருமைத் திருமகளான அறத்தின் நாயகி மணிமேகலை. மண்ணின் பசிப்பிணி போக்க, ஓர் அமுதசுரபியைத் துணை கொண்டு இயங்கிய காப்பியத் தலைவி!

ஐந்து பெருங்கண்டங்கள் ஆரத்தழுவிய பூதலத்தில், அன்பிற்கு ஓர் அன்னையாக — கடைநிலை மக்களுக்கு வாய்த்த ஒப்புயர்வற்ற அன்னையாக இன்று விளங்கி வருகின்ற தெரேசா, அன்று மற்றுமொரு மணிமேகலை ஆனார்.

அன்பைத் தேடித் தேடி அலுத்துச் சலித்து, உருகி உருக்குலைந்து கொண்டிருந்த உள்ளங்களைத் தேடித் தேடி அன்பை வாரி வாரி வழங்குவதிலும், பற்றுக்கோடு ஏதுமின்றி வாழ்க்கையின் எல்லாவிதமான நிலைப்படி களிலும் போராடித் தத்தளித்துக் கொண்டிருந்த ஏழை மக்களைச் சந்தித்துத் தானே அவர்களுக்குப் பற்றுக் கோடு ஆகி ஆறுதல் அளிப்பதிலும், சேரிப் பகுதிகளுக் கெல்லாம் சென்று, ஒதுக்கப்பட்ட மக்களுடைய வாழ்க்கை நிலவரங்களை நேருக்கு நேர் கண்டு, கேட்டு, இருண்ட அவர்களது உள்ளங்களில் நம்பிக்கைச் சுடர் ஏற்றி, அவர்களையெல்லாம் சமாதானப் படுத்துவதிலும், தொடங்கவிருக்கும் அன்புத் தூது இயக்கம் சகல வகை களிலும் சிறக்கவும் நிறக்கவும் தேவையான சகல வகை யான ஒத்துழைப்பையும் வல்லமையையும் வாழ்த்தையும் ஆசியையும் வழங்குமாறு எல்லாம் வல்ல இறைவனிடம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பிரார்த்தனை செய்வதிலும் நாட்களை எண்ணி எண்ணி, செலவு செய்தார் தெரேசா—அன்பின் சேவகியின் உள்ளக்கிழியில் ஏழை உலகு நிழலாடுகிறது; அன்பு உலகு ஒளியாடுகிறது!

அன்பே உயிராகவும் உயிர்ப்பாகவும் விளங்கக்கூடிய மக்கள் நலப்பணிகளை சமயத்தின் துணையுடன் ஓர் இயக்க

மாகவே நடைமுறைப் படுத்துவதன் பலனைக் கடையரினும் கடையருக்கு அப்பணிகளின் பலன்கள் முழு அளவில் கிடைத்திட வசதி வாய்ப்புக் கிடைத்தால்தான், அன்பின் தொண்டுக்குப் பூரணமான பயன்படு பொருள் கிடைக்கவும் வாய்ப்பு வசதி கிடைக்கும் அல்லவா?

விசுவாசம் மிக்கதும், இதய நெகிழ்ச்சி மிகுந்ததுமான தெரேசாவின் அன்புவழிப் புதுக் கொள்கை இது! — எனவே, அவர் செப்டம்பர் கடைசிவாரத்தில், பீகார் மாநிலத்தின் தலைநகரான பாட்னு நகருக்குப் பயணப் பட்டார் — விரைவிலேயே மேற்கொள்ளவிருக்கும் அன்பு நலப் பொதுமக்கட் பணிக்குத் தம்மை முழு அளவிலும் எல்லா வகையிலும் தகுதிப்படுத்திக் கொள்வதற்காகவே. அவர் பீகாரில் ஏறத்தாழ மூன்று மாதங்கள் வரை அமெரிக்க மருத்துவ அன்புப் பணிச் சகோதரிகளின் அமைப்பில் மருத்துவப் பயிற்சியை மேற்கொள்ளலானுர். அக்கறையோடும் ஆர்வத்தோடும் தீவிரப் பயிற்சியைத் திறமையுடன் முடித்துக்கொண்டு, கல்கத்தாவுக்குத் திரும்பலானுர் அவர்.

ஏழைகளின் இளைய சகோதரிகள் அமைப்பில் சகோதரி தெரேசா தங்கநேர்ந்த நாட்கள் அவருக்குப் பயனளிப்பதாக அமைந்தன. பணி ஆர்வத்தால் புது வெள்ள மெனப் பொங்கிப் பூரித்த சகோதரி, சேரிகளைத் தீண்டி அவற்றை மேலும் நெருக்கமாகப் படித்துக் கொள்ளவும் செய்தார்.

1948 ஆம் ஆண்டின் கிறிஸ்துமஸ் பண்டிகையை — இயேசு நாதரின் திருப் பிறப்பு நாள் விழாவை, அமைதி யான மகிழ்வோடும், மனமார்ந்த நிறைவோடும் தெரேசா கொண்டாடினுர். ரோம் நகரிலிருந்து பண்டிகைச் சமயத்தில் ஆனை வந்து சேர்ந்ததில், தெரேசா அடைந்த அமைதியும் ஆனந்தமும் இரட்டிப்பு ஆனதும் இயல்புதானே?

டிசம்பர், 21-ம் நாளன்று, அன்னை தெரேசா சேரிப் பள்ளியை முறையாக ஆரம்பிப்பதற்கான அனுமதியை மேதகு போப் பயஸ் (Pope Pius XII) வழங்கி விட்டார்!

சகோதரி தெரேசா இப்போது அன்னை பாரதத்தின் அன்பிற்குரிய அருமைக் குடிமகள் ஆனார்; இந்தியத் தெரேசா ஆகிறார்!

ஓ!...

தீயை நேசிக்கிறது மெழுகு வர்த்தி!

மெழுகுவர்த்தியின் தியாகத் தூய ஒளியில் ஆண்டவன் சிரிக்கிறார்!

மனிதப் பண்பு நிரம்பி வழிந்த தெரேசாவின் தொண்டு உள்ளத்தில் அன்பும் ஆனந்தமும் அமைதியும் நிறைந்து வழிய, அவர் இப்போது பாரதப் பண்பாடு தழுவி, மூன்று நீல நிறக்கோடுகள் கரைகட்டிய வெண்ணிறப் புடவை தலையை மறைக்க, வெண்மையான முழுக்கைச் சட்டை மேனியை மறைக்க, புதிதான உள்ளத்தைப் போல புதியதான உருவத்தையும் பெறலானார்!—இடுப்பில் செபமாலை; இடது புறத்தோளில் அசைந்தாடிய 'முந்தானை'யில் அன்பான ஏசுநாதரின் பெரியதொரு கீர்த்தியைக் கொண்ட அழகான சிலுவை, சிறியதொரு மூர்த்தியாக அழகாக அசைந்தாடிக் கொண்டிருக்கிறது! — 'அன்பிற்கு இனிமையான என் தந்தையே! எனக்கென்று எழுதிவைத்த சரியான பாதையைக் காண்பித்து விட்டீர்களே?...என்னை நாளும் பொழுதும் வழிநடத்த, நாளும் பொழுதும் என்னுடன் இருங்கள், எம்பெருமானே!' தோத்திரங்கள் ஆத்ம நிவேதனம் ஆகின்றன,

வங்கத்தின் எளிய புதுமைப் பெண்ணைப் போலி கின்றார்!

நாள்: 21.

திங்கள்: டிசம்பர்

ஆண்டு: 1948.

ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று பாரதச் சமுதாய மக்கள் அனைவரும் ஒன்றெனக் கூடியும் ஒன்று கூடியும் பள்ளுப்பாடி ஆடி மகிழ்ந்து கொண்டிருந்த பாரதத்தின் தாய் மண்ணில் கல்கத்தா நகரில், பால சந்நியாசினி சகோதரி தெரேசா அன்புநலத் தொண்டு களை முறையாகத் தொடங்கிய நேரம் அது!

மிக மிக எளிமையானதொரு மாட்டுத் தொழுவம் தான் இயேசு பெத்லெகமின் அன்புசால் தியாகப்பணிப் பயணத்திற்குத் தொடக்கம் இட்டது அல்லவா?

அதைப் போலவே, பரிசுத்த சகோதரி தெரே சாவின் பரிசுத்தமான அன்பின் பணி வாழ்க்கையும் ஒரு சேரியிலிருந்து ஆரம்பமாக வேண்டுமென்பதுதான் ஆண்ட வனின் திருவுள்ளம் கொண்ட நியதிபோலும்!

அது: மோத்திஜில் சேரி!

அதுவே, சிலுவைத் தெய்வத்தின் சேரி!

அங்கேதான்,

இன்று அகில உலகத்தின் அன்புப் புகழை ஒருங் கிணைந்து பெற்றுத் திகழ்கின்ற அன்புத் தூதுப் பணித் தலைச்சன் குழந்தை பிறந்து, முதன் முதலில் 'குவா, குவா' வென்று முதற்குரலையும் வெளியிட்டது.

சேரிப் பகுதிகளிலே அங்கும் இங்குமாகவும் அப்படி யும் இப்படியுமாகவும் சிறுவர்களும் சிறுமியரும் அன்பை மறந்து, பசியையும் மறந்து, ஏன், விதியைக்கூட மறந்து ஆடிப்பாடிச் 'சடுகுடு' விளையாடிக் கொண்டிருக் கிறார்கள்!

அன்பைச் சுமந்து, அன்பைத்தேடி, ஓர் அன்னையின் பரிவோடும் பாசத்தோடும் அன்போடும் அக்கறையோடும்

வீதி நெடுகிலும் ஓடிக் கொண்டிருக்கிறார் தெரேசா சகோதரி!

இங்கேயும் சிலுவைக் குறி, ஒரு வேடிக்கையான சோதனையில் 'குறி' வைத்திருந்தது!

ஐந்து ரூபாய்!...

அப்பொழுது, தெரேசாவின் கையில் இருப்பு இருந்த பணம் வெறும் ஐந்தே ஐந்து ரூபாய்தான்!—அன்பிற்கு விலை இல்லைதான்; ஆனாலும்கூட, அன்புக்குத் தூது புறப்பட, அவசியப்பட்ட ஒரு பணிமனைக்கு விலை கொடுக்க முடியாவிட்டாலும், வாடகையாவது கொடுக்க வேண்டாமா?

சரித்திரப் பிரசித்தி பெற்ற கல்கத்தாப் பெருநகரிலே, சமூகப் பிரசித்தி பெற்ற சிறிய மோத்திஜில் சேரியில் காலியாய்க் கிடந்த அந்தக் குடிசைக்கு மாதம் ஒன்றுக்கு ஐந்தே ஐந்து ரூபாய் மட்டுந்தான் வாடகையென்று குடிசையின் உடைமைக்காரப் புண்ணியவான் சொன்னது தெரேசாவை வியப்பில் ஆழ்த்தியது!—மெய்ம் மறந்தார்; "எந்தன் ஏசுநாதரே"—மனம் ஆனந்தக் கடலில் ஆடியது.

இப்போதும், புனிதக் கன்னிகைக்கு ஆச்சரியமாகப் போயிற்று!...

தெய்வம் தேடி வருவதும் உண்டு.

சிறுவர்களும் சிறுமிகளுமாக ஐந்து குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படிப்புக் கற்றுக் கொள்வதற்குத் தயாராயினர்.

புனிதமான காலை வேளை.

மாதா கோயில் மணி ஓசை முழங்கத் தொடங்குகிறது.

அன்பு வேள்வி ஆரம்பமாகிறது.

மெய்ஞ்ஞானத் தவம் ஆரம்பமாகிறது.

அந்தச் சேரிப்பள்ளியும் ஆரம்பமாகிறது.

தூய சகோதரி ஆன தெரேசா, மறுபடி ஆசிரியை யாகவும் ஆகிறார். பள்ளிப் பிள்ளைகளுக்கு இனி தெரேசா அன்னையும்தான்!...

சொல்லிக் கொடுத்தார்: "அ... ஆ!..."

படித்துக் கொள்கிறார்கள்: "...அ... ஆ!..."

வங்கமொழி சுருதி பேதம் சீரடைந்து பாடும் பூங்குயில் ஆகிறது.

"அமி.. நான்!"

"டுமி...நீ!"

வங்கம் ஆனந்தக் கூத்து ஆடும்!

பள்ளியிலே நாற்காலி இல்லை; மேசையும் கிடையாது.

ஏன் கரும்பலகையோ, சாக்குக் கட்டியோ கூட இல்லையே?

இல்லாவிட்டால், என்னவாம்?

மேலே வானம் இல்லையா? கீழே பூமி இல்லையா, என்ன?

அன்னச்சத்திரம் ஆயிரம் கட்டுவதைக் காட்டிலும், ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்தது அல்லவா?

பள்ளித் தலத்தில் கோயில் கொண்டிருந்த ஐந்து குழந்தைகளை—குழந்தைத் தெய்வங்களைக் காணக் காண, தெரேசாவுக்குக் கரை காணாத களிப்பு மிஞ்சியது: புன்சிரிப்பு எஞ்சியது. என்னுடைய பள்ளிக்கான சின்னஞ்சிறிய இடத்தையும் சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகளையும் தேடிப் பிடிப்பதற்கு என்னபாடு பட்டேன்! இன்னமும்கூட, என் கால்கள் கெஞ்சுகின்றனவே? ஒரு சில

நாட்கள் நான் கஷ்டப்பட்டிருப்பேன்; அதற்கே இந்தப் பாடு என்றால், பொழுது விடிந்து, பொழுது போனால், பிரச்சினை ஆகிவிட்ட வாழ்க்கையோடு—பிரச்சினைக்கு உரியதென ஆகிவிட்ட வாழ்க்கையோடு சோற்றுக்காகவும், துணிமணிக்காகவும், நிழலுக்காகவும் போராட்டம் நடத்துவதையே தங்கள் தொழிலாக—வாழ்க்கைத் தொழிலாகக் கைக் கொண்டுள்ள சேரி மக்கள் அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களிலே அவர்கள் எத்தனை பாடு படுவார்களோ?—பாவம்! அகம் காட்டின புன்னகையில், சோகம் இறுதியிலே முகம் காட்டவே, பிறர் துயரைத் துயராக உணர்ந்து வருந்திய அவரது உள்ளம், அகம் காட்டி, முகம் காட்டிய சேரி மக்களின் நிமித்தம் அனுதாபப்பட்டது. துயரப்படுபவர்களைப் பாக்கியம் அடையச் செய்யுமாறு வழக்கமான நன்னம்பிக்கையுடன் 'ஜபம்' செய்தார்.

மறுநாள்: அந்தச் சேரிக் குடிசையில்தான், அன்னை தெரேசாவின் கருணை இல்லத்தின் முதற் பள்ளி ஆரம்பமாயிற்று! அந்த எட்டடிக் குடிலுக்கும் சரித்திர அந்தஸ்து கிடைத்தது!—அது ஓர் ஒப்பற்ற ஆலமரம் போல! — இன்று உலகத்தின் முக்கியமான தேசங்களிலெல்லாம் வேரோடி, விழுது பாய்ந்து, படர்ந்தும் பரவியும் வளர்ச்சியடைந்துள்ள அன்புத் தூதுவர்களின் மக்கள் நலப் பணி இயக்கத்தின் பல்வேறு அமைப்புக்களுக்கெல்லாம் அந்தச் 'சேரிக் குச்சு'தானே தாய்வீடு! பராசக்தியான அன்னையின் வடிவம் எடுத்த தெரேசா, அந்தக் குடிலை எழுத்தறிவிக்கும் பள்ளியாக ஆக்கிக் கொண்டார்.

இளங்காலைப் பொழுதில், அந்தக் குடிசைப்பள்ளி—பள்ளிக்குடிசை அலங்கோலமாகவே தரிசனம் தருகிறது.

அன்னை தெரேசா அரைக் கணம் விசுவாசத் தியானத்தில் லயித்தார். 'எனது தெய்வத் தந்தையே, உங்கள் அன்புப் பணி ஒரு மாட்டுத் தொழுவத்திலிருந்து

ஆரம்பமானதைப் போல என் அன்புத்தொண்டு ஒரு சேரியிலிருந்து புறப்பட வேண்டுமென்பதுதான் உங்களது திருவுள்ளம் போலும்! 'உன் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று எனக்கு இருமுறை வழங்கிய கட்டளையை வெற்றியுடன் தொடர்ந்து நடத்தவும் தாங்கள்தானே அருள் புரியவேண்டும்!'— நீர் விரித்து அகல விரிந்த அழகான கண்களில் தென்பட்ட அந்தக் குடிலின் பின்னணியிலே ஓர் ஆலமரம் தரிசனம் கொடுத்ததை உணர்ந்தறிந்ததும், அன்னையின் அகமும் புறமும் சிலிர்த்தன. அன்பு எனும் ஆலமரத்தின் நம்பிக்கை என்ற விழுதுகள் நாற்புறமும் வேரோடத் தொடங்கின.

பொழுது வளர்ந்தது.

சேரியின் சந்துகளும் பொந்துகளும் வளர்ந்தன.

தெரேசா அன்னையின் அன்பிலும் பக்தியிலும் பாசத்திலும் ஊறித்திளைத்த நம்பிக்கையும் வளர்ந்தது.

திடநம்பிக்கை : அது ஆண்டவனின் நன்கொடை!

நம்பிக்கைக் கொடை நாளும் வளர்ந்தது; பொழுதும் வாழ்ந்தது.

இன்றைய அன்பின் தொண்டர்களின் (Missionaries of Charity) இயக்கம், அன்று தனது தெய்வத் திருப்பணிகளை நடைமுறைப் படுத்துவதற்குத் திருக்கோயில் ஒன்றினைக் கண்டது; கோயில், கருவறையையும் கண்டது.

கரைகண்ட அமைதியில் நல்ல மூச்சை வெளியிட்டார் புனிதை தெரேசா. அமைதியில் ஆனந்தமும், ஆனந்தத்தில் அமைதியும் அடைந்தார்.

இதுவரை, கல்கத்தா நகரிலிருந்த எந்த ஒரு பள்ளிக் கூடமும் எந்த ஒரு சேரிப்பிள்ளையையும் விரும்பியதும் இல்லை; ஏற்றதும் கிடையாது.

இந்நிலையில், சேரிக்குழந்தைகளின் வாழ்க்கைப் புத்தகத்தில் புதிதான அத்தியாயம் ஆரம்பமாகியிருக் கிறது!

பள்ளி ஆசிரியை தெரேசாவுக்குப் பள்ளிப் பிள்ளைகளின் படிப்பார்வத்தைக் காணக் காண மகிழ்வு மேலிட்டதில் வியப்பு இல்லைதான். மகிழ்வின் கூடுதலில், அன்புப் பணிக்கான புத்தெழுச்சியும் கூடுதல் அடைந்திருக்கக் கூடும்.

காலத்திற்கு நிற்கவோ, நிலைக்கவோ பிடிக்காதுதான்.

தெரேசாவும் அப்படித்தான்! — பள்ளி நேரம் ஆரம்பமாவதற்கு முன்பும், பள்ளி நாழி முடிந்ததற்குப் பின்பும், ஆசிரியையான தெரேசா, தீண்டாமையை விலக்கிவைத்த சேரிகளின் பிள்ளைகளுக்கு அன்னையான தெரேசாவாக ஆவார்; பூதானத் தந்தை பாதயாத்திரை செய்ததுமாதிரி, அன்புத் தாய், சேரி ஒன்றையும் பாக்கிவைக்காமல், அன்பிற்காகவும், அன்பைத் தேடியும் அலைந்தார்; திரிந்தார்; சுற்றினார்; சுழன்றார். சேரி மக்கள் ஒவ்வொருவரையும் நேருக்கு நேர் கண்டு பேசி, நலம் விசாரித்தார். ஆண்டவனை நம்பி, ஆறுதல் கூறினார்; தேறுதல் சொன்னார்; நம்பிக்கை அளித்தார்!

அடுத்த நாள், விடிந்தது.

1949, மார்ச், 19 :

காலைப் பிரார்த்தனையில், தெரேசா ஒன்றுபட்ட பக்தியின் உணர்வுகளோடு மனம் லயித்து ஒன்றியிருந்தார். "கர்த்தர் பிரானே! மரம் வைத்தவர் நீங்கள்; தண்ணீர் ஊற்றுகிறீர்கள்; உங்கள் அனுக்கிரகத்தால் அந்த நீரைப் புல்லுக்கும் பொசியச் செய்கிறேன்; நான் மேற்கொண்டிருக்கும் அன்புச் சேவை என்னுடைய லட்சியக் கனவுக்கேற்ப இயங்கத் தேவைப்படுகிற உதவியையும் துணையையும் அருளி, எனது மக்கள் நலப் பணிகள் சிறக்கவும் நிறக்கவும் செய்து, என்னைப் பிறர்க்குப் பயன்பட வாழச் செய்யுங்கள், தந்தைத் தெய்வமே!"

புனிதச் சிலுவை, மெய் வழியில், மென்மையாகவே புன்னகையைச் சிந்துகிறது.

அன்று தேவாலயத்தில் நடைபெற்ற புனித சூசையப்பர் பெருநாள் விழாவில் "அன்னை!" யென்று விளிக்கத் தொடங்கியது மக்கள் உலகம்.

எதிரொலி கிளம்பிய ஆலயமணிச் சத்தத்தில், அன்னை யான அன்னை தெரேசாவின் அமைதி மேலோங்கியது; அன்பு மேலோங்கியது.

கதிர் முத்தங்கள், இனிக்கின்றன.

கல்கத்தா எனும் பெருநகரில், அது ஒரு சிறு சந்து. கிரிக் சந்து என்று பெயர். அங்கே, 14 ஆம் எண் வீடு; பழைய மனை. ஆல்பர்ட் கோமஸ் சொந்தக்காரர்; மனிதாபிமானி. இந்தப் பாம்புச் சந்து வீட்டின் சிறிய மாடியில்தான் இப்போது தெரேசா அம்மை வசிக்கிறார்!

'அன்பை வாழவைக்க இடம் தேடி எத்தனை நாட்கள், எத்தனை தூரம் நடந்தேன்!— கைகால்கள் ஒய்ந்து விட்டன! பாவம், ஏழைகள்!— அவர்கள் உண்ண உணவுக்கும் தங்க நிழலுக்கும் அன்றாடம் எத்தனை எத்தனை கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது!

நாட்குறிப்பு நிறைகிறது!

தெரு வாசற்புறத்தில், காலடி ஓசை கேட்டது.

தெரேசா அன்னையாகி, ஜபமாலையை உருட்டிய வராக, மேலே மாடியிலிருந்து கீழே எட்டிப் பார்த்தார்; விழிகளில் ஆச்சரியம்: "ஓ!...சுபாஷிணி!" மரப்படிக்கட்டை ஒரே எட்டில் தாண்டிப் பாய்ந்து கீழே ஓடிவந்தார்.

வாலைக்குமரி சுபாஷிணிதாஸ், "மதர்!" என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூவி அழைத்தவண்ணம், அன்பின் வண்ணம் நிறைந்திட்ட புண்ணியவதியின் பாதங் களில் நெஞ்சத்தைத் தஞ்சம் வைத்து வணங்கி எழுந்தாள். அன்னையின் நலம் விசாரித்தாள்.

உன்னதமான அன்பிற்கு உள்ளம் நிறைந்த பணிப் பெண்ணாக உருக்கொண்டு, உருவெடுத்த தெரேசா, உந்திக்கமலத்தினின்றும் புறப்பட்ட முறுவல் கோபத்தோடு, உரையாடினார். ‘என்னிடம் படித்தகாலத்தில் சிறுமியாக இருந்தவள் இப்போது வளர்ந்திருக்கிறாள்!’ பழைய மாணவியைப் பற்றின புதிய தகவல்களையும் கேட்கலானார். ஒரு தீர்மானத் துடிப்போடும் ஆர்வத் துள்ளலோடும் குமாரி சுபாஷிணிதாஸ் தெரியப்படுத்திய நற்சேதியைக் கேட்டது தான் தாமதம்; அவரது நெஞ்சில் ஏசுவின் நற்கருணைச் சிரிப்புத்தான் பளிச்சிட்டது; சிலிர்த்தார். ‘அப்படியா? மிக மிக மகிழ்கிறேன்; நான் தன்னந் தனியளாகவும் ஒரே ஒருத்தியாகவும் மேற்கொண்டிருக்கும் அன்பின் தூதுக்கு எனக்குத் துணை நிற்கக் கர்த்தர்தான் உன்னை இப்போது என்னிடம் அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆமாம், சுபாஷிணி! என்னுடைய குறிக் கோளுக்கு ஏற்ப, ஒரு இயக்கமாகவே உருவாக்கத் திட்டமிட்டு வரும் எனது அன்புப் பணி நடவடிக்கைகளுக்கு எனது முந்திய மாணவியான நீயே முதல் துணையாகக் கிட்டியதில், நான் சொந்தமாகவும் பெரிதும் ஆனந்தமடைவேன்!’’

குமாரி சுபாஷிணிதாஸ், தன் தலைவியின் இயற் பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டு, புனிதச் சகோதரி ஆக்னெஸ் ஆனாள்! — அன்பின் தலைமகள்பால் இந்தச் செல்வமகள் கொண்டிருந்த பாசமும் பக்தியும் அப்போது அவள் விழிகளிலும் இதழ்களிலும் ஒளி ஆடியது; அந்தப் பரிசுத்த ஒளியில், தான் என்றென்றைக்குமே அன்னையின் முதல் துணையாகவே அமைந்துவிட வேண்டுமென்ற கனவு நிழல் ஆடியிருக்குமோ?

உள்ளார்ந்த நாணயக் கனவுகள் பலிப்பது விலக்குவிதி அல்லதான்; விதியை விலக்கி வைத்த விதி ஆகும்! — வரலாறு, இந்நியதிக்கு மெய்ச்சாட்சி சொல்லும்; சொல்லவும் சொல்லுகிறது.

என்னவோ, சத்தம் கேட்டது.

அன்னை ஏறிட்டு விழித்தார்.

புதிய உள்ளமும் புதிதான உறவும் கொண்டு, வேறு பல குடில்களைத் தழுவிய வேறு சில சிறுமியர்களும் சிறுவர்களும் பயபக்தியுடன் கைகளைக் கட்டிக்கொண்டு காட்சியளிக்கின்றனர்.

அன்பிற்கு விசாரணை நடத்தவும் தெரிந்திருக்க வேண்டும்.

விசாரணை நடத்திய மாதா "ஓ" என்று ஆச்சரியப் பட்டு, பிறகு, 'ஓ.கே!' சொல்லிவிட்டார்.

குழந்தைகள் ஆனந்தக் கூத்திட்டனர்.

அம்மைக்கும் அம்மையப்பன் ஆகி ஆனந்த நடனம் செய்யவேண்டுமென்று ஆவல் கிளர்ந்து எழுந்தது; அவரது உள்ளமும், உள்ளத்தின் உள்ளமும் அவ்வாறே ஆனந்தத் தால் நடனம் ஆடின! — ஆன்மநேயம் ஆனந்தத்தால் நிரம்பி வழிகிறது; ஆறுதல் அடைகிறது.

கைவசமிருந்த மூலதனமான ஐந்தே ஐந்து ரூபாயில் உருவான — உருவாக்கப்பட்ட அந்தச் சேரிக்குடில் பள்ளி வளர்ந்தது.

மாணவ — மாணவியர் எண்ணிக்கை ஐந்திலிருந்து பதினொன்று ஆகி, பதினொன்றிலிருந்து இருபத்தி ஒன்று ஆகக் கூடியது; நாளடைவில் நூறு ஆகவும், பின்னர், நூற்றுக்கணக்கிலும் உயர்ந்தது.

அன்புக்குத் தூது செல்லவும், அன்புக்குத் தொண்டு செய்யவும் அன்னை ஆரம்பித்திருந்த அணியும் வளர்ந்தது.

மக்களின் மேம்பாடு கருதி, அன்னை மேற்கொண்டுள்ள மெய்ஞ்ஞான வேள்வியில் தன்னை அர்ப்பணம் செய்து கொள்ளத் தயாரான இரண்டாவது கன்னிப்பெண் சகோதரி ஜெர்த்ரூத். இவ்வாறு, சகோதரி ஃபிளாரென்ஸ்,

சகோதரி ரொஸாரியோ போன்ற பன்னிரண்டு கன்னி கையர் அன்னையின் தெய்வப்பணிக்கு — கடையரினும் கடையருக்குரிய அன்பின்பாற்பட்ட தெய்வத் திருப் பணிக்குத் தோள் கொடுத்துத் துணை நின்று, அவர்கள் பன்னிருவரும் அன்னையின் முதல்கட்ட நடைமுறைப் பணி முறையில் அன்னையின் நிழல் ஆனார்கள். இவர்கள் அத்தனை பேரும் ஆசிரியை தெரேசாவின் முன் நாளைய மாணவிகள்; இப்போது அவர்கள் அனைவரும் புனிதத் தாயின் தவப் புதல்விகள் ஆயினர்! — வறுமைப் பசியிலிருந்து கடை மக்களை விடுதலை அடையச் செய்யவும், தெய்வப் பணியில் பணிவுடன் சரண் அடையவும் விரதங்கள் எடுத்தனர்! 'அன்பின் தூதுவர்கள்' அமைப்பில் இன்றைய நிலையில் கன்னிச் சகோதரிகளுக்கென 227 பிரிவுகள் இயங்கி வருகின்றன! — வேறெந்த உலக அமைப்பிலும் காண முடியாத அளவுக்கு இங்கே கட்டுத்திட்டங்கள் கடுமை யாகவே அமல்நடத்தப்படுகின்றன.

மோதிஜில் சேரிப்பகுதியை அடுத்து, இப்பொழுது தவல்ஜா என்னும் சேரிப்புறத்திலும் மற்றொரு பள்ளியைத் தொடங்கினார் அன்னையார்.

அன்பின் தூது, சருக்கம் சருக்கமாகவும், படலம் படல மாகவும், காண்டம் காண்டமாகவும் வளர்கிறது; விரிகிறது!

அந்த நாட்கள்...!

அன்னை தெரேசா பலப்பல ஆண்டுக்காலமாக மானுடப் பண்பின் ஊனும் உயிரும் உருகிடப் பிரார்த் தித்துக் கனவு கண்டுவந்த கடையரினும் கடையருக்காக அன்புப்பணி அன்று ஆரம்பமாகவும், அதுவே இன்று பேரியக்கமாக வளர்ந்து, உலகெங்கணும் அன்பின் தொண்டர்கள் உலகத்தின் அமைதியைப் பேணவும், மக்களின் நலனைக் காக்கவும் கூடிய அமைப்பாகப் பேரும் புகழும் பெற்று விளங்கி வரவும் செய்த அந்த நாட்கள்—

சோதனை நாட்கள்—சாதனை நாட்கள் அணிவகுத்து, வணக்கம் கூறுகின்றனவே!

ஆமாம்; அது மோதிஜில் சேரியேதான்!—'எல்லோரும் ஓர் நிறை' என்னும்படியான பொது விதியின் தார்மிக மான நியதியுடன் ஆண்டவனால் படைக்கப்பட்ட மக்களில் சிலர் அல்லது பலர், சமுதாயத்தால் படைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்குப் பலியாகி, அல்லது, பலியாக்கப் பட்டு அங்கேதான் நித்தநித்தம் செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள்! ஆகவேதான், சொர்க் கமும் நரகமுமான இந்த மண் உலக வாழ்க்கை, அந்தச் சேரி மக்களைப் பொறுத்தமட்டில் வெறும் நரகமாக மாத்திரமே அமைய நேர்ந்தது; அமையவும் முடிந்தது.

அன்பு, அறம், இரக்கம், கருணை, தயை, தாட்சண்யம், பாசம், நேசம் போன்ற மனிதப் பண்பின் பல்வேறு மன உணர்வுகள் புது வெள்ளமாகப் பெருக்கெடுத்த பரிசுத்த மான இதயத்தினின்றும் அணை கடந்த வெள்ளமாகச் சுடு நீர் பெருக்கெடுத்த இருகண்களை எட்டுத் திக்குகளிலும் பரப்பியும் விரித்தும் சேரிக்காட்சிகளை நேருக்கு நேர் நிதர் சனமாகத் தரிசித்த தெரேசா புண்ணியவதியான ஓர் அன்புத்தாயின் பரிவோடும் பச்சாதாபத்தோடும் சேரி வாழ் மக்களுக்காக உருகிக்கரைந்து, அந்தச் சேரித் தெய் வங்களுக்காகப் பிரார்த்தனையும் செய்தார், தெரேசா.

அப்போது, அங்கே, நல்ல பூமியின் அமைதி அரசாட்சி செய்தது.

சேரிக்குடிப் படைகள் அத்தனை பேரும் கண்காணாத தெய்வத்தைக் கண்ணுக்குக் கண்ணாகக் கண்டுவிட்ட பாவனையில் புதிதாய்ப் பிறந்த அமைதியோடும் ஆறுதலோடும் அன்னையையே தொடுத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்பின் வடிவமாகப் புன்னகை செய்தார் அன்னை: அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தார்; சேரி கை யெடுத்துக் கும்பிட்டது.

அன்பு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தது.

இனி—

சேரிகளிலே, ஒரு கோகுலமும் ஒரு பிருந்தாவனமும் உருவாகக் கேட்கவும் வேண்டுமா?

'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்!'

இது, வாழ்வியல் அனுபவம் கற்பித்துத் தந்துள்ள பழமொழிப் பாடம்!

உண்மையும் அதுதான்!

ஆண்டவன், தான் படைத்த ஜீவன்களையும் ஜீவராசி களையும் எப்போதும் ரட்சிக்கவே செய்கிறான்.

இதற்கிடையில், அவரவர்கள் சோதனைகளைச் சந்திக்க நேர்கிறதென்றால், அதற்கு அவரவர்கள்தாம் பொறுப்பு; அவரவர்கள் செய்த வினையின் பயன்தான் பொறுப்பு.

சிருஷ்டியின் திருவிளையாடலில், வினையின் விளையாட லும் இணைவதென்பது சிருஷ்டிப்புதிர்; அதுவே வாழ்க்கை யின் விதி!

தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்து தொடங்கிய அன்னையின் தூய அன்புப் பணி இயக்கம் நாளும் பொழுதும் வளர்ச்சி அடைந்த தோடு, வலுவும் அடைந்தது; வல்லமையும் அடைந்தது. சந்திப்பாளர் மால்கம் அன்னையைப் பேட்டி கண்டபோது அவரது வினா ஒன்றுக்கு அளித்த விடையில் அன்னை இவ் வாறு கூறினார்:

"என் அன்புத் திருப்பணியை வீதிதோறும் கொண்டு செலுத்தி, அன்பை வாழ்த்தவும் வாழ வைக்கவும் திட்டம் கொண்டு, நான் வீதிக்கு வந்த சமயத்திலே, என் வசம்

இருந்த பணம் வெறும் ஐந்தே ஐந்து ரூபாய்தான்!—நான் தொடங்கிய பணி இயேசுவின் பணி; எனவே, என் பணியைத் தடையின்றி நடத்தவும், தடங்கலின்றி வழி நடத்தவும் என் தெய்வத்துக்கும் பொறுப்பு உண்டென்றும் நான் நம்பினேன். என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை. எனது பரிசுத்தமான நற்பணியின் அருமையை உணர்ந்தவர்கள், கேள்விப்பட்டவர்கள், அறிந்தவர்கள் தங்களுக்குக் கிடைத்ததை— தங்களால் முடிந்ததைப் பொருளாகவும் பணமாகவும் என்னிடம் கொடுத்தார்கள். அவற்றையெல்லாம் எதுவுமே இல்லாத ஏழை எளியவர்க்கு அப்படி அப்படியே கொடுத்தேன்! என் அன்புப் பணியில் எனக்குத் துணைநிற்கவும் என் பழைய மாணவிகள் அணி சேர்த்து, அணி வகுத்து வந்து சேரலாயினர். பின், என் இலட்சியக்கனவு வெற்றி முகம் நோக்கி ஏறுநடை போடக் கேட்க வேண்டுமா, என்ன?... எல்லாம் என் இயேசுநாதரின் கருணைதான்!— நான் என்ன, வெறும் உயிர்ப்பிண்டம் தானே?''

அன்பின் வடிவம் எடுத்துத் தியாகத்தின் சுடர் ஏந்திய தவத்திருவாம் அன்னை தெரேசா ஆரம்பித்த 'அன்பின் தூதுவர்கள்' (Missionaries of Charity) என்னும் மக்கள் நலச் சமுதாய அன்புப் பணி அமைப்பு, 1950 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாளில், கல்கத்தாவில் அன்னை தங்கிவந்த கிரீக் தெருவில் 14 ஆம் எண் கொண்ட இல்லத்தின் அந்த மாடியறையில் செயலாற்றும் அதிகார பூர்வமான ஓர் இயக்கமாகக் கல்கத்தா உயர்நீதி மன்றத்தில் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப் பட்டது!

அன்னையின் அன்புத் தூதுவர்கள் செயலாற்றிவந்த மக்கள் நலச் சமூகப் பணிகள் கல்கத்தா நகரம் முழுவதிலும் பரவலாயின.

அது போலவே—

அன்னையின் அன்புப் பணி இயக்கத்திற்குத் தங்களையே அர்ப்பணம் செய்து கொள்ள மனமுவந்து முன்வந்த அன்புப் பணிப் பெண்களின் எண்ணிக்கையும் வளரலாயிற்று.

ஆகவே,

மழைத்துளிகளுக்காக ஏங்கித் தவித்த சக்கரவாகப் புட்களென, அன்பைத் தேடி அலைந்து திரிந்து, விதி வழியே, வீதிகளின் வழிகளில் சுற்றிச் சுழன்று, தறிகெட்டும் வசம்கெட்டும் தவித்து உருகிக் கொண்டிருந்த கடையரினும் கடையரைத் தேடியும் நாடியும் செயற்பட்ட அன்புப் பணிமுறைகளும் பெருகலாயின.

அன்னை தெரேசா, சுழல்கின்ற உலகத்திலே, வினையின் சூழலிலும் விதியின் சுழலிலும் சிக்கித் தவித்து, அல்லற்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஏழை மக்களில் மிக மிக ஏழைகள் எல்லோருக்குமே அன்னை அல்லவா?—ஆகவே தான், வாழ்க்கையிலே கடையரினும் கடையரான ஏழை எளியவர்களைப்பற்றியும், சமுதாயத்திலே புறக்கணிப்பட்ட அபலைகளைக் குறித்தும், கேட்பாரற்றும், கவனிப்பாரற்றும் கிடந்த அனுதைக் குழந்தைத் தெய்வங்கள் சம்பந்தமாகவும் அவர் ஓயாமல், ஒழியாமல் சிந்தித்தார்; சிந்தித்தார்; சிந்தித்துக் கொண்டேயிருந்தார்.

நாட்கள் நடந்தன.

தெரேசா, இப்போது இலட்சியப் பூக்கள் வண்ணமும் வனப்பும் மணமும் நிரம்பிப் பூத்துக் குலுங்கிப் புன்னகை செய்து கொண்டிருந்த அழகானதோர் ஒற்றைமரம்!

### விதி, வீதியிலும் விளையாடாதா?

ஒரு நாள்:

அன்னை தெரேசா வீதிவழியே, விதிவழி நடந்து போய்க் கொண்டிருக்கிருர்; காலை இளம் பரிதியின்

அன்பான ஒளிக்கிரணங்களில் அன்பைத் தேடி நாற்புறமும் பார்வையைச் செலுத்தியவாறு. அவரது மென்மையான பாதங்கள் அடிபிரித்து, அடி மிதித்து நகர்ந்து கொண்டே யிருக்கின்றன; அவரது மனம் வழக்கம் போலவே, தேவதூதரைப் பிரார்த்தனை செய்து ஜபம் செய்து கொண்டிருக்கிறது.

ஜீவமரணப் போராட்டம் நடத்தி, உள்ளம் ஒடுங்கி, உயிரும் ஒடுங்கி ஊசலாடிக் கொண்டிருந்தாள் பெண் ஒருத்தி; நடுத்தெருப் பிணமாகவே காட்சியளித்தாள்; குற்றுயிரும் குலை உயிருமாகச் சுயப் பிரக்ஞை இழந்து கிடந்த அவளை—அந்த அபலையை—அந்தப் பாவியை ஏறிட்டுப் பார்க்கவோ, அல்லது, ஏறெடுத்துப் பார்க்கவோ மனித சாதியில் நாதி இல்லை!—ஆதலால், வாய்பேசத் தெரியாத எலிகள், மற்றும் எறும்புகள் அனுதாபத்துடன் பரிதாபத்துக்குகந்த அந்த அம்மணியைச் சுற்றிச் சூழ்ந்து சிறுகச் சிறுக அரித்துத் தின்னத் தொடங்கியிருந்தன; ஊசி குத்த இடம் வைக்காமல், புள்ளிக் கோலம் போட்டிருந்த கொப்புளங்களை மொய்த்த ஈக்கூட்டம் மிஞ்சியது; நாற்றம் வேறு!

பாவம்!

பரிதாபம்!

பாவம்!...

அன்னையின் விழிகள் அன்பினால் கசிந்தன; அன்பின் பொருட்டுக் கசிந்தன. சுடுநீரின் கசிவில், நெஞ்சின் உதிரம் சங்கமம் ஆனது; அன்பைப் போதித்த ஆண்டவனின் அன்பைப்பெற வாய்ப்பின்றி, வழியின்றி, நடுத் தெருவிலே நாதியிழந்து, நாதியற்றுக்கிடந்த கொடுமை யான, பாவமான அவலத்தைக் காணக் காண அன்னையின் மனித அபிமானம் உறுத்தியது; அனுதாபமும் ஆத்திரமும் மேலிட, சுற்றுமுற்றும் நோக்கினார்; எதிர்ப் பக்கம் மருத்துவமனை ஒன்று தென்படவே, அங்கே விரைந்தார்.

சோதிக்கும் உயிர்களைச் சோதித்து, அந்த உயிர்களை மரணத்தின் விதியினின்றும் கட்டிக் காக்கச் சகல விதமான மருத்துவ நடவடிக்கைகளையும் மருத்துவ விஞ்ஞானத்தின் பேரிலும், அன்பின் தார்மிக அடிப்படையிலும் மேற்கொள்ளக் கடமைப்பட்ட மருத்துவக் கூடம் அது.

அங்கே—

காற்றினும் கடிது விரைந்தார் கன்னித் தாயார். நிலவரத்தை விவரமாகவே விளம்பினர்.

கையோடு உடன் எடுத்துச் சென்ற அந்த அனாதைப் பெண் பிண்டம், மூச்சுப் பேச்சின்றிக் கிடக்கிறது.

பரிசோதனை நடக்கிறது.

கைவிரிப்பு.

ஜீவமரணப் போராட்டத்தில் லயித்திருந்த அந்த அபலைக்கு உயிர் காக்கும் எந்த உதவியையும் செய்ய முடியாதாம்!—அந்தப் பெண் ஜீவன் செத்துக் கொண்டிருந்ததாம்!

மருத்துவமனை விதியெனத் தீர்ப்பை வழங்கிவிட்டது: "இந்தப் பெண் உயிர் பிழைக்க மாட்டாள்!"

அன்னை துடித்தார்.

அந்த அனாதைக்குத் துடிப்பே இல்லை.

ஆனாலும், அன்னையின் துடிதுடிப்பு மிஞ்சியது. "இந்த ஏழைப் பெண்ணை ஆஸ்பத்திரியில் அனுமதித்தாலன்றி, நான் உங்கள் ஆஸ்பத்திரியைவிட்டு நகரவே மாட்டேன்!" என்று தலைமை மருத்துவ அதிகாரியிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

விதிக்கு மருந்து ஏது?

அன்னையின் வைராக்கியமான நடவடிக்கையின் பேரில், அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஓர்

ஏழையின் ஜீவன், யாருடைய அனுமதியும் இல்லாமல் விதி வழியே பிரிந்தது.

அன்னை விம்மினர்: 'அன்புத் தந்தையே!'—விம்மல் அன்றைக்கு மாலை வேளையிலும் தொடரவேண்டுமென்று விதித்திருந்தது போலும்!—தெருக்கள் மற்றும் வீதிகளில் அங்கும் இங்குமாக ஏழைகள் சிலர் அனுதைப் பிணங்க ளாகத் தரிசனம் தந்த கொடுமைக் காட்சிகளையும் அன்னை தரிசிக்க நேர்ந்தது. 'எங்கள் பிதாவே!'—நெஞ்சு வெடிக்க, விம்மல் வெடித்தது.

1952:

அன்னை தெரேசா பவித்திரமான அன்புடன் ஆரம்பித் திருந்த அன்பின் தூதுவர்கள் (Missionaries of Charity) எனப்பட்ட அறப்பணி இயக்கத்தின் சார்பிலே, கல்கத்தா மாநகராட்சியின் மேலான ஆதரவுடன் அன்னை மாகாளி கோயிலின் சுற்றுச் சார்பில் அமைந்திருந்த தர்மசாலைப் பகுதியில் 'இறப்போர் நல இல்லம்' (Nirmal Hriday Home for dying destidutes) ஒன்றைத் திறந்தார்!—வாழ்க்கைப் பயணத்தின் சோகத்தால் மெல்ல மெல்ல மடிந்து, வாழ்க்கைப் போராட்டத்தின் தோல்வியால் மடிந்து கொண்டேயிருந்த ஆதரவற்ற ஏழைகளுக்கு அவர்களது வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திலாவது ஓர் ஆறுதலை அளிக்க வேண்டுமேயென்று அன்புடன் செயற் படத் தொடங்கியிருந்த இல்லம் அது.

ஆனால், அந்த அன்பைச் சோதிப்பதற்குக்கூட, தடைகள்—தடங்கல்கள் உருவாகாமல்—தப்பவில்லை தான்; தப்பமுடியவில்லைதான்!

சமுதாயத்தினுல் விலக்கி ஒதுக்கப்பட்டு கைவிடப்பட்ட நாதியற்ற அனுதை ஏழைகளில் மேலும் சிலர், நாகரிகம் மிகுந்த கல்கத்தா நகரத்தின் தெருக்களிலே நரகத்தை அனுபவித்தவர்களாக அநாகரிகமாகச் செத்து மடிந்து கொண்டிருந்த சோகமயமான கண்ணுருவிக் காட்சியை

அன்னை அன்றைக்குச் சாய்ந்தரத்திலும் தொடர்ந்து சந்திக்க நேர்ந்தது. நெகிழ்ச்சியில் விளைந்த அன்பில் வழிந்த அனுதாபம் மேலிட, அம்மையார் நெஞ்சம் தழ தழக்கத் தேவ தூதுவரைக் கூவிக் கூவி அழைத்தார். அந்தரங்கச் சுத்தத்துடன் செய்த தோத்திரத்தின் ஆறுதலில் பிறந்த அலாதியான அமைதியையே நல்ல துணையாகக் கருதிய மாதா, தமது இலட்சியக் கனவை நடைமுறைப்படுத்தவும் முழுமூச்சுடன் முனைப்படைய லானார். தம்மையும் அறியாததோர் உத்வேகத்துடன் அன்னை தெரேசா உடனடியாகவே மாநகராட்சி அலுவலகத்தை அடைந்தார். சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைச் சந்தித்தார். "ஏழைகளாகப் பிறந்தவர்கள் உலகத்திலே நல்ல தனமாக வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை; நல்லபடியாகச் சாகவாவது கொடுத்து வைக்க வேண்டாமா? உங்களையும் என்னையும் போலவே, அவர்களும் தெய்வத்தின் பிள்ளைகள் அல்லவா? பின், அவர்களை மட்டிலும் நடுத்தெருக்களிலே நாதியற்ற பிணங் களாகச் செத்துமடியச் செய்வது தருமம் ஆகுமா? இத் தகைய அவலத்தை—அநியாயத்தை—அதர்மத்தை அந்தத் தெய்வம் பொறுக்காது; பொறுக்கவே பொறுக்காது, ஐயா! இம்மண்ணில் நிம்மதியாகப் பிறந்தவர்கள், இம்மண்ணிலேயே நிம்மதியுடன் சாவதற்குத் தேவைப் படக் கூடிய நிழல் இடம் ஒன்றைத் தரமாட்டீர்களா, ஐயா?" நெஞ்சு உருகி, நெஞ்சை உருக்கும் பேச்சாகவே அவ்வேண்டுகோள் அமைந்தது.

"உங்களுக்கு இடம் ஏன் வேண்டும்?"

அதிகாரத்தோடு கேள்விக்கணைகள் தொடுக்கப் பட்டன.

ஆறாத சோகத்தை ஆற்றமாட்டாதவராக அன்னை நெட்டுயிர்ப்புடன் விடை சொன்னார்:

"இறந்து கொண்டிருக்கிற எளியவர்களுக்கு வாழ் வதற்கு ஓர் இடம் கிடைக்காமற் போனாலும், சாவதற்

காகிலும் இடம் ஒன்று வேண்டாமா? அதற்காகவேதான், ஓர் இடத்தைக் கேட்கிறேன்; பாவப்பட்ட ஏழைகளும் ஆண்டவனால் படைக்கப்பட்ட ஜீவன்கள்தாமே? — தாங்கள் வேண்டப்படாத ஜன்மங்கள் என்கிற மன நிலையில் வெந்து நொந்து, வீதிகளிலே அணு அணுவாகச் செத்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களின் மனங்களில் தாங்களும் பிறரால் விரும்பப் படுகிறவர்கள் தாம் என்னும்படியான ஓர் அமைதியை ஏற்படுத்தவும், அதன் பலனாக, அவர்கள் நிம்மதியுடன் சாகவும் ஏற்பாடு செய்வதற்குத் தாங்கள் இடம் ஒன்றை ஏற்படுத்தித் தந்தால் நலமாயிருக்கும்!''

அன்னை தெரேசாவின் கவலையும் கருத்தும் கொண்ட பேச்சு அதிகாரிகளின் ஆணவம் கொண்ட கல் இதயங்களில் மனிதாபிமானத்தின் உணர்வுகளைத் தேடித் தேடித் தொட்டிருக்கவேண்டும். உடன், அவர்கள் மாநகராட்சி மேயரிடம் அன்னையை அழைத்துச் சென்றனர்.

மேயரைச் சந்தித்ததில், அன்பான மரியாதையையும் சந்தித்தார் அன்னை! — வாழ்க்கைக் களத்தில் போராடிப் போராடி அணு அணுவாக இறந்து கொண்டிருந்த அனாதை கள் இந்த மண் உலகில் உயிர் தரித்திருக்கக் கூடிய அந்த ஒரு சில நாழிகைப் பொழுதிலாவது அமைதி அடைந்ததும் தங்களை அன்புடன் விரும்புவோரும் இவ்வுலகில் இருக்கத் தான் இருக்கிறார்கள் என்னும் நல்லுணர்வுடன் அவர்களது அந்திமப் பொழுதைக் கழிக்கச் செய்ய உதவும் வகையில், அவர்களுக்கு நிழல் ஓர் இடத்தைத் தந்து உதவும்படி மேயரிடமும் விண்ணப்பம் செய்து கொள்ளத் தவறிவிட வில்லை அன்னை!

அன்பின் நெகிழ்ச்சியில், ஆணை பிறக்கிறது; பிறப்பிக்கப்படுகிறது.

'கல்கத்தாப் பிரசித்தம்' ஆன அம்பிகை காளிக்கு உடைமை பூண்ட திருக்கோயில் அது.

அடுத்து அமைந்திருந்தது 'தர்ம சாலை' மனை.

'புனித இதயம்' என்னும் பொருள் கொண்டு, "நிர்மல் ஹ்ருதய்" என்னும் பெயர் பூண்ட இறப்போர் நல இல்லம் நாளும் பொழுதும் வளரத் தொடங்கி, சாவின் சந்நிதியைத் தேடியவர்களும் சாவின் சந்நிதானத்தை அடைந்தவர்களும் பெருகத் தொடங்கி, அன்னை தெரேசாவின் அன்புப் பணிகள் தீவிரம் அடைந்த நேரத்திலேதான், சோதிப்புக்கள் பல வழிகளிலிருந்தும் கிளைத்தெழத் தொடங்கின.

ஒரு நாள்:

இராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்ற மகான்கள் அந்நாளில் இதயந்தோய்ந்த பக்தி செலுத்திவந்த காளிக்கட்டம் கோயிலைச் சார்ந்த பூசாரிகள் மற்றும் மதவாதிகளில் நானூறுக்கும் மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி, அன்னை தெரேசாவின் அன்புப் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் புரட்சி செய்யத் தலைப்பட்டனர்: "சமூகத்தால் கைவிடப்பட்டவர்களையும், சமூகத்தினின்றும் ஒதுக்கப்பட்டவர்களையும் இங்கே சாவதற்கென்றே கொண்டு வந்து சேர்த்து வரும் இந்தப் பெண்மணி காளி அம்பிகையின் புனிதத்தையே நாசப்படுத்தி வருகிறாள்; இந்த அம்மணியை இவ்விடத்திலிருந்தும் உடனடியாகத் துரத்த வேண்டுமென்பதே எங்களது இந்தக் கண்டனச் செயல் முறையின் நோக்கம். இந்த ஏழைகளையும் அனாதைகளையும் கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டுமென்பதும் இந்தப் பெண்ணின் அந்தரங்கமான திட்டமாகும். ஆகவேதான், தெரேசா அம்மணியை இங்கிருந்து விரட்டியடிக்க விரும்புகிறோம்; அவளும் அவளது இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இங்கிருந்து நகரும் வரையிலும் நாங்கள் ஓயவே மாட்டோம்; ஒழியவே மாட்டோம்! ஜெய் காளி மாதா!"

ஒலிகள் எதிரொலிக்கின்றன.

விநாடிகள், நிமிடங்கள் ஆகின்றன.

அன்னை தெரேசா, இல்லத்தின் முகப்பு வெளிக்கு வந்தார். பொய்யும் புரட்டும் நிறைந்து, புரட்சிக்கோலம் தாங்கி வந்து நின்று கொண்டிருந்த கூட்டத்தினரின் கூச்சல், தமது நெஞ்சின் அடிவாரத்தில் எதிரொலிக்க, அன்னை வெகு நிதானமாகவே கூட்டத்தைச் சுற்றிச் சூழப் பார்த்தார்; பார்வையிட்டார். "தெய்வ நம்பிக்கை என்கிற பக்குவம் நிரம்பின மனப் பண்பு எல்லா மக்களுக்கும் எல்லா மதத்தினருக்கும் சொந்தமானது; பொதுவானதுங்கூட! — ஆதலால், நாங்கள் நடை முறையிலே செயலாற்றிவருகிற பொது நல அறப்பணி களுக்கு உங்களால் ஒருநாளும் ஒருபோதும் மாசு கற்பிக்கவே முடியாது; தருமத்தின் பேரால் நாங்கள் செய்து வருகிற சேவை தெய்வத்தையும் தெய்வச் சக்தி யையும் சாட்சியாகக் கொண்டது என்பதையும் நீங்கள் மறந்துவிடாதீர்கள்!"

மனிதாபிமானம் இழந்தவர்களின் கூட்டுக் கூச்சல் மனிதாபிமானம் இழந்ததாகத்தானே இருக்கமுடியும்? நாடுகடந்த அன்பும் மதம் கடந்த பாசமும் இனம் தாண்டிய பரிவும் பூண்டொழுகிச் செயற்பட்டு வந்த அன்னை உடனே வெளியேற வேண்டுமாம்!— கூக்குரல் மண்ணையும் முட்டாமல், விண்ணையும் முட்ட முடியாமல் திரிசங்குச் சொர்க்கத்தில் ஆடியது; ஊசலாடியது!

அன்னை காளியை நெஞ்சில் நினைந்தார் அன்னை தெரேசா; விழிகளில் ஈரம் நனைந்தது: "உங்களுக் கெல்லாம் வேண்டாதவள் — வேண்டப்படாதவள் நான் தானே? — நீங்கள் என்னைக் கொல்ல விரும்பினால், இதோ, இப்பொழுதே, இங்கேயே என்னைக் கொன்று விடுங்கள்!— நான் தயார்!— ஆனால், ஒன்று: உள்ளே எங்களது அன்பின் நிழலில் கடைசி வினாடி ஆறுதலோடு அடைக்கலம் அடைந் திருக்கும் அந்த ஏழைகளின் அமைதியைக் கலைத்து விடாதீர்கள்!— அவர்களை அமைதியுடன் சாக விடுங்கள்!"

சற்று நேரத்திலே —

கூச்சல் கலைய, கூட்டம் கலைகிறது!

ஆனால், மறுநாள் பொழுது விடிகிறது

எதிர்ப்புக் கிளர்ச்சி விடியக்காணோம்!— கூச்சல்களை எழுப்பிய காளிகோயில் பூசாரிகளின் கூட்டத்தில் இப்போது அடியார்களும் மதவெறி கொண்ட இளைஞர்களும் சேரலாயினர்; வாய்ச்சொல் அம்புகளின் ஆத்திரம், வன்முறைச் செயல் வடிவம் கொள்ளலாயிற்று.

அன்னையின் மனம் புண்பட்டது. மாசு மருவற்ற வகையில், மதச்சார்பற்ற முறையில், பொதுநலக் கண்ணோட்டத்தோடும் அன்பு நலக் குறிக்கோளுடனும் நடத்திவந்த அறப்பணி இயக்கத்துக்குக் குறிப்பிட்ட சிலர் அறநிலைப் படுத்தப்பட்ட உண்மை நிலையை உண்மையாகப் புரிந்துகொள்ளாமல் தவறு கற்பிக்க முற்பட்டுவந்த பண்பற்ற நடவடிக்கைகளும் வசை மொழிகளும் தாய் உள்ளத்தில் பதற்றத்தையும் பதைப்பையும் பயத்தையும் உண்டுபண்ணத் தொடங்கின. அன்னைக்குத் தம்மைப் பற்றிய அக்கறை துளிக்கூட இல்லைதான்; ஆனால், தமது இயக்கத்தில் உயிரும் உயிர்ப்புமாக இணைந்தும் பிணைந்தும் செயலாற்றிக் கொண்டிருந்த கன்னித் துறவியர் பற்றித் தான் அவர் பெரிதும் கவலைப்பட வேண்டியதாயிற்று. அன்பின் தெய்வத்தையும் தெய்வத்தின் அன்பையும் மாத்திரமே உயிர் மூச்சாகக் கருதியும் நம்பியும் பொது நலப் பணிகளைத் தொடர்ந்து வந்த தெரேசா அன்னை, தருமத்தைக் கவ்விய சூது விலகி, தருமம் வெல்லும் நிலை விரைவிலேயே உருவாகிவிடுமென்றும் நம்பினர். ஆனாலும், தமது இயக்கத்துக்கும் இயக்கப் பணியார்களுக்கும் தகுந்த பாதுகாப்பு சட்டபூர்வமாகவும் தேவை என்பதில் வெகு எச்சரிக்கையுடனும் மிக விழிப்போடும் இருந்தார். எனவே, தீரத்தோடும் தீவிரத் தோடும் இயங்கியும் இயக்கப்பட்டும் வந்த நடைமுறைச் செயற்பணிகளுக்கு மத்தியில், இயக்

கத்தின் காப்புக்காகவும் பாதுகாப்புக்காகவும் சிந்தனை செய்யவேண்டியவராகவும் ஆனார். தமது ஆன்ம குருவான த்வத்திரு வேன் அவர்களையும் கலந்து ஆலோசனை நடத்திய பிறகு, தம்பேரில் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த கல்கத்தா நகரத்தின் காவல் துறை ஆணையாளரான நிரத் சௌத்ரியிடம் முறைப்படி முறையிடவும் செய்தார். ஆண்டவனின் செல்வங்களான அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் பிணியாளர்களுக்கும் அவசியப்பட்ட பொதுநலச் சேவைகளைச் செய்து வரும் தமது அறப்பணி அமைப்பின் சத்தியமான தார்மீகக் குறிக்கோளை உணர்ந்துகொள்ளாமல், தமது இயக்கம் மதமாற்ற நோக்கத்துடன் ஈடுபட்டிருந்ததாகத் தவறுபடக் கருதி, வன்முறைச் செயல்களில் முனைந்திருந்த தருமசாலைப் பகுதிக் காளிகோயில் பூசாரிகளின் அத்துமீறிய, அதர்மமான கிளர்ச்சிகள்பற்றி விளக்கமாகவே எடுத்துரைத்தார்.

சட்டத்திற்கு நியாயம் பேசத்தெரியாதா, என்ன?

என்றாலும், அநியாயமான செயல் முறைகள், சட்டத்தின் கண்களில் குறுமணலைத் தூவிக் கொக்கரிக்கத் தவறுவது சகஜம் தானே?

'கெட்டவர்களுக்குக் கடைசிப் புகல் அளிக்கவல்லது அரசியல்' என்பார்கள்.

அதே அரசியலைச் சார்ந்தவர்கள், கெட்டவர்களின் கடைசி ஆதரவாக விளங்கவும் தவறுவது கிடையாது அல்லவா?

ஆதலால் தான் :

காளிகோயில் அடியவர்களும் பக்தர்கள் எனச் சொல்லிக் கொண்ட மதவாதிகளும்—ஊகூம், மதவெறியர்களும் இப்பொழுது வட்டாரச் செல்வாக்குப் பெற்றிருந்த ஓர் அரசியல் பெரும்புள்ளியைச் சந்தித்து, அன்னை தெரேசாவின் அன்புப் பணி அமைப்பைத் தருமசாலை

வட்டத்தினின்றும் அப்புறப்படுத்தும் கடைசி முயற்சியை யும் மேற்கொள்ளத் துணிந்தனர்.

வட்டச் சார்பான அரசியலில், வட்டாரச் சார்பான பொதுப்படை விண்ணப்பங்கள் உடனுக்குடன் கவனிக்கப் படாமற்போனால், அப்பால், சம்பந்தப்பட்ட அரசியல் வாதிக்குப் பொதுமக்களின் சம்பந்தம் தொடர்பறுந்து போய்விட நேரும்! — எனவேதான், அந்த அரசியல் தலைவர், காளிகோயில் பூசாரிக் கும்பலின் விண்ணப் பத்தைக் கவனித்து, உடன் ஆவன செய்வதாக வாக்குக் கொடுத்தார்: "ஊரெங்கும் பொதுவிலே பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிற முறையிலே, தெரேசா அம்மையின் தருமத் தொண்டுகள் உண்மையிலேயே பொதுநல நோக்கத்தோடு செயற்படவில்லை என்பதாகவோ, அல்லது, கிறித்தவ மதம் சாராத மற்ற மக்களையெல்லாம் கிறித்தவ மதத்திலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்கிற தனிப்பட்ட நோக்கத்தோடேயே, பொதுநலத் தொண்டு என்கிற பொதுப்படையான பேரிலேயும் பேராலேயும் இம் மாதிரியான போலிப் பணிகள் இயங்குகின்றன, அல்லது. இயக்கப்படுகின்றன என்பதாகவோ, நான் சோதனை நடத்துகையில், தெரிய வந்தால், உங்கள் விருப்பப்படி, அந்த அம்மையின் இயக்கத்தை இந்தக் காளிகோயிலின் தருமசாலைச் சுற்றுவட்டத்திலிருந்து உடனடியாகவே அப்புறப்படுத்த ஆவன செய்வேன் என்றும் தாங்கள் நிச்சயம் நம்பலாம்!'' என்று உத்தாரம் அளித்தார்.

சோதனை நடைபெற்றது.

அரசியல் தலைவர், அதிர்ச்சி அடைந்தார்; அது ஆச்சரியத்தால் விளைந்திட்ட அதிர்ச்சி!

"எதெது உண்மையோ, எதெது யோக்கியமோ, எதெது நியாயமோ, எதெது தூய்மையோ, எதெது அன்பிற்குரியதோ, எதெது நற்கீர்த்தியோ, எதெது

பண்பொழுக்கமோ, எதெது போற்றுதலுக்குரியதோ, அவற்றையே சிந்தித்துக் கொண்டிருங்கள்!''

எப்போதோ, எங்கேயோ, ஏனே கேட்ட — கேள்விப் பட்ட பைபிள் பொன்மொழி அப்போது, அங்கே, காரணத் துடனே அந்த அரசியல் பிரமுகரின் நெஞ்சரங்கத்தில் ஒலித்தது; எதிரொலித்தது. அவரும் கண்ணீருடன் உறவாடவேண்டியவரானர். நேருக்கு நேர் கண்ட காட்சிகள் சாதி கடந்த அன்பைப் பேசின; மதம் தாண்டிய மனிதாபிமானத்தைச் செப்பின; இனம் மீறிய பாசத்தைப் பறைசாற்றின! — தொழு நோய்க்கு ஆளான அனுதை நோயாளிகளின் ரத்தமும் திணமுமான அருவருப்பூட்டும் புண்களையெல்லாம் கழுவிச் சுத்தப்படுத்தி, மருந்து இட்டு, மருந்து கொடுத்து, அன்னை தெரேசாவும் அவரது பணிமனை சார்ந்த கன்னிச் சகோதரிகளும் பணிவிடைகள் செய்த நிதர்சனக் கோலங்கள், அந்த அரசியல் புள்ளியின் நெஞ்சிலும் நினைவிலும் கண்ணீர்க் கோலமிட்ட சொந்த அனுபவங்களாகச் சிலையோடி நிலைப்பெய்தத் தவறிவிட வில்லைதான்! — வந்த காளிகோவில் பூசாரிகள் மற்றும் அடியார்களிடம் அவர் சொன்னர் : உணர்ச்சிவசப்பட்ட வராகச் சொன்னர் : ''ஐயா! தெய்வத்துக்குத்தான் சோதிக்கிற உரிமை உண்டு; மரியாதையும் உண்டு; ஆனல், நான் தெய்வம் அல்ல; அற்பமனிதன்! — ஆனலும், தெய்வத்தின் பேரால் உங்களை ஒரு கணம் சோதனை செய்ய வேண்டிய கட்டாயம் இப்போது ஏற்பட்டிருக்கிறது! — அன்னை காளி, மேரி அன்னையாக அவதாரம் எடுத்து, இப்பொழுது அன்னை தெரேசாவின் உருவிலே பொது நன்மைத் தொண்டுகள் செய்வதை நானே கண்ணுக்குக் கண்ணுகக் கண்டு மெய் சிலிர்க்கும் பாக்கியத்தைப் பெற்றேன். அன்னை தெரேசாவின் புனிதமான — அன்பு மயமான அந்த இடத்தை இட்டு நிரப்ப, உங்களுடைய தாய்மார்களோ, அல்லது சகோதரிமார்களோ, மன முவந்து வரும் பட்சத்தில் மறுவினடியிலேயே அன்னை

தெரேசா உங்களது இந்த காளிகோயில் தருமசாலை யினின்றும் வெளியேறி விடுவார்கள்! என்ன, சொல் கிறீர்கள்!'' என்றார்.

காளியின் பக்தகோடிகள் அத்தனை பேரும் காளியைப் போலவே வாய் மூடி மௌனிகளாகி, சிரம் தாழ்த்தி வாயடைத்துப் போயினர்; மறு இமைப்பில், சொல்லாமல் கொள்ளாமல், அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

அன்பிற்கு அடைக்குந் தாழ் இல்லை!

இது தெய்வத் திருமறையின் வேதவாக்கு; தேவ வாக்குமூலம்!

காஞ்சிப் பெரியவரின் அருள் வாக்கு.

ஏசுவைப் போல், நபிநாயகத்தைப் போல், காஞ்சிப் பெரியவரும் "எக்காலத்திலும் எல்லாம் வல்லவனை அம்மையப்பன்தான் ; நமக்கெல்லாம் பந்துவாக விளங்கு வான்!'' என்றே சொல்வது உண்டு.

ஆண்டவனின் பேரால் அன்னை தெரேசா நடைமுறைப் படுத்திவந்த அன்புப் பணி இயக்கத்திற்குக் கல்கத்தா மாநகராட்சியின் அதிகார பூர்வமான ஒப்புதலும் கிடைக்கவே, மேற்கண்ட இயக்கம் மேற்படி தருமசாலைக் கட்டத்திலேயே நாளும்பொழுதும் வளரத் தொடங்கியது.

இதற்கிடையில், ஒருநாள் :

காளி கோயில் அர்ச்சகர்களிலே குறிப்பிடத்தக்க ஒருவர், எலும்புந் தோலுமாக 'இறப்போர் நல இல்லம்'த் தின் தலைவாசலைத் தலைதாழ்த்தியபடி மிதித்தார்.

அன்னை வந்தார்.

"அம்மா, காளிகாம்பிகையின் கோயில் குருக்கள் களிலே நானும் ஒருவன். நான் பல வருஷங்களாகவே எலும்புருக்கி நோயால் ரொம்பவும் அவஸ்தைப்படு கிறேன். இவ்வளவு பெரிய பட்டணத்திலே என்னை ஆதரித்து ஏற்கவோ, எனக்கு நிழல் தந்து சிகிச்சை அளிக்

கவோ எந்த ஆஸ்பத்திரியும் தயாராக இருக்கவில்லை. இந்த லோகத்திலே, இந்தப் பாவிமீது இரக்கப்பட்டுச் சிசுருஷை செய்யவும் யாருமே இல்லையே, தாயே?— ஆகவேதான், நான் எனது வாழ்க்கையின் அந்திமக் காலத்திலே கடைசி அடைக்கலமாகத் தங்களது பாதார விந்தங்களைச் சரண் அடைய வந்திருக்கிறேன். உங்கள் வடிவத்திலே— நான் நித்த நித்தம் வணங்குகிற அன்னை காளி தேவியையே தரிசிக்கிறேன், அம்மா!''

விம்மினார் குருக்கள்; மண்ணில் எலும்பும் தோலுமாக விளங்கிய மார்பு பதிய விழுந்து வணங்கினார்; எழுந்தார்; மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

அன்பு வெள்ளம் நிரம்பி வழிந்த அன்னையின் நயனங்களிலே கண்ணீர் வெள்ளம் நிரம்பி வழிந்தது.

நிர்மலமான இருதயம் படைத்த அன்னை தெரேசாவின் நிர்மலமான அன்புக்கு மெய்ச்சாட்சி வழங்குவதே போலே இயங்கி வந்த 'இறப்போர் நல இல்லத்'திலே, பாவப்பட்ட அந்த அனைதைக் குருக்களுக்கும் இடம் கிடைத்தது; நிழல் கிடைத்தது; அருளும் கிடைத்தது; இறக்கும் வரை, அவர் அங்கே அளவற்ற அன்போடும் பரிவோடும் கவனிக்கப்பட்டார்!

காளிகோயில் வட்டாரத்தில் வட்டம் அடித்து வந்த மதவெறியர்களும் வன்முறை அடியவர்களும் அன்னையின் உண்மையான அறப்பணிகளை இதயத்தால் அங்கீகரித்து, இதயம் தெளிவுபெற மேற்கண்ட நிகழ்ச்சி பெரிதும் உதவியதெனவும் சொல்லலாம். அவர்கள் அத்தனை பேரும் மெய்நிலையை உணர்ந்த நிலையில் அன்னையைத் தேடி ஓடிவந்து மன்னிப்புக் கேட்ட சம்பவம் அன்னையின் அன்புமயமான தெய்வப் பணிகளுக்குக்கிட்டிய மற்றுமொரு வெற்றி வாய்ப்பெனவும் சொல்ல வேண்டும்.

அன்னை கூறுவார்: ''ஆண்டவன் என்னுடைய பரிசுத்தமான அன்புப்பணிகளை விரும்புகிறான்: உண்மையையும்

உண்மை நிலைமையையும் உணராத— அறியாத போலி விமர்சகர்களால் என் கடமைகளை ஒருநாளும் நிறுத்திவிட முடியாது; முடியவே முடியாது!"

எல்லாம் உணர்ந்த கர்த்தர் பிரானின் காலடியில் நெஞ்சம் ஒடுங்கத் தஞ்சம் அடைந்த அன்னை தெரேசா அன்புக் கண்ணீரால் தமது இதயத்தை மேலும் பரிசுத்தப் படுத்திக் கொண்டபின், தமக்கு ஆண்டவன் இட்ட கட்டளைப்படி தமது அன்புப் பணிகளை மேலும் உற்சாகத்துடன் தொடரலானார்.

அன்னையின் உலகம் அன்பின் உலகம்!

அன்னையின் அன்பு, தெய்விக அன்பு!

தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வினாலும், முடிந்த முடிவில், தருமம்தான் வெல்லும்!— இது படைப்பின் விதி மாத்திரமல்ல; இயற்கையின் நியதியும் இதுவேதான்!

அன்பையே உயிராகவும் உயிர் மூச்சாகவும் கொண்டு அறநெறிப் பொதுநலப்பணிகளை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி வந்த அன்னை தெரேசாவின் ஆக்கப் பணி முறைகள் மென்மேலும் ஊக்கம் பெறலாயின.

"ஆன்மாவை மூடியிருக்கும் ஆடையில் மகிழ்ச்சி மற்றும் துயரம் ஆகிய நூலிழைகள் ஊடும் பாவுமாகப் பின்னப்பட்டிருக்கும்; உடலுக்கும் உள்ளத்துக்கும் நலி ஊட்டும் ஒவ்வொரு துயரத்திற்கும் தொல்லைக்கும் அடியிலே பட்டு இழையென ஆனந்தம் இழையோடிக் கிடக்கும்! மனிதன் மகிழ்ச்சியை அனுபவிப்பது மாதிரியே துன்பத்தையும் சந்திக்கக் கடமைப்பட்டவன் ஆயிற்றே! விதி போடுகிற விடுகதைக்கு விடைகாண இயலாமல் தவிக்கும் மனிதன், வாழ்க்கையின் நேர்பாதையில் நடந்து, தனது வழிநடையைத் தொடர்ந்தால் மட்டுமே, மேற்கண்ட ஆனந்த நிலையின் பொருளை—உட்பொருளைச் சரியாக உய்த்துணரவும் முடியும்!"

சிந்தனையாளர் பிளேக் தெரியப்படுத்தின இக்கருத்தில் வாழ்க்கைத் தவத்தில் விளைந்த வாழ்க்கையின் தத்துவம் பிரதிபலிக்கும்; பிரதிபலிக்கும் வாழ்க்கைத் தத்துவத்தில் பிரதிபலிக்கின்ற அன்பின் நியதியிலும் அன்பின் விதியிலும் சிருஷ்டியின் சூத்திரம் சூத்திரக்கயிருக நிழலாடும்!

நிழல் ஆன நிஜம் என்னும் இந்த வாழ்க்கையின் உண்மை நிலைக்குப் பிரத்தியட்சமானதும் யதார்த்த மானதுமான ஓர் உண்மையெனவே அன்னை தெரேசாவின் அறநெறி தழுவிய அன்புப் பணி இயக்கம் இருட்டில் ஓர் ஒளியாக விளங்கத் தொடங்கியிருந்தது!

கல்கத்தாவில் பரபரப்பு மிக்கதாகத் திகழ்ந்த கீழ் விளைவுச் சாலையிலே அமைதி காத்த அந்தப் பெருமனையில், 1950-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதியன்று அன்பின் அடிப்படையோடும் சட்டத்தின் ஆதாரத்தோடும் ஆரம்பிக்கப்பட்ட அன்னை தெரேசாவின் 'அன்பின் தூது வர்கள்' என்னும் அறப்பணி இயக்கம் இப்போது, தழைத்தும் செழித்தும் வளர்ச்சியடையத் தொடங்கி யிருந்தது.

உலகளாவிய சான்றுண்மைக்கு உகந்த பேராளராகத் திகழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபாசனைக்கு உகந்ததென விளங்கி வந்த அந்தக் காளிதேவியைத் தொழுதபின்னர், சற்றே ஓய்வு கொள்ள உதவும் இடமாகவே விளங்கி வந்த இடம், தர்மசாலை.

அன்னை காளிமாதேவியின் கருணைச் சூழலில் அமைந் திருந்த அந்த இடம், இப்பொழுது அன்னை தெரேசாவின் தொண்டு மனத்துக்குப் பிடித்து விட்டது!—மாநகராட்சி யின் சுகாதார அதிகாரி அந்தக் கட்டடம் பிடித்திருக் கிறதாவென்று கேட்டதற்குச் சம்மதம் சொன்னார்:

"காளி இடமான இது எனக்கு மனநிறைவைத் தந்ததற்குக் காரணங்கள் பல இருந்தன; குறிப்பாக, இந்துக்களின் அன்றாடத் தொழுகைக்குரிய காளி

கோயிலின் இனிய சூழலில் இந்தத் தர்மசாலை மையம் கொண்டிருந்தது; ஆகவேதான், என் வேண்டுகோளுக்கு மாநகராட்சி இணங்கியதும் அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள்ளாகவே, சமூகத்தால் புறக்கணிக்கப் பட்ட ஏழைகளையும், கைவிடப்பட்ட அனாதைகளையும் சாவோடு போராடி, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த நோயாளிகளையும் இந்த இடத்தில் கொண்டு வந்து சேர்க் கும் ஏற்பாடுகளை விரைவாகச் செய்து முடிக்கவும் என்னால் இயன்றது. அன்றிலிருந்து இன்று வரை, எங்களது அன்புத் தொண்டர்கள், 1950-71 காலக் கட்டத்தில், கல்கத்தா தெருக்களினின்றும் 23000 நோயாளிகளையும் எளியவர்களையும், ஆதரவற்றவர்களையும் சேகரித்து, மரணத்தின் நிலைவாயிலில் அவர்கள் கடைசி அமைதியை அனுபவிக்கக் கூடிய பொன்னான சந்தர்ப்பத்தையும் அவர் களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். இறந்து கொண்டே யிருந்த அவர்களில், அந்த மனித சமூகத்தினரில் சுமார் பாதிப்பேர் பூர்வஜன்மத்துப் பூஜாபலன் காரணமாக, உண்மையிலேயே அமைதியுடன்தான் இறந்தார்கள்!''

1971 ஆம் ஆண்டில், பத்திரிகையாளர் மால்கம் எழுப்பிய கேள்விக்கு அன்னை அளித்த பதில் இவ் வாறாகவே அமைந்தது.

# 5. இருபதாம் நூற்றாண்டின் அன்பு!

அன்பே தெய்வம் ஆனது.

அன்புதான் தெய்வம் ஆகிறது.

அன்பே தெய்வம் ஆகும்.

ஆகவே—

அன்பைத் தெய்வமும், தெய்வத்தை அன்பும் வாழ வைப்பதும் உலகியல் நடைமுறைச் சித்தாந்தமாகவும் ஆவதும் இயல்பு.

முக்காலமும், மூவுலகமும் உணர்த்திய. உணர்ந்த உண்மையும் இதுவே.

உண்மையைப் போலவும் சத்தியத்தைப் போன்றும் தருமத்தையொத்தும் அன்பும் வென்றது; வெல்கிறது; வெல்லும்!

எனவே—

உலகத்தின் தெய்வங்களும் தெய்வங்களின் மதங்களும் மதங்களின் மக்களும் அன்பின் பேரால் வாழ்வதும் அன்பின் பேரால் வாழ்த்துவதும் இயற்கை ஆகிறது.

தாய் இயற்கை—இயற்கைத் தாய் உலகுக்குத் தனிச் சிறப்பான நன்கொடையாகவே ஏலக்காயை வழங்கியிருப்பதாகச் சொல்லுவது உண்டு.

அது போல—

நாம் கண்ணுக்குக் கண்ணுகக் காணுகின்ற யதார்த்த மான உலகின் ஏழைகளுக்கு, அன்பின் அன்னையாக அன்னை தெரேசாவை இந்த இருபதாம் நூற்றுண்டில் வழங்கியிருக்கிருள்!

ஆனபடியிஞலேதான்,

உலக மாதாவான அன்னபூரணியாகவே விளங்கும் அன்னையின் அன்பின் தூதுத் தொண்டு மதம் சார்ந்த தென்றுலும், அந்தச் சார்பின் நெறிமுறைகள் அன்னையின் அன்புப் பணிகளுக்கு கடைநிலை ஏழைகட்காக அறவினை களுக்குப் புனிதமான காப்பாகவே—பவித்திரமான பாதுகாப்பாகவே அன்றிலிருந்து இன்று வரை அமைந்தும் வருகின்றன!—ஏழைகளின் சிரிப்பில் இறைவனைத் தரிசிக் கிருர் அன்னை!—அன்னையின் பணி அருட்பணி; அன்புப்பணி; தெய்வப்பணி!

ஆகவேதான்—

நானிலத்தின் எட்டுத் திசைகளினின்றும் "அம்மா!... அம்மா!" என்கிற அன்பின் அழைப்புக்கள்—பாசத்தின் குரல்கள் நாளும் பொழுதும் ஒலித்துக் கொண்டும் எதிரொலித்துக் கொண்டும் இருக்கின்றன! அந்த ஒலிக்கும் எதிரொலிக்கும் நாடு ஏது? வீடு ஏது? மொழி ஏது? மதம் ஏது? சாதி ஏது? இனம்தான் ஏது?

உலகத்தின் பொதுமையும் ஒருமையும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அன்னை தெரேசா அன்பின் உலகத்தின் பொதுச் சொத்தாகவும் பொது உடைமைச் சொத்தாகவும் இன்றளவும் விளங்குகிருர்.

சமூக ரீதியாகவும் சமயச் சார்பாகவும் சேவைபுரியும் பலதரப்பட்ட பொதுநலக்குறிக்கோள் பூண்ட அமைப்புக் களினின்றும் முற்றிலும மாறுபட்ட அளவிலும் வகையிலும், கடையரினும் கடையர்க்கு சமரச சன்மார்க்கத் தொண்டு புரியப் புதிதான போக்கும் புதியதான

நோக்கும் கொண்டு அன்னை அன்றைக்கு, 1950 அக்டோபர் 7-ம் நாளில் தோற்றுவித்த 'அன்பின் தூதர்கள்' அறப்பணி இயக்கத்தின் 135 தாள்களைத் தழுவிய சட்டதிட்டங்களில், தலைமையேற்கின்ற ஜீவாதாரக் கொள்கைகளில் ஒன்றெனஅமையும் விதியின் விதி இங்ஙனம் அமையும்:

"ஏழைகளில் மிக மிக ஏழைகளுக்குப் பலன் கருதாமல் பக்தியோடும் பரவசத்தோடும் ஆத்மார்த்தமாக அன்புப் பணிகளையும் பணிவிடைகளையும் செய்வதன் விளைவாக, ஆத்மாக்களின் அன்பின் நிமித்தம் சிலுவையில் உயிர் வாழுகின்ற இயேசுவின் தீராத தாகத்தைத் தீர்க்க முயற்சி செய்வதும் எங்கள் குறிக்கோளாக அமைகிறது!"

உலகம் பெரிது;
பசியும் பெரிது;
அன்பும் பெரிது.

ஆக, ஆதரவற்றவர்க்கெல்லாம் பிருந்தாவனமாகவும், அபலைகள் மற்றும் அனாதைகளுக்கு அமுதசுரபியாகவும் நோயாளிகளுக்குக் கற்பகத் தருவாகவும் வேண்டப்படாத குழந்தைகளுக்கு ஆயர்பாடியாகவும் விளங்கும் அம்மா தெரேசா, அன்பு செய்து, அன்பு செய்து இமயச் சாதனையையும் ஏற்படுத்தி, 'அன்னை சகாப்தத்தை'யும் ஏற்படுத்தி விட்டார்!...

"மக்கள் என்னைச் சமூக சேவகியென்று சொல்லும் போது, என்னால் அத்துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. என் வாழ்க்கை கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் ஆனது; கிறிஸ்து, ஒன்றுமற்றவர்களுக்குக் கடன்பட்டவர்: நான் சமுதாயத்தின் பணிப் பெண்ணாக மாத்திரம் இருந்திருந்தால், நான் என் அன்புப் பணிகளை என்றைக்கோ துறந்திருப்பேன்!"

அன்னை ஒரு சந்தர்ப்பத்தில் இப்படியாக வருந்தியதும் நடப்புத்தான்!

"இறைவா!—உன்னைப் பாடப்பாட, உன்னுடைய இசை ஞானத்தின் மகிமை எனக்குப் புலப்படுகிறது. உன் இசைவெள்ளம் எங்கெங்கும் பொங்கித் ததும்புகிறது. உன் குரலோடு நானும் இசைந்தும் இணைந்தும் பாடவே நான் ஆசைப்படுகிறேன்!— இயலவில்லையே!— கம்பீரமான உன்னுடைய இசைத் தொனியோடு, கம்பீரம் இழந்த என்னுடைய முனகல் சத்தம் சுருதி சேருவதென்பது எங்ஙனம் சாத்தியப்படும்? உன் இசையில் மயங்கியேதான் நானும் உன்னோடு பாடவிரும்புகிறேன்; என்றால் பாடாமலும் இருக்க முடியவில்லையே?"

கீதாஞ்சலியில் புனிதச் சிலுவை பொன் நகை செய்கிறது.

ஆண்டவனின் சந்நிதானத்தில் அன்னை தெரேசா மறுபடியும் குழந்தை ஆகிறார்!

விதியின் ஒரு விளையாட்டு; விளையாடல்!

அன்றொருநாள், அழகானதோர் இளங்காலைப் பொழுதில், அன்னை தெரேசா அவசர காரியமாகக் காரில் பயணம் செய்து கொண்டிருந்த சமயம், சாலையின் திரும்புமுனையில் என்னவோ சத்தம் கேட்டது. உடனடியாகக் காரை நிறுத்தச் செய்தார்; சத்தத்தை உன்னிப்பாய்க் கேட்கலானார். தெய்வத்தின் உருவமெனச் சொல்லப்படும் குழந்தையின் தீனக்குரலென்பதை உணர்ந்ததுதான் தாமதம், அவரது அன்பு மனம் அந்தப் பச்சைமண்ணுக்காக அனுதாபப் பட்டார்; இதயம் விம்மியது; விழிகள் அழுதன; விதியின் விளையாடலை எண்ணியவர், தீவினையின் திருவிளையாடலையும் எண்ண வேண்டியவர் ஆனார். பச்சை மண்ணின் கதை என்ன?— கதி என்ன?— விதி கேட்ட கேள்விக்கு விடை தேட ஏசுபிரானைக் கூப்பிட்டார். தேடிய விடை கிடைக்காமல் இருக்குமா, என்ன?—எந்தப் பாவி மகளோ, எப்படியோ

பெற்று ஏனோ வீசியெறிந்த அந்தத் தெய்வக் குழந்தையின் —குழந்தைத் தெய்வத்தின் அழுகை வளரவே, ஓடிச் சென்றார் அன்னை. அலங்கோலமாய்க் காட்சியளித்த குப்பைத் தொட்டியில் காகிதத்தால் சுற்றப்பட்டிருந்த அந்தச் சிசுவைப் பிரித்தெடுத்து, கண்ணீர் முத்தங்களை வாரி வாரி வழங்கினார் அன்னை; அக்கணத்திலேயே, அக் குழந்தைக்கும் அன்னை ஆனார். சமூகத்தில் நாதியற்றுத் திரிந்த ஆண்—பெண் அனாதைகளுக்கும், வழி தவறிய பெண்களுக்கும் சமுதாயத்தில் அன்பு என்பது இன்னதென்று அறியாமல் ஏங்கித் தவித்த நோயாளிகளுக்கும் வழி தவறாமல், வாழ்க்கையில் களைத்த பெண்களுக்கும் கண்கண்ட அன்னைத் தெய்வமாக விளங்கி வந்த தெரேசா அன்னை, வேண்டப்படாமலும் விரும்பப்படாமலும் கிடைக்கக் கூடிய சிசுக்களுக்கும் தாயாகத் தீர்மானம் செய்தார்; குழந்தைகள் காப்பகம் ஒன்றைத் திறப்பதென்றும் தீர்மானம் செய்தார்; இரு வேறு காலக் கட்டங்களில். இருவேறு மனநிலைகளில், ஆண்டவன் தனக்கு இட்ட கட்டளை, ஒருருக்கொண்டு செயற்படவும் செயலாற்றவும் தொடங்கி விட்டது என்னும்படியான தெய்வச் செயலில் அடிமுடிகாண வாய்க்காத அமைதியான ஆறுதலையும் பெறலானார் அம்மையார்.

1953-ம் ஆண்டு, அன்னை தெரேசாவின் அன்புப்பணி இயக்கத்தைப் பொறுத்த அளவில் மற்றுமொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்தது. தெய்வத்தைக் கொண்டாடும் வகையில், குழந்தைகளையும் கொண்டாட எண்ணமிட்டிருந்த தெரேசா அன்னை இந்த ஆண்டிலே தான் குழந்தைகளுக்கான பாதுகாப்புஅமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தினார். நிர்மல்மான இந்தச் சிசுபவனத்திற்காக அர்மேனியன் மிக்காடியின் இல்லத்தை அதிகப்படியான வாடகையைக் கொடுத்து எடுத்துக் கொண்டு, இல்லத்தின் செயல் முறைக்கான பூர்வாங்க ஏற்பாடுகளையும் செய்தார்.

கல்கத்தா பெருநகரில் கீழ் வளைவு வீதியில் அன்னை தெரேசா ஆரம்பித்து வைத்த 'நிர்மல் இருதயம்' என்னும் படியான **'குழந்தைகள் காப்பகம்'** (Nirmal Shisu Bhavan) நாளும் பொழுதும் வளர்ந்தது; ஆண்டுகள் கூடக்கூட, காப்பகத்தின் பேரும் புகழும் கூடின. அங்கே வந்தணைந்த குழந்தைகளின் எண்ணிக்கையும் கூடிற்று. இப்போது, அன்னையின் அன்புப் பணி இயக்கம் என்னும் ஆலமரத்திற்கு உயிரும் உயிர்ப்பும் தரவல்ல விழுதுகளுள் ஒன்றாகவும் அந் நிறுவனம் விளங்கத் தொடங்கியது.

ஆண்டுகள் பதினாறு உருண்டோடிய பின்னர், பழைய குழந்தை நலவிடுதிக்கு எதிர்ப்புறத்தில் இப்போது புதிய குழந்தைகள் இல்லமும் இணைந்தும் பிணைந்தும் செயற் படத் தொடங்கின; தொண்டுழைப்பின் ஆக்கபூர்வமான வெற்றி அன்பு முரசு கொட்ட, 'நிர்மல் கென்னடி இல்லம்' கம்பீரமாகவே வளரலாயிற்று. உலக அரங்கத்தில் அன்பும் அறமும் பூண்டு, அனைத்துக்கும் மேலாக, மனித அபிமானப் பண்பு மேலோங்க மக்கள் நலப் பணி புரிந்து மாசற்ற மாணிக்கமாகப் பொலிந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அபிமானத் தலைவரான ஜான் கென்னடியின் புகழ் என்றென்றும் வாழவேண்டுமென்ற பொதுமை நலப் பண்புடன் அமைந்தது ஆயிற்றே இந்தப் புதுக் காப்பகம்! புதிதாகத்தோன்றிய காப்பகத்தில் உடல் வளம் பெற, நல்ல உணவும், உள்ளம் செழுமை அடைய நல்ல படிப் பறிவும் வழங்கப் படுவதுடன், அவர்களுடைய ஒளி மிகுந்த எதிர்காலத்திற்கான வாழ்க்கை நலப் பயிற்சிகளும் ஒழுங் காகவும் முறையாகவும் அளிக்கப்படுகின்றன. தாய் அன்பை இன்னதென்று அறியாத பச்சிளங்குழவிகளும் சரி, தாய்முகம் பாராத பச்சைமண் செல்வங்களும்சரி, இங்கே இந்தக் குழந்தைகள் காப்பகத்தின் தலைவாசலை மிதிக்கக் கூடிய பாக்கியம் பெறுவார்களேயானால், அப்பால், அவர்களை மதியாதார் இப்பூமியில் யாருமே இருக்க மாட்டார்கள்; இருக்கவும் முடியாதுதான்! இப்படிப்பட்ட

அனுதைக் குழந்தைகளுக்கு மத்தியில், தாய் அன்பை அறிந்திடமட்டுமே அதிர்ஷ்டம் செய்த குழந்தைகள், அத்தாயின் அன்பை வறுமையின் நெருக்கடி காரண மாகவும் நெருக்குப்பிடியின் விளைவாகவும் தொடர்ந்து அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் இருக்கும் பட்சத்திலே, அப்படிப்பட்ட குழந்தைகளுக்கும் குழந்தை களைப் பெற்ற தாய்மார்களுக்கும் குழந்தைகளின் காப் பகத்தின் வாயிலாக அவசியமான உதவிகளும் ஒத்தாசை களும் வழங்கப்பட்டுவருகின்றன!— இவ்வாறு மேற்கண்ட குழந்தைகள் பெறுகின்ற இன்பம் அக்குழந்தைகளைப் பெற்றவர்களையும் சாருவதும் இயல்பே அல்லவா?

திக்கற்ற குழந்தைகளுக்கெல்லாம் தெய்வமாக மட்டு மன்றி, தெய்வத் தாயாகவும் விளங்குகின்ற அன்னை தெரேசாவின் அன்புப் பணி இயக்கம், குழந்தைகளின் காப்பகத்தின் அறப்பணிகளையும் நடத்தி வருவது கண்கூடு. அறக்கொடை நிறுவனங்கள் சிலவற்றைத்தொடர்பு கொண்டு, அவற்றின் ஆதரவுடன் இங்கே இலவசமாக உணவும் வழங்கப்பட்டுவருகிறது. பசியாலும் பட்டினி யாலும் வாடுபவர்களை உச்சிவேளையில் ஒட்டுமொத்தமாக இங்கே தரிசிக்கலாம்!

அதிருஷ்டம் கெட்டு, ஆதரவற்றுப் போய்விட்ட குழந்தைகளுக்கு இங்கே வரக்கூடிய அதிருஷ்டம் மாத்திரம் வாய்த்து விட்டால், பின் அவர்கள் பாக்கியம் பெற்றவர் களாகவே ஆகிவிடுவார்கள்!— பிறந்த மறுகணத்திலேயே நடுத்தெருவில் கள்ளத்தனமாகத் தூக்கிஎறியப்பட்ட கள்ளங்கபடு அறியாத — பெற்றோரையும் அறியாத பச்சிளங் குழவிகளின் வளர்ப்புப் பணிகள் தனிப்பட்ட அக்கறையுடன் கண்காணிக்கப் படுகின்றன; காப்பகத்தில் இடம் கண்ட அனுதைக் குழந்தைகள், வயது வாரியாக வகைப் படுத்தப்பட்டு வளர்க்கப்படுகின்றன; உடல் ஊனமற்ற பிள்ளைகளுக்கென்று ஒரு பிரிவு தனியாகவே இயங்கிவருகிறது. தாங்கள் தாய் தந்தையற்ற அனுதைக்

குழந்தைகள் என்னும் 'பாவப்பட்ட எண்ணம்' நிழலாடாத வண்ணம், அக்குழந்தைகள் முறைப்படி பராமரிக்கப் படுகின்றன.

அன்னை தெரேசாவின் அறநெறி சார்ந்த அன்புப் பணி அமைப்பில் பங்கேற்றுப் பணி புரியும் கன்னித் துறவுச் சகோதரிகளுக்கும் உடன் உழைப்புச் சகோதரர்களுக்கும் இறையவனுக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தல், அன்பு செய்தல் மற்றும் மகிழ்ச்சியுடன் இருந்து, மகிழ்ச்சியுடன் பணி புரிதல் ஆகிய குறிக்கோட் சிறப்பு வாய்ந்த மூன்று புனிதச் செயல் முறைகளிலும் தகுந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இயேசு பிரான் போதனை செய்த வாறு, இந்தப் பூலோகத்திலே கடையரினும் கடையருக்குத் தெய்வத் தந்தையின் கட்டளைப்படி கருணைத் தொண்டுகள் ஆற்றிவரும் அன்னையின் அன்புப் பணி முறைமைகளுக்கு மேற்கண்ட பயிற்சிகள் பெரிதும் துணைபுரிகின்றன.

'அன்பின் தூதுவர்கள்' (Missionaries of Charity) என்னும் பொதுநலப் பணி அமைப்பின் சார்பிலும் தொடர்பிலும் அன்னை தெரேசா நடத்திவந்த இறப்போர் நல இல்லத்தையடுத்துத் திறக்கப்பட்ட 'நிர்மல் சிசுபவன்' எனப்பட்ட குழந்தைகள் காப்பகத்திற்கு உள்ளமும் உருவமும் கொடுத்த குழந்தைகள் தேடிக் கிடைத்த விதத்தையும் தேடாமல் கிடைத்த நட்பையும் புகழ் வாய்ந்த பத்திரிகையாளர் மால்கம் மகரிட்ஜ் (Malcolm Muggeridge) கேட்ட கேள்வி ஒன்றிற்கு விடையளிக்கும் முறையில், இவ்வாறு முறையாகவும் முறைப்படுத்தியும் சொன்னார்: ''எங்களுடைய குழந்தைகள் இல்லத்திலுள்ள குழந்தைகளில் பெரும்பாலானவை அவரவர்களின் பெற்றோர்களால் வேண்டப்படாத குழந்தைகளாகவே இருக்கின்றன. சில குழந்தைகளை நாங்கள் நடுத்தெருக் களில் கண்டெடுக்கின்றோம்; சிறைச்சாலையிலிருந்து சில வற்றைப் பெறுகிறோம்; காவல் துறையினராலும், தாய்—சேய் நல மருத்துவமனைப் பிரிவினராலும் குழந்தைகள்

கொடுக்கப்படுவதும் மெய்தான்; ஆனால், ஒன்று - குழந்தைகள் எந்த வழியில் அல்லது, முறையில் வந்தாலும் சரி, இதுவரையிலும் நாங்கள் ஒரு குழந்தையைக்கூட ஏற்காமல் மறுத்தது கிடையாது; கிடையவே கிடையாது!''

அறநெறியினை உயிராகவும் அன்பு வழியினை உயிர்ப்பாகவும் கொண்டும், மேற்கொண்டும் ஆண்டவன் ஏசுவின் அன்புக் கட்டளைகளுக்கு இணங்க ஆரம்பித்து, நடத்தி வரும் அன்பு இயக்கத் தலைவி அன்னை தெரேசா மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக, பாரதத் தலைநகர் புதுடில்லியில் கிறித்தவத் திருச்சபையில் மனம் நெகிழ்ந்த, சுயநலம் வென்ற மனிதாபிமானத்தின் மனச் சமாதானத்தில் ஆற்றிய பேருரையை மனிதத் தொண்டர்கள் மறக்க மாட்டார்கள்.

அன்னையின் அருந்தவப் பொதுத் தொண்டுகளைத் தன் பங்கிலும் உலகிற்கு நினைவூட்டி வெளியிட, அன்பின் அழகோடும் அழகின் அன்போடும் கூடிய நூலொன்றைத் தொகுத்தும் பகுத்தும் 1980 ஏப்ரல் காலக்கட்டத்தில் வெளியிட்டவர் திருமதி டாஃப்னே ரே (Daphne Rae).

மேற்கண்ட சொற்பொழிவில் மாதா இப்படியாக முடிவுரை வழங்கினார் :

"கடவுளை நேசி; கருப்பையில் உயிர்வாழும் தெய்வத்தின்பால் அன்பு கொள்; பிறக்காத குழந்தையில் ஆண்டவனிடம் நேசம் பாராட்டு; குடும்பத்தில் கடவுளுக்கு அன்பு செய்; அண்டை அயலாளரை ஏசுவாகப் பாவித்து அந்த ஆண்டவன் ஏசுவிடம்—ஏசு ஆண்டவனிடம் அன்பு செலுத்த, அண்டை அயலாரிடம் அன்பு செலுத்து! —அன்பு தொல்லைப்படுத்தும் வரை, அந்த அன்பை வாழச் செய்யுங்கள்; வாழ்த்துங்கள்; வாழ்த்தவும் செய்யுங்கள்!''

கல்கத்தா நகரிலே, அறநெறியின் ஆதார சுருதியுடன் ஜீவகீதம் பாடிவரும் தெரேசா அன்னையின் அன்பு மேவிய நடைமுறைச் செயற்பணிகள் இயங்கவும், இயக்கப்படவும்

புனிதமானதொரு கருவறையாகத் திகழ்ந்து வரும் "அன்பின் தூதுவர்கள்' என்னும் அமைப்பின் தலைமை நிலையம் 'தெரேசா இல்லம்' என்று அழைக்கப்படுகிறது. அங்கேதான் கிறிஸ்தவக் கன்னி துறவியரோடு, அன்னையும் வசித்து வருகிறார்கள்.

கொடுமை மிக்க வறுமையின் கடுமையான உடும்புப் பிடியில் அகப்பட்டுச் சுடர்விளக்காகத் தத்தளித்துக் கொண்டிருக்கும் நாதியற்ற ஏழை எளியவர்கள், பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகள், மரணத்தின் தலைவாசலில் நோயோடு போராடி உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கின்ற பலதரப்பட்ட பிணியாளர்கள் மற்றும் தொழு நோயாளிகள் ஆகியோரின் எல்லாவகையான மேம்பாடுகளையும் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தவிர, வேறு பல இன்றியமையாத காரியங்களையும் அன்னையின் இயக்கம் அன்புடனும் அக்கறையுடனும் சிறப்பாகச் செய்து வருகின்றது.

இங்கேயே உணவு தயாரிக்கப்பட்டு, பசியாலும், பட்டினியாலும் வாடுபவர்களுக்கு வழங்கப்படுகிறது. அன்றாடம் ஏழாயிரத்துக்கும் கூடுதலான ஏழைகள் பசிப் பிணி நீங்கி நல்ல மூச்சு விடுகிறார்கள்!—இவ்வழியில், உலகம் நெடுகிலும் செயற்பட்டு வரும் அன்னையின் அன்பு இல்லங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அமுதசுரபியாகவே தொண்டாற்றி வருகிறதென்பதும் குறிக்கத்தக்க சேதி தான்!—இத்தகைய உலகரீதியான அமுதசுரபித் தொண்டு களில், இயக்கத்தின் பரிசுத்தக் கன்னிகைகள், தூய சகோதரர்கள் மற்றும் அன்பான உடன்உழைப்பாளர்களும் பங்குபற்றி வருகின்றனர்.

அன்புப் பணி மனையில் மருத்துவத் துறையும் மும்முர மாகச் செயற்படும். அன்பின் தூதுவர்கட்கு மத்தியில் மருத்துவப் பயிற்சி பெற்ற தூய சகோதரிகளும், தூய சகோதரர்களும் பணிபுரிகின்றனர். தேசியநலப் பணியின்

ஓர் அங்கமென அங்கே குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டப் பிரிவொன்றும் செயலாற்றுகிறது. கிராமப் புறங்களில் அவதிப்படும் தொழுநோயாளிகள் உள்ளிட்ட நோயாளி களைத் தேடி வைத்தியம் செய்யும் வகையில், நடமாடும் மருத்துவமனைகளும் நடமாடி வருகின்றன.

மேலும்,

அன்னை திட்டமிட்டு மேற்கொண்டுள்ள அன்புநலச் சேவைகளில் கிறிஸ்தவக் குடும்பங்களுக்கு விஜயம் செய்வதும் பயனுள்ள சேவையாக மதிக்கப்படுகிறது; கிறித்துவ சமயச் சித்தாந்தங்களை எளிதில் பின்பற்றத் தக்க நிலையில் வினாவிடை வடிவில் போதிக்கின்றனர்.

அதே நேரத்திலே,

உலகத்தில் பின்பற்றப்பட்டு வருகிற வெவ்வேறு மதங்களைத் தழுவிய தொண்டு மனம் படைத்த நல்லவர்களை ஈர்த்து வசப்படுத்துவதிலும் கருணை மிகுந்த இந்த இயக்கத்தின் புகழ் மேலோங்கி நிற்கிறது. தியாக உள்ளமும் சேவை மனப்பான்மையும் கொண்டவர்களில் பலர் பொதுநலப் பணி ஆர்வத்துடன் இங்கே வந்து இயன்ற பணிகளை அவ்வப்போது செய்து முடித்துத் திரும்பி விடுகிறார்கள்! இவ்விதிக்குப் புவனத்துப் பெண்டிர் மாத்திரம் எங்ஙனம் விதிவிலக்கு ஆக முடியுமாம்?

தெய்வத்தின் அன்பைத் தெய்விகமான முறை நெறி களில் கொண்டுசெலுத்தும் மதிப்பிற்குரிய தெரேசா அம்மை, எல்லை சொல்ல முடியாத கடல்களால் சூழப் பெற்று எல்லைகளைச் சொல்ல முடிந்த உலகத்தின் நாடு களில் அவ்வப்போது நடக்கின்ற இயற்கையின் ஊழிக் கூத்து முடியவும், நாட்டுமக்கள் நலன் பெற்று அமைதி பெறவும் அன்புப்பணி அமைப்புக்களில் பொதுப் பிரார்த் தனைகளை அவ்வப்போது நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார்! — உலகத்தின் எப்பகுதியில் போர்

மேகம் சூழ்ந்து, சண்டை நடந்தாலும் சரி, எங்கே வெள்ளம் ஏற்பட்டாலும் சரி, எப்போது நோய் பரவினாலும் சரி, எவ்விடத்தில் விலைவாசி உயர்ந்து வறட்சிப் பஞ்சம் நிகழ்ந்தாலும் சரி, அப்போதெல்லாம் நிலைமை சீரடைந்து, அமைதி நிலவ, இங்கே பிரார்த்தனைகள் நடத்தப்படும்!

உலகத்தின் நல்லமைதியில் கண்ணும் கருத்தும் கொண்டு செயற்படுவதில் அன்பின் தூதுவர்களின் அமைப்பு என்றென்றும் முதன்மை பெற்றதாகவே விளங்கி வருகின்றது!

உலகெங்கும் நிரவிப் பரவியுள்ள கிறிஸ்தவச் சமயத்தின் ஆதாரசுருதியான ஒழுங்குக் கட்டுப்பாடுகளின் பலத்தோடும் பயனோடும், உலகமக்கள், குறிப்பாக, ஏழைகளில் மிகுந்த ஏழைகள் அனுபவ நிலையான அன்பையும் ஆதரவையும் அமைதியையும் பெறும் வழிவகைகளில் மக்கள் நலப் பணிகளை ஆன்மபூர்வமான அன்புடனும் மனப்பூர்வமான அமைதியுடனும் ஒரு தியாகவேள்வியைப் போலவே நடத்திவருவதிலும் மாண்பு மிகுந்த அன்னையாம் தெரேசா அன்பின் வெற்றிகளை உலகக் களத்திலே நாளும் பொழுதும் குவித்துக் கொண்டே இருக்கிறார் என்பதும் சரியே!

கருமவினையின் பலனாகவேதான், இந்தத் தொழு நோய் சம்பந்தம் கொண்டவர்களை விட்ட குறையின் தொட்டகுறையாகப் பற்றித் தொற்றிக் கொள்ளுமாம்!— நாலும் தெரிந்தவர்கள் சொல்வார்கள்!

"ஒடுக்கப் படுபவனும் தொழுநோயால் வாடி வதங்கு பவனும் நானேதான்!"

முன்னர், மகான் ஏசுபிரானைக் கவர்ந்த தொழு நோயாளிகள் பின்னர், மகாத்மா காந்திஜியையும் கவர்ந்ததும் நடந்த கதைதான்!

எதுவுமே இல்லாதவர்களுக்கு எல்லாமே உள்ளன வென்று இருளில் ஜோதியாக நம்பிக்கை விளக்கேந்தி அன்பின்வழி காட்டி, அவர்களுக்கெல்லாம் அன்னை சாரதாதேவிமாதிரி ஓர் ஆதரிச அன்னையாக விளங்கிவரும் தெரேசா அன்னையும் இப்போது அதே தொழுநோயாளி களைப் பற்றியே மீண்டும் நினைவு கூர்கிறார்.

'1957-ம் ஆண்டில், எங்களது அன்புத்தொண்டர்கள் அன்புச் சேவகிகள் பணி அமைப்பின் செயலாற்றல் திட்டத்தின்கீழ், தொழுநோயர் நலப்பிரிவு ஒன்றும் செயற்பட ஆரம்பித்தது. ஆரம்பத்தில் ஐந்தே ஐந்து குட்ட நோயாளிகள் எங்கள் அன்பின் கழகத்தை நாடியும் தேடியும் வந்தனர். கிடைத்த வேலையைத் தொடர்ந்து கிடைக்க வொட்டாமல் சதிபண்ணின பயங்கரமான நோயின் காரணமாகவே, அவர்கள் வேலையை விட்டு விலக்கப்படவே, அவர்களுக்கு வாழ்க்கை மட்டுமல்லாமல், உயிரும் ஒரு சிக்கலாக ஆயிற்று. உண்ண உணவு இல்லை; படுக்க இடம் கிடையாது; நோய் தீரவும் நோயைத் தீர்க்கவும் மார்க்கம் கிடைக்க வில்லை. இந் நிலையிலே தான், அவர்களுக்கு எங்கள் அன்பு மனையின் பாசக் கதவுகள் திறந்துவழி விட்டன. இல்லத்தின் மண்ணை மிதித்தது தான் தாமதம், அவர்கள் ஐவருக்காகவும் நாங்கள் கவலைப்பட்டோம்; கண்ணீர் விட்டோம்; பிரார்த்தனையும் செய்தோம். பெரு வியாதிக்காரர்களான அவர்கள் ஐந்து பேரும் கண்ணீர் வெள்ளம் கரைபுரள, நா தழதழக்க, உணர்ச்சிப் பெருக்குடன் கடவுள் கல் ஆன பாங்கில் அப்படியே நின்றார்கள்!—அது ஆனந்தக் கண்ணீராம்! சொன்னார்கள் அவர்கள். இருக்கலாம்!—உண்மைதான்; நம்பினோம்!'

அன்னையும் அன்னையின் சகோதரிகளும் தெய்வத்தின் பால் கொண்டிருக்கும் நேசமான அன்பைச் செயல் வடிவில் மெய்ப்பித்து வருகிறது அறநெறிப் பணி நிறுவனம்!

ஏழைகள் பாக்கியவான்கள்; பாக்கியவதிகள்.

அவர்களுக்கெல்லாம் கண்கண்ட, கண் காணும் தெய்வமாகவே அன்னை தெரேசா கிடைத்து விட்டார்கள்.

பாரத சமுதாயத்தின் பொது மக்களில் பெரும் பான்மையினரால் பொதுவாக விலக்கி ஒதுக்கப்பட்டு வருகிற பிணியாளர்களில் தொழுநோய்க்கு ஆளான துரதிர்ஷ்டப் பிண்டங்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். பார்ப்போரை அருவருப்புக்கு ஆளாக்கத் தக்கவர்கள். அதனால்தானோ என்னவோ, அவர்கள் மக்களிடமிருந்து அன்பையோ, ஆதரவையோ பெறமாட்டாமல், எட்டத்தி லேயே நிறுத்தப்பட்டவர்களாகித் தவிக்கவும் நேருகிறது. பாவம், அவர்கள் 'பாவம்' செய்த ஆத்மாக்களோ, என்னவோ?

விதி ஒருபுறம் ஒதுங்கட்டும்!

ஆனாலும், அன்னை தெரேசாவின் மகத்தான அன்பு ஆண்டவனின் சக்தியைப் போல விரிந்து பரந்து ஆழிசூழ் உலகெங்கும் படரும் இயல்புடையது அல்லவா?—ஆகவே தான், அன்னைக்கும் அன்னை ஆகி, சமூகத்தால் பகிஷ்காரம் செய்யப்படுகின்ற குட்ட நோயாளிகளின் வருங்கால நலனுக்காகவும் கவலைப்படவேண்டியவர் ஆனார்; அக்கறை காட்ட வேண்டியவர் ஆனார்.

இந்நிலையில்தான், தேவமாதா போன்ற அன்னையின் எம்மதமும் சம்மதமான அறநெறிப்பணி இயக்கம் புதிதென மேற்கொண்டிருந்த தொழுநோயாளிகள் நலப் பணியின் நடைமுறையிலே தமது அன்பின் காணிக் கையைச் செலுத்தும் உயர் நோக்கத்துடன் அங்கு வந்து சேர்ந்தார் டாக்டர் ஸென். தொழுநோய்ச் சிகிச்சை முறையில் கைதேர்ந்த இந்தக் கைராசிக்கார டாக்டர் இன்னமும் கூட அங்கேயேதான் தமது சமூக நல அன்புப் பணிகளைத்தொடர்ந்து வருகிறார். அன்பு நலப்பணிமனை சார்ந்த துறவுக் கன்னிச் சகோதரிகளைத் தொழுநோயர் நலப்

பணிவழிகளில் பழக்குவதில் வல்லுவரான இவர் மனோ தத்துவ ரீதியாகவும் வைத்திய முறைகளை வழிநடத்தி வருகின்ற காரணத்தால், அன்னையின் இவ்வகைத் தொண்டுகளும் நல்லவர்களைக் கவர்ந்து ஈர்த்ததில் ஆச்சரியம் இல்லைதான்!

தொழு நோயால் அவதிப்பட்டு அல்லற்பட்டவர்களுக்கு மத்தியில் படித்தவர்களும் இருந்தார்கள்; அவர்களும் கூடத்தான் தங்கள் தங்கள் குடும்பத்தினரால் வெறுக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஒரு காலத்திலே, உயர்வான வாழ்க்கை நிலையில் இருந்தவர்கள், நோய் பற்றியதும், பற்று இழந்து, நிலை தாழ்ந்து ஒதுக்கிய சமூகத்தை ஒதுக்கி விட்டு, எங்கேயோ கண் காணாத தொலை தூரங்களில் எப்படியோ வாழ்ந்து உயிரைப் பிடித்து வைத்திருந்தவர்களில் சிலரும்அப்போது அன்பின் தலைவாசலை மிதிக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். கருமவினையால் நிராகரிக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு, கழிக்கப்பட்ட இப்பிணியாளர்களைக் கூட்டி இணைத்து அன்பு செலுத்தவும், பரிவு சேர்க்கவும், பாசம் ஊட்டவும், அபிமானம் காட்டவும் அன்னையின் அன்பு ராஜ்யத்திலே அன்பே உருவான தூய சகோதரிமார்கள் எப்பொழுதும் தயாராக இருந்தனர். தங்களை நேசிக்கவும், தங்களிடம் அன்பு பாராட்டவும் உலகத்திலே நல்லவர்களை ஆண்டவன் படைத்திட மறந்துவிடவில்லையென்னும் ஆத்மார்த்தான அமைதியில் அவர்களெல்லாம் நோய் தீர்ந்து, நாலு பேர்கள் மாதிரி பாழாய்ப்போன இந்த மண்ணிலே வாழக் கூட ஆசைப்பட்டார்கள்!

மெய்! —ஆண்டவன் ஆடும் விளையாட்டின் விதியை யாரால் அறிந்து உணர முடிகிறது?

சிருஷ்டி போடும் விடுகதைக்கு அந்த சிருஷ்டியே விடை தருவதில்லையா?

அசிங்கமாக அச்சுறுத்தும் தொழுநோயைத் தடுக்கவும் தடுத்துக் கட்டுப்படுத்தவும் கட்டுப்படுத்திக் குணமடையச் செய்யவும் உதவுமாறு; அன்னையைத் தேடி நல்ல பல புதிய மருந்துகள் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற அன்னிய நாடுகளிலிருந்து அந்நியோன்யத்துடன் வந்தன. இம்மருந்துகள் ஆரம்ப நிலைப் பிணியாளர்களைப் பாக்கிய வான்களாக ஆக்கின; ஆக்குகின்றன!

"கல்கத்தாவில் இயங்கிவரும் எங்களது பிரதானமான இயக்கப்பணி நிறுவனத்திலேயே தொழுநோயாளிகள் ஏராளமான பேர் சிகிச்சை பெற்றுக் குணம் பெற்று வருகிறார்கள். என்றாலும், எங்களுடைய நேரிடைப்பொறுப்பின் கீழ் உலகத்தின் பல்வேறு நாடுகளில் செயலாற்றி வருகின்ற எங்கள் கிளை அமைப்புகளில் இன்றைய நிலையில் (1970-71) கிட்டத்தட்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழுநோயர் எல்லா வழிகளிலும் எல்லா நலன்களையும் பெற்று மேம்பட்ட முன்னேற்றத்தைத் தரிசித்து வருகின்றனர் என்னும் உண்மையான நடப்பினையும் நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுவேன்!"

இதுவும் மேன்மை பொருந்திய அன்னையாரின் வாய் மொழிதான்!

உலகியல் ஆரவாரப் பண்பு பயின்ற சமுதாயச் செயற்கைப் பண்பாடுடைய மக்களின் மத்தியில், மக்களுக்கு மத்தியில், ஆக்கபூர்வமான அறிவின் ஆதாரத்தாலும் அனுபவ பூர்வமான அன்பின் அரவணைப்பாலும் மறுவாழ்வு பெறும் தொழுநோயாளிகளைப் பற்றியும் அவர்களுடைய எதிர்கால நிலை குறித்தும் அடுத்து ஒரு கேள்வியையும் எழுப்புகிறார் பேட்டியாளர் மால்கம் மகரிட்ஜ்.

ஆகவே, மீண்டும் தாய்மனம் சிலிர்ப்படைகிறது: "இந்திய அரசாங்கம் எங்களுடைய அன்புநெறிப் பணி முறைக் கழகத்திற்கு முன்னர் வழங்கிய முப்பத்திநாலு ஏக்கர் பரப்பில் உருவான காந்தி நகரில் தொழு நோயாளி

களுக்கான மறுவாழ்வு மையம் ஒன்றையும் உருவாக்கி வருகிறோம்; புத்துயிரும் புதுவாழ்வும் அருளப்பெற்ற நோயாளிகள் இங்கே தங்களுடைய எதிர்கால வயிற்றுப் பிழைப்புக்கு உகந்த பயிற்சிகளைப் பெற வசதி வாய்ப்புக் கள் உண்டு; இப்பயிற்சிகளின் மூலம் அவர்கள் தங்கள் விருப்பப்படி பிழைப்பை நடத்த முடியுமே!— சொந்த ஊர் களில் சிறு தொழில்களை மேற்கொள்ளலாம்; இஷ்டப்படி வேறு அலுவல்களும் பார்க்கலாம்! ஆனால், இவர்களெல் லாம் தங்கள் பேரில் யாருமே அன்பு காட்டுவதில்லை என்ற விரக்தியில் முன்போல இனி பிச்சை எடுக்கத் தேவை இல்லை; அப்படிப்பட்ட தேவை வரவும் வராது; வரவும் வேண்டாம்! அவர்கள் பால் அன்பு பாராட்ட நல்ல உள்ளங்கள் இந்த நல்ல உலகிலே என்றென்றும் வாழை யடி வாழையாகப் பிறந்து கொண்டிருப்பார்கள்!''

நாடு, மொழி, சாதி, சமயம் முதலான குறுகலான பாகுபாடுகளைக் கடந்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும், கடையரினும் கடையருக்குத் தொண்டும் ஊழியமும் செய்து வரும் அறநெறி சார்ந்த அன்புப்பணி அமைப்பின் சார்பில் 1957-ம் ஆண்டில் கல்கத்தாபுற நகரில் 'கோட்ரா' என்னும் இடத்தில் ஏற்படுத்தப்பட்ட தொழுநோயாளிகள் இல்லம் வளரவும் வாழவும் தொடங் கியது. ''உங்களது மேலான அன்பால் தொழுநோயர் களைத் தீண்டுங்கள்!'' என்கிற மனிதத் தன்மையைச் சுண்டியிழுக்க வல்ல பொதுவானதொரு வேண்டுகோள் விண்ணப்பத்தோடு 'தொழுநோயாளிகள் நிதிவசூல் நாள்' ஒன்றும் நடை முறைப்படுத்தப்பட்டது. நிதி மிகுந்தவர்கள் அள்ளிக்கொடுத்தார்கள்; நிதி குறைந்தவர்கள் அள்ளாமல் கொடுத்தார்கள்.

தொழு நோயைப் பற்றியவர்களை அன்பினால் பற்றி ஆதரவளித்து வந்த பொது நலப் பண்பாளர்களின் தரும சித்தங்கள் தெரேசா அன்னையின் இதயத்தைப் பெரிதும்

மகிழ்வடையச் செய்திருக்கவேண்டும். ஆகவே, அவரது நடைமுறைச் செயற் திட்டங்கள் பலவாறு தீவிர மடைந்தன. குட்டநோயாளிகளுக்கான நடமாடும் மருத்துவ மனைகளையும் அன்னை தொடங்கி வைத்தார். அறப்பணிச் சமுதாய நல அமைப்பிற்கு வெளி இடங்களில் அவதிப்பட்டுச் சிந்திச் சிதறிக் கிடந்த நோயாளிகளுக்கும் இலவசமாக மருந்துகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்தார்.

இவ்வாருக, தொழுநோய் நல இல்லம் ஆரோக்கியமான வளர்ச்சி அடைந்து, நோயாளிகளின் ஆரோக்கியமும் வாழ்வு அடைந்து, ஆண்டுகள் சில கழிந்த நேரத்தில், அந்த இல்லம் கால்பாவிக் கால் ஊன்றி நின்ற மனையிடத்தை அரசு திடீரென்று ஆக்கிரமித்துக் கொள்ள முடிவெடுத்தது.

அன்னை அதிர்ந்தார்: 'பாவம், இத்தனை நோயாளி களும் இனி என்ன ஆவார்களாம்?' வேதனையின் நெட்டுயிர்ப்போடு, அவர் உடனடியாக மேற்கு வங்க மாநிலத்தின் முதல்வர் டாக்டர் பி. ஸி. ராய் அவர்களைக் கண்டார்; பேசினுர்; அரசாங்கத்தின் செயலைக் கொடுமை மிக்கதெனவும் குற்றம் சாட்டினுர்; முடிவை அரசு மாற்றிக்கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்டி வேண்டிக் கொண்டார்.

டாக்டர் பி. ஸி. ராய், அன்னையின் உண்மை மிக்க அருந்தொண்டுகளைப் பரிபூரணமாகவே அறிந்தவர்; அன்ெருரு நாள், தம்மைச் சந்திக்க வந்த அன்னையிடம், "அம்மையே, நீங்கள் நோயாளி அல்லவே!— நோயாளி களைக் குணப்படுத்தக்கூடிய சமய சஞ்சீவியான டாக்டர் ஆயிற்றே?" என்று வேடிக்கையாகக் கேட்டு, அன்னையின் அப்போதைய குறைகளை— அன்னை அப்போது சேவை செய்து வந்த சேரி ஏழைகள் சிலரின் பிரச்னைக் குறைகளை யெல்லாம் தீர்த்து வைத்தவர் அவர். ஆனுல், இப்போது, அன்னையின் விண்ணப்பத்தை நிறைவேற்றி வைக்க முடி

யாமல் தினறினர். "அன்னையே! இப்போது உங்கள் தொழு நோயாளிகள் இல்லம் அமைக்கப்பட்டுள்ள மனைப்பரப்பு கல்கத்தாவின் வளர்ச்சித் திட்டத்துறைக்குச் சொந்தமானது; நகரின் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருப்பதால், நகரத்தையும் விரிவு படுத்த வேண்டியிருக்கிறது; ஆகையால்தான், அரசின் முடிவை மாற்றவோ, மறுபரிசிலனை செய்யவோ இயலவில்லை. உங்கள் தொழு நோயாளிகளுக்கு வேறு நல்ல இடமாகத் தர ஏற்பாடு செய்வேன், அம்மையே!" என்று அன்னையிடம் நிலையை எடுத்துரைத்து, தமது விருப்பத்தை ஏற்கும்படி கேட்டுக் கொண்டார் முதல்வர்.

அவ்வாறே, டாக்டர் பி. ஸி. ராய் அவர்களின் அரசு அன்னை தெரேசா அவர்களிடம் அன்போடு வழங்கிய மனை இடம், கல்கத்தா பெருநகரில் அஸன்ஸால் என்னும் இடத்திற்கு அருகில், 34 ஏக்கர் பரப்பளவு உடையதாக அமைந்தது.

குஷ்டரோகிகளின் நோய் நலவின் இயலாத நிலைமைகளை அகற்றி, முன்போல அவர்களை வாழ்க்கை நெறி முறைகட்கு உட்படுத்தி அவர்களுக்குப் புத்துயிரும் புது மலர்ச்சியும் வழங்கும் வகையில் மறுவாழ்வு மையம் ஒன்றையும் அங்கே நிர்மாணித்தார் தெரேசா அன்னையார்.

அன்னை முன்னம் தெரிவித்தமாதிரி, விரிந்து பரந்த அந்தப் பகுதிதான் பின்னர் 'சாந்தி நகர்' என்று அழைக்கப் படுகிறது. அழகானதொரு பெரிய கிராமம். ஹௌரா ரயில் நிலயத்திலிருந்து சுமார் 200 மைல் தொலைவு. வெறும் பொட்டல் வெளியாக இருந்த இடத்தை ஓர் அழகுச் சோலையாக அழகூட்டும் ஓர் அன்பாலயமாக மாற்றிய—உருமாற்றிய பெருமைக்கு பரிசுத்தச் சகோதரி ஃபிரான்ஸிஸ் ஸேவியர் உரிமையுள்ளவர்.

அழகான அமைதியின் இருப்பிடமான இந்நகர் தொழு நோயாளிகளுக்கும் அழகு தருவதாகவே அமைந்தது. ஏனெனில், இங்கே அவர்களுக்கென்று சொந்தமாக ஓர் இடம் அமைந்திருந்தது. அக மகிழ்வோடு வாழலாம்; அமைதியாக வேலை பார்க்கலாம்; மானம் மரியாதையோடு மடியலாம், சகோதரி ஃபிரான்ஸிஸ் ஸேவியர் டாக்டராகத் துணை நிற்கையில், அவர்களுக்கு—சாவைச் சாடிய ஆண்களும் பெண்களுமான அவர்களுக்கு என்ன குறை?— தொற்று நோயின் கடுமையாலும் கொடுமை யாலும் அங்கம் குறைந்தவர்களும்கூட, அறுவைச் சிகிச்சை மூலம் புது உயிர்பெற்று மீண்டும் ஓடவும் ஆடவும் பலம் பெற்றபின், உண்மையிலேயே இனிமேல் அவர்களுக் கெல்லாம் குறை இல்லைதான்!

டில்லிக்கு வெளியே மற்றொரு சாந்தி நகர் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதுவும் தொழுநோயரின் இன்னொரு தேவலோகமாக விளங்கும்!

அன்னையின் பரிசுத்தமான அன்பு தொடுகின்ற இடமெல்லாம் தேவலோகம் தான்!

சுதந்தரப் பாரதத்தின் முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் மரயார்ந்த நாகரிகப் பாங்குடன் கூடிய சேதுப்பாலமாக விளங்கி வருகின்ற கல்கத்தா நகரத்தில் ஆச்சாரிய' ஜகதீஷ்போஸ் சாலையிலேதான், இன்றைய நடப்பு உலகத்தின் வணக்கத்துக்கும் வாழ்த் துக்கும் உரியதாக விளங்கிவருகின்ற அன்னை தெரேசா அவர்களின் 'அன்பின் தூதுவர்கள்' (Missionaries of Charity) அறப்பணி இயக்கத்தின் தலைமைப் பணியகமான 'அன்னை இல்லம் (The Mother House) இயங்கி வருகிறது.

அன்னை தெரேசா தாம் தங்கி வந்த க்ரீக் தெருவில் 14ஆம் எண்பூண்ட இல்லத்தின் மாடியறையில் அன்பை ஓர் இயக்கமாகவே உருவாக்கி, அந்த இயக்கத்திற்கு

'அன்பின் தூதர்கள்' என்னும் மகுடத்தையும் சூட்டி, ஏழைகளின் ஏழைகளுக்கு உண்டான அன்புப் பணிகளை நடைமுறைப் படுத்தவும் தொடங்கி விட்டார்!

உலக வாழ்க்கையின் சோதனைக் களத்திலே, மாதவம் செய்து பிறப்பெடுத்த மங்கை ஒருத்தி, எதிர்ப்படும் சோதனைகளையெல்லாம் எதிர்கொண்டு வெற்றிவாகை சூடும்போது, அவள் தாய் எனும் உயிர்த் தத்துவமாகவே ஆகிவிடுவாள்!

மண் வாழ்வில் பெண் விதியும் இதுவேதான்.

அர்ச் சூசையப்பர் நினைவுப் பெருநாள் விழாவில் (19, மார்ச் 1949) சகோதரி தெரேசாவை "அன்னை!" என மக்கள் அழைக்கலாயினர்!

வாழும் அன்னை, அன்பின் விதிக்கு வாழும் சாட்சி!...

1950, அக்டோபர், 7:

அன்பிற்குச் சட்டமும் சாட்சியுமான நாள் அல்லவா இது!

மனித அறிவின் வழி முறையிலும், சமூகநீதியின் முறை வழியிலும் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, உலகத்தில் மக்களுக்கு மத்தியில் அன்பையும் அமைதியையும் வாழ்த்தவும் வாழச் செய்யவும் வேண்டி அன்னை தெரேசா அன்று விதைத்த அன்பு என்னும் வித்துத்தான் இன்று அகில உலகமும் தழுவி நிற்கும் அன்பின் தூதுவர்கள் என்னும் மகோன்னதமான கற்பக விருட்சமாகவே ஓங்கி வளர்ந்து, உலகை அளந்து கொண்டிருக்கிறது.

அன்னை அன்போடும் மனிதத்தன்மையோடும் மண்ணின் மைந்தர்களின் நெஞ்சங்களிலே விதைத்திட்ட அன்பு விதை முளை கிளம்பத் தொடங்கியது!

அறநெறி சார்ந்த அன்பின் தூதுவர்கள் எனப்படும் ஏழைச் சமூக நல அன்புப் பொதுப் பணி அமைப்பு மேதகு போப் ஆண்டவரின் அன்பான ஆசியுடனும்

முறையான அனுமதியுடனும் அன்றி, 7—10—1950-ல் கல்கத்தா உயர்நீதி மன்றத்திலே சட்டமுறைப்படி பதிவு செய்யப்பட்டது!

தெய்வாம்சம் பொருந்திய மானுடத் தருமத்தின் நெறிமுறையான அடிப்படை ஆதாரங்களின்பேரில் அன்னை தெரேசா உருவாக்கிய 'அன்பின் தூதுவர்கள்' என்னும் புதியதான அன்புத் திருச்சபைக்கான செயல் நடைமுறை அமைப்பாண்மை விதிகள் உருவாக்கப்பப்பட்டன. மனிதாபிமானத்தின் ஒழுங்குகளும் மனிதப் பண்பின் கட்டுப்பாடுகளும் நிரம்பின அன்பின் இயக்கத்தின் சட்டத் திட்டங்களுக்கு உயிர்நாடி இவ்வாறு நிர்ணயம் பெற்றிருந்தது:

"...ஆண்டவன்தான் அன்பு!— அன்புதான் ஆண்டவன் —மனிதச் சமுதாயத்திலே, ஏழைகளில் மிகுந்த ஏழை எளிய மக்களுக்கு இன்றியமையாத தருமத்தொண்டுகளைச் செய்யக் கடமைப் பட்ட தூய சகோதரிகள் அனைவரும் உண்மை மிக்க அன்புச் சேவகிகளாகச் செயலாற்றக் கடமைப் பட்டவர்கள். அவர்கள் மனத்திலும் ஆன்மாவிலும் அறத்தைப் பேணுவதோடு, அந்த அறத்தை அன்பு வழிகளில் கிறிஸ்தவர்கள் அல்லது, கிறிஸ்தவர்கள் அல்லாத பிற மதத்தினரான ஏழை எளியவர்களின் இதயங்களில் பரப்பவேண்டியதும் அவர்களது கடமை ஆகிறது!..."

"ஏழை எளியவர்கட்கு இலவசமாகவும், அன்பாகவும் உழைப்பதையே உயிருக்குயிரான நோக்கமெனக் கொண்ட மிகப் புதிதான இந்த அன்புத்தூதர்கள் சபையைத் தோற்றுவித்து நடத்துவதற்கு உரித்தான சமய நிறைவான ஒப்புதலை 1950, அக்டோபர் 7ஆம் நாளில், மிகப் புனிதமான வாய்முறை வழிபாட்டுத் திருநாளன்று, கிறிஸ்தவத் திருச்சபைகளின் ஆதிமுதல்வரான மேதகு போப் ஆண்டவர் அவர்கள் ஆசிகள் சூழ வழங்கினார்கள்!"— உலகம் முழுவதிலும் கொடி முல்லையென மணம் பரப்பிப்

படர்ந்து பரவியுள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தின் பல தரப்பட்ட தொண்டு வழிகளிலே, அன்னை தெரேசாவின் அறநெறி சார்ந்த அன்பின் பணி இயக்கம் உன்னதமான தொரு நிறுவனமாக விளங்குகிறது!'' என்றும் அவர்கள் பாராட்டினார்கள்!

ஏழைகளிலே மிக மிக ஏழைகளுக்கு உதவிகள் செய்து, அவர்களுக்கு அன்பை வழங்கவும், அவர்களிடமிருந்து அன்பைப் பெறவும் வேண்டுமென்பதே அன்னையின் அறப்பணி இயக்கத்தின் மனிதாபிமானம் நிரம்பிய தார்மிகக் குறிக்கோளாக அன்று முதல் இன்றுவரையிலும் இயங்கியும் இயக்கப்பட்டும் வருகிறது.

ஏழை, தன்னுடைய வறுமையோடு தனக்குத் தானே போராடவும் போராடிக் கொள்ளவும் முடியும்; ஆனால், கடைக்கோடி ஏழை மக்களால் அவ்வாறு போராட முடிவ தில்லை!—அவர்களுக்கு இங்கே எதுவுமே கிடையாது, யாருமே கிடையாது; அவர்களுக்கென்று பின்னணியில் ஏதாவது உலகிலே இருந்தால் தானே?... எனவே, அத்தகையவர்களுக்கு அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுவது, 'அன்பு' ஒன்றுதான்!

பேட்டியாளரிடம் அன்னை இவ்வாறு விடையளித்தார்:

பேட்டியாளர் மால்கம் கேட்ட கேள்வி இதுதான்: "ஒட்டு மொத்தமாக, ஏழைகளுக்குப் பணி செய்வது என்றில்லாமல், ஏழைகளில் மிகுந்த ஏழைகளுக்குச் சேவை புரிவது என்கிற ஒரு நோக்கத்தைத் தாங்கள் தேர்வு செய்ததற்கு என்ன காரணம்?''

கேள்வி தொடர்கிறது: ''ஏழைகளுக்கு அவசிய மானது அன்பா? —இல்லை, உணவா?''

தொடர் சேர்கிறது பதில்: "அன்புதான்! - மனித னுக்குத் தொல்லையென்றால், நிவாரணம் அவசியப் படலாம். ஆனால், முடிவிலே அவனுக்கு அதிகமாகத்

தேவைப்படுவது அன்பு ஒன்றுதான். ஒரு சமயத்தில், நான் கத்தோலிக்க மதம் தழுவிய பெண் ஒருத்தியைச் சந்தித்தேன்; அவளுக்குப் புற்றுநோய்; அவளிடம் 'இது ஆண்டவனின் முத்தம்' என்றேன். உடனே அவள், "முத்தத்தை உடனே நிறுத்தும்படி கடவுளிடம் பிரார்த்தனை செய்யுங்கள், தாயே!" என்றாள். பாவம், இரண்டு நாட்கள் கழித்து, அவள் இறந்தபோது, அவளுடைய முகத்தில் அழகானதொரு புன்னகை இருந்தது!"

அன்னை மீண்டும் பதிலளிக்கிறார்:

"வினவத் தெரியத் தொடங்கின காலந்தொட்டு ஏசுநாதரின் பரமண்டலப் போதனைகள் என் நெஞ்சைத் தொட்டு நின்றன. ஏழைகளின் பணிதான் என் எதிர்காலமென்பதாக நான் அந்நாளில் திட்டமிட்டபோது, என்னை ஆகர்ஷித்த நாடு இந்த இந்திய நாடு தான்!—உலகத்தைச் சிருஷ்டித்த ஆண்டவன் தானே உலகத்தின் மக்களையும் ஒரே நிறையாகச் சிருஷ்டித்தான்?—ஆனால், அந்த மக்களின் சமூகம்தானே மனிதர்களிடையே மேடுகளையும், பள்ளங்களையும் ஏற்படுத்த ஏதுவாகி, இன்றைய உலகப் பிரச்னையாக ஆகிவிட்ட பசி, வறுமை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஏதுவாகிவிட்டது?—ஆகவேதான், பசி—வறுமை போன்ற சமுதாய அநீதிகளுக்குப் பலியாகும் ஏழைகளுக்கு, குறிப்பாக ஏழைகளில் ஏழைகளுக்குப் பணி செய்ய வேண்டுமென்னும் கர்த்தரின் கட்டளையை என் அன்புப் பணித் திட்டத்தின் தலையாய மூதற் கொள்கையாகவும் வகுத்தேன்! எங்கள் பணி சமய பூர்வமான வெறும் சமூகப்பணி அல்லவே? கடையரினும் கடையரிடையே ஒன்றி வாழ்ந்து, அவர்களுக்குரிய பணிகளை நம்பிக்கை ஒளி காட்டி, அன்பின் ஒளி வழியில் செய்வதுதான் எங்கள் பணிமனையின் உயிர்மூச்சு! அதுவே ஏசுவின் ஆணை!"

ஆனாலும்:

உலகத்தின் நன்மக்களின் அன்பிற்கும், வணக்கத்திற்கும் உரியவராகத் திகழ்ந்து வருகின்ற தெரேசா அன்னை, ஆண்டவனின் அருட்கொடையான மனிதத் தன்மையின் பேரால் ஆரம்பித்து நடத்தி வருகின்ற அன்புத் தூதுத் தொண்டுகளின் ஆத்மார்த்தமான தூய நோக்கத்தை உணர்ந்தறியாமல் அன்னையின் பணிகளுக்கு அவரவர்களின் இஷ்டப்பிரகாரம் வெவ்வேறு வடிவங்களைக் கற்பித்துத் தூற்றவும் அவ்வப்போது ஒரிருவர் கிளம்பியதும் பொய் இல்லைதான்!—"பிச்சைக்காரர்களுக்குப் பசிக்குச் சோறு போடுவது குற்றமா? பிச்சைக்காரர்களும் ஆண்டவனின் குழந்தைகள்தாமே?—சோறு கிடைக்காவிட்டால், அவர்கள் செத்துப் போய்விட மாட்டார்களா? அவர்களின் உயிர்களைப் பறிக்க யாருக்கு அதிகாரம் இருக்கிறதாம்? பிச்சைக்காரர்களுக்கு வாழ வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதும் நாட்டின் கடமை இல்லையா? சமூகத்தின் பொறுப்பு இல்லையா? இத்தகைய வாய்ப்பு வசதிகள் நாட்டில் முறையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டால், பின்னர், பிச்சைக்காரர்கள் நாட்டிலே ஏன் தோன்றப் போகிறார்கள்?"—பிறிதொரு வேளையில், பிச்சைக்காரர்களுக்காகவும் வருந்தினார்கள் அன்னை!

'மனிதாபிமானம்' என்னும் மனிதப் பண்பு நலம்தான் அன்னையின் ஒரே சொத்து!

அந்தச் சொத்து, கடவுளின் சொத்து.

பின், அன்னையின் அன்பு வெற்றி பெற்றதும், வெற்றி பெறுவதும் நீதிதானே?—நியாயம் தானே? தருமம் தானே?

நிரூபிக்கப்பட்டுப் பிரகடனப்படுத்தப் பட்டுவிட்ட அன்பின் வெற்றியைச் சித்திரிக்கும் உலகச் சரித்திரத்தில்,

சாந்த சொரூபிணியான அன்னை தெரேசாவின் பெயர் உண்மையான பொன் எழுத்துக்களிலேதான் பொறிக்கப் படும்!

'கல்கத்தாவின் பெருமை' (The Pride of Calcutta) யாகத் திகழ்கின்ற அன்னை தெரேசா, ஆண்டவன் இயேசு வின் அன்பிற்குச் செயல்வடிவம் தரும் வகையில் கல்கத்தா பெருநகரிலே ஆரம்பித்து, உலக நாடுகளைத் தழுவி நடத்தி வருகின்ற அன்பின் தூதுப்பணிகளுக்காக உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆண்டுதோறும் வந்து சேரும் அன்பளிப்புப் பொருட்களின் மதிப்பு மட்டும் சுமார் ரூபாய் மூன்றுகோடியை எட்டிப்பிடிக்கும்!

அன்பு மகோன்னதமானது!—உண்மை!

# 6. "அம்மா!—அம்மா!"

"அம்மா!..."

பாசத்திற்குத் தாரகமந்திரம்.

அன்பிற்குத் தேவாமிர்தம்.

அம்மா என்றால் அன்னை.

ஆனால்—

அன்னையென்றால், அது அன்னை தெரேசாவையே குறிக்கும். இதுவே நடைமுறை உலகத்திலே, நடைமுறையில் இருந்துவரும் உண்மை.

அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் கருணைக்காகவும் ஏங்கிய —ஏங்குகின்ற—ஏங்கும் அத்தனை ஜீவன்களுக்கும் உலகத்தின் அரங்கத்தில் ஒரு நம்பிக்கைத் தீபமாக ஒளி காட்டி, வழிகாட்டி வருகின்ற அன்னை தெரேசா அவர்கள் தமது அறப்பணி அமைப்புக்களின் வாயிலாக உலகிடை அன்பிற்குத் தூது சென்று ஏழைநலத் தருமப் பணிகள் புரிந்து உலகத்தின் நல்லமைதிக்கும் நல்லெண்ணத்துக்கும் காப்பாகவும் பாதுகாப்பாகவும் விளங்கி வருகின்ற அந்த ஓர் ஒப்புயர்வற்ற மனிதாபிமானத்துக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலேதான், 1979-ம் ஆண்டுக்குரிய உலக அமைதிக்கான நோபல்பரிசு அன்னையைத் தேடி வந்தது.

தமக்குக் கிடைத்த உலகத்தின் மிகச் சிறந்த பரிசிலான இந்த நோபல் பரிசு, அன்பின் தூதுவர்கள் சார்ந்த தமது அறப்பணி இயக்கத்துக்குக் கிடைத்ததாகவே அன்னை

அவர்கள் அன்புடன் நினைந்து அமைதியோடு மகிழ்ந்தார்கள்.

உலகமும் அவ்வாறே கருதிற்று.

நடப்பும் அதுதான்.

அன்னைக்குக் கிட்டிய நோபல் பரிசு அன்புப்பணி இயக்கத்திற்குச் சேர்ந்தது!

உலகத்திலிருக்கின்ற கடையரினும் கடையரைப் பற்றிக்கூட இந்த உலகம் தார்மீக பண்புநெறியோடு சிந்தித்துப் பார்க்கத் தலைப்பட்டிருக்கிறதே என்பதில் அன்னைக்கு அளவுகடந்த ஆறுதல் கனியத் தலைப்பட்டது!— "உலகித்தின் பெருமையை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் இந்த நோபல் பரிசை ஏழைகளின் பேராலேயே நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவள் ஆகிறேன். காரணம் இதுதான்: எனக்கு இப்பரிசை வழங்குவதன் மூலம், உலகில் ஏழைகள் இருக்கிறார்கள் என்னும் உண்மையை அவர்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதை நான் நம்பவும் செய்கிறேன்!"

நோபல் சமாதானப் பரிசிலை நேரிலே பெற்றுக் கொள்ள இயக்கத்தின் சகோதரிகளும் சகோதரர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நார்வே நாட்டுக்கு அன்னை புறப்பட்டார்கள்.

ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் அன்னைக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலகத்தின் நாடுகளிலே அச்சமயம் அன்னையைப் பற்றியேதான் மக்களும் பேசிக் கொண்டிருந்தனர்: ஏடுகளும் பேசின.

இந்தியப் பிரஜை ஆன அன்னை தெரேசாவுக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதில், இந்திய நாடே பெருமிதம் கொண்டது, பெருமை கண்டது எனவும் சொல்ல வேண்டும்.

உலக அமைதிக்கான உலகில் உயர்ந்த பரிசை அமைதியுடன் பெற்றுத் தெரேசா அன்னை இந்திய நாட்டுக்குத் திரும்பினுர்!—அன்னை தெரேசா, முந்தையத் துறவுக் கன்னி அக்னெஸ் ஆக 1929 ஆம் ஆண்டில் கல்கத்தாவின் இந்திய மண்ணை மிதித்த அந்தப் புனிதமான பொன்னுன சுப நாள் 1979 ஆம் ஆண்டிலே, மறு பிறவி எடுத்தது. அன்னை மெய்ம் மறந்தார்கள்!—'ஓர் ஆத்மாவின் பிரயாணம்' என்னும் தலைப்பில் உள்ளத்தைத் தொடும்படியான சுய சரிதையை எழுதி 1897-ல் தமது 24-ம் வயதில் அகாலமரணம் அடைந்த பிரஞ்சு ஞானியான குழந்தை ஏசுவின் புனிதை தெரேசாவின் நினைவாக 1931-ம் ஆண்டில் தெரேசாவாக ஆனது, லொரெட்டோ கன்னிமார்கள் நடத்திய புனிதமேரி பள்ளியில் 20 ஆண்டுகள் (1929—1948) ஆசிரியையாகவும் தலைமை ஆசிரியையாகவும் பணி செய்தது, இந்திய நாட்டின் ஏழைமக்களுக்குப் பணி புரிய வேண்டுமென்ற விருப்பத்தில் பிறந்த நாட்டைத் துறந்து கல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தபின், 1946 ம் ஆண்டில் 'கடையரினும் கடையருக்குச் சேவை செய்வாயாக!' என்னும் தெய்வ அழைப்பு தமது மனத்தின் மனத்தில் எதிரொலிக்கவே, லொரெட்டா மடத்தை விட்டுப் பிரிய மேலிடத்துக்கு அனுமதி கோரி, அனுமதி பெற்று 1948-ல் இந்தியப் பிரஜை ஆனது, பின்னர் மோதிஜில் சேரிப் பகுதியில் வெறும் ஐந்தே ஐந்து ரூபாயோடு தெய்வப் பணியைத் தொடர்ந்து பள்ளி ஒன்றை ஆரம்பித்தது, அப்புறம், 1950-ம் ஆண்டில் "'அன்பின் தூதர்கள்' என்று அழைக்கப்பட்டுவருகின்ற அறப்பணி இயக்கத்தைத் தோற்றுவித்தது, இறந்து கொண்டிருக்கும் அனுதைகளுக்குப் புனிதமான இதயம் படைத்திட்ட பரிசுத்த நாயகரின் பேரால் 'நிர்மல் இருதயம்' என்னும் ஓர் இல்லத்தை 1952-ல் ஏற்படுத்தியது, பின்னர், காசநோய் போன்ற உயிரைக்குடிக்க வல்ல பயங்கர நோயாளிகளுக்கும் அடைக்கலம் தந்த அன்புப் பணி அமைப்பின் அன்புச் சங்கிலியினை மேலும் இறுக்கமாக்கும் வண்ணம்,

வண்ணம் இழந்த தொழுநோயாளிகளுக்கெனத் தனிப்பட்டதோர் இல்லத்தை 1957-ம் ஆண்டில் நிறுவி 'சாந்தி நக'ரை உருவாக்கியது, பிறகு ஆதரவற்ற பெண்களுக்கெனவும் 'பிரேம்தன்' என்ற பெயரில் பிரத்தியேகமானதொரு அன்பின் நிழலை உண்டாக்கியது, இந்திய நாட்டைக் கடந்து, வெளி நாடுகளில் முதன் முதலாக வெனிசுலா நகரில் அன்புப்பணி இயக்கத்தின் முதற் கிளையை ஏற்படுத்தியது, அப்பால், போப் ஆண்டவரின் விருப்பப்படி ரோம் நகரிலும் ஒரு கிளை அமைப்பை அமைத்தது, பின்னர், உலக நாடுகளில் பல்வேறு இடங்களில் பல்வேறு துணை அமைப்புக்களை நிறுவியது போன்ற பலதரப்பட்ட நிகழ்வுகள் அன்னையின் அன்பு ததும்பிய மனத்திலே நிழலாடின; ஒளியாடின! "கர்த்தரே! எம் பெருமானே!" மெய்ம்மறந்த நிலையில் தரிசனம் தந்த அன்னையின் உருவிலே அப்போது பரிசுத்த மாதாவே தரிசனம் தந்திருப்பார் போலும்!

ஆம் :

அன்பிற்கும் நம்பிக்கைக்கும் இடையே உலகிடை அன்புப் பாலம் சமைத்து உலகத்திலே நல்லமைதியை உலகளாவிய சமதர்மப் பொதுநோக்கிலே பேணிக் காத்து, உலக மக்களிடையே நல்லெண்ணம் பண்படப் பாடுபடும் அன்னைக்கு மரியாதை செய்து பெருமைப்படுவதற்காகப் பெருமையோடு தேடிவந்த நோபல்பரிசு, அன்னைக்கு உரிய மரியாதையைச் செலுத்திப் பெருமை பெற்ற அதே 1979-ம் ஆண்டில் அன்னை தெரேசா சுயப் பிரக்ஞை அடையலானார்!

அன்பின் பணிக்கடனுக்கு நோபல் பரிசில் வைர முடியாகச் சூட்டப்பட்டது.

வைரக்கிரீடத்தில் முன்னும் பின்னுமாக எத்தனை எத்தனை வைரக்கற்கள் பளிச்சிடுகின்றன!

**1962 :**

பாரதச் சமுதாயத்தில் அம்மை தெரேசா ஆற்றி வந்த ஏழை நலப் பொதுப்பணிகளைக் கௌரவிக்கும் பொருட்டு இந்திய அரசு 'பத்மஸ்ரீ' என்னும் விருது வழங்கியது.

விருதினை வழங்கிய அப்போதையக் குடியரசுத் தலைவரான உலகத் தத்துவ மேதை டாக்டர் இராதா கிருஷ்ணன் "அன்னை தெரேசா அவர்கள், வேண்டப் படாமல் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் உடல் ஊனமுற்றோர் களுக்கும் திக்கற்ற ஏழை எளியவர்களுக்கும் உடலும் உள்ளமும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் அபலை களுக்கும் அடைக்கலம் தந்து காப்பளிக்கும் ஓர் அன்புச் சரணாலயமாகவே விளங்குகிறார்கள்!" என்று மனம் நெகிழ்ந்து பாராட்டினார்.

குடியரசுத் தலைவரைப் போலவே, பாரதத்தின் பிரத மராக அமைந்த நேருஜியும் அப்போது மன நெகிழ்ச்சி அடைந்தார்.

அதே 1962-ம் ஆண்டில் தியாகத் திருவிளக்காம் அன்பின் அன்னை தெரேசாவுக்கு 'ரேமென் மாக்சேசாய்' (Ramon Magsay say) பரிசை ஃபிலிப்பைன்ஸ் நாட்டின் தலைவர் மார்க்கோஸ் வழங்கிய காலையில், அகில உலக நாடுகளிடை அன்னை ஆற்றிவரும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் நல்லிணக்கப் பணிகள் உலகத்தை வாழவைக்கும்; உயிர் வாழும் புனிதை, ஞானி அன்னை தெரேசா!" என்று சிறப்பித்தார்.

1971-ல் போப் ஆண்டவர் இருபத்திமூன்றாவது ஜான் அவர்களின் உலக அமைதிப் பரிசிலை போப் ஆண்டவர் ஆறாவது பால் அன்னைக்கு வழங்கினார். "நல்லன்பிற்கும் நன்னம்பிக்கைக்கும் தூதர் தெரேசா அன்னை!" என்று புகழ்ந்தார்!

அதே ஆண்டிலேயே, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நல்ல சாமரிட்டன் பரிசும் அடுத்து, ஜான் எஃப். கென்னடி அனைத்துலகப் பரிசும் 'டாக்டர்' எனும் கவுரவப் பட்டமும் அன்னையை நாடின.

ஆண்டு, 1972, நவம்பர், 17.

'உலக சமாதானப் புறு' என்னும் உலகப் புகழ்ச்சிக்கு மூலவரான பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருஜியின் பெயரால் அமர்ந்த 'நேரு உலக ஒப்புரவுப் பரிசு' தெரேசா அன்னைக்கு வழங்கப்பட்டதன்மூலம், பாரதத் தாயின் மக்களுடைய நலவாழ்வுக்கு அன்புச் சேவை புரியும் அன்னைக்குப் பாரதம் தனது நன்றியறிவை அன்போடு செலுத்திப் பெருமை பெற்றதென்றும் கொள்ளலாம்.

சமயவளர்ச்சிப் பணிகளுக்கான இங்கிலாந்து நாட்டின் உயர்வான 34000 பவுன் மதிப்புள்ள "டெம்பிள்டன் பரிசை" (Templeton Prize) ராணி எலிசபெத்தின் கணவர் எடின்பரோ கோமகன் பிலிப் இளவரசர் 19/3 ஏப்ரல் கெடுவில் அன்னைக்கு அளித்தார்; "தமது அரிய வாழ்க்கையின் வாயிலாகவும் தம்முடைய பெரிய அன்புப் பணிகளின் மூலமாகவும் உலகத்தின் மக்களுக்கு, குறிப்பாக, ஏழை எளிய மக்களுக்குக் கண்காணும் அன்புத் தெய்வ மாகவே விளங்குகிறார்கள் நமது அன்னை தெரேசா!" என்றும் புகழ்ந்து பேசினார்.

அன்னையைத் தேடி அண்ணல் 'அஸிஸி ஸவேரியார்' பரிசு வந்த நாள்: 19—7—1974.

கருமவினைக்கு இலக்கான குட்ட நோயாளிகட்கு அன்னை உடலும் உள்ளமும் ஐக்கியப்பட்டு, ஆற்றுகின்ற மிகத் தூயதான அன்புத் தொண்டுக்கு நன்றி தெரியப் படுத்தும் வகையில் 'ஆல்பர்ட் ஸ்விட்ஸர் சர்வதேசப் பரிசில்' (Albert Schweitzer International Prize) நிவேதனம் ஆக்கப்பட்டது.

அத்தனை உலகத் தேசங்களின் பாராட்டுதல்களையும் சேமித்து வைத்திருக்கும் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் (இங்கிலாந்து) 10, ஜூன் 1977-ல் டாக்டர் என்னும் கவுரவப் பட்டத்தை அன்னைக்குச் சமர்ப்பித்தது.

நோபல் பரிசை வெற்றிகொண்ட குருதேவரின் சாந்திநிகேதன் விஸ்வபாரதிப் பல்கலைக்கழகமும் அன்னையை டாக்டர் தெரேசாவாக ஆக்கி மகிழ்ந்ததும் உண்மை. காலம்: ஜனவரி, 1976.

பிரிட்டிஷ் பேரரசின் மக்களால் உயர்வுமிக்க, நன்மதிப்புச் சின்னமென மதிக்கப்பெறும் 'ஓ. பி. இ.' (Order of British Empire) எனப்படும் சீரிய விருதும் அன்னைக்கு அளிக்கப்பட்டது. (1978)

அன்பிற்குத் தூது சென்று தர்மத் தொண்டுகளை ஒரு தியாக வேள்வியைப் போன்றே செய்துவரும் அன்னையின் வாழ்க்கைப் பயணம் மற்றும் வாழ்க்கைத் தொழில் சரிதத்தில், 1979ஆம் ஆண்டு உலகக் கீர்த்தியைச் சுட்டும் அழகான — அற்புதமான — அதிசயமான இரண்டு நட்சத்திரங்களை அடக்கமாக அடக்கிக் கொண்டுள்ள ஆண்டெனவும் பொலியும்!

உலகத்தில் வாழும் மக்களுக்கு மத்தியில் ஒருங்கிணைந்த நல்அமைதியையும் ஒருமை மிகுந்த ரத்தப் பாசத்தையும் வாழச் செய்வதற்காகவே இத்தாலியும், சுவிட்சர்லாந்தும் ஒன்றுபட்டும் ஒன்று கூடியும் அறிவித்த பால்ஸான் அகில உலக விருதும் இவ்வாண்டிலேயே அன்பான அன்னையின் அன்பில் அழகாக அடைக்கலம் ஆனது. அதே 1979-ம் ஆண்டில் தானே உலகம் புகழும் நோபல் பரிசையும் அன்னை வென்றார்!

ஆண்டவனின் கட்டளைக்கு இணங்க, ஏழைகளின் ஏழைகளுக்கான இன்னலப் பணிக்கெனத் தம்மையே அர்ப்பணம்

செய்து ஆரம்பம் செய்த அன்புப் பணி இயக்கத்தின் சொத்தாக ஆகிவிட்டவர் அன்னை! ஆகவே, அன்னைக்குக் கிடைத்திட்ட ரூ15,20,000 மதிப்பு மிக்க நோபல் பரிசும் அதே இயக்கத்தின் சொத்தாக ஆகிவிட்டதில் வியப்பேதும் இல்லைதானே?

பரிசுபெற்று இந்தியாவுக்கு மீண்ட அன்னைக்கு டில்லி மாநகராட்சி செங்கோட்டையில் மாபெரும் வரவேற் பளித்தபோது, வெறும் பணக்காரர்களை மட்டுமே விழா நிகழ்ச்சியில் கண்டு மனம் நொந்தவராக, "இப்போது நான் ஓர் ஏழையைக் கூடச் சந்திக்க முடியவில்லையே? அவர்களையெல்லாம் ஏன் வெளியிலேயே நிற்க வைத்து விட்டீர்கள்?" என்று வினவிய அக்கேள்வி தலைநகரில் மட்டும் பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

காரல்மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கையில் பற்றும் பாசமும் மிகக் கொண்டிருந்த மேற்குவங்க முதல்வர் டாக்டர் பி. சி. ராய் தொடக்கம் முதற்கொண்டு அன்னையிடமும் பற்றும் பாசமும் கொண்டிருந்தார். அவரும் கல்கத்தாவில் அன்னைக்கு வரவேற்பொன்றை அளித்தார். அப்போது அவர், "அன்னை அவர்கள் என்னைத் தெய்வசக்தியில் நம்பிக்கை வைக்குமாறு செய்கிறார்!" என்பதாகக் குறிப்பிட்டதும் 'தாள் செய்தி' ஆயிற்று!

1980 :

பாரதம் பெருமையும் பெருமிதமும் அடையத்தக்க வழியில் பாரதத்தின் குடிமகளாக ஆகி, நாளும் பொழுதும் செயலாற்றும் மக்கள் தொண்டின் வாய்மொழியின் வாயிலாக அன்புக்குத் தூது சென்று இன்பநிலை எய்திப் பாரதத்தின் விலைமதிப்பு வாய்ந்த ரத்தினமாக ஆகிவிட்ட உலகத்தின் அன்பு அன்னை தெரேசாவுக்குப் பாரதச் சமுதாயத்தின் மிகச் சிறந்த, மிக உயர்ந்த 'பாரத ரத்னம்' விருதைப் பாரதக் குடியரசின் தலைவர் மேதகு நீலம் சஞ்சீவ ரெட்டி வழங்கினார்.

பாரத ரத்தினம் ஜவஹர்லால் நேரு அவர்கள், ஜனநாயக சோஷலிஸ தருமத்தின் அன்பு வழி நின்று, உலகச் சமாதானத்தையும், ஒத்துழைப்பையும் பரஸ்பரம் நல்லெண்ண நட்புறவையும் வளர்ப்பதில் பாரதத்தின் மிகப்பெரிய பொறுப்பை மெய்ப்பித்தார். ஆசிய ஜோதியின் வாழ்க்கைச் சரித்திரம்—சரித்திர வாழ்க்கை (1889—1964) என்றென்றும் உலக ஜோதியாகவே ஒளி கூட்டும்; வழி காட்டும்!

தந்தையின் உலகறிந்த அன்புடைமைக் கொள்கையிலே மரபு வழி நின்று, அண்மையில், நாட்டின் தலைநகரில், புதுடில்லியில் கூட்டுச் சேராக் கொள்கையில் சார்புடைய உலகத்தின் நடுவுநிலை நாடுகளையெல்லாம் ஒன்று கூட்டி மாநாடு நடத்தி உலகரங்கில் தமக்குள்ள நற்பெயரை மேலும் வலுப்படுத்திக் கொண்ட பாரதப் பிரதமர் மேதகு இந்திரா காந்தி, சர்வதேச உறவுகளில் சமாதானச் சகவாழ்வுக் கோட்பாடுகளை வலுப்படுத்தி நிலை நாட்டுவதன் விளைவாகவே, உலக மக்களின் நலன்கள் சீரடையவும் செம்மைப்படவும் வாய்ப்பு வசதி ஏற்பட முடியுமென்பதை அப்போதும் வலியுறுத்தினார்கள்!—இவ் வழியில், 1983 ஆம் ஆண்டு, அன்பும் அறனும் உடையதாகவே வரலாற்றில் இடம் காணும்!

முதன் முதலாக, 1975-ம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தை அறிவித்த திருமதி காந்தி 1982-ம் ஆண்டிலே புதிய 20 அம்சத் திட்டத்தையும் பொதுமக்களின் சந்நிதானத்தில் சமர்ப்பித்தார்!—அப்போது, 1982 ஜனவரி 14ல் பிரதமர் நாட்டுக்கு ஒலிபரப்பிய உரையில், நாட்டிலே ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமே இல்லாத நிலையிலே, பொதுமக்களின் பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே அரசின் முதற் கடமையாக விளங்குமென்றும், ஒழுங்கும் லட்சிய உணர்வும் நல்லிணக்கமும் கடும் உழைப்புந்தான் தேசிய வாழ்வை வலுப்படுத்தக் கூடுமென்றும், உண்மைக்கும் உழைப்புக்கும்

நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்வதாலேயே, நமது நாடு வளம் பெற்று முன்னேற்றமடைய முடியுமென்றும் வலியுறுத்தியதையும் நாட்டு மக்கள் என்றென்றும் வாழ்த்துவார்கள்!

இப்போது—

1983-ம் ஆண்டு மறுபடி உலகின் கவனத்தைப் பற்றி நின்றது!—வரலாற்றின் தலைவியாம் பாரதப் பிரதமர், புதுடில்லியில் நவம்பரில் சாம்ராஜ்யத் தலைவர்களின் மாநாடு ஒன்றையும் ஒன்று கூட்டி, உலகத்தில் அன்பும் அமைதியும் ஒத்துழைப்பும் உடன்பாடும் வளரவும், வாழவும் பெரிதும் பாடுபட்டார்.

அப்போது தலைநகரில் நடைபெற்ற விருந்தொன்றில் பிரதமர் திருமதி காந்தி அவர்கள் உலக அமைதியைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதில் மேற்கொண்டிருக்கும் நன்முயற்சிகளின் மூலம் உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவியாகவும் விளங்குகின்றார் என்பதாக ‘காமன் வெல்த்’ அரசுகளின்பல்வேறு தலைவர்களும் ஒருமுகமாக ஏற்றிப் போற்றினார்கள்.

உலகில் அமைதி வாழ்ந்திட அரசாங்க முறைமையில் பாடுபடுகிறார் பிரதமர் இந்திரா!

உலகில் அமைதி வளர்ந்திட, அன்பு முறையிலே பாடு படுகிறார் அன்னை தெரேசா!

உலகின் பழம் பெரும் நாடான பாரதத்தின் பிரதமத் தலைவி மேதகு இந்திராகாந்தி, உலகத்தின் நல்லமைதிக்கு வழிகாட்டி, நாட்டின் தலைநகரில் கூட்டிய சாம்ராஜ்யத் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள இருபதாண்டுகள் கழித்து மீண்டும் பாரதத்துக்கு வருகை தந்த இங்கிலாந்து ராணி எலிசபெத், நவம்பர் 26-ம் நாளில் (1983) திருமிகு அன்னை தெரேசாவுக்குப் பாராட்டு விழா ஒன்றை நடத்தினார். விழாவில், உலக சமாதானத்திற்கான உலகப்

புகழ் படைத்த 'நோபல் பரிசை' வென்ற அன்னை தெரேசா விற்கு, மனிதப் பாசத்தோடும், மானுடப் பண்போடும் ஆன்மநேயத்தோடும் மனித சமுதாயத்திற்கு அவர்கள் ஆற்றி வரும் மகத்தான அன்புப் பணிகளைப் போற்றிக் கவுரவிக்கும் முறையிலே, நன்மதிப்புச் சிறப்பின் மரபொழுங்கு வாய்ந்த கௌரவப் பரிசிலை (Order of Merit) ராணியார் சொந்த முறையிலே வழங்கினார். பிரிட்டனின் குடிமகளாக இல்லாமல், ஓர் இந்தியக் குடி மகளாக அமைந்த 73 வயதான மூதாட்டி அன்னை தெரேசா தமது வாழ்நாளிலேயே பிரிட்டனின் மிக உயர்ந்ததான இந்தக் கீர்த்திப் பரிசைப் பெறுவதென்பது மற்றுமோர் உலகப் புகழ் வாய்ந்த அன்புச் சேதியாகவும் ஆகிறது அல்லவா? மேன்மை மிகுந்த இந்தக் கவுரவத் தைப் பெற்ற முதல் இந்தியர் முந்தையப் பாரதக் குடியரசுத் தலைவரான அமரர் டாக்டர் இராதாகிருஷ்ணன் என்னும் அரிய செய்தியும் இந்திய மக்களுக்கு மன நிறைவும் மனக்களிப்பும் தரும்!

## 7. அன்பின் பணியாளர் உலகம்!

ஆதி அந்தம் காண முடியாத இப்புவனத்தை உண்டு பண்ணி, பேணிக்காத்து, நீதியுடன் பரிபாலனம் செய்து ரட்சிக்கின்ற மூலசக்தியும் ஆதாரசக்தியுமாக விளங்கும் ஆதிபராசக்திதான் அன்னபூரணி.

உலகத்து நாயகியிடம் அன்று "பிக்ஷாம் தேஹி!" என்று பிச்சை கேட்க ஓர் ஆதிசங்கரர் இருந்தார்.

உலகத்தின் அன்புத் தாயாகப் பேர் பெற்ற அன்னை தெரேசாவிடம் பசிக்கு உணவு கேட்க ஓர் ஏசுவல்ல, கோடிக்கணக்கான ஏசுக்கள் இன்று காத்திருக்கிறார்கள்!

தமிழ் மண்ணுக்கு உரித்தான துறவுக் கன்னி மணிமேகலைதான் மறு பிறப்பெடுத்து பாரதத்தின் மண்ணிலே தெரேசா எனும் அன்னையாகத் தரிசனம் தந்து கொண்டிருக்கிறாளோ?

உலக நாடுகளிடையே பரஸ்பரம் நேசமான உறவும், பிரியமான அன்பும், நல்லதனமான இணக்கமும், உணர்வான ஒத்துழைப்பும் உடன்பாடும் நிலவுவதன் நற்பலனாகவே, உலக அரங்கத்தில் நல்லமைதி தழைத்துச் செழிப்படைய முடியுமென்பதற்கு நேற்றும் இன்றும் நாளையும் நிரந்தரமான சாட்சியங்களாக விளங்கக் கூடிய உலகப் பெருந்தலைவர்களிலே பாரதத்தின் ஜன நாயக சோஷலிஸப் பிரதமர் ஜவர்ஹர்லால் நேருவும்

யூகோஸ்லேவியாவின் பொதுவுடைமைத் தலைவர் மார்ஷல் டிட்டோவும் குறிப்புப் புள்ளிகள்.

விதி என்பதாக ஒன்று உலகத்திலே இருக்கிறதோ, இல்லையோ?

ஆனால், விட்டகுறை—தொட்டகுறை என்ற ஒன்று இருக்கவே வேண்டும்!

இல்லாவிட்டால், யூகோஸ்லேவிய நாட்டில் பிறந்த அக்னஸ் ஏழை இந்தியநாட்டில் அன்புப் பணி புரிந்து அன்னை தெரேசாவாகவும் ஏழைகளின் நம்பிக்கைத் தீபமாகவும் உலகத்தின் உச்சியிலே ஒளிகாட்டி, வழியும் காட்டிக் கொண்டிருக்க இயலுமா, என்ன?

பிறந்த மண்ணில் பிஞ்சு நெஞ்சோடு, ஆடிப்பாடிப் படித்துக்கொண்டிருந்த நாட்களிலேயே கருணை வள்ளலான கர்த்தரின் கருணை மொழிகளை மதப்போதகர்களின் வாய் மொழிகளாகச் சொல்லக் கேட்ட அக்காலத்திலேயே, ஆண்டவனை உணர்ந்தவள் அன்றைய அக்னெஸ்—ஆமாம்; இன்றையத் தெரேசா அன்னை!— 'இரக்கம் உடையவர்கள் பாக்கியம் பெற்றவர்கள். உலகத்தின் இரக்கம் அவர்களை வந்தடையும்! இதயத்திலே தூய்மை உள்ளவர்கள் பாக்கியசாலிகள், பாக்கியவதிகள்! அவர்கள் ஆண்டவனைக் காண்பார்கள்!— இப்படிப்பட்ட ஏசுநாதரின் எத்தனை எத்தனையோ பொன்மொழிகளை நித்தநித்தம் எத்தனை எத்தனையோ தடவைகள் பிரார்த்தனைக் கீதங்களாகப் பயின்ற அக்னெஸின் இதயம் பரிபக்குவம் அடையத்தொடங்கியதில் ஆச்சரியம் இல்லை தான்!—உலகிலுள்ள ஏழைகளுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற மனிதாபிமானப் பண்பு அந்தப் பிஞ்சு மனத்தில் வேரோடி வலுவடையத் தலைப்பட்ட நேரத்தில், உலகின் கண் ஏழைகளின் நாடாக விளங்கிய இந்திய நாடு அச்சிறுமியின் உள்ளத்தில் நிழலாடத் தலைப்பட்டதிலும் வியப்பில்லை!— 'கேளுங்கள்; கொடுக்கப்படும்! தேடுங்கள்;

கண்டு அடைவீர்கள்! தட்டுங்கள்; திறக்கப்படும்!' என்னும் ஏசுமொழியே அப்பொழுது துறவுக்கன்னியென வளம் பெற்று, வாழ்வு பெற்று வந்த அக்னெஸின் வருங்காலக் குறிக்கோட் கனவாகவும் வளர்பிறை ஆயிற்று.

பழம்பெரும் நாடான பாரதத்திருநாடு புண்ணியத்தில் என்றென்றும் உயர்ந்து விளங்குவது அல்லவா? அந்தப் புண்ணியத்தின் நற்பலனுகவே, அக்னெஸின் இளம் நெஞ்சத்தில் ஏழை இந்தியா முன்னுரிமை பெறவும் முடிந்திருக்கவேண்டும்! கிறிஸ்தவ சமயத் தொண்டர்களும் 'லொரெட்டோ' கன்னியர் மடத்தைச் சார்ந்த சேவகிகளும் இந்திய மண்ணில், குறிப்பாக, கல்கத்தா நகரில், முனைப்புடன் ஆற்றி வந்த பொது நலத் தொண்டுகள்பற்றி அறிய அறிய, அக்னெஸின் அன்புக்கும் பரிவுக்கும் பாத்திரமான இந்தியா அவளது தொண்டு உள்ளத்தின் இலட்சியப் பூமியாகவும் ஆனது!

கனவுகள் இல்லையேல், லட்சியங்கள் இல்லை.

அக்னெஸைப் பொறுத்தமட்டில், அவளது கனவுகளும் லட்சியங்களுமே அவளது வாழ்க்கை ஆயின.

அது தியாக வாழ்க்கை!

தவ வாழ்க்கை அது!

அன்பையே உயிராகவும் துறவையே உள்ளமாகவும் கொண்ட கன்னி அக்னெஸ், 1929-ம் ஆண்டில் புனிதமான இந்திய நாட்டில் கல்கத்தாவின் புனிதமான மண்ணில் அடியெடுத்து வைத்தார்!

அன்று:

பாரதி எத்துணை அழகாகவும் சுதந்தரமாகவும் அன்பானதொரு கனவைக் கண்டிருக்கிறார்!

"அன்பிற்கினிய இந்தியா! அகில மதங்கள், நாடுகள், மாந்தருக்கெல்லாம் தாயே! எங்கள் உணர்

வினைத் தூண்டிய சேய்நெடுங் காலத்தின் முன்னே
சிறந்தொளிர் குருக்களை அளித்துக் குவலயங் காத்
தனை! திருக்கிளர் தெய்வப்பிறப்பினர் பலரை
உலகினுக் களித்தாய்! —உனதொளி ஞானம் இலகிட
நீயிங் கெழுந் தருளுகவே! விடுதலை பெறநாம் வேண்டி
நின் மறைவு படுமணி முகத்தைத் திறந்தெம் பார்வை
முன் வருக நீ! இங்குள மானுடச் சாதிகள் பொரு
களந் தவிர்த்தமைவுற்றிடப் புரிகநீ! மற்றவர் பகை
மையை அன்பினால் வாட்டுக! செற்றவர் படைகளை
மனையிடந் திருப்புக! தாயே! நின்றன் படைத்தனய
ராம் மாயக்கண்ணன், புத்தன், வலியசீர் இராமனும்
ஆங்கொரு மகமது இணையுற்ற விராவு புகழ் வீரரை
வேண்டுதும் இந்நாள்! “தோன்றினேன்!” என்று
சொல்லி வந்தருளும் சான்றோன் ஒருமுனி தருகநீ
எமக்கே! மோசே, கிறிஸ்து, நானக் முதலியோர்
மாசற வணங்கி, மக்கள் போற்றிடத் தகுந்திடுந்
திறத்தினர்தமைப் போலின்றொரு பவித்திர மகனைப்
பயந்தருள் புரிகநீ! என்முன் வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளக்குமொரு சேவகனை அருளுகநீ!”

பாரதம் வாழ்ந்திடவும் தேசத்தின் மக்கள் கவி விண்ணப்பம் செய்து கொண்ட மாதிரி, இந்தியநாட்டுக்குப் பவித்திர மகளாகக் கிடைத்தார் துறவுக் கன்னியாம் அக்னெஸ். அன்பின் தெய்வீகமான பணிக்கும் அறத்தின் புனிதமான கடமைக்கும் இந்தியத்தாயின் பொற்பாதங் களில் தன்னையே முழுமையாகக் காணிக்கை வைத்துவிட்ட கன்னித்துறவி அக்னெஸ், பாட்டுக்கொரு புலவன் கனவு கண்ட விதமாக, ஒரு சேவகனாகவும், ஆமாம், ஒரு சேவகி யாகவும் ஆகக்கூடிய பொன்னானதொரு நல்வாய்ப்பிற்காக ஏசு நாதரை நம்பிப் பிரார்த்தித்த நிலையிலே, கல்கத்தா வில் லொரெட்டோ கன்னியர் மடத்தில் இணைந்து ஆசிரி யைப் பணி புரிந்த அக்னெஸ் 1931-ல் தெரேசா எனும் பெயரைப் பெற்று, சுமார் இருபதாண்டுக் காலம் புனித

மேரி பள்ளியின் ஆசிரியையாகவும் தலைமை ஆசிரியை யாகவும் பணியைத் தொடர்ந்து அப்பால், 1946-ல் டார்ஜீலிங் பயணத்தின் போது, "மகளே! ஏழைகளிலும் ஏழைகட்கு இனி நீ பணி செய்வாயாக!" என்னும் கர்த் தரின் அழைப்பை ஆணையாக ஏற்று, கன்னிமடத்தைத் துறக்கவும் முடிவு செய்து, 1948-ம் ஆண்டில் இந்தியப் பிரஜை ஆனார்.

கன்னி தெரேசா, அன்னை தெரேசா ஆகி, கல்கத்தா பெருநகரில் மோதிஜில் எனும் சிறுசேரிப் புறத்தில் சுதந்தரப் பறவையாகப் பள்ளி ஒன்றைத் தொடங்கிய நேரத்தில், நோபல் பரிசைப் (1912) பெற்ற "கீதாஞ்சலி" யின் வரிகள் அவரது அன்பு இதயத்திலே திரும்பவும் திரும்பிப் பார்த்தன: "என் தலைவனே! இதுவே என் வேண்டுகோள்: எனது உள்ளத்தில் இருக்கும் வறுமை யைத் தொலைத்துவிடு. இன்ப துன்பங்களை எளிதில் தாங்கிக்கொள்ளும் மனவலிமையை எனக்குக் கொடு. பயனுள்ள வகையில் மக்களுக்குத் தொண்டு செய்யும் நெஞ்சுறுதியை எனக்கு அருள். ஏழைகளைப் புறக்கணிக் காமல் இருக்கவும், ஆணவத்தின் முன்னே அடிபணியாமல் இருக்கவும் கூடிய இதயப் பலத்தையும் எனக்குத் தந்தருள் வாயாக!"

"ஓ...மிஸ்டர் டாகுர்!"

மிக உயர்ந்த மனிதப் பண்பாளராகவும் மிகச் சிறந்த பொதுநலப் பணியாளராகவும் விளங்கிய வங்கக் கவியரசர் டாக்டர் தாகூரின் கீதாஞ்சலி வாசகங்கள் அன்னையின் மனிதாபிமான மனத்தளத்தில் மீண்டும் ஒலிக்கின்றன; எதிரொலிக்கின்றன!

மெய்மறந்த அன்னை சுயப்பிரக்கினையினை மீட்டுக் கொண்ட நேரத்தில், அப்பொழுது அவரது கையிலிருந்த அந்த வெறும் ஐந்துரூபாய் — ஐந்தே ஐந்து ரூபாய் சிரித்தது.

அந்தச் சிரிப்பில் அன்னை 'விதியைக் காணவில்லை— ஏசுவின் ஏழைகளைக் கண்டார்: ஏழைகளின் ஏசுவைக் கண்டார்!

21, டிசம்பர், 194 :

அப்போது அன்னையின் கைவசம் இருந்தது ஐந்து ரூபாய் மட்டுமேதானே?

கல்கத்தாவில் மோதிஜில் சேரிப்பக்கத்தில் காலியாகக் கிடந்த அந்த அறையில் பள்ளி ஒன்றை ஆரம்பிக்க உத்தேசித்து, வாடகையைக் கேட்டபோது, 'வாடகை மாதத்திற்கு ஐந்து ரூபாய்தான்!' என்று கிடைத்திட்ட அந்தப் பதிலைக்கேட்ட அன்னை அப்படியே மெய்சிலிர்த்துப் பரவசம் அடையலானார். உலகம் உய்ந்திடச் சிலுவையைச் சுமந்த அன்புக் கர்த்தரின் நற்கருணையை நினைந்து நினைந்து மகிழ்ச்சிப் பெருக்கில் கண்ணீர் பெருக்கினார். கிறிஸ்தவ சமய வாய்முறை வழிபாட்டில் அன்னையின் உதடுகளில் ஈரம் சொட்டியது.

கால உருண்டையில் நாட்கள் உருண்டன.

அன்பின் தூதுவராகப் பணிகள் புரிந்துவந்த தெரேசா அன்னையார், 1950, அக்டோபர், 7-ம் நாளன்று, கல்கத்தாவின் கிரீக் தெருவில், கிறிஸ்தவ மதத்தின் நெறிமுறை ஆதாரத்திலும் கற்பு நிலையை உறுதியோடு கடைப்பிடித்தல், ஏழ்மையை நெஞ்சுரத்துடன் பின்பற்றுதல், மற்றும் பணிவன்பை வாழ்க்கையில் மேற்கொள்ளுதல் போன்ற உறுதிநிலை நோன்புகளின் வழித்துணையிலும், அன்பின் தூதுவர்கள் என்னும் பெயரிட்டு, அறநெறிப்பணி இயக்கத்தைச் சட்டரீதியாக நிறுவினார்.

இந்திய மண்ணில் அன்னை ஆரம்பித்த இவ்வமைப்பு இன்று (1983) உலகத்தின் முக்கியமான நாடு நகரங்களிலெல்லாம் ஆல்போல் தழைத்து நாளும் பொழுதும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது!

வரலாற்றில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பெருமையும் பெருமிதமும் கொண்ட இந்தியநாடு ஏழைகளின் நாடுதான்!— ஆனாலும், இந்தியாவின் ஏழைமையைப் போக்கிட, வாழ்க்கையின் பல நிலைகளில் பேர் பெற்ற பெரியவர்கள் பலர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அன்றைக்கு எத்தனை எத்தனையோ அன்புத் தொண்டுகளை எத்தனை எத்தனையோ வழி வகைகளிலே செய்தார்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்ற நாவுக்கரசரின் வாய்மொழி, வாய்மை மொழியே அல்லவா? "உலகிற்கும் உலக மக்களுக்கும் நன்மை செய்வதொன்றே நமது உன்னத லட்சியமாக அமைதல் வேண்டும்!" என்று அன்று உலகமேடையில் ஞான முழக்கமாக வீரமுழக்கம் செய்யவில்லையா சுவாமி விவேகானந்தர்!

"தாழ்வுற்று, வறுமைமிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டுக் கிடந்ததாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா!" நாடு விடுதலை பெறவும் எல்லோரையும் ஒரே நிறையாக வாழச் செய்யவும் தமது வாழ்நாளையே அர்ப்பணம் செய்தது கதையல்ல; சரித்திரம்!—அன்பு என்பதற்குச் சாதி, மதம், இனம், மொழி, நாடு என்கிற வேற்றுமைகள் எதுவுமே கிடையாது. நீதி நியாயங்களை எதிர்பாராமல் சரணாகதி அடைவதுதான் அன்பின் சட்டமாகும்!" எனவும், "சுயநலமே இல்லாத, அன்புமயமான தொண்டின் மூலமாகவே உணர்ந்தறிய முடியுமென்பதை நான் அறிந்துணர்ந்து கொண்டேன். ஆதலின், தொண்டு செய்யும் மதத்தையே என் மதமாகச் செய்து கொண்டேன். அந்தரங்க சுத்தியுடன் ஊழியப் பணிகள் புரிந்தால், மரணத்திற்குப் பிறகும் கூட, அவை சிரஞ்சீவியாக இருக்கும்; தொண்டு புரிகிறவர்களும் சிரஞ்சீவியாகி விடுவார்கள்! ஆமாம்; தொண்டுக்குத் தொண்டுதான் வெகுமதி!" எனவும் அமரவாக்குக்

கொடுத்துள்ள தேசத்தந்தை ஏழை எளியவர்களுக்கு, குறிப்பாக, தொழுநோயாளிகளுக்கு ஆற்றிய ஊழியங்களை காலம் நிரந்தரமாகவே சொல்லிக் கொண்டிருக்குமே!

ஆசியஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு, ஆமதாபாத் நகரத்தில் நடைபெற்ற மாதர் கூட்டமொன்றில், 31—1—1951 அன்று உரை நிகழ்த்திய பொழுதில் குறிப்பிட்டார்: "... சமூகம் ஒரு குழந்தை மாதிரி குழந்தை வளர்ந்து பெரியவன் ஆன பின், குழந்தைப் பருவத்துச் சட்டையையே அவனுக்கு அணிவிக்க முயற்சி செய்தால், அச்சட்டை கிழிந்துவிடும். அது போன்றே, சமுதாயமும் காலத்துக்கு ஏற்றபடி வளர்ந்து புதிய பழக்கவழக்கங்களை ஏற்றுக் கொள்கிறது. இப்படிப் பட்ட புதிய நிலையை—புதிய மாற்றத்தை அனுமதிக்க மறுத்தால், புரட்சி வந்து, சமூகத்தை மாற்றிய தீரும். உலகம் மாறிக் கொண்டே இருப்பதால், எந்தத் தேசமும் மாறுமல் ஒதுங்கி நிற்கவே முடியாது!..."

அனுபவம் கண்ட உண்மை இது:

அந்நிய நாட்டவர்களிலே, இந்திய நாட்டின்பால் அந்நியோன்யமான உறவும் உரிமையும் கொண்டு, இந்திய நாட்டின் நல்வாழ்வுக்காகப் பணியாற்றியவர்களில் டாக்டர் **அன்னிபெசண்ட் அம்மையார்** (Dr. Annie Besant) (1847—1933) குறிப்பிடத்தகுந்தவர்; பாரதத் திருநாட்டை அன்று அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கில நாட்டைச் சார்ந்த அம்மையார், பாரதத்தில் அடியெடுத்து வைத்து, இந்நாட்டை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க உழைத்ததோடு, சாதி சமய மறுபாடில்லாமல் மக்கள் அனைவரையும் ஒரே அன்புச் சமுதாயமாக ஆக்கும் வழியில், இந்தியச் சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்து, பெண்மைப் பணியுடன் பொது நலப்பணியும் புரிந்தவர் புகழொடு தோன்றிய அம்மையார்!

அன்பே உயிர் வடிவமாகவும் அனைத்து உயிர்கட்கும் ஆருயிர்த் தோழியாகவும் சாலையோர மருத்துவப் பணிகள்

செய்து தமிழ் மண்ணைச் சார்ந்த வேலூர் எனும் நகரத்தைத் தமது மருத்துவப்பணி மனைகளைக் கொண்டு உலகப்புகழ் பெறச் செய்த பெருமைக்கு உரிய அமெரிக்க நாட்டு அம்மையார்தான் டாக்டர் ஐடா ஸ்கடர் (Dr. Ida Scudder) ஆவார் (1870—1960). இந்திய நாட்டில் பொருளாதார ஏற்ற இறக்கம், அறியாமை, மூடநம்பிக்கை மற்றும் சாதிக் கொடுமை—தீண்டாமை போன்ற எல்லைகள் காரணமாக எல்லையற்ற தொல்லைகளை அனுபவிக்க நேர்ந்த பெண்களின் நல்வாழ்வுக்காகவும் தொண்டாற்றியவர் அவர்.

அம்மையார் இந்தியாவில் குடியேறிய காலத்தில்' நமது இந்தியப் பெண்மணிகள் பிரசவகாலங்களில் பெண் டாக்டர்கள் இல்லாததால் பெருமளவில் துயரப்பட நேர்ந்த நடப்பை அனுபவ பூர்வமாக உணர்ந்து, தாமே ஒரு டாக்டர் ஆனவர். மருத்துவத் துறையிலே பெண்களையும் உருவாக்கிப் பெண் குலத்துக்குச் சேவைகள் செய்யவேண்டுமென்ற சீரிய கருத்துடன், 1918-ல் வேலூரில் மருத்துவக் கல்லூரி ஒன்றைப் பெருமுயற்சியின் பேரில் தோற்றுவித்தார். பாவேந்தர் பாடினமாதிரி, இருட்டறையில் உழன்ற உலகத்திற்கு—ஏழைகளின் உலகத்திற்கு நந்தா விளக்கெனப் பணிபுரிந்திட ஆங்கில நாட்டு மருத்துவத் தாதியான ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் மாதிரியே, டாக்டர் ஐடாவும் அமரப் புகழ் கொண்டு விளங்குகிறார். டாக்டர் ஆல்பர்ட் ஸ்வைட்ஸர் ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த ஸாம்பரீன் என்னும் இடத்தைத் தமது அரிய மருத்துவப் பணிகளின் மூலம் உலகப் பிரசித்தம் அடையச் செய்யவில்லையா? அதைப் போலவே, தமிழகத்தைச் சேர்ந்த வேலூரைத் தமது மருத்துவத் தொண்டால் உலகப்புகழ் பெறச் செய்தவர் டாக்டர் ஐடா ஸ்கட்டர். வேலூர் கிறித்தவ மருத்துவக் கல்லூரியின் இருதயச் சிகிச்சைத் துறையின் வெள்ளி விழா

நிகழ்ச்சிகளை 14—2—1976-ம் நாளில் ஆரம்பித்து வைத்த பாரதப் பிரதமர் திருமதி காந்தி அவர்கள் "இந்நிறுவனம் ஒரு பெண்மணி கண்ட கனவின் நினைவாகும்!" என்று டாக்டர் ஐடா அம்மையாருக்குப் புகழ் அஞ்சலி செலுத்தினார்.*

இருபதாம் நூற்றாண்டின் விந்தைப் பெண்மணியாகப் பெருமைபெற்ற ஹெலன் கெல்லர் (Helen Keller 1880—1968) கண், காது, வாய் ஆகிய மூன்று புலன்களிலும் குறைபாடு கொண்டிருந்தாலும் தொடு உணர்வுகள் மற்றும் நுகர்சக்தி உணர்வுகளின் உதவிகொண்டு, உலகிடை இருளில் ஒளியாக வாழ்ந்து, ஊனமுற்றோர் சமுதாயத்திற்கு அளப்பரிய தொண்டுகள் புரிந்து வாழ்ந்து காட்டியவர் ஆயிற்றே!

சான்றாண்மையில் உலகம் போற்ற வாழ்ந்த அம்மையார் புகழுடம்பு எய்திய துயரச் செய்தி கேட்டு, பாரதத்தின் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இவ்வாறு புகழ்ந்துரைத்தார்: "ஆச்சரியப்படத்தக்க மனத்தின் துணிவினால் மகத்தான சாதனைகளைச் செய்து ஒளிவிளக்காக உலகில் வாழ்ந்து காண்பித்தவர் அம்மையார் ஹெலன் கெல்லர்!"

உலக நலப்பணிகள் புரிந்த சான்றோர்களின் வரிசையில் முன்னணியில் அமர்ந்து, அல்லும் பகலும் அயராமல் அன்புப் பணிகள் புரிந்து, திக்கற்ற ஏழைகளின் திக்குத் தெரிந்த ஓர் அன்புத் தேவதை மாதிரி நாம் காண நம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அன்னை தெரேசா

---

*டாக்டர் ஐடா ஸ்கட்டர் மற்றும் ஹெலன்கெல்லர் அம்மணிகள் பற்றின 'பூவையின் வாழ்வியல் நூல்களை'யும் மணிவாசகர் பதிப்பகம் தனித்தனியாகவே விரைவில் வெளிப்படுத்தும்.

அவர்களின் வாழ்க்கையே தெய்விகம் நிரம்பிய, அதிசய மானதோர் சரித்திரம் என்றும் சொல்ல வேண்டும்.

அச்சமயத்தில் தன் கையிருப்பில் தெய்வாதீனமாகத் தங்கியிருந்த அதிசயமான ஐந்தே ஐந்து ரூபாயைக் கொண்டு கல்கத்தா மோத்திஜில் சேரியில் அன்னை தெரேசா அவர்கள் ஆரம்பித்த பள்ளி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்தது போலவே, அன்னையின் பொதுநலப் பணிகளும் வளர்ச்சியடையலாயின. அன்பிற்காக ஏங்கிய வர்களாக, நடுத்தெருக்களில் செத்துமடிந்து கொண் டிருந்த ஏழைகளைத் தேடி அலைந்து கண்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, மண்ணுலகில் அவர்கள் வாழக்கூடிய சில மணி நேரத்திலாவது நிம்மதியை அனுபவிக்கவும் வழிகளைச் செய்தார். அப்படிப்பட்ட சூழலிலேதான், கடவுளின் குழந்தைகளான ஏழை எளியவர்களைக் காப்பதற்கு ஓர் இல்லம் அவசியம் தேவை யென்பதையும் உணர்ந்தார்.

நாட்கள் மெய்யான உள்ளன்பை ஒத்து, ஆரவார மின்றி ஒவ்வொன்றாக நகர்கின்றன.

அன்னையின் உளந்தோய்ந்த பொதுத் தொண்டுகளை மக்கள் உளமார அறிகின்றனர்.

பரிசுப்பொருட்களும், உணவுப் பண்டங்களும், போர் வைகள் மற்றும் மருந்துகளும் அன்னையின் அன்பைத் தேடி வருகின்றன.

அன்னையைப் பொறுத்த அளவில், கர்த்தர் ஏசுவின் அன்பும் கருணையும்தான் அவருக்கு உயிர், உலகம், வாழ்வு எல்லாம்! பாவப்பட்ட ஆத்மாக்களின் பாவ மன்னிப்புக் கென அன்னை தோத்திரம் செய்து, தேவதூதனின் ஆசீர் வாதத்தை வேண்டும் நேரங்களும் கூடலாயின.

அன்பை விதைத்தார் அன்னை.

அன்னை அன்பின் விளைச்சலை அறுவடை செய்கிறார்!

அன்னையின் அன்புப் பணிகள் நாடு இனம் சமயம் மொழி மதம் கடந்து, முழு உலகினை முழுமையாகத் தழுவிய நிலையிலேயே அன்றும் இன்றும் தொடர்கின்றன; அவ்வாறே, அன்னையின் அன்புப் பணி இயக்கத்தை நாடிவரும் பரிசில்களும் நன்கொடைகளும் அமைகின்றன.

அந்நாளில் பிரசித்திபெற்ற மருத்துவ நிபுணராகவும் பொதுவுடைமைவாதியாகவும் பிரபலமடைந்திருந்த மேற்கு வங்கத்தின் முதல்வர் டாக்டர் பி. ஸி. ராய் (Dr. B. C. Roy) அவர்கள் அன்னை தெரேசா ஏழைகளுக்காகப் பாடுபட்டு வந்த உண்மையான பொதுநலச் சேவைகளை மனப்பூர்வமாக உணர்ந்தறிந்த நாள் முதலாக அன்னையின்பால் அளவில்லாத அன்பும் மரியாதையும் மதிப்பும் கொண்டு, அன்னைக்குத் தேவைப்பட்ட உதவிகளை, தேவையான நேரங்களில் அரசாங்க முறையிலும் சொந்த முறையிலும் செய்துள்ளார். எந்நேரத்திலும் தம்மை வந்து பார்க்கலாமெனவும் அன்னைக்கு அனுமதி வழங்கினர். ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவச் சிகிச்சைகள் செய்து வந்த மனிதப் பண்பாளர், குழந்தைகளுக்கான விடுதிகளை அதிக அளவில் ஏற்படுத்த அன்னையைத் தூண்டியதோடு, பொருள் உதவிகளையும் செய்தார்.

1957-ல் கல்கத்தாவின் புறநகரான 'கோபரா' என்னும் பகுதியில் தொழுநோயாளிகளுக்காக ஓர் இல்லத்தைத் தொடங்கினர் அன்னை.

தொழுநோய் மருத்துவத்தில் வல்லுனரான டாக்டர் ஸென், அன்னையின் அன்புப் பணி அமைப்பைச் சேர்ந்த கன்னிச் சகோதரியர்க்குப் பயிற்சி அளித்தார். "தொழுநோய் பற்றிப் பீடிக்கத் தொடங்கும் ஆரம்பக் காலத்திலேயே, நோயாளிகள் சிகிச்சை பெற முயற்சி செய்தால், நோயைக் குணப்படுத்தி விடலாம்; பிரிட்டன், அமெரிக்க

ஐக்கிய நாடுகள் போன்ற அயல்நாடுகளிலிருந்து அதற்கான புதிய கண்டுபிடிப்பு மருந்துகள் எங்களுக்குக் கிடைக்கத் தொடங்கியுள்ளன!'' என்றார் டாக்டர்.

இந்திய மண்ணில் செயற்கரிய செய்து வந்த தெரேசா அன்னையாரின் அன்புப் பணிகளுக்கு உறுதுணையாக வெளி நாட்டினரும் அவ்வப்போது உதவிகள் பலவற்றைப் பெருமளவில் செய்தனர்.

பங்களாதேஷ் அகதிகளுக்குப் புகலிடம் அளித்து, அன்னை தெரேசா தமது அறப்பணி இயக்கத்தின் வாயிலாக ஆற்றிய நற்பணிகளில் மனத்தைப் பறிகொடுத்த அமெரிக்க ஜனாதிபதி அமரர் கென்னடியின் சகோதரர் எட்வர்ட் கென்னடி தமது குடும்பத்தின் அறக்கொடையிலிருந்து பெருந்தொகையை நன்கொடையாக அளித்தார்.

பாரதத்தில் அமர்ந்திருந்த ஸ்விட்ஸர்லாந்து நாட்டின் தூதுவர் அன்னையைக் கல்கத்தாவில் சந்தித்து நாட்டின் தலைநகரான புதுடில்லியில் குழந்தைகள் காப்பகம் ஒன்றை நிறுவுவதற்கு ஆவன செய்தார். அவ்வாறு அமைக்கப்பட்ட குழந்தைகள் விடுதியின் தொடக்க விழாவில் பாரதத்தின் பிரதமர் நேரு பெருமையுடன் கலந்து கொண்டார்.

விழாவில் அன்னை அவர்களின் இதயம் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசியது : "...அன்புப் பணி என்பது கடலைப் போன்றது; நாங்கள் இப்போது செய்து கொண்டிருக்கும் பணிகளெல்லாம் ஒரு துளி என்பதாகவே நாங்கள் உணர்கிறோம். ஆனால், எங்களுடைய பணித்துளி கடலில் சேராவிட்டால், கடல் போன்ற மிகப் பெரிய அறப் பணிகள் குறைந்துபோய் விடுமே? ஆகவே, அன்புப் பணிக் கடலை உண்மையிலேயே மதிப்படையச் செய்திட, நாம் அனைவரும் தொடர்ந்து அன்புப் பணிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டுமென்பதே என் விண்ணப்பம்!''

1964-ம் ஆண்டில், போப் ஆண்டவர் பால் அவர்கள் (Pope Paul VI) பம்பாயில் நடத்திய சபையில் (The International Eucharistic Congress) கலந்து கொள்ள வருகை தந்தபோது, அப்போது இந்தியக் குடியரசின் தலைவரான மாபெரும் தத்துவ ஞானியான டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் அவரை வரவேற்றார்.

அமெரிக்க நாட்டுச் சீமான் ஒருவர் அன்புடன் பரிசளித்த விலைமதிப்பு மிகுந்த காரில் பம்பாய் வீதிகளில் பவனி வந்தார் போப் ஆண்டவர்; அன்னையின் அறப்பணி நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தார். "அன்னையே, உங்கள் அன்புப் பணிகள் வெகு அற்புதமானவை! உண்மை தான்: ஏசுபிரானே அற்புதமானவர்தான்!" என்று அன்னையை ஆண்டவன் ஏசுவின் பெயரால் ஆசீர்வதித்தார். போப் ஆண்டவர் அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னால், தமக்கு அன்பளிப்பாய்க் கிட்டிய சிறந்த அமைப்புடைய அந்தக் காரை தெரேசா அன்னைக்குத் தமது அன்பின் பரிசிலாக வழங்கினார். பரிசுச்சீட்டு குலுக்கலின் மூலம் அழகான அந்த வாகனம் அன்னையின் அன்புப் பணிகளுக் கென ஈட்டித் தந்த தொகை ரூபாய் நாலரை லட்சத் திற்கும் கூடுதலாக அமைந்தது.

மனிதத் தன்மை நிரம்பிக் கீர்த்தி அடைந்த டாக்டர் கோஷ் மனிதாபிமானத்துடன் அன்னைக்கு டம்டம் விமான நிலையத்தருகில் அளித்த பெரிய மனை மன நோய்க்கு ஆளான குழந்தைகளின் நலனைக் கட்டிக் காக்க உதவிற்று.

அன்னையின் பொதுநலச் சேவைக்கான தேவைகள் ஆண்டவனுக்குப் புரியும்.

'ஹிந்துஸ்தான் லீவர்ஸ்' நிறுவனத்தின் தலைவர் திரு. தாமஸ் ஒருமுறை, அன்னையைச் சந்தித்து, தமது

பம்பாய்ச் சொத்தை அன்னை நடைமுறைப் படுத்திவந்த உலகமக்கள் தொண்டுக்காக எழுதிக் கொடுத்தார்.

தியாக மனம் கொண்ட நிதி மிக்க நல்ல மனிதர்கள் வழங்கிய நன்கொடைகளையும் அன்னை மறுப்பது கிடையாது தான்!

ஜான் ஸ்ட்ரீட் (John Street) என்னும் பெயர் சூடிய ஆஸ்திரேலியச் செல்வந்தர் அன்னையின் பொது நலச் சேவைகளின் நன்றிக்கு அடையாளமாக 50,000 டாலர் களுக்கான (சுமார் நாலரை இலட்ச ரூபாய்) காசோலை ஒன்றை அன்னையிடம் சமர்ப்பித்தார்; அத்துடன் அவர் திருப்தி அடையவில்லை. சாவைத் தரிசிக்கக் காத்திருந்த ஏழைகளின் இல்லத்தில் கொஞ்ச காலம் தங்கியிருந்து, உடன் உழைக்கும் பரிசுத்தச் சகோதரர்களோடு இணைந்து அன்புப் பணிகளையும் அச்சீமான் செய்தார்.

கல்கத்தாவில் அமைந்திருந்த ஆங்கிலேயக் கம்பெனி ஒன்று, பிரம்மாண்டமானதொரு கட்டடத்தை அன்னையின் இயக்கத்திற்குச் சன்மானமாகக் கொடுத்தது. அது 'பிரேம்தன்' (Prem Daan) எனப் பெயர் பெற்றது; புதிதெனத் திட்டமிடப்பட்ட நடைமுறைச் செயற் பணிகள் பெண்குலத்தின் மேன்மையைப் பிரதானமாய்க் கொண்டு இயங்கலாயின.

நாமக்கல் கவிஞரின் நல்வாக்குப் பலிதமடைய வேண்டும்!—

" தாழ்ந்தவரென்போர் இங்கே இல்லை;
தரித்திரம் நமக்கு இனிப் பங்கில்லை! "

உலகத்தை உண்டாக்கியவன் ஆண்டவன்தான்; சம தருமப் பாவனையில் இயங்கக்கூடிய அவனது படைப்பில், மனித உயிர்களும் சேர்த்திதான்; ஆனாலும், மனிதர் களிடையே உண்டாக்கப்படுகின்ற உயர்வுக்கும், தாழ்வுக்கும் இதே மனிதர்கள்தாமே காரணம்

ஆகின்றனர்? — நெறி பிசகிய இத்தகைய அதர்மப் போக்குக் காரணமாகின்ற 'விதி' என்ன?

இதுவேதான் படைப்பின் புதிரா?

இப்புதிரில்தான் விதி விளையாடுகிறதா?

என்ன விதியாம் அது?

தவவேள்வி என்னும் விளைநிலத்திலே தூய அன்பு என்னும் ஆலமரத்தை ஊன்றி நட்டு, தியாகம் என்கிற நீர் ஊற்றி, கடமையுடனும், கட்டுப்பாடுடனும் வளர்த்த அந்த ஆலமரம் உலகம் போற்றத் தக்கபடி, ஓர் அன்பு இயக்கமாகத் தழைத்து உலகம் யாவையும் ஆக்கிய ஆண்டவனின் அருளாலும் அன்னை தெரேசாவின் அயராத பணிகளாலும் உலக நாடுகளில் விழுதோடிக் கிளைகள் தோன்றலாயின.

இந்தியப் புனித மண்ணில் அன்னை தொடங்கி வைத்த அன்புப் பணி இயக்கத்தின் (Missionaries of Charity) முதல் மைய நிலையம் இந்தியாவுக்கு வெளியே அமைக்கப்பட்ட இடம் வெனெஸுலா (Venuzuela) எனப்படும் லத்தீன் அமெரிக்க நாடு ஆகும். 1965-ம் ஆண்டில் அந்நாட்டின் மதகுருவின் அழைப்பின் பேரில் காராகஸ் தலைநகருக்கு அருகில் நிறுவப்பட்டது. தொடர்ந்து, கொலம்பியா, பிரேஸில் முதலிய தென் அமெரிக்க நாடுகளிலும் அன்புப் பணி தொடரலாயிற்று.

இலங்கையில் (ஸ்ரீலங்கா) கொழும்பு நகரத்தில் 1967-ம் ஆண்டில் அன்பின் இயக்கத்துக்கு ஒரு சேதுப் பாலம் சமைக்கப்பட்டது.

கிறிஸ்தவ மதத்தின் புண்ணியத் தலமான ரோம் நகரிலும் அன்னையின் அன்புப் பணி இயக்கம் தனது கேந்திரம் ஒன்றை அமைத்திட வேண்டுமென புனிதத் தந்தையாம் போப் ஆண்டவர் விருப்பம் தெரிவித்தார்.

அவ்வாறே, 1968-ல் ரோம் நகரிலும் அறப்பணிகள் ஆரம்பமாயின.

"இப்போது நாம் நமது புனிதத் தந்தைக்கு வெகு அருகாமையில் வந்து விட்டோமே?—போப் ஆண்டவர் நமக்கு எவ்வளவு பெரிய மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்!—எல்லாம் ஆண்டவன் ஏசுவின் செயல்!"—அன்னை மெய்ம் மறந்தார்.

"இத்தனை காலமும் நான் தனிமையில் தவித்தேன்; இப்போது நீங்கள் ஆண்டவனை என் இல்லத்துக்கே கொண்டு வந்து விட்டீர்கள், ஸிஸ்டர்!"—போப் ஆண்டவர் பரவசமடைந்தார்.

உலகம் முற்றிலும் கொடி முல்லையெனப் படர்ந்து பரவி வரும் கிறிஸ்தவ சமயம் முழுமைக்கும் ஆணைத் தலைவராகத் திகழ்ந்து வரும் போப் ஆண்டவரின் அருட் கருணையைப் பெறற்கரிய நற்பாக்கியமாகவும் தெய்வத் தந்தை தமக்கு அருளிய மகத்தான வரப்பிரசாதமாகவும் கருதி அமைதியடைந்தார்கள் அன்னை. பிறகு 1969-ல் ஆஸ்திரேலியாவில் 'பர்த்' நகரிலும், 1970-ல் மெல்பொர்ன் நகரத்திலும், பிறகு ஏமன், ஜோர்டான் போன்ற யூதம், இஸ்லாம், கிறிஸ்துவம் ஆகிய முச்சமயங்கள் 'ஒரே கடவுள்' தத்துவத்தின் கீழ் வளர்ந்து வரும் மத்தியக் கிழக்கு அரேபிய நாடுகளிலும் அன்னையின் அருட்பணிகள் தீவிரமடைந்தன.

அன்னையின் அன்பு தொடர் நிழலாகத் தொடரப் பாக்கியம் பெற்ற உலக நாடுகள் ஏராளம். எத்யோப்பியா, தான்சேனியா, வியட்நாம், இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம்—இப்படிப் பட்டியல் நீளும் அல்லவா?

தருமம் மிகுந்தது தமிழகம். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றி மூத்த குடியான தமிழினம் அறத்தை வளர்த்துப் பேணிக் காப்பதில் அன்று முதல் இன்று வரை முதன்மைப் பெற்று விளங்கி

வருகிறது; சரித்திரத்தில் வாழ்ந்து வரும் தமிழகத்தில் காலத்தை வென்று நிற்பவள் அறச்செல்வி **மணிமேகலை.** மற்றுமொரு கன்னித்துறவி மணிமேகலையாக, நாம் காண உலக அரங்கில் அன்பின் ஒளியாகப் பொலிந்து வருகின்ற அன்னை தெரேசா அவர்களின் அன்புப் புரட்சிக்கும், அறப் புரட்சிக்கும் என்றென்றும் உதாரணம் தரக்கூடிய நிரந்தரமான உதாரணமாக அமைந்துள்ள அன்புப் பணி அமைப்பின் கிளை நிறுவனங்கள், பெற்ற தாயென்று கும்பிடப்படும் தமிழ்த் திருநாட்டின் தலைநகரான சென்னை யில் இராயபுரத்திலும், தியாகராயநகர் மற்றும் சைதாப் பேட்டையிலும், அப்பால், சென்னையை அண்டியிருக்கும் எண்ணூரிலும் பல்லவப் புகழ் நிலைத்த காஞ்சியிலும், சங்கம் வளர்த்துத் தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலாம் மதுரையிலும், தொழிற்கேந்திரம் கோவையிலும், கோட்டைநகர் வேலூரிலும் செயலாற்றி வருகின்றன. அறம் வளர்க்கும் தமிழ் மண்ணிலே அன்பை வளர்த்த அனாதை இல்லங்கள் மற்றும் சேவாதளங்கள் போன்ற பொதுப் பணி மன்றங்களுக்கு மத்தியில் அன்னையின் மக்கட் பணிகளும் தொடர்ந்து வருகின்றன!

அன்பே ஆண்டவன்!

அன்பே ஆண்டவனின் குழந்தைகள்!

அன்புதான் உலகம்!

எம்மதமும் சம்மதம் தெரிவிக்கும் இயற்கைத் தத்துவங்கள் இவை.

இத்தத்துவங்களின் நியதிக் கோட்பாடுகளின் தாயக மாகவும், யாகசாலையாகவும் பேரன்பின் உலகப் பேரொளியாக விளங்கி வரும் தெரேசாவின் அன்புப் பணி இயக்கத்தின் மைய அமைப்புக்கள் அனைத்து உலக நாடுகளிலும் பொதுநல அன்புத் தொண்டுகள் புரிந்து வருகின்றன. அன்பை இழந்த அனாதைகள், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட அபலைகள், இறந்து

கொண்டிருப்பவர்கள், போதை மற்றும் மருந்துகட்குக் கொத்தடிமை ஆனவர்கள் முதலான ஏழைகளிலும் ஏழைகளான ஆடவர்—மகளிர் உலகத்தின் எந்த மூலைமுடுக்குகளில் இருந்தாலும் சரி, அங்கெல்லாம் அன்னையின் அன்பின் தூதுவர்கள், கன்னிச் சகோதரிகள், தூய சகோதரர்கள், உடன் உழைப்பவர்கள் மற்றும் சமூக நலப்பணி ஆர்வலர்கள் என்னும் வெவ்வேறு அமைப்புக்களாகச் செயற்பட்டு வருவதும் உலகறிந்த அன்புச் செய்திதான்!

அதிசயிக்கத்தக்க அன்னை தெரேசாவின் அறம் சார்ந்த நற்பணிகள் ஆழிசூழ் உலகின் ஐந்து கண்டங்களிலும் பரவியுள்ளன; இவ்வகையில் முக்கியம் பெறும் நாடுகள் ஐம்பத்திஒன்றுக்கும் கூடுதலாகின்றன. செயலாற்றும் இல்லங்கள் இருநூற்றிப்பன்னிரண்டுக்கும் அதிகம். இரண்டாயிரத்துக்கும் மிஞ்சிய தூய சகோதரிகளும், நானூற்றையும் தாண்டிய அன்புச் சோதரர்களும் ஆயிரக்கணக்கான உடன் உழைப்பாளர்களும் இப் பணிகளில் பாகம் பெறுகிறார்கள். மேலும் இந்தியாவில் மட்டுமே நூற்றுப்பத்துக்கும் மேற்பட்ட அன்பு மையங்கள் இயங்கி வருகின்றன! (1982)

இந்த உலகநலப் பொதுச்செய்தியையும் உலக ஏடுகள் அத்தனையும் அறியும்!

# 8. இயேசு வாழ்கின்ற ஏழைகளின் சிரிப்பு!

தமிழகத்தின் முதல்வர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஏழைமக்கள் வாழ்வு பெறவும் வளம் பெறவும் அரசுரீதியாகவும் நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டு வருவதை நாடும் வீடும் உணரும். தமிழ் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் கிராம— நகர்ப்புற அபிவிருத்திக்காக, ஆரம்பப்பள்ளிக் குழந்தைகள் 38 லட்சம் பேருக்குக் கிட்டத்தட்ட 100கோடி ரூபாய் செலவில் தினமும் இலவசமாக மதியச் சத்து உணவை வழங்கும் நல்லதொரு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் 1—7—1982-ல் ஆரம்பித்து வைத்தார்!

அன்பு கூடிய ஏழைமக்கள் பணிகளைத் தேசிய நற்பணிகளாக உலகம் தழுவிய வழிகளில் செயற்படுத்தி வருகின்ற அன்னை அவர்கள் மக்கள் தலைவருக்குத் 'தாய்' இதழ் வாயிலாக வாழ்த்துத் தெரிவித்ததும் குறிக்கத்தக்க நடப்பு ஆகிறது.

அன்பே அகலாகவும், ஆர்வமே நெய்யாகவும் கொண்டு அன்புப் பணிகளையும், அறப்பணிகளையும் ஆண்டவனுக்குத் தருமமாகவும், சத்தியமாகவும், உண்மையாகவும் ஆற்றி வரும் அன்னைக்குத் தமிழ்கூறு நல்லுலகத்தின் சார்பில் நன்றி வணக்கங்களைத் 'தாய்' இதழ் தெரிவித்த காலையில், தமது இயக்கத்தின் சார்பில் அன்னை நல்வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொண்டார்:

"ஆண்டவனே அன்பு! ஆண்டவன் மக்கள் எல்லோரையுமே நேசிக்கிறார். அதேபோல், மக்களும் ஒருவரையொருவர் நேசித்தல் அவசியம். அப்போதுதான், ஒவ்வொருவரும் அன்புக்குத் தூது சென்று, அமைதியை உலகிடை வாழவைக்க இயலும். அனைவரையும் ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக!"

இங்கே:

காசுதான் கடவுள் என்கிறார்கள்.

இது உலக மொழியாகவும் இருக்கலாம்; உலக வழக்காகவும் இருக்கக் கூடும்.

குமாரி அக்னெஸாக அன்னை இருந்த அக்காலத்தில் அவருக்குக் கைவசம் இருந்த அந்த ஐந்து ரூபாய்தான் கடவுளாகத் தோன்றியிருக்கவேண்டும். காரணம் இது தான்: மோதிஜில் சேரிப்பகுதியில் அவர் நடத்த விரும்பிய ஏழைப் பள்ளிக்கான குடிசையின் வாடகை சரியாக ரூபாய் ஐந்து மட்டுமேதான் என்பதை அறிந்ததும், அவர் மனக் கண்ணில், சிலுவையிலே உயிர்த்த ஏசுதான் தோன்றியிருக்க வேண்டும்.

வெறும் ஐந்தே ஐந்து ரூபாயில், மெழுகுவர்த்திப் பூஜையும் வாய்முறை வழிபாடும் நடத்திய துறவுக்கன்னி அக்னெஸ் அன்று தொடங்கிய அன்புப் பணிதானே இன்று அக்னெஸ் அன்னை தெரேசாவென உலகத்தின் மத்தியில் அன்புக் கலங்கரையாக ஒளி காட்டவும், வழிகாட்டவும் செய்திருக்கிறது!

இந்நேரத்தில்—

அன்னை ஒருசமயம் மனம் திறந்தும் மெய்ம் மறந்தும் சொன்ன பக்திபூர்வமானதோர் உண்மை அன்பிற்கு ஓர் ஆர்வத் தூண்டுதலாகவே அமையும்! — "நான் பணத்தைப் பற்றி என்றைக்குமே கவலைப்பட்டது கிடையாது. ஏழைமக்களுக்குச் சேவை செய்வதில் பணம்

குறுக்கீடாக இருப்பதாக நான் கருதுவதே இல்லை. நான் எதையாவது செய்யவேண்டுமானால், முதன் முதலில் அதை நேரடித் தலைவராகிய ஆண்டவனிடமே சொல்லி விடுகிறேன்; என் தலைவரே என் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். எப்படியோ பணம் வந்து சேர்ந்துவிடும். பணம் கிடைக்கவில்லை, நான் கேட்டதைப் பெறவில்லை யென்றால், அதற்காக நான் வருந்துவது கிடையாது. ஏனென்றால், அது இறைவனுக்கே விருப்பமில்லை யென்று எண்ணி, நான் செய்ய விரும்பிய காரியத்தைச் செய்யாமல் நிறுத்திவிடுவேன்!"

அன்னை விசுவாசத்தோடு செபம் செய்து கர்த்தரிடம் வேண்டுதல் விடுத்த காரியங்களெல்லாம் கர்த்தர் அருளால் நல்லபடியாகவே நடந்தேறியிருக்கின்றன.

'ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்;
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்!'

திருமூலர் தம் திருவாக்கில் மனிதாபிமானத்தால் உயர்ந்து நின்ற அன்னையின் பணி வாழ்வில் கருணை வள்ளல் உண்டாக்கிக் காண்பித்த அதிசயங்கள் ஒன்றா, இரண்டா?

ஒரு சமயத்தில், அன்னையும் அன்னையின் சகோதரி களும் அரிசி இல்லாமல் பட்டினி கிடக்க வேண்டி வந்த ஓர் அவலச் சோதனையின் போது, அவர்கள் அனைவருக்கும் அப்போது தேவைப்பட்ட அரிசியை முன் பின் தெரியாத பெண் ஒருத்தி ஓடிவந்து கொடுத்தாளே?

வேறொரு சமயத்தில், நோயாளிகளின் படுக்கை மெத்தைகள் மழையால் பாழடைய, அவர்கள் பாவம், கடுங்குளிரால் அல்லற்படுவதைக் காணச் சகிக்காமல், அன்னை தமது தலையணையிலிருந்த பஞ்சைப் பிரித்து, நோயாளிகளின் நைந்த மெத்தைகளில் திணித்துச் செப்பம் செய்ய எண்ணிய சமயத்தில், தெய்வம் போல ஒருவர் அன்னை முன் தோன்றி படுக்கை மெத்தைகளைச் சமர்ப்பிக்கவில்லையா?

பிறிதொரு தருணத்தில், ஆக்ரா நகரில் உருவான சகோதரிகள் சேவை இல்லத்திற்கு ஐயாயிரம் ரூபாய் அவசியமாக இருந்தது. அப்போது, அன்னையிடம் பணம் ஏதுமே இல்லை. அந்நேரத்தில்தான், ஐம்பதாயிரம் ரூபாய் மதிப்புக் கொண்ட 'ரேமன் மாக்ஸேஸே' பரிசில் (Ramon Magsaysay) அன்னையை நாடி வந்தது!—இது மாதிரி, அன்னையின் அன்புச் சேவைக்கு எது எப்போது தேவையோ, அது அப்போது கர்த்தரின் கடாட்சத்தால் தானாக அன்னையைத் தேடி வருவது அன்றாட நிகழ்ச்சியாகும்!

அன்னையின் தெய்வத் திருப்பணிகள் குறித்து "நாங்கள் ஏசுவிற்காக அன்பு செய்கிறோம்!" என்ற நூலை எழுதியதுடன், அன்னையின் அன்புச் சபையினருக்கு ஆன்ம ஆலோசகராகவும் நீண்டகாலமாகப் பணியாற்றும் புனிதத் தந்தை லிஜோலியின் கருத்து இது:

தொடக்கம் முதலாகவே அன்னையின் தெய்விகப் பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய தந்தை வேனெக்சம் அடிகள் (Van Exem S. J.) தமது அன்பான கண்ணோட்டத்தில் உலகத்தின் அன்புக்கு மாதாவான டாக்டர் தெரேசா அவர்களை இவ்வாறு தரிசிக்கிறார்: "அன்னை தெரேசா இறைவன் இயேசுவுக்காக எதையும் செய்வார்; முடியாத எக்காரியத்தையும் முடித்தே தீருவார்; சீழும் இரத்தமும் வடியும் குஷ்டரோகிகளின் ரணங்களையும் நோயாளிகளின் அசுத்தங்களையும் எவ்விதமான அருவையும் இல்லாமல் செபித்துக் கொண்டே தம் கைகளாலேயே கழுவிச் சுத்தப்படுத்தி மகிழ்வது அவரது ஆத்மார்த்தமான சிறப்புக் குணம்! — ஒரு சமயம், வாதநோயினால் அவதிப்பட்ட ஒரு குழந்தையை அன்புடன் தடவிக் கொடுத்ததுதான் தாமதம், உடனே அக் குழந்தை தன் நோயையும் மறந்து தன் தாயின் மடியிலிருந்து இறங்கி நம் அன்னையுடன் அன்பு நடைபோட ஆரம்பித்து விட்டது!—இது ஒரு பெரிய அதிசயம் அல்ல!—ஐந்தே

ரூபாயைக் கொண்டு ஆரம்பித்த அன்னையின் 'அன்பின் தூதுவர்கள்' சபை முப்பத்து இரண்டு ஆண்டுகளில் இவ்வளவு மாபெரும் அளவில் வளர்ந்து பாரெங்கும் பரவியுள்ளதே, இதுதான் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் உலகப் பெரும் புதுமை!" (1982)

தமிழகத்தின் கத்தோலிக்க ஆயர்கள் சீரிய பங்கேற்கும் 'நம் வாழ்வு' வெளியீட்டுச் சங்கத்தின் செயலர் அந்தோணி ராஜராஜன் உயிர் வாழும் புனிதையான அன்னையின் அன்புப் பணி அமைப்பின் தமிழ்நாட்டுப் பிரிவின் தலைமை இல்லமான 'தேவன் இல்ல'த்தில் அன்னையைக் கண்டு பேசியபோது, (1982) அன்னை மனம் மகிழ்ந்து விவரங்கள் பலவற்றை வெளிப்படுத்தினார்கள்:

எங்களது அமைப்பு இயக்கத்தோடு தொடர்பு பூண்ட அன்புப் பணியாளர்களில் மூன்று பிரிவினர் உள்ளனர். எங்களுடைய பணிகளில் ஒத்துழைத்து எங்களுக்காகச் செபிக்கும் உடன் உழைப்பாளர்கள் (Co-workers). எங்கள் பணிகளின் வளர்ச்சியின் நிமித்தம், தங்களுடைய உடல் மற்றும் உள்ளக் கஷ்ட நஷ்டங்களை இறைவனுக்கு இன்முகத்துடன் அளித்துப் பிரார்த்தனை செய்கின்ற நோய்நொடியாளர்கள் (The sick and the sufferings). மற்றும் எங்களது தொண்டுகளின் மேன்மைக்கெனத் தியானிப்பவர்களாகிய தியாகிகள் ஆகிய மூன்று பிரிவினரில் எல்லா மதத்தினரும் உண்டு.

எங்கள் பணி இயக்கத்தில் முக்கியமான மூன்று புனிதச் செயல்களில் எங்கள் சகோதரிகள் பயிற்சி பெறுவார்கள்— இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தல், அன்பு செய்தல், எப்போதும் மகிழ்வோடு இருத்தல் ஆகியவை பிரதானம் ஆனவை. மன அமைதி, உடல் அமைதி, புலன் அடக்கம், கற்புநிலை காத்தல் போன்ற நற்குணங்களையும் கற்பிப்போம். இயேசு தம்மைத் தாமே

தாழ்த்திக் கொண்டதுபோல, தங்களைத் தாழ்த்திக் கொண்டு தாழ்ச்சியுடன் வாழவும் அவர்களுக்கு வழி காட்டுகிறோம்!''

பேட்டியாளர் அந்தோணி ராஜராஜன்: ''அன்னையே! தங்களது அன்புப் பணியின் உள்நோக்கம் மதம் மாற்றுவதா, என்ன?''

அன்னை: ''இல்லவே இல்லை! நாங்கள் பிறருக்கு உதவும் போதும், பிறருக்காகப் பணியாற்றும்போதும், யாரிடமும் மத மாறுதல் பற்றிப் பேசுவதில்லை. அனைவரிடத்திலும் நாங்கள் இயேசுவைத் தரிசிக்கிறோம். அவர்களாக முன் வந்து மனம் மாறுவதையே எதிர்பார்க்கிறோம்!''

''அன்னையே! கல்கத்தாப் பெருநகரிலே உங்களது சாதனை பற்றிச் சொல்வீர்களா?''

''நடுத்தெரு அனாதைகளாகக் கிடந்த நாற்பத்திரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஏழைகளை நாங்கள் எங்கள் நிழலுக்கு இதுகாறும் அழைத்து வந்து ஆதரவளித்திருக்கிறோம்!'' (1950—82)

''குடும்பக் கட்டுப்பாடு, கருக்கலைப்பு பற்றிய தங்களது கருத்தை அறியலாமா?''

''கருவைக் கலைப்பது, கொலை செய்வதைப் போலவே சட்டவிரோதச் செயலாகும். ஆனால், நான் இயற்கை வழிக் குடும்ப நலத் திட்டத்தைத்தான் ஆதரிக்கிறேன். இவ்வகையில், எங்களது போதனையின் விளைவாக, சுமார் ஒன்றரை லட்சம் குழந்தைகளின் பிறப்புக் குறைவடைந்துள்ளது!''

அன்பையே உயிராகவும், உயிர்ப்பாகவும் ஆக்கிப் பொங்கும் புனலாக அன்பின் தொண்டுகளைக் கடையரினும் கடையருக்காக அன்றிலிருந்து இன்றுவரை செய்து

கொண்டிருக்கும் அன்னை தெரேசா அவர்கள் மீண்டும் குரல் கொடுக்கிறார்கள்.

இயேசு வானகத் தந்தையுடன் இணைந்து தனது பணிகளைச் செய்தார்; நாமும் இறைவனோடு இணைந்து செயற்பட்டால் மட்டுமே, பொதுப்பணி சிறக்கும்; நிறக்கும். இறைவன் நம்மில் வாழ, நாம் தூய நெஞ்சம் உடையவர்களாக விளங்க வேண்டும்.

உங்கள் முழு ஆன்மாவோடும், இதயத்தோடும், பலத்தோடும், அறிவோடும் இறைவனுக்கு அன்பு செய்யுங்கள்.

இல்லாமையால் வாடுவோர் இறைவனின் மக்கள். உங்களை முழுவதுமாக ஆண்டவனுக்கு அர்ப்பணித்து, அவரின் நினைவுகளைச் சித்திரியுங்கள்!

அமைதியின் பணிகள் இல்லையெனில், நமது அன்பின் அலுவல்கள் எல்லாம் வெறுமையாக ஆகிவிடும்!

'நான் பசியாக இருந்தேன்!' என்று இயேசு கூறியது, உணவிற்காக மட்டுமல்ல; ஆனால், தூய இதயத்திலிருந்து வரும் அமைதிக்காக. 'நான் தாகமாய் இருந்தேன்!' என கர்த்தர் சொன்னது, தண்ணீருக்காக மட்டுமல்ல; ஆனால், போர் வெறியைத் தணிக்கும் அமைதிக்காக! 'நான் ஆடையற்று இருந்தேன்!' என்று அவர் பகர்ந்தது உடைக்காக மாத்திரமல்ல; ஆனால், ஆண்—பெண் உடலின் உணர்வுகளின் புனித் தன்மைக்காக. 'நான் வீடு இன்றி இருந்தேன்!' என்பதாக அவர் செப்பியது, கற்களும் கூரையும் கொண்ட வீட்டை அல்ல; ஆனால், அன்பு நிறைந்து, பாதுகாப்பு அளித்து, பிறரைப் புரிந்து கொள்ளும் இதயத்திற்காகவே!

கடவுளின் அமைதியை நாம் வெளிப்படுத்துவோம்; ஆண்டவனின் ஒளியை நம்பிக்கையுடன் ஏற்றுவோம்; போற்றுவோம். பரிசுத்த நற்கருணையில், அப்பத்தின்

வடிவில், நாம் இறைவனைக் காண்கிறோம், நமது அன்புப் பணிகளில் ஏழைகளிடம் ஆண்டவனை உடலோடும் உயிரோடும் ரத்தத்தோடும் காண்கிறோம்!

இறைவா! பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட, பிறருக்கு நான் ஆறுதல் தரவும், பிறர் என்னைப் புரிந்திடல் வேண்டுமென்பதைவிட, நான் பிறரைப் புரிந்து கொள்ளவும், பிறர் எனக்கு அன்பு செய்தல் வேண்டுமென்பதை விட, பிறருக்கு நான் அன்பு செய்திடவும் அனுக்கிரகம் செய்!—ஏனெனில், தன்னல மறுப்பிலேதான், பொது நலமும், மன்னிப்பதிலேதான் பெருமன்னிப்பும், மரிப்பதிலேதான் மரணமில்லாப் பெருவாழ்வும் சித்திக்க முடியும்!''

மனிதாபிமானம் சிறக்கவும், பெண்மை நிறக்கவும், தாய்மை சிலிர்க்கவும் அன்னை நிறுவிய அன்பின் இயக்கத்தில் உடலில் உயிராக, தெய்வத்திற்கு அழகான தத்துவம் ஒன்றும் பொதிந்து கிடக்கின்றது. உண்மைத் தவத்தின் உயர்வான தத்துவம்.

அன்னை சொல்வார்கள்: ''எங்களது இயக்கத்தின் சகோதரிகள் செபத்தையே தங்கள் சமூக சேவையின் மையமாகக் கொண்டு வாழ்வதால், ஆண்டவனின் அழைப்பாணைக்கு விசுவாசமாக, தங்களுடைய அன்புப் பணி வாழ்வில் உறுதியாகவும் இருக்க முடிகிறது!''

ஒன்றே தெய்வம்!—ஒருவனே தேவன்!''

உலகம் கண்ட உண்மை இது.

உலகம் கொண்ட நியமம் இது.

ஆனாலும், கடவுளுக்குதான் எத்தனை, எத்தனை வடிவங்கள்!

'பால்வாய்ப் பசுந் தமிழில்' உயிர் வாழ்கின்ற கவியரசு கண்ணதாசன், உலகிடைக் கடவுளின் நிலையை உயி

ரோட்டமானதொரு நிகழ்ச்சியால் உறுதிப் படுத்துகிறார். 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்னும் மகுடமிட்ட தமது மகுடப் படைப்பில் கவித்திலகம் எடுத்துக்காட்டியுள்ள கதை ஒன்றின் எடுத்துக்காட்டு இது:

பகவான் இராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் ஒருவர் வந்தார். "நீங்கள் விஷ்ணு என்கிறீர்கள். சிவன் என்றும் சொல்கிறீர்கள். அதே விஷ்ணுவின் அவதாரங்கள்தாம் ஸ்ரீராமபிரானும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவும் என்பதாகவும் கூறுகிறீர்கள். ஒரே விஷ்ணுவுக்கு இத்தனை வடிவங்கள் எதற்கு? ஒரே கடவுளாக வைத்துக் கொண்டால் என்ன?" என்று கேட்டார்.

அதற்குப் பகவான் விடையளித்தார்: "நீங்கள் ஒருவர் தான். ஆனால், உங்களுடைய அப்பாவுக்கு மகன்; மகனுக்கு அப்பா; மனைவிக்குக் கணவன்; மாமனாருக்கு மாப்பிள்ளை; மாப்பிள்ளைக்கு மாமனார்; மைத்துனனுக்கு மைத்துனன் பாட்டனுக்குப் பேரன்! பேரனுக்குப் பாட்டன். உங்கள் ஒருவருக்கே இத்தனை வடிவங்கள் இருக்கும்போது, ஆண்டவனுக்கு இருக்கக் கூடாதா, என்ன?"

தெய்வம் ஒன்றே ஒன்றுதான்!—வடிவங்களும் அவதாரங்களும்தான் வேறு வேறு—வெவ்வேறு!

ஈசன்!

ஏசு!

நபி!

ஆக, எம்மதமும் சம்மதமும் தெரிவிக்கும் அன்புதான் தெய்வமாகவும் உலகிடைக் கொண்டாடப்படுகிறது.

அன்புவாழ, மக்கள் வாழ்வார்கள்.

மக்கள் வாழ, அமைதி வாழும்.

அமைதி வாழ, உலகம் வாழும்.

உலகம் வாழ்ந்திட, உலகை உண்டாக்கிய அலகிலா விளையாட்டுடைய ஆண்டவனின் மலர்ச் சிலம்படிகளை வாழ்த்தி வணங்குதல் வேண்டும்.

இந்த 1983 தீபாவளி நன்னாளில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கர்நூலிலிருந்து 'ஹிந்து' வழியே மக்களுக்கு அனுப்பிய செய்தியில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"ஆண்டவனிடம் மனம் ஒன்றிப் பக்திப் பெருக்குடன் பிரார்த்தனை செய்வதினால், நாட்டு மக்கள் ஈடுபடும் பட்சத்தில், நாட்டை அச்சுறுத்தும் சிக்கல்கள் ஒவ்வொன்றாகவும் படிப்படியாகவும் தீரும்; தீர்க்கப்பட்டு விடும்! அகந்தை, பேராசை, இறுமாப்பு, போன்ற கெட்ட குணங்கள் துளியுமின்றி, சுய நலம் கடந்த மனத்துடனும் பிரார்த்தனையில் நம்பிக்கையுடனும் மனித இனத்தின் மேன்மைக்காகப் பக்தி சிரத்தையுடன் அன்பாகப் பணி புரிந்தால், உலகம் உய்யும்!"

சூடிக்கொடுத்த நாச்சியாரும் அன்னைதான்!

உலகில் மனிதகுலம் மேம்பாடு அடையும் வகையில் உலகில் அன்பும் சமாதானமும் நல்லிணக்கமும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டுமென்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு செயலாற்றிவரும் பாரதத்தின் பிரதமர் அண்மையில், 17—12—1983-ல் சாந்தி நிகேதனத்தில் நிகழ்ந்த குருதேவரின் விசுவபாரதிப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலும், நாட்டை இன்னமும் அச்சுறுத்தி வரும் ஏழைமைப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்தும் ஒன்றுபட்டும் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்.

பாரதப் பிரதமர் இந்திராகாந்தி மாதிரியே, பாரதக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜயில் சிங்கும் நாட்டு மக்களின் நலன் மற்றும் சர்வதேச நாடுகளின் சமாதானத்தில் கவலையும் அக்கறையும் கொண்டு விளங்குகிறார்.

ஆண்டவன் உலகத்தை மட்டுமல்ல, உலகத்து மனிதர்களையும்தான் படைக்கிறன்!

ஆனால், மனிதர்களோ தங்களுக்குள்ளாக ஒருமை உணர்வுகளையும் நல்லிணக்கச் சிந்தனைகளையும் பரஸ்பரம் வளர்த்துக் கொள்ளுவதற்குப் பதிலாக, தங்களிடையே வேற்றுமைப் படுத்தக்கூடிய உயர்வு தாழ்வுகளையும் மேடு பள்ளங்களையும் சமூகத்தின் பேராலும் நாகரிகத்தின் பெயராலும் உருண்டோடிடும் பணத்தின் பேராலும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

விளைவு : பூஜ்யம்.

எதிர்விளைவு : உலகத்தில் மக்கள் வாழ்கின்ற நாடுகளிலும் நாடுகளுக்கு இடையிலும் பாசமும் நேசமும் குறைந்து, உலகத்திலே சோதனைகளும் பிரச்சினைகளும் நிறைந்து வழியத் தலைப்பட்டுவிட்டன. போர்களும் போராட்டங்களும் நிரம்பி வழியத் தொடங்கிவிட்டன.

"அன்பின் வழியது உயிர்நிலை!" என்று பாடிப் போந்தார் உலகப் பெரு ஞானி, அன்று!

ஆனால், உயிருக்கு நிலையான அன்பே சோதிக்கப்படுகிறது, இன்று!

அன்பும் ஆண்டவனும் ஒன்று ஆயிற்றே?

அன்பு சோதிக்கலாம்; சோதிக்கப் படலாகாது அல்லவா?

ஆதலாலேதான்,

அந்த அன்பை வணங்கி வாழ்த்தவும், வாழ்த்தி வாழ வைக்கவும் உலகிடை அவ்வப்போது அன்பின் ஆர்வலர்களும் மனிதாபிமானிகளும் மானுடப் பண்பாளர்களும் தோன்றினர்கள்.

இந்நிலையிலேதான்,

அன்பு இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறது; உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது!

**டிசம்பர் 19, 1983 :**

சென்னையில் நடந்த தென் மண்டல காங்கிரஸ் கட்சி மகாநாட்டில் கலந்து கொண்ட பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி, கடற்கரையில் பொதுக் கூட்டத்தில் பேசும் போது, "மகாத்மா காந்தி இந்திய நாட்டின் சுதந்தரத்துக்காகப் போராடிய பொழுது, பாட்டாளிகள், விவசாயிகள், ஏழை எளிய மக்கள் அனைவருமே பெரும் சக்தியாக இயங்கினார்கள். அதனால் தான், ஆயுதம் இல்லாமல் தரும வழியில் விடுதலை பெற்றோம். அதன் பயனை எல்லா மக்களும் பெறவேண்டு மென்பதற்காகவே, திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றி வருகிறோம்; நாட்டின் உயர்வுக்கான திட்டங்களின் வளர்ச்சியின் மூலம்தான் நாட்டின் ஏழை எளியவர்கள் வாழ்வும் வளமும் பெறுவது சாத்தியமாகும்!" என்று குறிப்பிட்டு, ஏழை மக்களின் எதிர்கால நலன்களில், தமது ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து விட்ட ஆர்வத்தையும் அக்கறையையும் புலப்படுத்தினார்.

நாட்டில் நலிவுற்றுப் பின்தங்கிச் சீர்கெட்டுக் கிடக்கும் ஏழைச் சமூகத்தினரின் வாழ்வு மலர்ந்து சீர்பெற்றுச் செம்மைப் படுவதற்கான செயல் முறைகள் உள்ளிட்ட நாட்டு வளர்ச்சிக்கான பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங் களைக் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் இந்திய அரசு இதுவரை நடைமுறைப் படுத்தியுள்ளதையும், நடப்பு ஆறுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ரூ 1,16,240 கோடி செலவு செய்ய இந்திய அரசு மொத்தமாகத் திட்ட மிட்டுள்ளதையும் இந்நேரத்தில் எண்ணிப் பார்க்கும் எழுபது கோடி (1981) இந்திய மக்களின் நெஞ்சங்களி லெல்லாம் பிரதமர் வெகுவாகவே உயர்ந்து நிற்பதும் அகில உலக இயல்முறைச் செய்தியாகவே அமையக்கூடும்.

பாருக்குள்ளே நல்ல நாடான பாரத நாடு. இந்த இருபதாம் நூற்றுண்டில் அதிசயமான வரலாற்று நிகழ்ச்சிகளை அதிசயிக்கத்தக்க அளவில் சந்தித்துள்ளது.

நாட்டிற்கு அன்பு வழியில் விடுதலை வாங்கித் தந்த தேசத் தந்தை நாட்டின் கீழ்மட்டத்து மக்களின் நல்வாழ்வுக்கென அல்லும் பகலும் பாடுபட்டார். அன்பு சோதிக்கப் படுமானுல், தருமம் பொறுப்பதில்லை என்பதற்கு அண்ணலின் மரணம் ஒரு வரலாற்றுச் சாட்சியாகவே அமைந்தது.

அண்ணலின் அறவழியில் நாட்டுப்பணி ஆற்றினுர் பண்டித ஜவாஹர்லால் நேரு. ஆசிய ஜோதி அவர்; உலகின் சமாதானப் புருவாகவும் ஒளிர்ந்தார்.

தந்தையின் அன்பு வழியில் உலக அமைதிக்காகத் தொண்டாற்றிவருகிருர் உலகத் தலைவி இந்திரா காந்தி. பாரதத்தின் பிரதமர், உலகத்தின் மக்களுக்கும் அன்னை இந்திரா காந்தியாகவே இப்போது விளங்கிவருகிருர்!

அன்பு வெல்லும்!

இது கதையல்ல!

வரலாறு!

அன்பிற்கு ஓர் அன்னையென உலக மக்களால் ஏற்றிப் போற்றப்பட்டுவருகின்ற அன்னை தெரேசாவின் வரலாறு, அன்பின் வரலாறு அல்லவா? அன்னை அவர்களின் அன்பு, உலகத்தின் மிகச் சிறந்த நோபல் பரிசை வென்றதென்றுல், அன்பின் மகிமைக்கு ஈடு எடுப்பு உண்டா, என்ன?—இல்லை, எல்லையற்ற அன்பின் மறுவடிவான ஆண்டவனின் நற்கருணைக்கு எல்லைதான் இருக்கமுடியுமா, என்ன?

அன்றைக்கு—

யூகோஸ்லாவிய நாட்டில் ஸ்கோட்ஜி எனப்பட்ட குன்றுப்புறக் கிராமத்தில் அல்பேனியப் பெற்றோர்களின்

முதல் மகளாகப் பிறந்த அக்னெஸ் விளுத் தெரிந்த நாள் முதலாகவே ஆண்டவனின் அருட்கொடையாக மனிதாபிமானம் நிரம்பப் பெற்றவளாக வளர்ந்து, கன்னி ஆன வேளையில், ஏழைகளில் ஏழைகளுக்கு அன்புத் தொண்டு புரிய வேண்டுமென்ற ஆர்வத் தூண்டுதலும் துடிப்பும் பெற்று, அந்த மன எழுச்சியையே தன்னை ஆண்ட ஏசு ஆண்டவனின் கட்டளையாகவும் மதித்து, பிறந்த மண்ணைத் துறந்து இந்திய மண்ணை மிதித்து, தனது லட்சியப் பயணத்தில் தெரேசா என்னும் புதிய பெயர் பெற்று, பாரத அன்னையின் தவப் புதல்வி ஆகி, பின் அன்புக்கு அன்னையாகவும் ஆனதெல்லாம் கதை அல்லவே?

அன்புக்குச் சரித்திரம் உண்டு.

அன்னைக்கும் உண்டு சரித்திரம்.

உலக சமாதானத்திற்கான நோபல் பரிசிலைப் பெற்ற முதல் இந்தியப் பெண் அன்னை தெரேசா என்பதால், நமது இந்தியத் தாய்நாடு அன்று பெருமையாலும் பெருமிதத்தாலும் உலக அரங்கில் ஆனந்தப் பள்ளுப் பாடவில்லையா?

அகில உலகத்திலும் அன்பிற்கு ஓர் அன்னையாக, ஒரே ஓர் அன்னையாக விளங்கி, கடையரினும் கடையருக்கான அன்பு நலப்பணிகளை உலகம் தழுவிய இலக்கோடு 'அன்பின் தூதுவர்கள்' எனப்படுகின்ற தமது அன்புப்பணி இயக்கத்தின் வழியில் கடந்த முப்பது ஆண்டுகட்கும் மேலாகவே கடையரினும் கடையருக்கான அன்பு நலப் பணிகளை நடைமுறைப்படுத்தி வரும் கண்கண்ட தாய்த் தெய்வமான புனிதை தெரேசா விளங்குகிருர். நித்த நித்தம் தேவன் இயேசுவின் பெயரால் ஏழைகளில் ஏழைகளுக்கு உகந்த அறத்தின்பாற்பட்ட அன்புத் திருப்பணிகளிலே, நித்த நித்தம் ஏசுநாதரையே தரிசனம் செய்து அமைதியும் ஆறுதலும் அடைகிருர்கள் அன்னை!

அன்புச் சங்கதி ஒன்றை மக்களுக்கு அடிக்கடி அன்னை நினைவுகூர்ந்து, நினைவு படுத்துவது உண்டு :

அன்பு என்பது அருங்கனி; எல்லாப் பருவக்காலங்களிலும் கனியக்கூடியது. அரிதான மானிடர் ஆனவர்களில் யார் வேண்டுமானாலும், அற்புதமான இந்த அன்புப் பழத்தைப் பறித்துக் கொள்ளலாம்; அதிசயமான இக்கனியைக் கொய்திட வரம்பு இல்லை. முனைப்பான உள்ளொளி மிகுந்த வாழ்க்கையில், தியானம், பிரார்த்தனை மற்றும் தியாகம் போன்ற குணச் சிறப்புக்களின்மூலம் ஆண்டவனின் அன்பை ஒவ்வொருவரும் பெறமுடியும்! இறைவனிடம் அன்பு பாராட்டுவதைப்போலவே, மக்களை, குறிப்பாக, ஏழைஎளியவர்களை நாம் அன்பு பாராட்டி நேசிப்பதும் அவசியம்.

அன்புப் பணிகளில் ஈடுபடும் சகோதரிகள் அல்லது, சகோதரர்கள் வீண் கருவமோ, தற்பெருமையோ கொள்ளக் கூடாது. நாம் மேற்கொண்டிருப்பது ஏழை நலப் பொதுச் சமூகப்பணி; இது தெய்வத் திருப்பணியுங் கூட. ஏழைகளும் பகவானின் குழந்தைகள் என்பதுதான் காரணம். ஆண்டவனின் எண்ணங்கள் உங்கள் மனங்களில் மலர்ச்சியடையும். தன் பணிக் கடன்களை உங்கள் அன்புக் கரங்களைக் கொண்டு செயலாற்றுவான் இறைவன். உங்களை வலுவடையச் செய்வதில் ஆண்டவன் உங்கட்குத் துணை இருக்கும்போது, நீங்களும் எல்லாம் வல்லதான உயர் சக்தியைப் பெற்றிடுவீர்கள்!

ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளிலே, ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் நம்பிக்கை இழந்து ஆதரவற்றவர்களுக்கும் சமூகத்தினின்றும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் சமூகத்தால் வேண்டப்படாமல், கைவிடப்பட்டவர்களுக்கும் நாம் உதவி அன்பாக ஊழியம் செய்கையில், அவர்களோடு ஒன்றிக் கலந்து, உடல் சார்ந்த அவர்களது வறுமையையும் வெறுமையையும் போக்குவதோடு, உள்ளம் சார்ந்த வெறுமையையும் வறுமையையும் செம்மைப்படுத்தி, அவர்களிடம் தெய்வத்தை அழைத்து

வரவும், அவர்களைத் தெய்வத்திடம் அழைத்துச் செல்லவும் நாம் முயற்சி செய்யவேண்டும்!

மேற்கு வங்கத்தில் இயங்கும் அன்னையின் அன்பியக்கம் சார்ந்த தொழு நோயாளிகள் இல்லங்களுக்கு ஆண்டு தோறும் ஸ்விட்ஸர்லாந்து நாட்டிலிருந்து தொழுநோயைக் குணப்படுத்தவல்ல 'லாம்ப்ரன்' குழாய் மாத்திரைகள் சுமார் 8,00,000 அளவில் வந்து சேர்கின்றன.

வளர்ந்து வரும் மூன்றாவது உலக நாடுகளில் வளர்ந்து வரும் வறுமையைத் தடுத்தாட்கொள்ள வேண்டி, அன்னை அவ்வப்போது அன்புக்குத் தூது சென்று உலகத்தைச் சுற்றி வந்ததால் கைமேல் பலனாகக் கிடைத்த அன்பின் காணிக்கைகள் அன்னைப் போன்று உயர்ந்தனவாகவே அன்றும் அமைந்தன; இன்றும் அமைகின்றன; நாளையும் அமையும்!

மறுபடி கணக்குப் போடுகிறது அன்பு:

அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு 1981-ல் விஜயம் செய்த போது, ஜனாதிபதி ரொனால்ட் ரீகனை வெள்ளை மாளிகையில் சந்தித்தார் அன்னை. உடன், நியூயார்க் நகரில் ஹார்லெம் மாவட்டத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கெனவும் போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்காகவும் புதிதான அன்புப் பணி இல்லம் ஒன்றை ஆரம்பித்தார்; திரும்பு காலில், பொதுவுடைமை ஆட்சிக்கு உடன்பட்ட ஜெர்மானிய ஜனநாயக் குடியரசிலும் (GDR) அன்புப் பணிமனை திறக்கப்பட்டது! — பொதுவுடைமைத் தத்துவம் ராசாங்கம் நடத்தும் யூகோஸ்லாவிய நாட்டில், அன்னையின் பிறந்த மண்ணில் அன்பின் தூதுத் தொண்டுகள் ஏற்கனவே ஆரம்பமாகியிருந்தனவே!

பெரும் அளவிலான அன்பும் ஓரளவுக்காகிலும் உணவும் கிடைக்கவேண்டுமேயென்று ஏங்கித் தவிக்கும் மக்கள் மலிந்த போலந்திலும், மக்கள் குடியாட்சிச் சீனாவிலும் அன்புப்பணி இயக்கத்தின் அமைப்புக்களை

1984 காலக்கட்டத்தில் நிறுவ வேண்டுமென்பதும் அன்னையின் திட்டம்.

ஏழைகள் இருப்பார்களேயானால், சந்திரமண்டலத்துக்கும்கூட தாம் பயணம் மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவே அன்னை அகக்களிப்போடு ஒருமுறை தெரியப்படுத்த வில்லையா?

தெய்வத்தைப் போல, அன்பு என்னும் தெய்வ மகா சக்தியும் எல்லாம் வல்லது.

அன்பின் கொடுக்கல்—வாங்கல் கணக்கு ஒன்று:

அன்னையின் அன்புப் பணிகளுக்கு ஊட்டம் அளிக்கும் நோக்கம் கொண்டு டென்மார்க்கில் இலட்சத்துக்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர் சிறுமியர் தினமும் காலையில் பால் அருந்தாமல், பள்ளிக்குச் செல்கிறார்கள்.

பல லட்சம் டாலர் மதிப்புடைய மருந்துகளையும் ஜீவசத்துள்ள பால் பவுடரையும் பெல்ஜியத்திலுள்ள நன்கொடையாளர்கள் தொடர்ந்து அனுப்பி வைக்கிறார்கள்.

உலக அளவில் அன்பு ஊழியம் செய்து வரும் அன்னையை ஆதரிக்கும் கானடா நாட்டுச் செல்வந்தர்கள் தகவல் கிடைத்த ஏழு நாட்களுக்குள், எத்தியோப்பியா, தான்ஸேனியா நாடுகளில் பஞ்சத்தால் அடிபட்ட மக்களுக்காக 5000 டன் அளவில் பதப்படுத்தப்பட்ட உயர் ரக உணவு வகைகளைக் கப்பலேற்றி அனுப்பிவைத்தார்கள்.

காரணம்: அன்பு.

காரியம்: தொலைக்காட்சியில் அன்னையின் பேட்டி. ஒளிபரப்பு + ஒலிபரப்பு.

நேரம்: இரவு 9-25

நாள்: நவம்பர் 16, 1982.

மெய்ம்மறந்த நிலையில் அன்னை தெரேசா அன்று பேசிய பேச்சுக்கள் மெய் உணர்ந்த நினைவில் இவ்வாறு தொகுக்கப்படும்:

"எங்கள் இயக்கத்தின் அன்புசால் பணிகள் நாளும் பொழுதும் இயேசுவிற்காகவும், இயேசுவினாலும் இயங்குகின்றன; மனித குலம் சார்ந்த ஏழைகளிலும் ஏழைகளான மக்களுக்கு அன்பு செய்திட வேண்டுமென்று ஆண்டவன் ஆணை இட்டார். எங்கள் அமைப்பு பிறந்தது; வளர்ந்தது; வாழ்ந்து கொண்டிருக்கிறது. 'ஏழைகள் எங்கேயோ இன்னமும் நம்பிக்கையோடு உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்' என்கிற நடப்பு உண்மையை உலகம் உணரத் தொடங்கியுள்ளது. 'அன்பு தெய்வீகமானது; அது வாழும்; வாழ்த்தும்!' என்னும் உலக நியதிக்கோட்பாடு இப்பொழுது உலகமக்களால் அங்கீகரிக்கப்பட்டுப் பிரகடனப் படுத்தப்படுகிறது. ஏழைகளின் சிரிப்பில் இறைவன் வாழ்ந்தார்; வாழ்கிறார்; வாழ்வார்!"

ஒரு நினைவூட்டல் நிகழ்வு:

அன்னை தெரேசாவைப் பற்றியும் அவர்களது அன்புப் பணி அமைப்பின் அறநெறிப் பணி முறைகளைப் பற்றியும் பி. பி. ஸி (B. B. C.) நிறுவன அமைப்புக்காகத் தொலைக் காட்சிப் படமொன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுப் பூர்வாங்கமான ஏற்பாடுகளையும் செய்து முடித்தார் மால்கம் மக்கரிட்ஜ். அன்னை சம்மதம் தெரிவித்து அவருக்குக் கடிதம் எழுதினார்.

அன்னை தெரேசா பற்றின படப்பிடிப்பிலே, அன்னை தவறாமல் கலந்து கொள்ளக்கூடிய பொதுவான புனிதப் பிரார்த்தனை பல்வேறு நிலைகளிலும் பலதரப்பட்ட கோணங்களிலும் படமாக்கப்பட்டு, நல்ல ஆரம்பமாகவே அமைந்தது. ஆஹா! ஆடவரும், பெண்டிரும் மழலைகளுமாகப் பொது மக்கள் அன்னையின் அன்புக் கரங்களைத்

தொட்டுத் தொட்டு முத்தமிட்ட காட்சி உள்ளத்தைத் தொட்டது.

தொலைக்காட்சிக்கான படப்பிடிப்பில் ஒரு பகுதி 'இறப்போர் நல இல்ல'த்திலும் இடம் பெற்றது.

"கல்கத்தா மாநகராட்சி—நிர்மல் ஹ்ருதே!" வங்காள மொழியிலும், ஆங்கிலத்திலும் அவ்வில்லத்தை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்த பெயர்ப் பலகை இல்லத்திற்கு வெளிப்புறத்தில் பளிச்சிட்டது!—மரியாளின் நிர்மலமான திரு இதயத்தின் புனிதம் அங்கே ஆடி வரும் தேனுக ஓடி வந்தது.

இல்லத்தின் சுற்றுப் புறச்சூழல்களை சூரிய வெளிச்சத்தில் நிழற்படப் பதிவாளர் எச்சரிக்கையோடு படமாக்கினர்; ஆனால், இல்லத்தின் பகுதி ஒரே இருட்டாக இருந்ததால், புகைப்படக் கருவி எதையும் பதிவு செய்யாது என்று அவர் கூறினர்.

இல்லத்தின் உள்ளே போதுமான வெளிச்சத்தை உண்டுபண்ண நேரமில்லையென்று கருதினர், மால்கம். ஆகவே, இயன்றமட்டில், படங்களை எடுத்துப் பார்க்குமாறு பணித்தார்.

எடுக்கப்பட்ட படச்சுருளைக் கழுவிப் பார்த்ததும் புகைப்பட நிபுணரே மலைத்துப் போய் விட்டார்!

"நாம் இல்லத்தின் உட்புறத்தில் எடுத்த படங்கள் எல்லாமே வெகு அழகாக அமைந்து விட்டனவே? தொழில் நுட்ப ரீதியின்படி, இருட்டிலே எப்படிப் படம் ஆக்க முடியும்? ஆனால், எடுக்கப்பட்ட ஒளிப் படங்களில் தவழ்கின்ற அந்த வெளிச்சம்—ஒளி எப்படி வந்தது, எங்கிருந்து வந்தது?"

இருட்டறையில் நின்ற அன்னையின் முகத்தில் தெய்விகக் களை பளிச்சிட்டது! அது தெய்விகமான ஒளி ஆயிற்றே!—இருட்டில் அல்லற்பட்டும் தொல்லைப்பட்டும்

செத்துச் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் ஏழை எளிய மனித சமூகத்தினரின் வாழ்வில், தெய்வத்தை நம்பி, தெய்வத்தின் அன்பை நம்பி நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்துக் கொண்டிருப்பவர் அல்லவா அன்னை?—இருட்டிலும் அன்னையின் அருள் முகத்தில் ஒளி பிறக்கக் கேட்க வேண்டியதில்லைதான்!

"அன்னையே, இந்த அதிசயம் எப்படி நடந்ததாம்?—நீங்கள் இருண்ட நோயாளிகளின் படுக்கைக் கூடத்தில் நின்று கொண்டிருந்தீர்கள். ஆனால், உங்கள் அன்பு முகமோ, படத்திலே அற்புதமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதே? — அதிசயத்திலும் பேரதிசயமாக இருக்கிறதே?"

"இப்படிப்பட்ட மகத்தான அதிசயங்கள் எல்லாச் சமயங்களிலும், ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு மணி நேரத்திலும், ஏன், ஒவ்வொரு நிமிஷத்திலும்கூட நடக்கின்றன! இத்தகைய அதிசயங்களையெல்லாம் செய்து காட்டி நம்மோடு விளையாடுபவன் ஆண்டவன் ஒருவனாகவே தானே இருக்க முடியும்? உலகிலே மனித இனம் முழுமைக்கும் மீட்பு கிடைக்கவே செய்யும்!—கிறிஸ்தவச் சமயக் கோட்பாடு மட்டுமல்ல இது! உலகத்தின் மதங்கள் அத்தனையும் அறிவிக்கும் பொதுச் சேதியும் இதுதானே?"

அன்னை ஒரு சமயம் வெளிப்பாட்டுணர்வு சிலிர்த்திடச் சொல்லவில்லையா?— "உலகம் தெய்வம் இருந்தது என்பதாகச் சொல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறது!—ஆனால், தெய்வம் இருக்கிறது!"

விதியின் மனிதனும் மனிதனின் விதியும் அன்பின் பெயரிட்டு அன்னையைச் சந்திப்பது அன்றாட வழக்கம்; பழக்கம்!

சுழல்கின்ற பூதலத்தில் சுழல்கின்ற 'டைம்' (Time), 'ஹிந்து' (The Hindu), 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' (Readers

Digest), 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' (The Illustrated Weekly) போன்ற தினசரி, வார, மாத ஏடுகளும் கல்கத்தாவின் நாளிதழ் 'ஸ்டேட்ஸ்மென்' (Statesman) மற்றும் 'அம்ரித பஜார் பத்ரிகா' (The Amrita Bazaar Patrika) போன்ற பத்திரிகைகளும் பயன்தரும் பழு மரமாக விளங்கி அன்புச்சேவை செய்யும் அன்பின் தாயைப் பற்றி அவ்வப்போது தகவல் விவரங்களை வெளிப்படுத்தின மதம், இனம், மொழி கடந்த அன்னையின் திருப்பணிகளைத் தமிழ்கூறு நல்லுலகுக்குத் தெள்ளுதமிழிலே தெளியப் படுத்துவதில் கல்கண்டு, குமுதம், கல்கி ஆனந்த விகடன், தினத்தந்தி, தினகரன், மக்கள் குரல், முரசொலி போன்ற ஏடுகளும் பங்குப் பணி ஏற்கும்!

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தகைமை யாளர்களால் உலகம் வாழ்கிறது.

அன்பென்று முரசு கொட்டச் சொன்ன தேசியக்கவி 'மக்கள் அத்தனை பேரும் நிகராம்' என்றும் சொன்னார்.

மக்கள் யாவரையும் சரி நிகர் சமானமாக வாழச் செய்ய வேண்டும் என்பதுதான் அன்பின் தவம்.

அன்பின் வளர்ச்சிப் பணிகளில் அன்னையின் வரலாறு முப்பத்திரண்டுக்கும் மேலான ஆண்டுகளைச் சந்தித்திருக் கிறது.

அன்பின் இயக்கத்தில் பிரதானம் பெற்று இயங்குகிற — பரிசுத்தச் சகோதரிகள் கற்பு, கீழ்ப்படிதல், எளிமை, அன்புசெய்தல் முதலான இயக்கத்தின் வாக்குறுதி விதிமுறைகளை ஏற்றுச் செயலாற்றுகின்றனர். மூன்று வெண்ணிற ஆடைகள் — முழுக்கைச் சட்டைகள், துணிப்பை, நற்செய்திப் புத்தகம், செபம் செய்வதற்கான புத்தகமாலை, மலிவான காலணிகள் இரண்டு, ஒரு படுக்கை, வாளி போன்ற சாதனங்கள் தாம் அவர் களுக்குரிய உடைமைகளாக அமையும். அதிகாலையில் நான்குமணி அளவில் ஆரம்பமாகும் பணிகள் இரவில்

நீண்ட நேரம் வரை நீளுகின்றன. ஏழைமையையும் ஏழைகளின் கஷ்ட நஷ்ட வாழ்வையும் பிரதிபலிக்கும் வகையில் இவர்களது உணவும் உறைவிடமும் எளிமை மிகுந்தவையாக அமைகின்றன.

துறவுக்கன்னியாம் தெரேசாவை ஏழை எளிய உலகம் 'அன்னை'யென அன்புப் பாசத்தோடு அழைக்க ஆரம்பித்தது.

அன்னை, தமது 'அன்பின் தொண்டர்கள்' என்னும் படியான சகோதரிகளின் பணி அமைப்பின் தொடர்பில் அன்புச் சகோதரர்கள் சபை (Brothers of Missionaries of Charity) ஒன்றையும் 1963 மார்ச் 25 அன்று சேசு சபைக் குரு சோதரர் ஆண்ட்ரு தலைமையில் ஏற்படுத்தலானார்.

அன்புநலப் பணியாளர்கட்கு அன்னையின் அன்புக் குரல்தான் வேதவிதி — வேதவாக்கு! — இறையன்பு, அமைதி, மக்கள் அன்பு, தியானம், பரிசுத்தம் — முக்கரண சுத்தி, அர்ப்பணம், பணிவுடைமை, துன்பத்தில் பங்கு, பணியில் ஆறுதல், மகிழ்வு போன்ற நிலைகளைக் கண்ணும் கருத்துமாகப் பேணி, தேவ அன்னை மற்றும் தேவ மைந்தனுக்கு விசுவாசமாக இவர்கள் நடப்பார்கள். புனித சகோதரிகளும் அன்புச் சகோதரர்களும் மேற்கொள்ளும் மறைமுறை ஆதாரத்தின் பாற்பட்ட அறநெறி சார்ந்த அன்புப் பணிகளில் கல்விப்பணி, மருத்துவப்பணி, சமூக நலப்பணி ஆகியவையும் உள்ளடங்கும்.

''கடைப்பட்ட என்னுடைய சகோதர—சகோதரிக்கு
நீங்கள் அன்பு செய்யும் போதெல்லாம்
அந்த அன்பை,
நீங்கள் எனக்கே செய்தீர்கள்!'' (மத்தேயு 25:34-40)

அனாதை இரட்சகன் ஆண்டவன்!
இயேசு வாழ்கிறார்!

நாடு மொழி, சாதி, சமயம் கடந்து அன்பு ஊழியம் செய்துவரும் 'அன்பின் தூதர்கள்' இயக்கம் ஆரம்பித்த இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி 1976 அக்டோபர் 7ஆம் நாளன்று கல்கத்தா நகரில் தேவாலய இறைவழிபாட்டுடன் நடைபெற்ற வெள்ளி விழாவில் உலகளாவிய அன்புப் பணிகளை எடுத்துக்காட்டும் வண்ணம் அனைத்துலக நாடுகளின் மக்கள் பிரதிநிதிகள் ஏழைகள் புடைசூழ கலந்துகொண்டதும், இந்து, சீக்கியர், ஜெயின், யூதர், அங்கிலிக்கன், ஆர்மேனியன், இஸ்லாமியம், புத்தம், சமணம் மற்றும் கிறிஸ்துவம் போன்ற அனைத்து மதங்களின் சார்பான ஆலயங்களில் பூஜைகள் நடந்ததும், தியாகத் துறவியாம் உலக அன்னை தெரேசாவுக்கு ஆறுதலை வழங்கின.

# 9. உலகத்தின் அரங்கிலே, அன்பின் தூதர்கள்!

உயிர் வாழும் உன்னதமான அன்புக்கு உயிர் வாழுகின்ற ஓர் உன்னதமான சாட்சியமாக உலகத்தின் மத்தியிலே விளங்குகின்றார்கள் மேதகு அன்னை தெரேசா அவர்கள்.

உலகத்தில் நல்லமைதியும் உலக மக்களிடையே நல்லிணக்கமும் ஏற்படும் வண்ணம் மக்கள் சமுதாய நலப் பணிகளை உலகத்தின் ஏழைகளில், ஏழைகளின் இருண்ட வாழ்விலே அன்பு விளக்கேற்றி அருந்தொண்டாற்றி வரும் அன்னை தெரேசா முன்னம் 1979 ஆம் ஆண்டிலே உலகப் புகழ் பெற்ற 'நோபல் நல்லமைதிப் பரிசை' (Noble Peace Prize) வென்று, அன்பின் வெற்றிக்கு மகத்தான வரலாற்றுப் பெருமையைத் தேடித் தந்தார். அத்துடன், ஏழை எளியவர்கள் உலகத்தில் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்னும் உலகியல் உண்மை நிலையை உலகத்தின் மக்கள் உணர நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்த மனிதாபிமானக் கடமையிலும் அன்பின் தெய்வம் வெற்றி கொண்டார்; வெற்றி கண்டார்!

அன்னை தெரேசாவின் அன்புப் பணியின் அணியில், உடன் உழைப்பாளர்கள் அடங்கிய அனைத்து உலக நாடுகள் தழுவிய சங்கம் ஒன்றும் அன்னையின் தலைமைப்பொறுப்

பிலும் விதி முறை அடிப்படையிலும் உருவாகி நிறுவப் பட்டு, 'அன்பின் தொண்டர்கள்' என்னும் உலகறிந்த பிரதான அமைப்புடன் இணைக்கப்பட்டுச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எல்லா மதங்களையும் எல்லா இனங்களையும் சார்ந்த ஏழை மக்கள் உலக நாடுகளிலே அங்கங்கே சிதறிச் சின்ன பின்னமாகிக் கிடக்கின்றார்கள் அல்லவா? அப்படிப்பட்ட ஏழைகளுக்கு, அதாவது, ஏழைகளிலும் ஏழைகளுக்குத் தன்னலம் கடந்த முழுமனத்துடன் சேவை செய்வதுதான் சங்கத்தின் உயிர் நிலையான இலட்சியம்; இவ்வமைப்பில், உலகத்தின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள்கூட அங்கம் வகிப்பார்கள்!— ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைத் தரிசிக்கின்ற தியாக நலப் பணியே, அரிதான தங்களது மானுடப் பிறவிக்குக் கிடைத்த நல்லபயன் எனவும் இவர்கள் கருதி, அன்பின் தூதுவர்களாகவும் தொண்டர்களாகவும் பணி புரிகிறார்கள்!

"அன்பின் தூதுவர்கள்" (Missionaries of Charity) அமைப்பின் தலைமை நிலையமான 'அன்னை இல்லம்' (The Mother House) கவின் மிகு கல்கத்தா நகரில் ஆச்சாரிய ஜகதீஷ் போஸ் சாலையில் இயங்கி வருகிறது.

அன்னை இல்லத்திலேதான், அன்னை தெரேசாவும், முந்நூற்றுக்கும் மேற்பட்ட அன்னையின் சகோதரிகளும் வசிக்கிறார்கள்.

பொதுத்தன்மை வாய்ந்த அன்புத் தூதுப்பணிகள் தினமும் விடியல் வேளையில் நான்கு மணிக்கே ஆரம்பமாகி விடுகின்றன.

துயில் கலைந்து, கண்திறக்கும் அன்னை காலைக் கடன் முடித்து, நீராடி, நீலக்கரைப் புடவை தரித்து, ஜபம் செய்து, சிலுவைக் குறியிட்டுப் பிரார்த்தனை செய்ததும்,

ஆறுமணிக்கெல்லாம் பொதுத் தெய்வ வழிபாட்டில் கலந்து கொள்கிறார்.

அன்னையின் அன்புத் தூதுப் பணி இயக்கத்திற் சென்று அன்னை பக்திப்பரவசத்துடன் பாடிய பிரார்த் தனைக் கீதம் இளங்காலைப் பொழுதின் புனிதத்தோடும் அமைதியோடும் கம்பீரமாக அதோ, ஒலிக்கிறது; எதி ரொலிக்கிறது!

"எங்கள் கிறிஸ்து பெருமானே!
உங்கள் பேரமைதி வழிந்தோட
என்னை ஒரு வாய்க்கால் ஆக்குங்கள்!
அப்போது;
பகைமை இருக்கும் இடத்தில்,
நான் அன்பைக் கொணர்வேன்!
தவறு தோன்றும்போது,
மன்னிக்கும் பண்பைத் தோற்றுவிப்பேன்!
முரண்பாடு காணநேர்ந்தால்,
அங்கே இணக்கம் காணச் செய்வேன்!
பொய்மையைச் சாட,
மெய்க்குத் துணை ஆவேன்!
எங்கே ஐயம் தோன்றுமோ,
அங்கே திடநம்பிக்கை தோன்றச் செய்வேன்!
மனக் கசப்பினைப் போக்கிட,
பற்றார்வத்தை மருந்தாக ஆக்குவேன்!
நிழல்கள் உள்ள இடங்களில்
ஒளியூட்டப் பாடு படுவேன்!
துயரம் தவழும் இடத்திலே,
மகிழ்வை விளையாடச் செய்வேன்!"

'அன்பே கடவுள்!
கடவுள் உங்களையும்
என்னையும் நேசிக்கிறார்!

அது போலவே—
நாமும்
மற்றவர்களை அன்புடன்
நேசிப்போமாக!''

துறவுக்கன்னியர் வெண்ணிற ஆடைகளில் துல்லியமாகப் பணிச்சிட, துல்லியமான கீதங்கள் பிரார்த்தனைகளாக ஒலியும் ஒளியும் கூட்டுகின்றன.

முதல் நிலையாக அமைந்திட்ட அன்புமேவிய அற நெறிப்பணி இயக்கத்தின் பல்வேறு துணை அமைப்புக்களுக்குச் சென்று பார்வையிடும் கடமைப் பொறுப்பைக் காலை எட்டுமணிமுதல் மேற்கொள்வார், அன்னை தெரேசா. டச்சு அரசு நன்கொடையளித்த வண்டி அன்னைக்குப் பெரிதும் உதவும்.

**அங்கங்கே:**

சகோதரிகள் பல்வேறு அணிகளாக இயங்கிக் காரியங்களைச் செய்வார்கள். குட்ட நோயாளிகளைக் குளிப்பாட்டுதல், மருந்து இடுதல், நோயாளிகளின் துணிமணிகளைத் துப்புரவு செய்து உலர்த்துதல் போன்ற பணிகள் சுறுசுறுப்போடு நடைபெறும். வேறு பகுதிகளில் உணவு தயார் செய்யும் அலுவல்கள் இடம் பெறும். இல்லங்களின் தரைகளைக் கழுவி மெழுகிச் சுத்தம் செய்வதில் வேறு சிலர் ஈடுபடுவார்கள்.

இப்படிப்பட்ட பணிக்கடன்களிலும் அன்னை பங்குப் பணி ஏற்பது இயல்பேதான்!

பணி முறைகளை மேற்பார்வையிட்டபிறகு, காலையில் சுமார் 11 மணி அளவில், அன்னை தெரேசா, அன்னை இல்லத்திற்குத் திரும்புகிறார்.

அங்கே—
பிரதான முகப்பு மண்டபம்.

அங்கேதான், பார்வையாளர்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி இருப்பார்கள். அன்பே வடிவமாக அமைந்திட்ட அன்னைத் தெய்வத்தைத் தரிசனம் செய்வதற்கென்று கூடியிருக்கும் மக்களின் தொகைதான் வழக்கமாக மிஞ்சிக் கிடப்பது வழக்கம். அவரவர்களின் சொந்தப் பிரச்சினைகளின் காரணமாக அன்னையைச் சந்திக்கத்தவித்தவர்களும் கூட்டத்திலே கலந்து இருப்பதும் சகஜந்தான்!

மனம் ஒன்றிய சந்திப்புக்களும் பேச்சுக்களும் தொடரும்.

தெரேசா அன்னை எண்ணிப் பார்க்கிறார்!

எல்லாமே சொப்பனம் போலவே தோன்றியது.

அன்னை தெரேசா இன்பப் பெருமூச்செறிகின்றார்: 'அறநெறி சார்ந்திட்ட இந்த அன்புப்பணி அமைப்பினை, ஒரு குழந்தையைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்துக் காப்பது போலவே, நான் உருவாக்கி வளர்த்துக் காத்திட எத்துணை பாடுபட்டேன்! — எத்தனை தொல்லைகள் அனுபவித்தேன்? எடுத்த காரியம் வெற்றியடைய நான் எத்தனை பெரிய மனிதர்களைச் சந்தித்தேன்? — அவர்களைச் சந்திக்க எத்தனை நாழி காத்துக்கிடந்திருக்கிறேன்? அன்புப் பணி இயக்கம் என்கிற குழந்தை இன்று வளர்ந்து ஆளாகி விட்டது! எல்லாமே கர்த்தரின் ஆசிதான்!'

அன்று :

1983, மே மூன்றுவது வாரத்தில், அன்னையைக் கண்டு மகிழக் காத்திருந்த பெரிய புள்ளிகளான பார்வையாளர்களிலே, உலகப் புகழ் படைத்த பெருஞ்செல்வந்தக் குடும்பங்களில் ஒன்றான பிர்லா குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் இடம் கண்டிருந்தார்; கூட்டத்தில், மேலை நாட்டைச் சார்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரும், பாராளுமன்றத்தின் பழைய அங்கத்தினரும் கலந்திருந்

தனர். [India-Today : Miracle of Love : அன்னை தெரேசா பற்றிய அட்டைப்படச் சித்திரம் : 1983, மே 16-31 இதழ்.]

தம்மைச் சந்திக்கக் காத்திருந்தவர்களிடையே எவ்வித மான பாரபட்சமும் இல்லாமல், இன்முகம் காட்டி அன்பு மொழி கூட்டி உரையாடி, அவர்களை வழியனுப்பி வைப்பதில் அக்கறை மிகக் கொண்டவராகவே விளங்கு வார் அன்னை.

அன்னையின் நண்பகல் உணவு என்ன, தெரியும் அல்லவா?— ஆமாம்; இரண்டே இரண்டு சப்பாத்திகள், மற்றும் வேக வைக்கப்பட்ட சிற்சில காய்கறிகள் மாத்திரமே!

உண்டு முடிந்ததுதான் தாமதம்; உடனடியாகவே, அன்னை தமது அலுவலகக் கூடத்திற்குத் திரும்பி, அன்புப் பணி இல்லங்கள் சம்பந்தப்பட்ட செயல் நடவடிக்கைகள் பற்றின கோப்புக்களில் ஆழ்ந்து விடுவார்; அலுவல்களில் ஈடுபட்டிருந்தாலும், அன்னையின் அருள் உள்ளம், அருளே வடிவமான இயேசு கிறிஸ்துவைப் பிரார்த்தனை செய்வதி லேயே சதா லயித்திருக்கும்.

மாலை ஆறுமணி அளவில் நடைபெறும் பொது வழிபாட்டில் அன்னை தவருமல் கலந்து கொள்வதும் உண்டு.

பிறகு :

அன்பின் பணி இயக்கத்தின் பல்கூட்டுத் தொகுதி சார்ந்த இல்லங்களைப் பார்வையிடுகிருர் அன்னை.

இப்போது:

அன்னை தெரேசா முற்றிக் கனிந்துவிட்ட பழம்!— அன்புப்பழம்!— வயதிலே பாட்டி!— ஆனுலும், உலகிற்கும் உலக மக்களுக்கும் என்றென்றுமே அன்னைதான்!—

சிரஞ்சீவியான அன்னை!— எழுபத்திமூன்று வயதைக் கடந்த அன்னை அல்லவா?

அதிகாலையில் நான்குமணி அளவில் படுக்கையை விட்டு எழும் அன்னை, இரவில் நெடுநேரம் கழித்துத்தான் படுக்கையில் படுப்பது வழக்கம். அதிகபட்சமாக, மூன்று மணிநேரம்தான் உறங்குவார்!— ஆனால், நோய்நொடியென்று படுத்தது கிடையாது. எப்போதாவது முதுகு வலிக்கும்; பல் வலிக்கும்; அவ்வளவுதான்!— அன்னை தமக்கென்று அமைத்துக் கொண்ட சொந்தத் தனி அறை 8 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்டது. ஒரேயொரு சன்னல்தான். அந்த சன்னலைத் திறந்து விட்டால், இந்திய மார்க்ஸீயக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொது உடைமைக் கட்டடம் அழகாகக் காட்சி கொடுக்கும்! இரவிலே 'அன்பின் தூதர்கள்' அமைப்பின் இல்லங்கள் எல்லாமே கண் வளர்ந்து கொண்டிருக்கையில், அன்னை மட்டும் கண் விழித்துத் தம் பெயருக்கு வந்த கடிதங்களுக்கான பதில்களைத் தம் கைப்படவே எழுதுவார். வெறும் தரையிலேதான் அன்னை உறங்குகிறார்! கோப்புக்களும் புத்தகங்களும் இறைந்து கிடக்கும்!— பிரார்த்தனை நூல்களை மட்டுந்தான் படிப்பார் அன்னை!

காலம் பொன்னானது.

காலத்தைப் பொன்னேபோல் காட்டும் கடிகாரத்தின் செயலாண்மைத் தடத்தில் அன்னையின் அன்புப்பணி அமைப்புக்கள் அனைத்தும் இயங்கி வருகின்றன.

இம் மாபெரும் அன்பின் அமைப்பிற்கு மேதகு அன்னை தெரேசா அவர்கள் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உகந்த புனிதமிகு பெருந்தலைவியாகவும் (Superior General) தேர்ந்து விளங்குகிறார்கள்!

இன்னும் ஆறு ஆண்டுகள் கழித்து, மீண்டும் தேர்தல் நடைபெறும். தேர்ந்தெடுக்கும் உரிமைக்கு உரியவர்கள்

சகோதரிகள்! சபையின் பெருந்தலைவிக்குத் துணை சேர்க்கச் சக்தி வாய்ந்த குழு ஒன்றும் செயலாற்றுகிறது; முக்கிய மான விஷயங்களில் குழு உறுப்பினர்கட்கு வாக்களிக்கும் உறவுரிமை உண்டு; அன்னை கேட்கும் பட்சத்தில், அவர்கள் ஆலோசனைகள் கூறவும் தகுதி பெறுவார்கள்.

1949-ம் ஆண்டில் குமாரி சுபாஷிணிதாஸ் தனது பழைய ஆசிரியையின் நினைவாக சகோதரி அக்னெஸ் ஆனார். அன்றிலிருந்து இன்றுவரை, அதாவது, கிட்டத் தட்ட 34 ஆண்டுகளாக அன்னையின் உயிர் நிழலாகவே இயங்கி வருகிறார் சகோதரி—அருட்பணிச் சபையில் முக்கியம் வாய்ந்த இரண்டாவது புள்ளியாகவும் சகோதரி அமர்ந்திருக்கிறார்!

புத்தாண்டு 1984 பிறந்துவிட்டது!

அன்னை தெரேசாவின் அன்புத் திருவுருவத்தைப் பல் வேறு கோணங்களிலும் பலவேறு நிலைகளிலும் ஏந்திய பல வண்ணத் தேதிப் படங்கள், கல்கத்தாவில் 'எஸ்பிளனேட்' வட்டாரத்தின் நடைபாதைக் கடைகளில் வழக்கம் போலவே கிறிஸ்துமஸ் பண்டிகையிலிருந்து ஆயிரக் கணக்கில் தினம் தினம் விற்பனையாகிக் கொண்டிருக் கின்றன

பத்திரிகையாளர் மால்கம் மக்கரிட்ஜ் "ஆண்டவனுக்கு இஷ்டமான ஒன்று!" (Something Beautiful for God) என்னும் தலைப்பில் 1971-ல் சிறந்ததொரு நூலை வெளி யிட்டார். பிரிட்டனில் கிளாக்ஸோ நகரில் செயலாற்றி வரும் வில்லியம் காலின்ஸ் புத்தக நிறுவனம் வெளிப் படுத்திய மேற்கண்ட நூல் இதுவரை 15 லட்சம் பிரதிகள் வரை விற்பனை ஆகியுள்ளது. இந்நூலின் வழியாக ஆசிரியருக்குக் கிடைக்க வேண்டிய சன்மானம் பூராவுமே அன்னை தெரேசாவின் 'அன்பின் தூதர்கள்' நிறுவன அமைப்பிற்கே கிடைத்து வருகிறது! ஆரம்பத்திலேயே

அன்னை கேட்டுக் கொண்டதற்குப் பணிந்து, அன்னையின் வாழ்க்கை வரலாற்றைத் தொடாமல், அன்னையின் அன்பையும் அன்புப் பணியையும் தொட்டு எழுதி வெளியிட்ட மேற்கண்ட நூல் அன்னைக்கு இஷ்டமானதாகவும் அமைந்தது!

உலகத்தின் ஒருங்கிணைந்த அன்புக்குப் பாத்திரமாகி விட்ட அன்னையின் அன்புச் சேவகச்சபை, உலகளாவிய கிறிஸ்துவ மதத்தின் கடுமையான கொள்கை—கோட்பாடுகளின் அடிப்படை ஆதாரத்தில் இயங்குவதும், இயக்கப் படுவதும் யதார்த்தமான நடப்புத்தான்! — ஆனாலும், அன்னையின் அன்பின் தூதுப்பணிகள், மதச் சார்பற்றனவாகவும் உலகியல் பொதுமைநலப் பண்பின் சார்புடையனவாகவும் இயங்கி வருகின்றன. அன்னைக்கு எம்மதமும் சம்மதம்தான்! — இங்கே, ஆண்டவனுக்காகவே, ஆண்டவனின் குழந்தைகளான மக்கள் அன்பு பாராட்டப் படுகிறார்கள். அன்னையின் அன்புத் தொண்டு, வெறும் சமுதாயத் தொண்டு அல்லவே! — தெய்வத் திருத் தொண்டு அல்லவா?

மற்றுமோர் உண்மை நிலையையும் அறிவிக்கும் "அன்பின் தூதுவர்கள்' நிறுவனம்; அது மதச்சார்பின் கட்டுக்கோப்புடனும் கட்டுப்பாடுகளுடனும் இயங்கி வருகின்றதன் நல் விளைவாகவேதான், அங்கே காரணமற்ற செலவினங்கள் காரணத்துடன் பெருமளவில் குறைகின்றன; குறைக்கப் படுகின்றன. இந்த அன்பியக்கத்தைச் சார்ந்த அமைப்புக்கள் எல்லாவற்றிற்கும் ஆகக்கூடிய கூடுதல் செலவில் 2 சதவீத அளவிற்குக் கூடுதலாக எந்தவொரு கிளை நிறுவனத்தின் செலவும் ஆவது கிடையாது.

அன்னை இல்லத்தின் முகப்பு மண்டபத்தில் மாத்திரம் ஒரேயொரு மின்விசிறி மாத்திரம் மேலே சுற்றிக் கொண்டிருக்கும்!

தரையிலே விரிக்கப்பட்டிருக்கும் விரிப்புக்களிலோ, அல்லது, மருத்துவமனைக் கட்டில்களிலோதான் சகோதரிகள் உறக்கம் கொள்வார்கள். தலைமைச் சகோதரியின் முன் அனுமதியின்றி, சகோதரிகளில் யாரும் அன்புப் பணிமனையை விட்டு வெளியே போகமுடியாது; சொந்த முறையில் கடிதம் எதையும் அவர்கள் பெற இயலாது; தனிப்படச் சொந்தம் பாராட்டிச் செல்லப் பெயரால் அழைத்துக் கொள்ளவும் சகோதரிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். காரணம் இதுதான்! அவர்களுடைய அன்பு முழுவதும் இயேசுவிற்கே சொந்தம்:

இந்திய நாட்டிற்குள் அன்னை எங்கே வேண்டுமானாலும் ரயிலில் போகலாம்; வரலாம்.

தங்களது ஏமன் நாட்டில் அறுநூறு ஆண்டுக் காலமாக செயல்படுத்தப்பட்டு வந்த தடைஉத்தரவை அந்நாட்டின் பிரதமர் அறுபது காலக் கட்டத்தில் விலக்கிய தோடு, அன்னையை வரவழைத்து, அன்பின் கிளையை அங்கேயும் ஆரம்பம் செய்ய வேண்டுதல் விடுத்ததோடு, அன்னைக்குத் தமது நாட்டின் அன்பின் பரிசிலாக வாள் ஒன்றையும் வழங்கினார்!

இன்றும் என்றும் பெற்ற தாயென்று கும்பிடப் படுகின்ற பாரதத் தாய்நாட்டிலே, மதம் இனம் மொழி நாடு மற்றும் கட்சிகளைக் கடந்ததொரு பொதுத் தலைவி யாகவே ஏற்றிப் போற்றப்பட்டு வருகின்ற அன்னையின் வாழும் புகழ், உலகத்தின் மக்களுக்கு மத்தியிலும் சிரஞ்சீவிப் புகழோடு வாழ்ந்து கொண்டிருக்கிறதென் பதும் உலகறிந்த உண்மை!

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெள்ளை மாளிகைத் தலைவர் ரொனால்ட் ரீகன், அன்பான அன்னைக்குப் பேட்டி கொடுத்து விருந்தும் கொடுக்கவில்லையா? பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியோடு நெருக்கடி நிலைக் காலத்தில், கட்டாயக் கருத்தடைபோன்ற ஓரிரு நடப்புக்

களின் விளைவாக அன்னை கருத்து வேற்றுமை கொண்டிருந்த போதிலுங்கூட, தெரேசா—இந்திரா நட்பு வழக்கம் போலவே இறுக்கமுடையதாகவே விளங்குகிறது. மேற்குவங்கத்தின் அன்றைய முதல்வர் டாக்டர் பி. சி. ராய், இன்றைய முதல்வர் ஜோதிபாசு, தமிழ் நாட்டின் மக்கள் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் போன்ற சரித்திரப் பெரும் புள்ளிகளெல்லாம் சரித்திரம் படைத்த தாய்த் தலைவியின் பால் கொண்டிருந்த—கொண்டிருக்கும் மதிப்பும் மரியாதையும் சரித்திரப் பிரசித்தமானவை.

1960-ல் 'கல்கத்தாவின் அன்னை'யென வருணிக்கப்பட்டு, இன்று 1983-ல் 'உலகிற்கு ஓர் அன்னை' யென வணங்கப்படுபவராக ஆனவர் அன்னை தெரேசா. கடந்த 1982-ம் ஆண்டில் மட்டும் அன்புக்குத் தூது செல்ல இலவசமான விமானப்பயணம் மூலம் 50000 மைல் வரை உலகெங்கும் பயணம் மேற்கொண்டார்.

அன்பின் சேவகர்கள் மற்றும் சேவகிகள் பணி அமைப்பு, 118 கிளை அமைப்புக்களோடு நிதர்சனமானதொரு ராமராஜ்யமாகவே விளங்கிவருகிறது! (1983).

அன்பு காட்டுவதற்குக் கணக்கு இல்லை.

ஆனால்—

காட்டப்படும் அன்புக்குக் கணக்கு உண்டு.

'அன்பின் தூதர்கள்' மைய நிலையத்தின் சொந்தத்திலும் பந்தத்திலும் சரியும் தப்புமான திக்கற்ற குழந்தைகளுக்கென எழுபதுக்கும் அதிகமான கருணைமனைகள் உலகத்தின் நாலாவிதமான பாகங்களிலும் இயங்குகின்றன. ஞானஸ்நானம், சுவீகாரம் போன்ற செய்முறைகள் வாயிலாக வாழ்வுபெறும் மழலைகள் ஏராளம்! கதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு (30,000) எழுத்தறிவிக்கும் சேரிப் பள்ளிகள்

விரைவில் இருநூறு ஆகும். பொது மருத்துவ நிறுவனங்கள் இருநூற்றைத் தாண்டி விட்டன. தொழு நோய் மனைகள் ஐம்பத்தைந்து; எண்பத்தைந்தை எட்டிப் பிடிக்கின்றன இறப்போர் நல விடுதிகள். கழிந்த ஆண்டில், அன்பு மனையின் 670 நடமாடும் மருத்துவ மனைகளின் மூலம் 60 இலட்சம் மக்கள் பயன் பெற்றனர்! (1983).

சமயத்தைப் பரப்பும் ஏசுத் தொண்டர்கள் உலகில் 30,000 எண்ணிக்கையுடன் சேவை புரிகிறார்கள்.

ஆனாலும், அன்னையின் அன்பு இல்லத்துக்கு அன்பைப் பரப்புதல்தான் ஆண்டவன் ஆணை. சுமார் 2500 அளவிலான சகோதர – சகோதரியர்க்கு அன்புத் தூதுதான் வாழ்க்கைத் தொழில். இவ்வகையில் உலகம் பரவி நிரவியுள்ள இல்லங்கள் விரைவில் முந்நூறு ஆகிவிடலாம். நாள்தோறும் ரூபாய் பத்து லட்சம் மதிப்பு மிக்க உணவுகளும் உடைகளும் மருந்துகளும் ஏழைகட்கு வாரி வாரி வழங்கப்படும். வயிற்றுப் பிழைப்புக்கு வழி கற்பிக்கப் பட்ட ஏழைப் பெண்டிர் 12000 பேர் (1983).

அன்று :

இந்தியமண்ணில் அன்பிற்கு விதை தூவினார் அன்னை!

இன்று—

உலக நாடுகளிலெல்லாம் அந்த அன்பு முப்போக விளைச்சலை வழங்கிக் கொண்டிருக்கிறது!

அரசியல், கட்சி, மதம் போன்ற குறுகிய மனப் பான்மை படைத்த குறுக்குச் சுவர்களையெல்லாம் கடந்து, பரந்த சமுதாயமக்களோடு ஒன்றிப் பழகி அவர்களுக் கெல்லாம் அன்பு செய்வதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு, மக்களையும் மக்கள் அன்பையும் வாழ்த்தி வா- விக்கும் அன்னையாக—ஒப்பாரும் மிக்காரும் இல்லாததோர் அன்னையாக விளங்கும் அன்னை தெரேசா அவர்கள்

...த்தின் நாடுகட்கெல்லாம் அமைதிப் பாதை காண் க்கும் பாரதத்தில் மட்டுமல்லாமல், அனைத்து உலக நாடு ரிலும் ஓங்கி உலகளந்த உத்தமித் தாயாக உயர்ந்து, ன்பின் ஒளி ஏந்தி, நம்பிக்கைக்கு வழிசொல்லிக் காண்டே இருக்கிறார்கள்!

இன்று :

...ன்னை தெரேசாதான் (Mother M. Teresa M. C.) டி...,

அன்புதான் அன்னை தெரேசா!

ஆகவே :

மனித இனப் பொதுச் சமய அமைதி அன்னையின் ...கத்தான அன்பில் மகோன்னதமாக விளையாடுகிறது.

பலன் :

மனிதனைப் படைத்த கடவுளும், கடவுளைப் படைத்த மனிதனும் அன்போடு விளையாடுகிறார்கள்!

அதோ!

தேவன் கோயில் மணியோசை, உலகெங்கும் ...ரொலித்துக் கொண்டிருக்கிறது!

மெழுகுவர்த்தி அன்பே உருவாகவும் தியாகமே பண் ...வும் தொண்டே பிறவிக்கடனாகவும் நம்பிக்கை ஒளி ...திக்கொண்டிருக்கிறது!

புனிதத் தந்தை சிரிக்கிறார்!

...த் தாய் சிரிக்கிறார்!

...தோ!

*அன்பு சிரிக்கிறது; சிரிக்கிறது; சிரித்துக்கொண்டிருக்கிறது!...*

ஜன கண மங்கள தாயக ஜயஹே!
பாரத பாக்ய விதாதா!

......

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!

Wrapper Printed at Karpakam Achakam, Madras-600 002.